பொதுத் தமிழ் - I

பகுதி - I - தமிழ்

முதல் பருவம்

(#] ‹ 2023ஆம் ஆண்டும் அத‹ பின்னரும் சேர்வோருக்கு)

காவேரி மகளிர் கலைக்கல்லூரி

உறையூர், திருச்சி – 3

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

Pothth Thamizh - I

Part - I - Tamil, Semester - I

Cauvery College for Women

Uraiur, Trichy - 3

First Edition: July, 2023

Copyright: Publisher

No.of Pages: 160

Publisher:

New Century Book House Pvt. Ltd.,

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN: 978 - 81 - 0000 - 000 - 0

Code No. A0000

₹ 00.00

Branches

Ambattur 044 - 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Thanjavur** 04362-231371 **Tirunelveli** 0462- 2323990, 4210990, **Madurai** 0452-2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387 **Ooty** 0423- 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

பொதுத் தமிழ் - I

பகுதி - I - தமிழ் , முதல் பருவம்

காவேரி மகளிர் கலைக்கல்லூரி

உறையூர், திருச்சி - 3

முதல் பதிப்பு: ஜூலை, 2023

அச்சிட்டோர்: பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

பொருளடக்கம்

செய்யுள்

கூறு - I - மரபுக்கவிதை

செய்யுள்

கூறு - II - புதுக்கவிதை

உரைநடை

கூறு - III - சிறுகதைகள்

கூறு - IV இலக்கிய வரலாறு

கூறு - IV - இலக்கணம்

செய்யுள்

கூறு - I - மரபு, கவிதை

1. தமி> த்தெய்வ வண, க<

- பெ.சுந்தரனார்

ஆசிரியர் குறிப்பு

மனோன்மணியம் பெ.சுந்தரனார் (Manonmaniyam P. Sundaranar, ஏப்ரல் 4, 1855 - ஏப்ரல் 26, 1897) என்பவர் மனோன்மணியம் என்ற புகழ்பெற்ற நாடக நூலைப் படைத்தவர்.

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் ஆலப்புழா என்னும் ஊரில் பெருமாள் என்பவருக்கும் மாடத்தி அம்மாளுக்கும் 1855ஆம் ஆண்டு சுந்தரனார் பிறந்தார். இளமையிலேயே தேவார திருவாசகங்களையும் சமய வழிபாட்டு நூல்களையும் கற்றார். இவருக்குத் தமிழாசிரியராக விளங்கியவர் நாகப்பட்டினம் நாராயணசாமி. இவரிடமே மறைமலை அடிகள் தமிழ் படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1876ஆம் ஆண்டு பி.ஏ. தேர்வில் வெற்றி பெற்றார். அடுத்த ஆண்டில் சிவகாமி அம்மாள் என்பவரைத் திருமணம் புரிந்தார்.

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த
திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே
தமிழணங்கே
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே
வாழ்த்துதுமே
வாழ்த்துதுமே

2. சிறுத்தையே வெளியி™ வா

- பாரதிதாசன்

ஆசிரியர் குறிப்பு

பிறப்பு	சுப்புரத்னம் ஏப்ரல் 29, 1891 புதுவை, இந்தியா
இறப்பு	ஏப்ரல் 21, 1964 (அகவை 72) சென்னை, தமிழ்நாடு, இந்தியா
புனைபெயர்	பாரதிதாசன், பாவேந்தர்
தொழில்	தமிழாசிரியர், கவிஞர், அரசியல்வாதி
தேசியம்	இந்தியர்
கல்வி	புலவர்
கல்வி நிலையம்	கல்வே கல்லூரி, புதுவை
காலம்	20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்
வகை	தமிழிலக்கியம் - கவிதை, நாடகம், கட்டுரை, கதை
கருப்பொருள்	இனமானம், அரசியல்
இலக்கிய இயக்கம்	திராவிட இயக்கம்
படைப்புகள்	'பாண்டியன் பரிசு', 'எதிர்பாரத முத்தம்', 'குறிஞ்சித்திட்டு', 'குடும்ப விளக்கு', 'இருண்ட வீடு', 'அழகின் சிரிப்பு', 'தமிழ் இயக்கம்', 'இசையமுது', 'குயில்', 'தமிழச்சியின் கத்தி', 'பாரதிதாசன் ஆத்திசூடி', 'பெண்கள் விடுதலை', 'பிசிராந்தையாா்', 'முல்லைக்காடு'.
குறிப்பிடத்தக்க விருதுகள்	சாகித்திய அகாதமி விருது

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல்செய்யப் புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட் பறவையே சிறகைவிரி! எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திறவிழி!
இங்குன் நாட்டுக் கிழிகழுதை ஆட்சியா?
கைவிரித் துவந்த கயவர், நம்மிடைப்
பொய்வி ரித்துநம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி

நமக்குள உரிமை தமக்கென் பார்எனில்,
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!
இகழ்ச்சி நேர்ந்தால் இறப்போம் என்றும்
புகழ்ச்சி யேஎம் பூணாம் என்றும்
வையம் ஆண்ட வண்டமிழ் மரபே
கையி ருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும்உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணாக் கடல்போல் மாப்பகை மேல்விடு!

நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!
பொன்மொ ழிக்குநீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை யுயர்த்துக!
கைக்குள திறமை காட்ட எழுந்திரு!
வாழ்க இளைஞனே, வாழ்க நின்கூட்டம்!
வாழ்க *தமிழர் நாடு!
வாழ்கநின் வையத்து மாப்புகழ் நன்றே!

3. புத்தரு‹ சிறுவனு‹

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

ஆசிரியர் குறிப்பு

கவிமணி தேசிக விநாயகம் (Kavimani Desigavinayagam, 27 சூலை 1876 - 26 செப்டம்பர் 1954) 20ஆம் நூற்றாண்டில் குமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் வாழ்ந்த ஒரு புகழ் பெற்ற கவிஞர். பக்திப் பாடல்கள், இலக்கியம் பற்றிய பாடல்கள், வரலாற்று நோக்குடைய கவிதைகள், குழந்தைப் பாடல்கள், இயற்கைப் பாட்டுகள், வாழ்வியல் போராட்ட கவிதைகள், சமூகப் பாட்டுகள், தேசியப் பாட்டுகள், வாழ்த்துப் பாக்கள், கையறு நிலைக் கவிதைகள், பல்சுவைப் பாக்கள் என விரிந்த தளத்தில் செயல்பட்டவர்.

சிவதாணுப்பிள்ளை -ஆதிலட்சுமி தம்பதியர்க்கு இரண்டு பெண் குழந்தைகளை அடுத்து மூன்றாவதாக தேசிக விநாயகம் பிறந்தார். இரண்டு பெண்களுக்கு பின் பிறந்த ஆண் மகவுக்கு தான் வணங்கும் தேசிக விநாயகரின் பெயரை வைத்தார் சிவதாணுப்பிள்ளை. ஒன்பதாவது வயதில் தன் தந்தையை இழந்தார். எம். ஏ. படித்த கவிமணி பின் ஆசிரியர் பயிற்சி படித்து, தான் படித்த பள்ளியிலேயே ஆசிரியர் ஆனார். உமையம்மை எனும் பெண்ணை 1901இல் மணம் முடித்தார்.

புண்ணிய மூர்த்தி புத்தமா முனிவன்
உண்மையை உணர்ந்துஇவ் வுலகினில் என்றும்
அழியா இன்பம் அடையும் அவாவினால்
மன்னர் வாழ்வையும் மறுத்தவ னாகித்
தந்தையை மறந்து தனையனைத் துறந்து

மங்கை யசோதரை மதிமுகம் நீத்து
நள்ளிர வதனில் நன்னகர் நீங்கி,
உண்ணும் உணவும் உறக்கமும் இன்றி
இரவும் பகலும் இடைவிடாது எங்கும்
நடந்து மெலிந்து நலிவுற்று ஒருநாள்

வேனில் வெயிலில் வெந்தெரி கானலில்
கைகால் தளர்ந்து கண்களும் மூடி

மூச்சும் அடங்கி முகமும் வெளிறி
உயிரும் உடம்பில் ஊச லாட
விஞ்சிய மயக்கால் வீழ்ந்து கிடந்தனன்.
வேனில் வெயிலில் வெந்தெரி கானலில்:

வேறு

ஆடுகள் மேய்த்து வரும் - ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்,
வாடிக் கிடந்தவனைச் - செல்லும்
வழியின் மீது கண்டான்.

வையகம் வாழ்ந்திடவே - பிறந்த
மாதவச் செல்வன்முகம்
வெய்யிலில் வெந்திடாமல் - தழைகள்
வெட்டி அருகில் நட்டான்.

தெய்வ குலத்திவனை - எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே - சிறிது
சிந்தை தயங்கி நின்றான்

உள்ளந் தெளிந்துடனே - வெள்ளாடு
ஒன்றை அழைத்துவந்து,
வள்ளல் மயக்கொழிய - மடுவை
வாயில் கறந்துவிட்டான்.

பாலை நேராக வாயில் கறந்து விட்டான்.
நட்ட தழைகளெல்லாம் - வளர்ந்து
நாற்புற மும்கவிந்து,
கட்டிய மாளிகைபோல் - வனத்தில்
காட்சி யளித்ததம்மா!

பூவொடு காய்கனியும் - தளிரும்
பொலிந்து நிரம்பியங்கே
விதானமும் ஆனதம்மா!

போலப் பல மணிகளாகத் தோன்றின.
இழைத்த விதானமும்:

ஐயனை இவ்வுலகம் - காணுதற்கு
அரியவோர் தெய்வமெனக்
கைகள் தொழுதுநின்றான் - சிறுவன்
களங்கமிலா வுளத்தான்.

நிலத்திற்கிடந்த ஐயன் - மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
"கலத்தினி லேகொஞ்சம் - பாலைக்
கறந்து தருவாய்" என்றான்.

'ஐயையோ! ஆகாது,'என்றான் - சிறுவன்,
'அண்ணலே! யானும்உனைக்
கையினால் தீண்டவொண்ணா - இடையன்ஓர்
காட்டு மனிதன்,' என்றான்.

உலகம் புகழ்பெரியோன் - இந்த
உரையினைக் கேட்டுஅந்நாள்
அலகில் கருணையினால் - சொன்ன
அமுத மொழிஇதுவாம்.

"இடர் வரும்போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர்போல் - மாந்தர்
உறவு கொள்வர், அப்பா!

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்,
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவ துண்டோ அப்பா!

எவர் உடம்பினிலும் - சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர் விழிநீர்க்கும் - உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா!

நெற்றியில் நீறும் - மார்பில்
நீண்ட பூணூலும்
பெற்றுஇவ் உலகுதனில் - எவரும்
பிறந்த துண்டோஅப்பா!

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டும், அப்பா!

நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்."

ஒண்ணாதார் - தகாதவர்
நிலத்துயர் ஞானி - இவை
நிகழ்த்தி, "என்தம்பீ!
கலத்தினிலே கொஞ்சம் - பாலைக்
கறந்து தா, "என்றான்.

ஆயர் சிறுவனும் - கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு,
தாயினும் இனியன் - கொண்ட
தளர்ச்சி நீங்கினனே.

4. மொழி உணர்,,சி

- முடியரசன்

ஆசிரியர் குறிப்பு

வீறுகவியரசர் முடியரசன் (இயற்பெயர்: துரைராசு, அக்டோபர் 7, 1920 - டிசம்பர் 3, 1998) தமிழ்நாட்டின் மூத்த தலைமுறைக் கவிஞர்களுள் ஒருவர். தேனி மாவட்டம், பெரியகுளத்தில் சுப்பராயலு - சீதாலக்ஷ்மி ஆகியோருக்கு, அக்டோபர் 7, 1920இல் பிறந்தவர். துரைராசு என்ற இவரது பெயரை முடியரசன் என்று மாற்றிக்கொண்டார். பாரதிதாசனோடு மிக நெருங்கிப் பழகி அவருடைய முற்போக்கு எண்ணங்களை ஏற்றுப் பாடியவர். பாரதிதாசனாரால் 'என் மூத்த வழித்தோன்றல், எனக்குப் பின் கவிஞன்..' என்று பாராட்டப்பெற்றவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பெருமதிப்பைப் பெற்ற திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர். தம் கவிதையின் படியே வாழ்ந்துகாட்டிய கவிஞர்க்கு எடுத்துக்காட்டு இவர். தான் சாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்டதோடு தம் பிள்ளைகள் அறுவர்க்கும் சாதி மறுப்புத் திருமணம் செய்வித்தவர். எனவேதான் தவத்திரு.குன்றக்குடி அடிகளார் 'சாதி ஒழிய வேண்டும் எனக் கவிதையிலும், மேடையிலும் முழங்கிய கவிஞர்களுள் அவற்றைத் தன் வாழ்வில் கடைப்பிடித்தவர் கவியரசு முடியரசனார் தவிர வேறு யாராவது இருக்கிறார்களா? எனத் தெரியவில்லை' என்று போற்றினார். சாதி-சமய, சாத்திரச் சடங்குகளை வெறுத்தவர். இவரது மறைவின் பொழுதும் எச்சடங்குகளும் வேண்டாம் என்று வலியுறுத்தி அவ்வாறே நிறைவேறச் செய்தவர். சென்னை, முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியிலும், காரைக்குடி மீ. சு. உயர்நிலைப் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர்.

படைப்புகள்

- முடியரசன் கவிதைகள் (கவிதை) - 1954
- காவியப்பாவை (கவிதை) - 1955
- கவியரங்கில் முடியரசன் (கவிதை) - 1960
- பூங்கொடி (காப்பியம்) - 1964
- தமிழ் இலக்கணம் (இலக்கணம்) - 1967
- வீரகாவியம் (காப்பியம்) - 1970

- பாடுங் குயில்கள் (கட்டுரைகள்) - 1975
- பாடுங்குயில் (இசைப் பாடல்கள்) - 1983
- ஊன்றுகோல் (காப்பியம்) - 1983
- நெஞ்சு பொறுக்கவில்லையே (கவிதை) - 1985
- மனிதனைத் தேடுகின்றேன் (கவிதை) - 1986
- சீர்த்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார் (வாழ்க்கை வரலாறு) - 1990
- தமிழ் முழக்கம் (கவிதை) - 1999
- நெஞ்சிற் பூத்தவை (கவிதை) - 1999
- ஞாயிறும் திங்களும் (கவிதை) - 1999
- வள்ளுவர் கோட்டம் (கவிதை) - 1999
- புதியதொரு விதி செய்வோம் (கவிதை) - 1999
- என்கோவின் காதல் (சிறுகதை) - 1999
- அன்புள்ள பாண்டியனுக்கு (கடிதம்) - 1999
- அன்புள்ள இளவரசனுக்கு (கடிதம்) - 1999
- தாய்மொழி காப்போம் (கவிதை) - 2000
- எப்படி வளரும் தமிழ்- (கட்டுரை) - 2001
- மனிதரைக் கண்டு கொண்டேன் (கவிதை) - 2005
- இளம்பெருவழுதி (நாடகக் காப்பியம்) - 2008
- பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் (தன் வரலாறு) - 2008

சிறப்புகள்

- இவரது கவிதைகளைச் சாகித்திய அகாதமி இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது.
- அழகின் சிரிப்பு கவிதை முதல் பரிசு - பாவேந்தர் பாரதிதாசன்.
- 'திராவிட நாட்டின் வானம்பாடி' பட்டம் - பேரறிஞர் அண்ணா - 1957
- பறம்பு மலையில் நடந்த விழாவில் குன்றக்குடி அடிகளாரால் "கவியரசு" என்ற பட்டமும், பொற்பதக்கம் - 1966.
- வீரகாவியம் நூலுக்குத் தமிழ்நாடு அரசு பரிசு - 1973.
- மாநில நல்லாசிரியர் விருது - 1974.

- *சங்கப்புலவர் பட்டம் - குன்றக்குடி அடிகளார் - 1974.*
- *பாவரசர் பட்டம், பொற்பேழை - மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்.*

எ‡ சீர் விருத்த‹

1

இலைபொறுக்கும் நாயுடன்தன் திறமை காட்டி
எச்சிலுண்ணும் மனிதனெனும் உருவங் கண்டும்,
குலைநடுங்கப் பெண்ணினத்தை அடிமை யாக்கும்
கொடுமையினைக் கண்மூடிப் பழக்கந் தன்னை
நிலைநிறுத்தப் பாடுபடும் நிலைமை கண்டும்,
நேர்மைபகுத் துணரறிவு கல்வி இல்லா
நிலையிருக்கக் கண்டிருந்தும் உணர்ச்சி காணா
நெஞ்சத்தார் மிக்குவரும் நாளில் இங்கு

2

மொழியுணர்ச்சி பாடுகென்றீர்! உணர்ச்சி கூர்ந்து
மொழியுங்கால் பிழைபொறுத்துச் சிந்தித் தாய்ந்தால்
பழியுணர்ச்சி தோன்றாது; வருவோன் செல்வோன்
பழிக்கின்றான் நம்மொழியைச் செவிம டுத்தும்
எழுமுணர்ச்சி கண்டோமா? வடக்கு வேந்தன்
இழித்துரைத்தான் தமிழரசை எனுஞ்சொற் கேட்டு
முழுமூச்சாய் எதிர்த்தானே அவன்கு லத்து
முளைத்துவரும் காளைகள்நாம் வெட்கம் வெட்கம்

3

ஆங்கிலமோ பிறமொழியோ பயின்று விட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணு கின்ற
தீங்குடைய மனப்போக்கர் வாழும் நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி? ஆட்சி மன்றில்
பாங்குடன்வீற் றிருக்கமொழி தமிழே என்று
பகர்நாளில் மொழியுணர்ச்சி தானே தோன்றும்;
ஈங்கதற்கா என்செய்யப் போகின் றீர்நீர்?
இளைஞரினி விழித்தெழுந்தால் விடிவு தோன்றும்

4

ஆந்திரமும் கன்னடமும் சென்று வந்தேன்
அங்கெல்லாம் மொழியுணர்ச்சி விளங்கக் கண்டேன்,
மாந்தரெனத் திரிகின்றோம் உணர்ச்சி யற்று
வந்தவர்க்கும் போனவர்க்கும் பல்லைக் காட்டிச்
சாந்துணையும் காக்கைபிடித் தலைந்து சென்று
சாப்பாடே குறிக்கோளாய் மொழியைத் தாழ்த்தி
வாழ்ந்திருக்க நினைக்கின்றோம் படையெ டுத்து
வந்தமொழி வாழவழி செய்து தந்தோம்

5

பிறமொழியை வெறுக்கின்றேன் என்று சொல்லிப்
பிழையாகக் கருதாதீர்! தமிழை யிங்கு
மறுவறநன் குணர்ந்ததற்பின் பயில்க என்பேன்;
மனைவியைமற் றொருவன்பால் அடகு வைத்துத்
துறவறமேற் கொளலாமோ? தாய்த வித்துத்
துடித்திருக்க அறஞ்செய்ய முனைதல் நன்றோ?
கறவையிடம் பால்கறந்து கன்றுக் கின்றிக்
கதறிவிழக் கடவுளென்று சிந்தல் நன்றோ?

6

மறுமலர்ச்சி எனும்பேரால் தமிழின் பண்பை
மாய்க்கின்றோம்; மொழியிருக்கப் 'பாஷை' என்போம்.
பெறுமகிழ்ச்சி 'சந்தோஷம்' ஆகும்; வேட்டி
'வேஷ்டி' எனப் பெயர்மாறும்; பதற்றம் என்னோம்
மறுமொழிபோல் பதஷ்டமெனக் குதிப்போம்; தண்ணீர்
ஜலமாகும்; மறைக்காடு 'வேதா ரண்யப்'
பிறமொழியாய் மாறிவிடும்; மொழியு ணர்ச்சி
பிழைத்திருக்க இடமுண்டோ? புதைத்து விட்டோம்

7

வணக்கமெனச் சொல்பவரைக் கட்சி சார்த்தி
வாட்டுகிறோம்; "தாய்மொழியைப் புதைத்து விட்டுப்
பிணக்கல்லில் வரவேற்பு நல்கல் வேண்டேன்
பிறமொழியின் அடிமைகளே" என்று சொன்ன

குணக்குன்றாம் நம்காந்தி எந்தக் கட்சி?
குறிக்கோளாய் வங்கமொழி வளர்ப்பான் வேண்டிப்
பிணக்கின்றிப் பலநூல்கள் தந்த தாகூர்
பேணினரே மொழியுணர்ச்சி எந்தக் கட்சி?

8

தமிழ்மொழியை உயர்தனிச்செம் மொழியாம் என்று
தகுமுறையில் ஆராய்ந்து முடிவு சொன்ன
தமிழ்மகனார் பரிதிமாற் கலைஞன் என்று
தமிழ்மொழியிற் பெயர்கொண்டார் எந்தக் கட்சி?
"அமுதமெனத் தாய்மொழியைப் போற்றும் நாடு
வீழ்ந்ததில்லை, அதைத்தூற்றி வாழ்ந்த நாடும்
தமதறிவிற் கண்டதில்லை" என்று ரைத்த
தமிழாசான் முத்துசிவன் எந்தக் கட்சி?

9

மணவினையில் தமிழுண்டா? பயின்றார் தம்முள்
வாய்ப்பேச்சில் தமிழுண்டா? மாண்ட பின்னர்
பிணவினையில் தமிழுண்டா? ஆவ ணத்தில
பிழையோடு தமிழுண்டு; கோவில் சென்றால்
கணகணவென் றொலியுண்டு; தமிழைக் கேட்கக்
கடவுளரும் கூசிடுவர்; அந்தோ! அந்தோ!
அணுவளவும் மொழியுணர்ச்சி இல்லா நாட்டில்
ஆத்திகரே இறையுணர்ச்சி வளர்வ தெங்கே?

10

உடுக்கின்றார் உண்கின்றார் உயர்வுங் கொள்வார்
ஒப்பற்ற தமிழ்மொழியால்; நன்றி இன்றிக்
கெடுக்கின்றார் அதன்வளர்ச்சி நேராய்ச் சில்லோர்;
கேண்மைகொண்டு வளர்த்திடுவோம் என்று சில்லோர்
கொடுக்கின்றார் நஞ்சுதனைக் கூசா திந்தக்
கொடுமைகளை நீக்கிடவே ஆவி தானும்
விடுக்கின்றோம் தாய்மொழிக்கே என்று சொல்லி
வீறுற்று நிமிர்ந்தெழுவீர் தமிழ்நாட் டீரே!

11

தமிழ்காக்கப் போர்செய்ய உணர்வு வேண்டும்
தமிழ்கொன்று வாழ்கின்ற கயமை வேண்டாம்
தமிழ்காக்கப் போர்செய்யப் புலிகள் வேண்டும்
தடுமாறி ஓடிவிடும் எலிகள் வேண்டாம்
தமிழ்காக்கப் போர்செய்யச் சிங்கம் வேண்டும்
தாளமிடும் ஓலமிடும் நரிகள் வேண்டாம்
தமிழ்காக்கப் போர்செய்ய மானம் வேண்டும்
தாலமுத்து நடராசன் துணிவு வேண்டும்

5. ஆ† டனத்தி ஆதிம%தி - ஆதிம%தி புல‹ ப™

- கண்ணதாசன்

ஆசிரியர் குறிப்பு

கண்ணதாசன் (24 சூன் 1927 - 17 அக்டோபர் 1981) புகழ் பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும், கவிஞரும் ஆவார். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், கட்டுரைகள் பல எழுதியவர். சண்டமாருதம், திருமகள், திரை ஒலி, தென்றல், தென்றல்திரை, முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். தமிழக அரசின் 'அரசவைக் கவிஞராக' இருந்தவர். இவர் சாகித்ய அகாதமி விருது (1980) பெற்றவர்.

கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா. இவர் தமிழ்நாட்டில் உள்ள காரைக்குடி அருகே சிறுகூடல்பட்டி என்ற ஊரில் இந்து மதத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் சாத்தப்ப செட்டியார், விசாலாட்சி ஆச்சி இணையருக்கு 8வது மகனாகப் பிறந்தார். (மறைவு 4-2-1955). இவருடன் உடன்பிறந்தோர் 10 பேர். சிறு வயதில் இவரை சிகப்பு ஆச்சி (மறைவு 25-12-1958) என்பவர் 7000 ரூபாய்க்கு தத்து எடுத்துக்கொண்டார். அவர் வீட்டில் நாராயணன் என்ற பெயரில் வாழ்ந்தார். ஆரம்பக் கல்வியை சிறுகூடல்பட்டியிலும், அமராவதிபுதூர் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்தார். 1943 ஆம் ஆண்டில் திருவொற்றியூர் ஏஜாக்ஸ் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். ஒரு பத்திரிகை ஆசிரியர் பணிக்குச் சென்றபோது அவர் வைத்துக் கொண்ட புனைபெயர் கண்ணதாசன்

காவிரி முன் ஒரு க‡ ணகி

"காவிரித் தாயைக் கேட்பேன்;"
கண்களின் நீரைக் காட்டி
ஆவியைத் தருவாய் என்பேன்!
அன்பனை இழுத்துச் சென்ற
தேவியைத் தொடர்ந்தே சென்று
தேடுவேன்! கடலை மன்னன்
மேவினன் என்றால் யானும்
மேவுவேன்!" என்றாள் சென்றாள்.

சோழனும் மகளின் பின்னே
தொடர்ந்தனன்! வீரர் தாமும்
சோழனைத் தொடர்ந்தார்! மங்கை
துயரிலே அலைந்து வீழ்ந்த
தாழிடுங் கூந்தல் காற்றில்
சதுரிட நடந்தாள்! பொன்னி
ஆழியை நோக்கிச் செல்லும்
அடியினைத் தொடர்ந்தே சென்றாள்!

வேறு

"பொன்னிப் பெருந்தாயே, புகழ்வளர்த்த காவிரியே
தென்னவனைக் கொண்டு சேர்ந்த இடம் கூறாயோ?
எங்கள் குலமகன்பால் எழுந்துவிட்ட ஆசையினால்
கண்களிலே ஒன்றைக் கவர்ந்து மறைந்தாயோ?
பொய்யோடு வந்த புன்மைப் புழுக்கூட்டம்
கையூட்டுத் தந்து கவர்ந்துசெலச் செய்ததுவோ?
வஞ்சத்தில் ஆர்ந்து வசமிழந்த தீமனத்தர்
நெஞ்சம் அமைதியுற நேயனைநீ கொண்டாயோ?

ஆதிக்கு வாய்த்த அழகன்பாற் காதலினால்
மோதிப் பெருகி மூழ்கவைத்துக் கொண்டாயோ?
ஊரார் அறியாத ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்துச்
சீராரும் நாயகனைத் திருடி மறைத்தாயோ?
தொட்டுத் தழுவித் தோளோடு தோள்சேரக்
கட்டிச் சுருட்டிக் கரைமாற்றிக் கொண்டாயோ?
வஞ்சித்தேன் வாட்டமுற வஞ்சித்தே நாள்பவனை
வஞ்சித்தேன் நீ மறைந்தாய்! வழங்கிவிடு என்தாயே!"

(வேறு)

கூவியே நடந்த மங்கை
கொதிப்புறும் நெஞ்சை ஆற்ற
மேவிய மார்பின் மீதே
வெள்ளொளிக் கைகள் வைத்தே
ஆவியைப் பிடிப்பாள் போன்றே
அடுத்தடி தொடர்ந்தாள்; கால்கள்
கேவிடத் தவழ்ந்தாள்; சுற்றம்

கிளர்ந்தவள் பின்னால் செல்லும்.
கீழ்த்திசை வானில் வெள்ளி
கிளம்பிடும்; கதிரோன் நாட்டை
வாழ்த்திட வருவான்; வான
வரம்பிடை ஆர்வான்; மீண்டும்
மேற்றிசை படுப்பான்; அந்தி
மேனியைக் காட்டும்; பாதை
தோற்றிட ஒளியை நல்கத்
தோன்றுவாள் நிலவுப் பெண்ணும்.
இப்படி இருநாள் செல்ல
இன்முக வடிவம் மாறக்
கைப்பிடி மலராள் மேனி
கனலிடைச் சருகாய்த் தீய
மைப்பிடிகண்கள் வெண்மை
மாறிட இதயம் மட்டும்
எப்படி யேனும் நாதன்
இடத்தையான் காண்பே னென்னும்!

6. வினாத்தாள்

- சுரதா

ஆசிரியர் குறிப்பு

சுரதா (23 நவம்பர் 1921 - 29 சூன் 2006) தமிழகக் கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். கவிஞர் பாரதிதாசனிடம் கொண்ட பற்றுதலால் பாரதிதாசனின் இயற்பெயராகிய சுப்புரத்னம் என்பதின் அடிப்படையில் தன் பெயரை சுப்புரத்னதாசன் என்று மாற்றிக்கொண்டார். தன் மாற்றுப்பெயரின் சுருக்கமாக சுரதா என்னும் பெயரில் பல மரபுக் கவிதைத் தொகுப்புகள் தந்தவர். செய்யுள் மரபு மாறாமல் எழுதிவந்த இவர், உவமைகள் தருவதில் தனிப்புகழ் ஈட்டியவர். இதனால் இவரை உவமைக் கவிஞர் என்று சிறப்பித்துக் கூறுவர்.

சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். தஞ்சை மாவட்டம் பழையனூர் (சிக்கல்) என்னும் ஊரில் பிறந்தவர். பெற்றோர் திருவேங்கடம்-செண்பகம் அம்மையார் ஆவர். பள்ளி இறுதி வகுப்பு வரை பயின்றார். சீர்காழி அருணாசல தேசிகர் என்பவரிடம் தமிழ் இலக்கணங்களைக் கற்றார்.

வெள்ளைத் தாளெல்லாம் வெறும்தாள்! நானோ,
ஆத்தாள் இன்றியே பிறந்த வினாத்தாள்!

காலாண்டுக் கொருமுறை, அரையாண்டுக் கொருமுறை,
ஆண்டின் இறுதியாம் அப்போ தொருமுறை,
மாணவர் தம்மைநான் சந்திக்க வருவேன்.

வாவென் றழைப்பதால் பள்ளிக்கு வருகிறேன்.
கேளென்று சொல்வதால் கேள்வி கேட்கிறேன்.

பாடத்தை ஒழுங்காய்ப் படிக்காத மாணவன்
என்னைக் கண்டதும் எரிச்ச லடைகிறான்.
என்னைக் கிழித்தே எறியவும் நினைக்கிறான்.

என்னை வெறுப்பதால் எனக்கென்ன நட்டம்!
கிழித்தென்னை எறிவதால் கிடைக்குமோ பட்டம்!
உண்டி கொடுத்தும் உறைவிடம் தந்தும்,
இலவசக் கல்விக் கேற்பாடு செய்தும்,
படியுங்கள் என்றுநாம் பலமுறை சொல்கிறோம்.

அடியுங்கள் என்றால் அடிக்கின் றார்களே,
படியுங்கள் என்றால் படிக்கின் றார்களா?

வெண்ணெய்க் கட்டியும், சீனியும் ஊட்டலாம்.
விழுங்கா திருந்தால் நாமென்ன செய்யலாம்.

இப்படி இருந்தால் இனிவரும் உலகம்
எப்படி மதிக்கும் இவர்களை? ஒருவன்
பழுதிலாக் கல்விப் பயிற்சி பெறாவிடில்
எழுவாய் பயனிலை என்று சொல்லுமே!

7. கட™

- தமிழ்ஒளி

ஆசிரியர் குறிப்பு

தமிழ்ஒளி (இயற்பெயர்: விஜயரங்கம், 21 செப்டம்பர் 1924 - 29 மார்ச்சு 1965) புதுவையில் பிறந்த தமிழ்க் கவிஞர் ஆவார். பாரதியாரின் வழித் தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கி கவிதைகளைப் படைத்தவர். கவிதைகள் மட்டுமல்லாது கதைகள், கட்டுரைகள், இலக்கியத் திறனாய்வுகள், மேடை நாடகங்கள், குழந்தைப் பாடல்கள் எனப் பல இயற்றியவர். திராவிடர் கழகத் தொண்டராக இருந்து பிற்காலத்தில் பொதுவுடைமைத் தோழராக வளர்ந்தவர். தாழ்த்தப்பட்ட மக்களின் இழிநிலை கண்டு, அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் சமூகத்தில் நிலவும் சாதிய வேறுபாடுகளையும் சாடி கவிதைகள் எழுதினார்.

படைப்புகள்

தமிழ் ஒளியின் கவிதைகள் தனித் தன்மை வாய்ந்தவை. தொடக்க காலத்தில் திராவிடர் கழகத்தைச் சார்ந்தவராக இருந்தபோதிலும் பொதுவுடைமைக் கொள்கைகளை உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார். உலகத் தொழிலாளர்களின் உரிமை நாளான மே தினத்தை வரவேற்றுப் பாடினார். 1949ஆம் ஆண்டில் ‘புதுவைத் தொழிலாளிக்கு கோவைத் தொழிலாளியின் கடிதம்’ என்னம் கவிதை எழுதினார். மக்கள் வாழ்வு உயர இலக்கியங்கள் பயன்படவேண்டும் என்பதான் அவர் கொள்கை. ‘ஒரு கவிஞன் வாழ்ந்ததற்கு அடையாளமே அவனுடைய படைப்புகள்தாம்’ என்று எழுதினார். நிலை பெற்ற சிலை, வீராயி, மே தின ரோஜா ஆகிய மூன்று காவியங்களும் தலித்து மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் தலித்து மக்களின் விடுதலை அவர்களின் முன்னேற்றம் ஆகியவற்றை விவரிக்கின்றன, வீராயி என்னும் காவியத்தில் கதைத் தலைவி வீராயி ஒரு தலித்துப் பெண்ணாகக் காட்டப்படுகிறாள். ஐந்து சிறுகதைத் தொகுதிகள் அவர் எழுதினார். தமிழ் ஒளியின் சிறுகதைகளில் வரும் பாத்திரங்கள் பெரும்பாலோர், தலித்துக்கள், தொழிலாளர்கள், போராளிகள் என அடித்தட்டு மக்களாகவே இருந்தார்கள். இடதுசாரி இயக்கப் படைப்பாக்கங்களில் சாதியச் சிக்கல்களை நேரடியாகப் பேசப்படாமல் இருந்த காலத்தில் தமிழ் ஒளி சாதியத்தையும் தலித்தகளின் விடுதலையையும் பாடினார்.

தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் உறுப்பினராக இருந்தார். தாமரை என்னும் இலக்கிய இதழில் வனமலர் என்னும் தலைப்பில் சில உருவக் கதைகளை எழுதினார். ஐம்பதுகளின் இறுதியில் தமிழ் ஒளி திரைப்படத்துறையில் கால் வைத்தார். உலகம் என்னும் திரைப்படத்தில் ஒரு பாடலும் எழுதினார். எவரெசுட்டு மலை உச்சியில் தேசியக் கொடி ஏற்றி சாதனைப் படைத்த தேன்சிங்கைப் பாராட்டிக் கவிதை எபதினார். நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் தொடங்கி மின் உற்பத்தி நிலையம் அமைத்தபோதும் கவிதை படைத்தார். சோவியத்து யூனியன் புட்னிக் என்னும் விண்கலத்தை ஏவியபோது வரவேற்றும் அணுக்குண்டு அச்சுறுத்தலை எதிர்த்தும் கவிதைகள் வரைந்து வரலாறு படைத்தார். குழந்தைகளுக்கான பாடல்களையும் எழுதியுள்ளார். சக்தி நாடக சபாவுக்காக சிற்பியின் காதல் என்னும் நாடகம் எழுதினார். அக்கதை வணங்காமுடி என்னும் பெயரில் திரைப்படமாக உருவாகியது.

புனைப் பெயர்களு‹ இத› களு‹

தமிழ் ஒளி, விஜயரங்கம், விஜயன், சி.வி.ர. என்பன அவருடைய புனை பெயர்கள் ஆகும். முன்னணி, புதுமை இலக்கியம், சாட்டை போன்ற இதர்களில் பணியாற்றினார். சனயுகம் என்னும் திங்கள் இதழைத் தம் சொந்த முயற்சியில் நடத்தி மார்க்சிய கருத்துகளைப் பரப்பினார். மாணவப் பருவத்தில் திராவிட நாடு, குடியரசு, புதுவாழ்வு ஆகிய திராவிட இதழ்களிலும் கவிதைகளை எழுதினார். வெளியிட்டார்.

எழுதிய காவியங்களு‹ நூ™களு‹

- கவிஞனில் காதல் - 1947
- நிலை பெற்ற நிலை - 1947
- வீராயி - 1947
- மே தின ரோசா
- விதியோ வீணையோ - 1961
- கண்ணப்பன் கிளிகள் - 1966
- புத்தர் பிறந்தார் (முற்றுப் பெறாத காவியம்)
- கோசலக் குமாரி - 1966
- மாதவிக் காவியம் - 1995
- சிலப்பதிகாரம் காவியமா நாடகமா
- திருக்குறளும் கடவுளும்
- தமிழர் சமுதாயம்

மீன்கள்

வான்கடல் தோன்றிடும் முத்துக்களோ-ஏழை
வாழும் குடிசையின் பொத்தல்களோ?
மாநில மீதில் உழைப்ப வர்கள்-உடல்
வாய்ந்த தழும்புக ளோஅவைகள்?

செந்தமிழ் நாட்டினர் கண்களெல்லாம்-அங்குச்
சேர்ந்து துடித்துக் கிடந்தனவோ?
சொந்த உரிமை இழந்திருக்கும்-பெண்கள்
சோக உணர்ச்சிச் சிதறல்களோ?

இரவெனும் வறுமையின் கந்தல்உடை-தனில்
எண்ணற்ற கண்களோ விண்மீன்கள்?
அருந்தக்கூ ழின்றியே வாடுபவர்-கண்ணீர்
அருவித் துளிகளோ வான்குன்றிலே?

காலம் எழுதும் எழுத்துக்களோ-பிச்சைக்
காரர் இதயத்தின் விம்மல்களோ?
நீலக் கண்ணாடியின் கோட்டையிலே-மின்னல்
நெளிவை இறைத்திட்ட அற்புதமோ?

வெய்யில் அரசாங்கம் வாட்டிடினும்-இருள்
வேலிகட்டி யிங்கு வைத்திடினும்
பொய்யில் தொழிலாளர் எண்ணமெலாம்-அங்குப்
பொங்கிக் குமுறி இறைத்தனவோ?

மீன்கள்

வான்கடல் தோன்றிடும் முத்துக்களோ-ஏழை
வாழும் குடிசையின் பொத்தல்களோ?
மாநில மீதில் உழைப்ப வர்கள்-உடல்
வாய்ந்த தழும்புக ளோஅவைகள்?

செந்தமிழ் நாட்டினர் கண்களெல்லாம்-அங்குச்
சேர்ந்து துடித்துக் கிடந்தனவோ?
சொந்த உரிமை இழந்திருக்கும்-பெண்கள்
சோக உணர்ச்சிச் சிதறல்களோ?

இரவெனும் வறுமையின் கந்தல்உடை-தனில்
எண்ணற்ற கண்களோ விண்மீன்கள்?
அருந்தக்கூ ழின்றியே வாடுபவர்-கண்ணீர்
அருவித் துளிகளோ வான்குன்றிலே?

காலம் எழுதும் எழுத்துக்களோ-பிச்சைக்
காரர் இதயத்தின் விம்மல்களோ?
நீலக் கண்ணாடியின் கோட்டையிலே-மின்னல்
நெளிவை இறைத்திட்ட அற்புதமோ?

வெய்யில் அரசாங்கம் வாட்டிடினும்-இருள்
வேலிகட்டி யிங்கு வைத்திடினும்
பொய்யில் தொழிலாளர் எண்ணமெலாம்-அங்குப்
பொங்கிக் குமுறி இறைத்தனவோ?

செய்யுள்

கூறு - II - புது, கவிதை

1. வீ† டு, கொரு மர‹ வளர்ப்போ‹

- அப்துல் ரகுமான்

அப்துல் ரகுமான் (நவம்பர் 9, 1937 - சூன் 2, 2017), தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞரும், தமிழ்ப்பேராசிரியரும் ஆவார். கவிக்கோ என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார். ‘வானம்பாடி’ இயக்கக் கவிஞர்களோடு இணைந்தியங்கியவர். எழுதுபவர்களின் தலைவாயிலில் தம் கவிதை வெளியீடுகளின் வாயிலாகப் புதுக்கவிதைத் துறையில் நிலைநிறுத்திக் கொண்டவர்களுள் அப்துல் ரகுமான் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் ஆவார். அவர் பால்வீதி என்ற கவிதைத் தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார். அத்தொகுதி வெளிவந்தபோது கவிதையை நேரடியாகத் தராமல் உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றின் வழி வெளியீட்டு முறையை அமைத்துக்கொண்டார். தமிழில் கவிதைக் குறியீடுகள் குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர். தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களை முனைந்ததிலும் பரப்பியதிலும் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

1960-க்கு பின் கவிதை உலகுக்கு வந்த இவர் கவியரங்கக் கவிதைகளாலும் சிறப்படைந்துள்ளார். சிலேடை வார்த்தைகளால் கேட்போரைக் கவர்வது இவரது பாணி. வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்தவர். அறிவுமதி உள்ளிட்ட இளந்தலைமுறை கவிஞர்களுக்கு ஆசானாக விளங்கினார். ஆலாபனை கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.

அப்துல் ரகுமான் மதுரையில் வைகை ஆற்றின் தென்கரையில் 1937 நவம்பர் 2 ஆம் நாள் உருதுக் கவிஞர் மஹி என்னும் சையத் அஹமத் - ஜைனத் பேகம் இணையருக்கு மகனாகப் பிறந்தார்.

வீட்டுக்கொரு மரம்

வளர்க்க வேண்டியதெல்லாம் வளர்த்தாகிவிட்டது
மரம் தான் பாக்கி
மரம் வளருங்க!

காட்டில் வளர்ந்ததையெல்லாம்
அவர்கள் சாப்பிட்டுவிட்டார்கள்
எனவே இனி வீட்டில் வளருங்க!
வீடே இல்லையே என்கிறீர்களா?
அப்படியென்றால் அவசியம் மரம் வளருங்க!
அதனடியிலேயே குடியிருக்கலாம்!

பிள்ளைகளை வளர்த்தால் சோறு கேட்பார்கள்,
வேலை கேட்பார்கள்
எனவே மரமே வளருங்க!
வீட்டுக்கொரு ஆண்மகன் வளர்ந்தால் போராட வருவான்
இது அகிம்சை நாடு
எனவே மரம் வளருங்க!

வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி அவர்களை வளர்த்தீங்க
அவர்கள் காட்டில் மழை பெய்கிறது!
நீங்கள் காய்ந்து போனீர்கள்!

அவர்களுக்கு வாங்கும் கரங்கள்!
மரங்களுக்குக் கொடுக்கும் கரங்கள்!

அவர்கள் வெயிலைத் தருபவர்கள்;
மரங்கள் நிழலைக் கொடுப்பவை;
எனவே இனியாவது மரங்களை வளருங்க!

என்றைக்காவது ஒருநாள் உங்களுக்குச் சூடுசொரணை வந்தால்
தடிகள் செய்யலாம்!
அதனால்தான் சொல்கிறேன் மரங்களை வளருங்க!

2. சென்ரியூ கவிதைகள்

(ஏதேனுः ஐ%து கவிதைகள்)

- ஈரோடு தமிழன்பன்

ஆசிரியர் குறிப்பு

ஈரோடு தமிழன்பன் (Erode Tamilanban) ஒரு தமிழகக் கவிஞர் ஆவார். ஆசிரியர், மரபுக் கவிஞர், கவியரங்கக் கவிஞர், புதுக்கவிதைக் கவிஞர், சிறுகதை ஆசிரியர், புதின ஆசிரியர், நாடக ஆசிரியர், சிறார் இலக்கியப் படைப்பாளி, வாழ்க்கை வரலாற்றாசிரியர், திறனாய்வாளர், கட்டுரையாளர், ஓவியர், சொற்பொழிவாளர், திரைப்பட இயக்குநர், திரைப்பட பாடலாசிரியர் எனப் பன்முகப்பட்ட ஆளுமைகளைக் கொண்டிருப்பவர்.

சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில் செய்தி வாசிப்பாளராக பணியாற்றியவர். தமிழ்நாடு அரசின் இயல் இசை நாடக மன்றத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு அரசின் அறிவியல் தமிழ் மன்றத்தின் உறுப்பினராகவும் பணியாற்றி உள்ளார்.

ஈரோடு மாவட்டம் சென்னிமலை என்ற ஊரில் வாழ்ந்த செ.இரா.நடராசன் - வள்ளியம்மாள் இணையரின் மகனாக 1933 செப்டம்பர் 28 அன்று பிறந்தார். இவரது இயற்பெயர் ந.செகதீசன்.

1. “தொகுதிதான்
முடிவாகவில்லை.
தோல்வி முடிவாகிவிட்டது.”

2. “ஆயிரம் பேரோடு
வேட்பு மனுத்தாக்கல்.
ஐம்பது வாக்குகள்.”

3. “சண்டைக்கோடி
வென்றாலும் தோற்றாலும்
பிரியாணி.”

4. “விடைகள் கேட்ட வினா
மாணவனே
தேர்ந்து விடுவாயாய?”

5. “ஒலிபெருக்கி
சோதனை முடிந்ததும்
பேச்சாளர் சோதனை.”

3. பிற்சேர்க்கை

- வைரமுத்து

ஆசிரியர் குறிப்பு

வைரமுத்து (பிறப்பு: 13 சூலை 1953) ஓர் புகழ்பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். சிறந்த பாடலாசிரியருக்கான இந்திய அரசின் விருதை ஏழு முறை பெற்றுள்ளார். நிழல்கள் (1980) எனும் திரைப்படத்தில் ''பொன்மாலைப் பொழுது'' எனும் பாடலை முதன்முதலில் எழுதிய இவர் 2009 சனவரி மாதம் வரை 5800 பாடல்களை எழுதியுள்ளார். முன்பு இளையராஜா வுடனும், பின்னர் ஏ.ஆர். ரகுமானுடனும் இவர் இணைந்து வழங்கிய பாடல்கள் புகழையும் பல விருதுகளையும் பெற்றுள்ளன.

இவர் தமிழ்நாடு மாநிலம் தேனி மாவட்டம், பெரியகுளம் அருகில் உள்ள வடுகபட்டியில் ராமசாமித்தேவர் - அங்கம்மாள் ஆகியோருக்கு மகனாக விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயின்றார். 1980இல் "நிழல்கள்" திரைப்படத்தில் இது ஒரு பொன்மாலைப் பொழுது எனத் தொடங்கும் பாடலை முதன் முதலில் இயற்றினார். இவருடைய மனைவியின் பெயர் பொன்மணி. இவருக்கு மதன் கார்க்கி, கபிலன் என இரு மகன்கள் உள்ளனர்.

ஒன்று

சொல்லுங்கள் புலவரே!
முத்துக்கள் பிறக்கும்
இடம் பத்து?

மேகத்தில் பிறக்கும்
சங்கில் ஜனிக்கும்
சிற்பியில் இருக்கும்
தாமரையில் உயிர்க்கும்
வாழையில் கிடைக்கும்
மூங்கிலில் முளைக்கும்
தந்தத்தில் வெடிக்கும்
நாகத்தில் தெரிக்கும்
"ஒன்றை மறந்தீரே?"
"என்னது?"
"உழைப்பவன் நெற்றி"

இர‡ டு

சொல்லுங்கள் அறிஞரே!
மூடநம்பிக்கை
எவை எவை?
கழுதை கத்துதல் சுபம்
விதவை எதிர்வந்தால் பாவம்
மொட்டையடித்தால் முக்தி
உள்ளங்கை அரித்தால் வருவாய்
காலையில் காணும் கனவு பலிக்கும்
"ஒன்றை மறந்தீரே!"
"என்னது".
"மந்திரியிடம் மனு"

மூன்று

சொல்லுங்கள் ஜோசியரே!
இருட்டில் செய்யத்தகாதவை
எவை எவை
முடிவெட்டலாகாது
நகம் களைதலாகாது
பேன் பார்த்தலாகாது
அழுக்குத்துணியை
வெளுக்கப் போடலாகாது
உப்போ மோரோ
இரவல் தரலாகாது
பல் துலக்கலாகாது
கடன் கொடுக்கலாகாது
"ஒன்றை மறந்தீரே!"
"என்னது?"
"தொலைக்காட்சி ஆகாது"

நான்கு

சொல்லுங்கள் பண்டிதரே!
பார்க்க முடியாதவை எவை?
அலையற்ற கடல்
இறவாத உடல்

ஆகாயம் இல்லாத ஊர்
நீர் கலவாத மோர்'
திரையரங்கில் தேசிய கீதம்
பிழைக்கத் தெரிந்த கவிஞன்
கைதொடாத காதலன்
வாழைமரத்தில் ஊஞ்சல்
உலோபியின் புன்னகை
"ஒன்றை மறந்தீரே"
"என்னது"
"ஜனநாயகத்தின் சத்தியம்"

4. வாழை மரத்தின் சபத<

- மு.மேத்தா

ஆசிரியர் குறிப்பு

மு.மேத்தா (முகமது மேத்தா, பிறப்பு: செப்டம்பர் 5, 1945) பெரியகுளத்தில் பிறந்தார். இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்த கவிஞர்களுள் இவரும் ஒருவராவார். இவர் எழுதிய நூலான ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்ற கவிதை நூலுக்கு 2006ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது பெற்றார்.

உவமை உருவகங்களில் பழமையையும் புதுமையையும் இணைத்த மு.மேத்தா, வளமான கற்பனை, எளிய நடை, எளிய சொல்லாட்சி, மனித உணர்வுகளின் படப்பிடிப்புகளால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர். இவரது முதற் கவிதைத்தொகுப்பு கண்ணீர்ப் பூக்கள். காதல் சோகமும், தமிழ்த் தாகமும் இழையோடும் இவரது கவிதைகள் அவ்வப்போது கூர்மையான சமூக விமர்சனங்களிலும் இறங்குவதுண்டு. சமூக விமர்சனத் தொனியில் அமைந்த "தேச பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி" என்ற கவிதை மு.மேத்தாவுக்கு புகழ் தேடித் தந்த கவிதை ஆகும். மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், சிறுகதை, நாவல், கட்டுரைகள் முதலியவற்றைப் படைப்பதிலும் வல்லவரான மு.மேத்தா அத்துறைகளில் பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். அவருடைய நூல்களுள் "ஊர்வலம்" தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்ற கவிதை நூலாகும். இவரது "சோழ நிலா" என்னும் வரலாற்று நாவல், ஆனந்த விகடன் இதழ் நிகழ்த்திய பொன்விழா இலக்கியப் போட்டியில் முதல் பரிசு பெற்றது ஆகும். இவர் திரைப்படத் துறையிலும் பாடல்கள் எழுதி வருகிறார்.

மரங்களில் நான் ஏழை எனக்கு
வைத்த பெயர் வாழை

கருத்தாங்கிப் பிள்ளையினைப் பெற்றெடுத்துக்
கண்மூடும் புத்திரி நான்! எனக்குக் கீழே
குருத்துவிடும் கன்றுக்கு வழியை விட்டுக்
குறிப்பறிந்து ஒதுங்குவதால்
தலைமுறையின் தத்துவத்தைப் புவிக்கும் காட்டும்
தடயம் நான்!

வானத்தைத் தொடுவதற்குக் கனவு காணும்
வழக்கமில்லை என்னிடத்தில் மயக்கமில்லை
மானிடரின் புழுதிக்கால் பதியும் இந்த
மண்ணுடன் என் உறவதிகம் ஆதலாலே

மரங்களில் நான் குட்டை மரம்
மனிதர்களின் கைகளுக்கு
லகுவாக எட்டும் மரம்டிகு!

மானிடர் செய்யும் சிவப்பு விளம்பரம்
    மதிலின் முதுகில் மாட்டியிருக்கும் - நானோ
தானாய் எழுந்து தட்டிகாட்டிய
    தரையின் பச்சை விளம்பரப் பலகை!

அழைப்பிதழ்கள் திருமணத்தின்
அறிமுகங்கள்! நாங்கள்
அடையாள மரங்கள்!
கல்யாண வீடுகளில்
காவலுக்கும் நிற்கும்
துவார பாலகர்கள்!

குட்டை மரமென்னும் குறையை - என்
பெரிய இலைகளால்
பெயர்த்துத் தகர்த்தவன் நான்!

என் இலைகள்...
மயிலிடம் கடன் வாங்காத
பச்சை நரம்புதகளால ஆன
தோகைகள்.

கலைகளில் இன்றியமையாத
சமையற்கலை - என்
இலை வாகனத்தில்
ஏறி வரும்போது
விரல் வரவேற்பு
விரைவாகக் கிடைக்கும்!

என் இலைகள்
உபசரிப்பின் இலக்கியங்கள்.
விருந்தினரின் அந்தஸ்தை
எடைபோடும் இயந்திரங்கள்!

சோற்று பூமியின்
சொர்க்க வாசல்கள்
ஏழை வயிறுகளின்
இலட்சியக் கனாக்கள்!

உண்டு முடிந்தபின்னர்
எச்சில் இலையென்று
எறிந்து விடுவார்கள்

கூடத்தில் மரியாதைப் பூச்சு
குப்பைத் தொட்டிகளில் எங்க
ஆயாச மூச்சு!

தொட்டி இலையையும்
துடைத்துச் சாப்பிட
இந்த தேசத்தின்
தெரு ராஜாக்கள்
ஒருவரோ டொருவர்
கட்டிப் புரள்கிற போது
எதிர்கால இருட்டை
எண்ணிப் பதைக்கிற - என்
இதய வேதனைக்கு
உவமைகள் ஏது?

5. வள்ளுவ‹ பத்து

- அறிவுமதி

ஆசிரியர் குறிப்பு

அறிவுமதி, புகழ்பெற்ற தமிழ்க் கவிஞரும் பரவலாக அறியப்படும் தமிழ்த் திரைப்பட பாடலாசிரியரும் ஆவார். அறிவுமதியின் இயற்பெயர் ‘மதியழகன்’ தனது நண்பர் ‘அறிவழகன்’ பெயரையும், தனது பெயரையும் சேர்த்து ‘அறிவுமதி’ என்று வைத்துக்கொண்டார். இவர் விருத்தாசலம் நகருக்கு அருகில் உள்ள சு. கீணனூரில் கேசவன் - சின்னப்பிள்ளை (சான்று இரெ.சுப்பிரமணியனின் ‘அறிவுமதி கவிதைகள் - ஓர் ஆய்வு’ என்னும் நூல்) இணையருக்கு மகனாகப் பிறந்தார். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைககழகத்தில் முதுகலை பட்டம் பெற்றவர். இவரின் தமிழ் இலக்கியத்தின் மீது இருந்த விருப்பத்தைக் கண்டு கவிஞர் மீரா கவிஞர் அப்துல் ரகுமானிடம் அறிமுகப்படுத்தினார். மறைந்த திரைப்பட இயக்குநர் பாலுமகேந்திராவின் ஏழு படங்களுக்கு உதவி இயக்குநராக பணியாற்றியுள்ளார் கவிதைத் தொகுப்பு.

படைப்புகள்

1. அவிழரும்பு
2. என் பிரிய வசந்தமே
3. நிரந்தர மனிதர்கள்
4. அன்பான இராட்சசி
5. புல்லின் நுனியில் பனித்துளி
6. அணுத்திமிர் அடக்கு
7. ஆயுளின் அந்தி வரை
8. கடைசி மழைத்துளி
9. நட்புக்காலம்
10. மணிமுத்த ஆற்றங்கரையில்
11. பாட்டறங் கவிதைகள்
12. அறிவுமதி கவிதைகள்
13. வலி

சிறுகதைத் தொகுப்பு

1. வெள்ளைத் தீ

குறு‹ பட‹

1. நீலம்

பாட™கள்

1. தமிழ் பிறந்தநாள் பாடல்

ந† பு, கால‹

அறிவுமதியின் மிகச் சிறந்த படைப்புகளில் இதுவும் ஒன்று. இந்த நூல் ஆண் பெண் நட்பை வைத்து எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பு.

தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால்.

முக்கடல்
இருதுளி
திருக்குறள்.

நூற்று முப்பத்து மூன்று ஙீ பத்து
பெருக்கப் பெருக்கப்
பெருகும் வாழ்வு.

தமிழின்
நீண்ட பயணம்
இரட்டையடிப் பாதை.

தமிழ்ப்பால்
சுண்டக் காய்ச்ச
கிடைத்தது ஏடு.

இரண்டு அடி கொடுத்தால்தானே
திருந்துவாய்
வாங்கிக்கொள் வள்ளுவனிடம்.

உரை ஊற்றி ஊற்றிப் பார்த்தும்
புளிக்காத பால்
முப்பால்

இரண்டிரண்டாய் அலைகள்
குறளோசை
வள்ளுவத்தில் பார் கடல்.

வாழ்க்கை கடல்
கலங்கரை விளக்கம்
வள்ளுவர் சிலை

ஊன்றுகோல் வள்ளுவன்
எழுந்து நிற்கும்
விழுந்த குமரி.

6. ஆன%தயாழை மீ† டுகிறாய்

- நா.முத்துக்குமார்

ஆசிரியர் குறிப்பு

நா.முத்துக்குமார் (12 சூலை 1975 - 14 ஆகத்து 2016), தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். பல்லேலக்கா, என் காதல் சொல்ல, ஒரு கல் ஒரு கண்ணாடி ஆகியவை இவரின் பாடல்களுள் சில. தங்க மீன்கள், சைவம் திரைப்படப் பாடல்களுக்காக தேசிய விருது பெற்றவர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கன்னிகாபுரத்தைச் சேர்ந்தவர் இவர். நான்கு வயதில் தாயை இழந்தவர். சிறு வயதில் இருந்தே புத்தகங்களை உலகமாகக் கொண்டார்.

ஆ‡ : ஆனந்த யாழை
மீட்டுகிறாய் அடி நெஞ்சில்
வண்ணம் தீட்டுகிறாய்
அன்பென்னும் குடையை
நீட்டுகிறாய் அதில் ஆயிரம்
மழைத்துளி கூட்டுகிறாய்

ஆ‡ : இரு நெஞ்சம் இணைந்து
பேசிட உலகில் பாஷைகள்
எதுவும் தேவையில்லை
சிறு புல்லில் உறங்கும்
பனியில் தெரியும் மழையின்
அழகோ தாங்கவில்லை உந்தன்
கைகள் பிடித்து போகும் வழி
அது போதவில்லை இன்னும்
வேண்டுமடி இந்த மண்ணில்
இதுபோல் யாருமிங்கே
எங்கும் வாழவில்லை
என்று தோன்றுதடி

ஆ‡ : ஆனந்த யாழை
மீட்டுகிறாய் அடி நெஞ்சில்

வண்ணம் தீட்டுகிறாய்
அன்பென்னும் குடையை
நீட்டுகிறாய் அதில் ஆயிரம்
மழைத்துளி கூட்டுகிறாய்

ஆண் : தூரத்து மரங்கள்
பார்க்குதடி தேவதை இவளா
கேக்குதடி தன்னிலை மறந்தா
பூக்குதடி காற்றினில் வாசம்
தூக்குதடி
அடி கோவில் எதற்கு
தெய்வங்கள் எதற்கு
உனது புன்னகை போதுமடி
இந்த மண்ணில்
இதுபோல் யாருமிங்கே
எங்கும் வாழவில்லை
என்று தோன்றுதடி

ஆண் : ஆனந்த யாழை
மீட்டுகிறாய் அடி நெஞ்சில்
வண்ணம் தீட்டுகிறாய்

ஆண் : உன் முகம் பார்த்தால்
தோணுதடி வானத்து நிலவு
சின்னதடி மேகத்தில் மறைந்தே
பார்க்குதடி உன்னிடம் வெளிச்சம்
கேட்குதடி
அதை கையில் பிடித்து
ஆறுதல் உரைத்து வீட்டுக்கு
அனுப்பு நல்லபடி இந்த மண்ணில்
இதுபோல் யாருமிங்கே
எங்கும் வாழவில்லை
என்று தோன்றுதடி

ஆண் : ஆனந்த யாழை
மீட்டுகிறாய் அடி நெஞ்சில்
வண்ணம் தீட்டுகிறாய் (2)

7. சபி, கப்ப† ட முத்த‹

- சுகிர்தராணி

ஆசிரியர் குறிப்பு

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இராணிப்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவரது கவிதைகளில் பெண் விடுதலை, சமத்துவம் போன்ற சமுதாயக் கருத்துகள் உள்ளீடாக அமைந்திருக்கும். மண்ணையும் மக்களையும் குழைத்து வாழ்வின் எதார்த்தங்களை இயல்பாய்த் தனது கவிதைகளின் வழி காட்சிப்படுத்துபவர். நமக்குப் பாடமாக இவரது ‘அம்மா’ என்ற கவிதை இடம்பெற்றுள்ளது.

தோள்களின் மீது வந்தமரும்
செம்பறவைகளின் இலாவகத்தோடு
உன் கண்களை வாசிக்கிறேன்
மழைப் பொழுதின் சிலிர்ப்புகளும்
வேனிற்காலத்து வியர்வைத் துளிகளும்
பிரித்தறியா நிறத்தொடு
கூடிக்கிடக்கின்றன உன் கண்களுக்குள்
அவற்றில் நுழையும் வழியற்று
நுரை ததும்பும் கடற்கரை மேடுகளில்
விரிக்கப்பட்ட வலையென
உலர்கின்றது நமக்கிடையேயான அன்பு
மணலில் அழுந்திய சங்குகள்
எப்போதும் உன் சுவடுகளை
அடையாளப்படுத்தியபடியே இருக்கின்றன
மடலேறும் சாத்தியமும் முறிவுற்று
சுருண்டு படுத்திருக்கிறேன் உன் தொடுதலுக்காக
முன்பு ஒருமுறை எனக்கு
முத்தமொன்றைத் தருவதாய்ச் சொல்லியது

நனவிலி மனமாக இருக்கலாம்
கரையொதுங்கிய அலையாத்திப் பூவாய்
ஈரத்தால் கிழித்த என் கன்னங்களைக்
கடற்கரை மணலில் பதித்துவைத்திருக்கிறேன்
கண்டறியப்படாத ஒரு பாலைவனத்தில்
உலர்ந்த இரு உதடுகள்
சருகெனப் பறப்பதாய்ப் பேசிக்கொண்டார்கள்.

8. நீ எழுத மறு, கு‹ எனது அழகு

- இளம்பிறை

ஆசிரியர் குறிப்பு

கவிஞர் இளம்பிறை. திருவாரூர் அருகே சாட்டியக்குடியில் பிறந்தவர். இயற்பெயர் பஞ்சவர்ணம். சென்னையில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். ‘இளவேனில் பாடல்கள்’, ‘மவுனக்கூடு’, ‘நீ எழுத மறுக்கும் எனதழகு’ (பொன்னிப் பதிப்பகம் வெளியீடு) ‘முதல் மனுசி’ (ஸ்நேகா பதிப்பக வெளியீடு) ஆகிய கவிதைத் தொகுப்புகள் இதுவரை வெளிவந்துள்ளன.

கவர்ச்சிக்கல்ல
இல்லாத காரணத்தால்
சட்டை கிழிந்திருக்கும்.
இழுத்துப் போர்த்த எண்ணி
சேலையும் தோற்றிருக்கும்.

....

எனது அழகுகள் எல்லாம்
இதுவரை தெரிந்ததில்லை
உன் எழுத்து விழிகளுக்கு.
என் வாழ்க்கைக்குள் வந்ததில்லை
உனது கேமராக்கள்.

குறைந்த பட்சம்
அழகிப்போட்டிகள் நடத்தி
என்னைப் பழித்துக்காட்டாமல்
இருக்கக்கூட
நினைப்பதில்லை நீங்கள்’

உரைநடை

கூறு III - சிறுகதைகள்

1. வாய்,,சொற்கள்

\- ஜெயகாந்தன்

சத்திரத்துத் திண்ணையில் சுவிந்திருந்த இருளில், யாருடைய வருகைக்காகவோ - யாருடைய காலடிச் சத்தத்தைக் கிரசிப்பதற்காகவோ - தன் காதுகளை வழி மீது வைத்துக் காத்திருக்கிறாள் ருக்குமிணி.

அந்தச் சத்திரம், ஊருக்கு வெளியே-கிராமத்தில் எல்லையில் தலை காட்டிவிட்டுப் பிறகு திசை மாறிச் செல்லும் - டிரங்க ரோடின் ஓரத்தில் ரொம்ப காலம் வாழ்ந்து, இப்போது பாழடைந்து கிடக்கிறது.

பகல் நேரத்தில் அந்தச் சத்திரத்தின் அருகே இருக்கும் ஆலமரத்துப் பிரதேசம் மிகவும் கலகலப்பாக இருக்கும். வழிப்போக்கர்களும், பஸ் பிரயாணிகளும் சத்திரத்துக்கு நேர் எதிரே இருக்கும் அரசங்குடி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வரும் ரயில்பிரயாணிகளும் அங்கு வந்து சாப்பிடுவதற்கும், இளநீர் குடிப்பதற்கும் வசதியாய் ஒரு டீக்கடை உண்டு. அந்த டீக்கடையும் வெற்றிலை பாக்குக் கடையும் இரவு நேரத்தில் சத்திரத்துக்குப் பின்னால் ஒரு பர்லாங்கு தூரத்தில் உள்ள பொட்டைத் திடலில் அமைந்திருக்கும் 'டூரிங் டாக்கீஸ்' கொட்டகை அருகே வியாபாரம் செய்வதற்காக, ஆலமரத்துப் பிரதேசத்தைக் காலி பண்ணிவிட்டு போய்விடும்.

பகலில் ஆலமரத்தடியில் முறுக்கு மசால்வடை விற்கும் முனியம்மாளிடம், புகையிலை அடைத்த வாயோடு சிரித்துச் சிரித்துக் கதை பேசியவாறு கூடைகள் முடைவதிலும் தடுக்குகள் பின்னுவதிலும் பொழுதைக் கழித்துக்கொண்டிருப்பாள் ருக்குமிணி. அவளருகே ஒரு கட்டுப் பனைஓலையும் முங்கில் கம்புகளும் இருக்கும். அநேகமாக, எப்பொழுதும் அவளைச் சுற்றி ஒரு கூட்டம் அவள் கூடை முடைவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும். யாருடன் என்ன பேசிக் கொண்டிருந்தாலும் அவள் வீரலகள் ஓய்வில்லாமல் பின்னிக் கொண்டே இருக்கும். அவன் கையிலிருக்கும் அந்தக் கத்திஞ் மூங்கிலைப் பிளக்கும் போதோ, ஓலைகளைக் கிழிக்கும்போதோ சற்றே விரல்மீது பட்டால் போதும்! இரண்டு துண்டு தான். அத்தனை கூர்மை. ஆனால் அவள் ஒரு போதும் லேசாகக்கூட விரல்களை வெட்டிக் கொண்டதில்லை. அவளுக்கு விரலில் கண் உண்டு. விரலில் மட்டும் தானா? செவியில்,

நாவில், உடலெங்கும் கண்கள்தான். ஆனால்... முகத்தில் - எல்லோருக்கும் கண்கள் இருக்கின்ற, இருக்க வேண்டிய இடத்தில் இமைகள் மட்டுமே...

அவன் பிறவிக் குருடு!

பத்து வருஷங்களுக்கு முன், பத்து வயதுச் சிறுமியான ருக்குமிணியை அழைத்துக்கொண்டு ஆலமரத்துச் சத்திரத்தில் குடிபுகுந்த செங்கேணி என்கிற நெல்லிக் குப்பத்தான், தன்னைத் தவிர வேறு ஆதரவு இல்லாத குழந்தை ருக்குமிணியின் எதிர்காலத்தைப் பற்றி மிகவும் கவலைப்பட்டு, "இந்தாம்மா ருக்குஞ் நீயோ கண்ணில்லாத கொழந்தைஞ் எனக்குப் பிறகு ஒனக்கு யாரும் ஆதரவு கிடையாது. கண்ணே இல்லாத ஒனக்கு யாரு இருந்தும் என்னா பிரயோசனம்ஞ் அவங்களுக்கு நீ சொமையாத் தான் இருப்பே... நாளைக்கி இந்தக் கிழவன் மண்டையெப் போட்டுட்டா, ‘ஐயா, கண்ணில்லாத கபோதிங்க’ன்னு நீ கையேந்தக் கூடாது. ‘‘கஷ்டப்பட்டு இந்தத் தொழிலைக் கத்துக்க... உசிர் உள்ள வரைக்கும் கால் வயித்துக் கஞ்சியாவது குடிக்கலாம்’’ என்று தினசரி புலம்பிப் புலம்பி, அவனது சின்னஞ்சிறு விரல்களுக்கு ஒரு தொழிலைப் பழக்கிக் கொடுத்திருந்தான்.

ருக்குமிணிக்குப் பகலெல்லாம் ஆலமரத்தடியில் தொழில். டீ கடையில் சாப்பாடு. இரவில் ஜனசந்தடி அடங்கிக் கடைகள் அனைத்தும் இடம் மாறியபின் சந்திரத்துத் தனிமையில் படுக்கை. இருளும் தனிமையும் தானே அவளுக்குப் பழக்கமானவை. அவளுக்குப் பயம் தெரியாது. இருட்டில் தனியாய் இருந்தால் என்ன? இன்னொருவர் துணையுடன் இருந்தால் என்ன? ஆனால் போன வாரத்தில் ஏதோ ஒரு நாள் இரவில் வெறும் பேச்சுத் துணையாக இருந்த அவன் - கண்ணப்பன் - அதன் பிறகு வரவே இல்லை. அதன் பிறகு அவளுக்கு இந்த இருளும் தனிமையும் பயம் தராவிட்டாலும், வெறுப்பைத் தந்தன.

இன்று முன்னேரத்திலேயே ஏதேதோ நினைத்துக் கொண்டே படுத்து உறங்கிப் போன ருக்குமிணி, ஒரு கனவு கண்டு திடீரென்று விழித்துக் கொண்டாள்.

கனவா?

ஆமாம். பிறவிக் குருடியும் கனவு காண முடியும்! தூக்கமும் விழிப்பும் இருக்கிறதே, கண்கள் இல்லாதிருந்தும். கனவு மட்டும் இல்லாதிருக்குமா? ஆனால் அவளது களவுகள் ஒலி மயமானவை... சப்த ஜாலங்கள் தான். யாராருடைய குரல்கள் எல்லாமோ கேட்கும்! குரலும் மெய்யுணர்வும்தான்ஞ் குரலைக் கொண்டுதான் ஆட்களைக் காணமுடியும் அவளுக்கு. தாத்தா செங்கேணிக் கிழவன் சில

சமயங்களில் கனவில் வந்து ஆதரவோடு தலையைத் தடவிக்கொண்டு கொஞ்சுவார். இன்றைக்கு அவள்ஞ் புது விதமான கனவு ஒன்று கண்டாள்.

தூரத்திலிருந்து மெல்லெனப் புல்லாங்குழலின் நாதம்... கொஞ்சம் கொஞ்சம் அருகே நெருங்கி ஒலித்தும், திடீரென விலகி மெல்லன மங்கியும், சப்த விளையாட்டு! அந்த ஜாலம் அதிகமாகி, பிறகு மறைந்த பின், காதருகே நெருங்கி, கணீரென்ற குரலில், "ஞானக் கண் ஒன்று இருந்திடும் போதினிலே" என்ற பாட்டு!

'யாருடைய குரல்?' என்று சந்தேகம் பிறக்கவே இல்லை.

'ஆமாம்... கண்ணப்பாதான்! வந்திட்டியா? ஏன் நீ அன்னிக்கு அப்புறம் வரவே இல்லேஞ் புல்லாங்குழல் செஞ்சுட்டியா... எனக்குப் பயம்மா இருந்திச்சு. நீ எங்கே வராமலே இருந்துடுவியோன்னு. இந்தக் குருடியைக் கட்டிக்கிட்டு நாம்ப எதுக்கு அழணும்னு போயிட்டீயோன்னு நெனைச்சேன்... கண்ணப்பா, வந்துட்டியா?...' என்று அவன் முகத்தை, தலையை, தோளை, மார்பையெல்லாம் தடவித்தடவி மகிழ்கிறாள்.

'குருடியா... யார் குருடி?' என்று கேட்டு விட்டு மறுபடியும் பாடுகிறான் அவன், உள்ளங் கைகளில் அவள் முகத்தை ஏந்திக்கொண்டு...

"ஆன பிருந்தாவனமும் அதோ தெரியுதே, ஆனந்தக் கண்ணன் உருவம் அதோ தெரிவதாலே..." என்ற கண்ணப்பனின் இனிமையான குரல் அவளைச் சுற்றிலும் சூழ்ந்து முழங்குகிறது.

"எங்கே தெரியுது?... கண்ணப்பா... கண்ணப்பா..." என்று அழைக்கிறாள்- விழிப்பு! யாரையும் காணோம்!

தூரத்தில் டூரிங் டாக்கீஸில் பாண்டு வாத்திய இசைதான் ஒலிக்கிறது.

'இன்னம் நேரம் ஆகலே ஆட்டம் ஆரம்பிக்கலியே...'

'இன்னைக்காவது கண்ணப்பன் வருமா' என்ற யோசனை, ஏக்கம்!

அதன் பிறகு அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை.

அரசங்குடி ரயில்வே ஸ்டேஷனில் இரவு பத்து மணிக்குக் கடைசிப் பாசஞ்சர் வரும். இரண்டு நிமிஷத்திற்கும் குறைவாகத் தான் நிற்கும். போகும்போது ஸ்டேஷனில் உள்ள வெளிச்சத்தைக்கூட வாரிச் சுருட்டிக் கொண்டு போய்விடும். ஆலமரப் பொந்திலிருந்து ஆந்தைகள் அலறும். சுடுகாட்டிலிருந்து நரிகள் ஊளையிட ஆரம்பிக்கும். சில சமயங்களில், டிரங்க் ரோடில், சத்திரம் அதிர்வதுபோல் பேரிரைச்சலிட்டுக் கொண்டு லாரிகள் ஓடும். டூரிங் டாக்கீஸில் ஆட்டம் ஆரம்பிப்பதற் காகப் பாண்டு வாத்தியம் முழங்கும்.

ஒரு வாரத்துக்கு முன், இந்த இரவு நேரச் சப்தம் எதுவும் காதில் விழாதவாறு, திடீரென்று பெருகி வந்த கோடை மழை ஒரு மணி நேரம் விளாசி நின்ற பிறகு, சத்திரத்துக் கூரையிலிருந்தும், திண்ணை யோரமாய் மண்டியிருந்த அரளிச் செடியின் இலைகளிலிருந்தும், சொட்டுச் சொட்டாய் நீர் முத்துக்கள் பூமியில் தேங்கி நின்ற நீர்க் குட்டத்தில் விழுந்து எழுப்பும் ஓசையில் லயித்தவாறு, புடவைத் தலைப்பால் போர்த்திக் கொண்டு அவள் உட்கார்ந்திருந்தபோது மழையில் நனைந்து வந்த நாய்ஒன்று ஆதரவோடு அவள் காலடியில் உரசிக்கொண்டு படுத்ததும், மூலையில் கிடந்த மூங்கில் கம்பை எடுத்து ‘சீ, ஓடு’ என்று அடித்து விரட்டினாளேஞ் அப்போது, அவன் வந்தான்.

கொட்டுகின்ற மழையில் நனைந்து, எந்தப் பக்கம் போவது என்று புரியாமல், எதிலும் போய் மோதிக் கொள்ளக் கூடாதே என்ற ஜாக்கிரதை உணர்வோடு, இரண்டு கைகளையும் முன்னால் நீட்டி இருளைத் துழாவியவாறு மெல்லத் தடுமாறிக் கொண்டே வந்தான் அவன்.

ருக்குமிணி நாயை விரட்டிய சப்தம்கேட்டு, “யாரம்மா அது? இங்கே ஒரு சத்திரம் இருக்குதாமே இதுதானா?...” என்ற கேள்வியோடு சத்திரத்துப் படிகளைப் பாதத்தால் தடவித் தடவிப் பார்த்து மேலே ஏறி வந்தான் அவன்.

“ஆமா, இதுதான்ஞ் நீ எந்த ஊரு?” என்று விசாரித்தாள் ருக்குமிணி.

“எனக்கு விழுப்பும்... உம்... ஊரென்ன ஊரு? எல்லா நம்ம ஊருதான். டிக்கட்டில்லாம ரயில்லே வந்தேன். இங்கே புடிச்சி எறக்கி உட்டுட்டான்ஞ் இப்ப இதான் சொந்த ஊரு. டேசன்லே ஒரு புண்ணியவான் சொன்னாரு, இங்கே சத்திரம் இருக்குதுன்னு. ராப் பொழுதே இங்கே கழிக்கலாமில்லே!” என்று கேட்டுக் கொண்டே நனைந்திருந்த சட்டையை அவிழ்த்துப் தலையைத் துடைத்துக் கொண்டான்.

“ராப்பொழுதென்ன? நாளு பூராத்தான் இரேன். யாரு கேக்கப் போறா?” என்று ரொம்ப அசுவாரசியமாகப் புகையிலையைத் திருகி வாயிலிட்டுக் கொண்டு சுவரோரமாகச் சாய்ந்து உட்கார்ந்தாள் ருக்குமிணி.

அவன் தூணில் சாய்ந்து கொண்டு, மடியிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைப்பதற்காகத் தீக்குச்சியை உரசினான்.

தீக்குச்சியிலிருந்து எழுந்து பீடிக்குத் தாவிய நெருப்பின் மங்கிய வெளிச்சம், இருவரும் பார்க்க முடியாத இருவர்தம் முகத்தையும் பார்த்துவிட்டு, ஒரு நொடிக்குள் இருளில் மறைந்தது!

புகையையே ஆகாரமாக உட்கொள்வது போல் வாய் நிறையப் புகையை இழுத்து இரண்டு 'தம்' அடித்தவுடன் குளிருக்கு இதமாக இருந்தது. மூன்றாவது இழுப்புக்கு அந்தத் துண்டுப் பீடியின் லேபில் கரிந்து மொட மொடவென ஒலி எழுப்பியதும், அவன் அதை அணைத்து அடுத்த வேளைக்காகத் தீப்பெட்டிக்குள் வைத்துவிட்டு, தீப்பெட்டியில் தாளமிட்டவாறு குஷியாகப் பாட ஆரம்பித்தான்.

"ஞானக் கண் ஒன்று இருந்திடும் போதினிலே..." அந்த அமைதியான இரவில் அவன் குரல் கணீரென்று ஒலித்தது. ருக்குமிணி நிமிர்ந்து உட்கார்ந்து பாட்டைக் கேட்டாள். பாட்டும், பாடுகின்ற குரலும் அவளுக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

அவன் தன்னை மறந்து பாடிக்கொண்டிருந்தான். பாட்டு முடிந்ததும் தொண்டையைச் செருமினான். அந்தச் செருமலைக் கேட்டுத்தான் ருக்குமிணி இந்த உலகிற்குத் திரும்பி வந்தாள். "நீ நல்லாப் பாடுறியேஞ் ரொம்ப நல்லா இருந்திச்சு. இன்னொரு பாட்டுப் பாடேன்?" என்று கொஞ்சம் நெருங்கிவந்து உட்கார்ந்தாள்.

அவள் புகழ்ச்சி-அவள் புகழ்ந்த விதம், உணர்ச்சி மயமாகித் தடுமாறிய குரல்-அவனுக்கு ஒரு தெம்பையும் பெருமையையும் தந்தது!

"இன்னொரு பாட்டா? உம் - கொஞ்சம் தண்ணி இருந்தா குடுக்கிறியா? -இங்கே கெடைக்குமா?"

"தண்ணியா? அந்த மூலையிலே இருக்கு, எடுத்துக் குடியேன்... அது சரி, நீ என்னா சாதி?"

"படையாச்சி யம்மா. எந்த மூலையிலே இருக்கு தண்ணி?..." தரையைத் துழாவினான்.

"தோ, வர்ரேன்" என்று பழகிய பழக்கத்தால் தடுமாற்றம் சிறிதும் இல்லாமல் மூலையில் வைத்திருந்த தகரடப்பாவை எடுத்து அவனிடம் நீட்டினாள். "இதோ! நாங்களும் படையாச்சி தான்."

குரல் வந்த திக்கில் இருகைகளையும் அவன் ஏந்த, அவள் நீட்டிய தகரக் குவளை கைமாறும்போது இருவரின் விரல்களும் ஸ்பரிசித்தன.

"உம்! சாதி என்ன சாதி?" என்று முணுமுணுத்தான் அவன்.

"ஆமா... நீ ஏன் டிக்கட் இல்லாமே ரயில்லே வந்தே... எந்த ஊருக்குப் போறே?" என்றாள் ருக்குமிணி.

"நாலு வருசமா நா அப்பிடித்தான்... ரயில்லே பாட்டுப் பாடுவேன். சில நாளு ஒரு ரூவாகூடக் கெடைக்கும். அப்பல்லாம் விழுப்புரத்துக்கு வடக்கே தான், தெக்கே வந்ததில்லே. அங்க இருக்கிறவங்களுக்கு

என்னை நல்லாத் தெரியும், விட்டுடுவாங்க. இவன் யாரோ ஒரு புது ஆளு எறக்கி விட்டுட்டான்."

"ஆமா, ஒனக்கு ஊடு வாச, பொண்டாட்டி புள்ளே ஒண்ணும் கிடையாதா?"

அவன் அதற்குப் பதில் சொல்லாமல் சிரித்தான். வரண்ட, கைத்த சிரிப்பு. அவன் சிரித்த சிரிப்பிலிருந்து, அவன் சிரித்த தோரணையி லிருந்து, "ஒரு வேளை ரொம்பச் சின்னப்பிள்ளையோ? இவன் கிட்டே போயி பொண்டாட்டி பிள்ளைன்னு பேசினா?..." என்று நினைத்த அவளுக்கும் சிரிப்பு வந்தது. சிரித்துக் கொண்டே கேட்டாள்:

"ஒனக்கு என்னா வயசாச்சி?"

"வயசுக்கென்ன கொறைச்சல்? அது ஆகுது கழுதை வயசு!"

"நான் உன் வயசைக் கேட்டா, நீ கழுதை வயசைச் சொல்றியே?"

"வயசானால் போதுமா?... இருவத்திரண்டு வயசாச்சு. பெத்தவ இல்லாம... வீடு இருந்து என்னா, வாச இருந்து என்னா?... அம்மா செத்தப்பறம் சித்தாத்தாக் காரி ஒருத்தி வந்தா... கொடு... சூலி... அவளுக்கும் பிள்ளை குட்டின்னு ஆயிடுச்சி... அப்பாவுக்கு நியாயம் தெரியலை... சரி, இந்த வீட்டிலே நமக்கு இன்னா இருக்குன்னு தெய்வத்தைத் துணையா நம்பிப் பொறப்பட்டுட்டேன்... வருஷம் நாலாச்சு. இன்னக்கி இங்கே இருக்கணும்னு இருக்கு... நாளைக்கி எங்கேயோ? எல்லாம் நமக்குச் சொந்த ஊருதான்... எல்லாரும் தம்ம சாதிதான்... ஒலகத்திலே யாரை நம்பி யாரு இருக்கா? ஆனா பாரு எல்லாரையும் நம்பித்தான் எல்லாரும் இருக்காங்க" என்று கூறிப் பெருமூச்செறிந்தான் அவன்.

"நீ ஏதாவது சாப்பிட்டியா...?"

"இல்லே, மடியிலே ரெண்டணா இருக்கு... எங்கே போயி என்ன வாங்கிச் சாப்பிடறது. இந்த வனாத்தரத்திலே?..."

"இந்தா... கொஞ்சம் மல்லாக் கொட்டை இருக்கு... தின்னுப்பிட்டு இன்னொரு பாட்டுப் பாடு. நீ ரொம்ப நல்லாப் பாடறே" என்று கந்தல் துணியில் முடிந்து வைத்திருந்த வேர்க்கடலையைக் கையில் கொட்டி அவன் முன் நீட்டினாள். அவன் இருளில் நீண்ட அவள் கைகளைப் பிடித்து கடலை சிதறாமல் தன் கையில் கொட்டிக் கொண்டான்.

"சரி... என்னா பாட்டு வேணும்...?"

"எதனாச்சும்..."

"உன்னழகைக்காண இரு கண்கள் போதாதே" என்று தீப்பெட்டியில் தாளம் தட்டியவாறு பாட ஆரம்பித்தான் அவன்.

பாட்டில் லயித்திருந்த ருக்குமிணியின் காலடியில் மறுபடியும் அந்த நாய் வந்து ஒண்டியது. பாட்டுச் சத்தத்தில் தன்னை மறந்திருந்த அவன் எரிச்சலுற்று மூங்கில் கம்பை எடுத்து வீசினாள். இந்தத் தடவை அடி நாயின் மீது விழுந்தது... நாய் அலறிக்கொண்டே ஓடிற்று.

“அது என்னா?... மூங்கில் கம்பா, எங்கே காட்டு...” இருட்டில் கையை நீட்டினான் அவன்.

“ஓனக்கு எதுக்கு இது?...” என்று அவனிடம் கம்பைக் கொடுத்தாள் ருக்குமிணி.

“நல்ல மூங்கில்தான் என்று...” மூங்கிலைத் தடவிப் பார்த்தான்.

“என்ன செய்யறதுக்கு ‘நல்ல மூங்கில்தான்’னு சொல்றே?”

அவன் மெல்லச் சிரித்தான்.

“ஏன் சிரிக்கிறே?”

“ஒண்ணுமில்லே, ஒவ்வொருத்தன் கையிலேருந்தா அது ஒண்ணொண்ணுக்கு உபயோகப்படும். குருடன் கையிலேதான் அது ஒண்ணும் ஆகறதில்லை.”

அவன் தனக்காகத்தான். அப்படி சொல்லுகிறானோ என்று நினைத்த ருக்குமிணி, “மூங்கில்லே என்னென்ன செய்யலாம்னு நாளைக்குப் பாரு, நான் செஞ்சி காட்றேன்” என்றாள்.

“என்ன செய்வே?”

“கூடை, முறம், தடுக்கு...”

“அப்பிடியா, எனக்குக் கூடப் புல்லாங்குழல் செய்ய வருமே.”

“புல்லாங்குழலா?... நீ செய்வியா, ஊதுவியா” என்று ஆர்வத்தோடு கேட்டாள் ருக்குமிணி.

“இப்பப் பாடினேனே பாட்டு, இதெல்லாம் அப்பிடியே வாசிப்பேன்...”

“அப்ப சரி அந்தக் கம்பைக் குடு. வேற நல்லதாப் பார்த்துத் தர்ரேன்... நாளைக்கு நீ புல்லாங்குழல் செஞ்சி எனக்கு ஊதிக் காட்டணும். என்ன சரியா? ஏன், மல்லாக்கொட்டையைத் தின்னாமக் குந்தி இருக்கே! இந்தா இந்தக் கம்பை வெச்சிக்க” என்று மூங்கில் கட்டிலிருந்து நல்ல மூங்கிலாக ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

இந்த இரவு நேரத்தில் தன் பசியறிந்து, வேர்க் கடலையும், ஊன்றுகோலும் தந்த இந்தப் புண்ணிய வதியை மனசிற்குள் வாழ்த்திக் கொண்டே வேர்க்கடலையைத் தரையில் தட்டி உரித்துத் தின்றவாறு மௌனமாய்ச் சாய்ந்திருந்தான் அவன்.

சற்று நேர மௌனத்திற்குப் பின் அவள் கேட்டாள்.

"ஆமா... ஒன் பேரு என்னா?"

"கண்ணப்பன்? ஓம் பேரு"

"ருக்குமிணி,"

"அது சரி, நீ ஒரு வயசுப் பொம்புளைதானே? யாரும் துணை இல்லாம இந்தச் சத்திரத்திலே நீ ஏன் தனியாக் குந்தியிருக்கே?"

"நான் சின்னப் புள்ளையா இருக்கிறபோதே இங்கே வந்துட்டேன். எனக்கு ஒலகத்திலே இந்த ஒரு இடம் தான் பழக்கம்... எங்க தாத்தா இருந்தது அப்போ... நாலு வருசத்துக்கு முன்னே அது செத்துப் போச்சு..." தாத்தாவின் நினைவு வந்தபோது அழுகையும் வந்தது. இரண்டு விம்மலில் வந்த துயரம் அடங்கியும் போயிற்று.

"எங்காவது கண்ணாலம் கட்டிக்கினு போனாலும் ஒனக்கு ஆத்தா வூடு இந்தச் சத்திரம்தான்னு சொல்லு. நீயும் என்னைப்போல் அநாதைதானா?..." என்றான் கண்ணப்பன். அவள் குரலிலிருந்து அவள் வயசைக் கணித்த கண்ணப்பன், தன் கணிப்புசரி தானா என்று தெரிந்து கொள்ளவே கலியாணத்தைப்பற்றிப் பேசினான்.

"நீயாவது ஆம்பளை: நான் பொம்பளை... ரெண்டு கண்ணுமில்லாத குருடி எனக்கு யாரு இருக்கா? யாரு இருந்தாலும் கண்ணிலாத நான் அவங்களுக்கு ஒரு சுமைதானே? அதனாலேதான் அனாதையாக இருக்கேன்." அவன் உடலெல்லாம் மின்னலைப்போல் ஓர் உணர்ச்சி விசிறிப் பாய்ந்து அவனைத் துள்ளியெழ வைத்தது.

அவன் அதற்குப் பிறகு ஒரு வார்த்தை பேசவில்லை. அவள் எத்தனையோ பேச்சுக் கொடுத்துங்கூட, அவன் பதில் சொல்லாதது கேட்டுத் 'தூக்கம் வந்திடுச்சி போலிருக்கு' என்று எண்ணி, அவளும் தூங்க முயன்றாள்.

அன்று இரவு வெகு நேரம்வரை அவர்கள் இருவரும் தூங்கவும் இல்லை. பேசவும் இல்லை!

மறுநாள் காலை தூக்கத்திலிருந்து எழுந்ததும் "கண்ணப்பா, கண்ணப்பா!" என்று கூப்பிட்டாள். பதிலில்லை. அவள் படுத்திருந்த இடத்தைத் தடவிப் பார்த்தாள். இடந்தான் இருந்தது. 'அவன் தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் கூடப் போய் விட்டானே' என்று நினைக்கையில், ஆத்திரமும் அழுகையும் அடைத்துக் கொண்டு வந்தது. சற்று நேரம் செத்துப் போன தாத்தாவை நினைத்துக் கொண்டு ஒப்பாரி வைத்து அழுதாள். சத்திரத்துக்குப் பக்கத்தில் ஆல மரத்தடியில்

ஜனசந்தடி பெருக ஆரம்பித்தது. டீக்கடையில் டீ வாங்கிக் குடித்து விட்டு ருக்குமிணியும், தனது தொழிலில் - முதல் நாள் செய்து வைத்திருந்த கிலு கிலுப்பை, விசிறி முதலியவற்றிற்கு வர்ணம் பூசும் வேலையில் முனைந்தாள்.

நிறங்களையே பார்த்தறியாத-அப்படியென்றால் என்னவென்று கூடத் தெரியாத ருக்குமிணி, தான் பின்னும் கிலுகிலுப்பைகளுக்கும், தடுக்குகளுக்கும் அழகழகாக வர்ணம் பூசுவாள். பூசப்படும் நிறங்களைப் பற்றிப் பூசிக்கொள்ளும் பொருள்களுக்கு தெரியுமோ அதைவிடக் கொஞ்சம் அதிகமாக அவளுக்குத் தெரியும். அதாவது, ருக்குமிணியைப் பொறுத்தவரை பச்சை என்றால் அது கண்ணாடிக் குப்பியில் இருப்பது; நீலம் என்பது தகர டப்பாவில் இருப்பது. கொட்டாங்கச்சியில் இருப்பது சிவப்பு-அவ்வளவுதான்.

மனம்போன போக்காய்த் தன் மனத்திலிருக்கும் உணர்ச்சிகளை அவற்றின் மீது கிறுக்கி மகிழ்வாள். அவற்றிற்கு அர்த்தமில்லையா என்ன? அழகாக இருப்பதாய்க் கண் படைத்த புண்ணியவான்கள் கூறுகிறார்கள்.

அன்று-கண்ணப்பன் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்ட தினம்-அவள் சரியாகவே தனது வேலைகளைச் செய்து முடிக்கவில்லை. பக்கத்தில் உட்கார்ந்து வியாபாரம் செய்யும் முனியம்மாளிடம் கூடச் சரியாக ஒன்றும் பேசவில்லை. அவளையறியாமல் மெல்லிய குரலில் "உன்னழகைக் காண இரு கண்கள் போதாதே!" என்று கொண்டாள். அதைக் கேட்டு முனியம்மா அவளைக் கேலி பேசினாள். முனியம்மாவுடன் ருக்குமிணியும் சேர்ந்து சிரித்தாள்.

ஆமாம். ருக்குமிணிக்கு வெட்கப்படக் கூடத் தெரியாது. அன்று பகல் பொழுது முழுதும் அவன் நினைவிலேயே நகர்ந்தது அவளுக்கு.

அந்த இரவு சம்பவத்திற்குப் பின் பகலும் இரவும் கண்ணப்பனைப் பற்றிய நினைவுகளிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள் ருக்குமணி. மானசீகமாய் அவன் குரலையும் பாட்டையும் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தாள். வாழ்க்கை முழுதும் அவன் பாடிக்கொண்டே இருக்க, பக்கத்தில் உட்கார்ந்து தான் கேட்டுக் கொண்டே இருப்பதைக் காட்டிலும் உலகத்தில் வேறு ஒரு இன்பம் இருப்பதாக அவளால் நம்ப முடியவில்லை.

ஆனால், அந்தக் கண்ணப்பன் - அவனைத் தான் காணோமே!

அவன் எப்பொழுதாவது நிச்சயம் வருவான் என்று அவளுக்குத் தோன்றியது. அவனுக்காக அவள் காத்திருந்தாள்.

திடீரென்று கனவு கண்டு விழித்தெழுந்து, அவன் நினைவில் சத்திரத்துத் திண்ணையில் அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கையில், டூரிங் டாக்கீஸில் ஆட்டம் ஆரம்பமாகிவிட்டது. டூரிங் டாக்கீஸ் பாண்டு வாத்திய ஓசையும், பழைய காலத்தில் புகழோடு விளங்கிய கிட்டப்பாவின் சங்கீதத்தை மானபங்கப்படுத்திக் கொண்டிருந்த டீக்கடைக் கிராமபோனின் கூச்சலும் அடங்கிவிட்டன.

அந்த நிசப்தமான நேரத்தில் தூரத்திலிருந்து புல்லாங்குழல் ஓசை கேட்டது.

'அந்தப் பாட்டுத்தான்! கண்ணப்பன் வருதோ?'... அவளுக்கு உடல் முழுதும் சந்தோஷத்தில் பதறிற்று.

குழலின் ஓசை வரவர அதிகமாகி நெருங்கி வருவது போல் கேட்டது. பிறகு குழலின் நாதம் நின்று, மூங்கில் கம்பொன்றின் ஓசை மட்டும் 'டக் டக்'கென்று கேட்டது. சத்திரத்துப் படிகளில் காலடிச் சப்தம் கேட்கும்போது,

"யாரது, கண்ணப்பாவா?" என்று கேட்டாள் ருக்குமிணி.

"ஆமாம்."

"எங்கே இத்தினி நாளாக் காணோம்? சொல்லாமல் கூடப் போயிட்டியேன்னு எனக்கு வகுத்தமா இருந்திச்சி" என்று அவள் சொல்லும்போது அவனுக்குத் துக்கமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டுத் தொண்டை அடைத்தது. பதில் பேசாமல் மௌனமாய், அன்று உட்கார்ந்திருந்த இடத்திலேயே வந்து அமர்ந்தான்.

"இவ்வளவு நாள் எங்கே போயிருந்தே? ஏதாவது சாப்பிட்டியா?... சோறுகூட வெச்சிருக்கேன், தண்ணி ஊத்தி... வேணுமானா சாப்பிடேன்!"

"இல்லே ருக்குமிணி... நான் இப்பத்தான் சாப்பிட்டேன். அன்னக்கி அந்தப் பசி நேரத்துக்கு வேர்க்கடலை குடுத்தியே, இன்னிக்கு ஒனக்கு நான் பலகாரம் வாங்கிக் கிட்டு வந்திருக்கேன். இந்தா..." என்று ஒரு பொட்டணத்தை அவளிடம் நீட்டினான்!

"ஒனக்கு ஏதாவது வேலை கெடச்சிருக்கா, என்ன? அதான் நல்லது. ஒரு வயசு ஆம்பளை பிச்சையெடுக்கிறதாவது! எங்கே வேலை? என்ன வேலை."

"நீ ஒரு தொழில் செஞ்சி பொழைக்கல்லே. அந்த மாதிரி நானும் ஒரு தொழில் செய்ய ஆரம்பிச் சிட்டேன்!"

"என்ன தொழில்?"

“அன்னிக்கு நீ குடுத்தியே மூங்கில், அதிலே ஒரு புல்லாங்குழல் செஞ்சேன். அதை எட்டணாவுக்கு வித்தேன். அப்புறம் ரெண்டணாவுக்கு மூங்கில் வாங்கிச் சின்னப்பிள்ளைகளுக்கு ஊதல், புல்லாங்குழல் எல்லாம் செஞ்சி ஒரு ரூவா சம்பாதிச்சேன். அப்புறம் ஒரு பேனா கத்தி, இரும்பு ஆணி எல்லாம் வாங்கினேன். இப்ப நல்லா ஊதல் செய்யப் பழகிக்கிட்டேன். உன்னைப் பார்த்துத்தான் எனக்கும் புத்தி வந்தது” அவன் சொல்வதைக் கேட்கக் கேட்க அவள் கைகள் அவனை அணைத்துக் கொள்ளத் துடித்தன. அவன் அருகே நெருங்கி நெருங்கி வந்து உட்கார்ந்து கொண்டாள்

“நான் சொல்றதைக் கேக்கிறியா? வந்துஞ் எனக்கு உன் பாட்டு, உன் குரல், நீ - எல்லாம் ரொம்பப் புடிச்சிருக்கு... அதனாலே நீயும் நானும்... வந்து... வந்து...”

ஆமாம். அவளுக்கு கண்ணால் வெட்கப்படக் கூடத் தெரியாது. அவள் உலகத்தையே மனிதர்களையே கண்ணால் பார்த்ததில்லை. அதனால் உலகத்தின், மனிதர்களின் பொய்யான வெட்கமும் நாணமும் என்ன வென்று கூட அவளுக்குத் தெரியாது. மனத்தால் உணர்ந்ததை வாயால் கொட்டிக் கொண்டிருந்தாள்.

கண்ணப்பன் மௌனமாக பீடி புகைக்க ஆரம்பித்தான்.

“கண்ணப்பா, என்ன பேசாம இருக்கே? ஏதாவது பேசேன்... பாட்டுப் பாடேன். உன் பேச்சையும், பாட்டையும் கேக்கணும்னு ஒருவாரமா நான் காத்துக் கெடக்கேனேஞ் ஆமா, கண்ணப்பா நீ சினிமா பார்த்திருக்கியா?” என்று வலுவில் ஒரு கேள்வி கேட்டு அவனைப் பேச வைத்தாள்.

“உம்... பார்த்திருக்கேன்... அதெல்லாம் ரொம்ப நாளைக்கு முன்னே.”

“இப்பெல்லாம்?”

“சினிமாப் பார்க்க காசு வேணாமா?”

“என் கிட்டே காசு இருக்கு. வர்ரியா? நான் பாட்டு கேட்டுக் கிட்டுக் குந்தி இருக்கேன். நீ படம் பாரு.”

“படம் பார்க்கக் காசு மட்டும் போதுமா? கண்ணு வேணாம்? ருக்குமிணி... நானும் உன்னை மாதிரிதான். நாலு வருசத்துக்கு முந்தி அம்மை வார்த்துக் கண்ணு போயிடுச்சி. இவ்வளவு ஆசையா இருக்கியே... உன் முகத்தைக் கூடப் பார்க்க முடியாத பாவி நான். உனக்குக் கண்ணு தெரியாதுன்னு நீ சொல்றவரைக்கும், நீ நெனச்சது போலத்தான் நானும் நெனச்சேன். ஆனா நாம ரெண்டு பேரும் ஒண்ணா

எப்படி வாழ முடியும்? யாருக்கும் யாரும் உதவியா இருக்க முடியாதுன்னு நெனச்சிதான், நான் சொல்லிக்காம போயிட்டேன். ஆனா உன் கிட்டே சொல்லிக்காமப் போக மனசு இடம் கொடுக்கல்லே. விடியக் காலை வண்டிக்கு நான் ஊருக்குப் போறேன். எனக்குக் கண் இருந்தா இப்படி உன்னை விட்டுட்டுப் போகமாட்டேன். என்ன பண்றது? நான் போறேன்! நீ என்னை மறந்திடு!'' என்று அழுதான் கண்ணப்பன்.

அவன் வருத்தம் அவளுக்குப் புரிந்தது.

''இதுக்கா அழுறே? கண்ணில்லாட்டி என்ன? எனக்கு ஒரு குறையும் தெரியலையே! சனங்களெல்லாம் என்னமோ கண்ணு கண்ணுன்னு பேசிக்கிறாங்களே, அது நமக்கு இல்லேன்னு சொல்றாங் களேன்னு தோணுமே ஒழிய, அதனாலே எனக்கு ஒண்ணும் கெட்டுப் போகல்லே. நீயும் என்னை மாதிரித்தான்னா ரொம்ப சந்தோஷம்- இதுக்காகவா உன்னை நா மறந்துடணும்னு சொல்றே?... ஆமா, நெசமாச் சொல்லு, உனக்குத்தான் எப்பவோ கண்ணு இருந்திருக்குன்னு சொல்றியே? கண்ணுன்னா என்னான்னு நீயாவது சொல்லேன். 'பாக்கறது?' பாக்கறது'ன்னு சொல்றாங்களே அப்படின்னா என்னா? சொல்லு?'' என்று அவன் தோள்மீது கைவைத்து அவன் முகத்தருகே நெருங்கினாள். அவன் தேகாந்தமும் சிலிர்த்தது.

''ருக்கு... கண்ணுன்னா என்னா தெரியுமா? கண்ணுன்னா நீதான்! நீதான் எனக்குக் கண்ணு இனி மேலே...'' என்று பேசமுடியாமல் திணறினான் கண்ணப்பன்.

அவள் அவனது முகத்தை, தலையை, மார்பை, புஜங்களைத் தடவிப் பார்த்து மகிழ்ந்தாள்.

அந்தச் சத்திரத்து இரவின் தனிமையில் இருவரும் தங்கள் கதைகளை, ஆசைகளை ஒருவர்மீது ஒருவருக்கு இருக்கும் காதலை, இத்தனை நாள் பிரிந்திருந்த பிரிவின் சோகங்களைப் பற்றி எல்லாம் பேசிக்கொண்டே இருந்தார்கள்... பேச்சு... பேச்சு... விடியும் வரை ஒரே பேச்சுத்தான்!

''கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல...'' என்று காதலுக்கு இலக்கணம் வள்ளுவர் கூறிவிட்டால் போதுமா?

இவர்களுக்கு?... வாய்ச் சொற்கள்தான்!

2. கடித<

- புதுமைப்பித்தன்

சிங்கார வேலு ஓர் இலக்கிய கர்த்தா. வாழ்க்கையின் இலட்சியங்களை, வாழ்க்கையின் சிக்கல்களை - ஏன், வாழ்க்கையையே - திறந்து காண்பிக்கும் ஜன்னல்கள்தாம் சிறுகதைகள் என்றால் அவைகளுக்கு உதாரணம் சிங்கார வேலுவின் கதைகள்.

'பேனாவை வைத்துக்கொண்டு கோனாகிவிடுவோம்!' என்று அவர் ஒரு நாளும் கனவு காணவில்லை; ஆனால் பேனாவை வைத்துக் கொண்டு பிச்சையெடுக்க வேண்டும் என்று நினைக்கவும் இல்லை.

அவருடைய சிறுகதைகளைப் பொறுத்தவரை சமூகம் நூறு பேரில் அவரை ஒருவராக மதித்தது. முக்கால்வாசிப் பேருக்கு அழகு என்பது என்ன என்று தெரியாது. சிலருக்கு அழகாயிருக்கிறது என்று முதலில் சொல்லுவதற்குத் தைரியமில்லை.

இந்த மாதிரியான சமூகத்தினிடையே சிங்காரவேலு உயிர்வாழ வேண்டுமென்றால் வாழ்க்கை உண்ணாவிரதத்தில் முக்தியடைந்திருக்க வேண்டும். அல்லது ஏதாவது கருணை மிகுந்த தெய்வம் அட்சய பாத்திரம் ஒன்றைக் கொடுத்து வைத்துவிட்டுப் போயிருக்க வேண்டும். இயற்கையின் சட்டத்தை மீறவும், தெய்வத்தின் கருணையைப் பெறவும் முடியாத இந்தக் கலிகாலத்தில் பிறந்ததைப் பற்றி சிங்கார வேலு நொந்து கொள்வதில் பயன் இல்லை.

அவருடைய சமூகமாகவும் ரஸிகர்களாகவும் சில நண்பர்கள் இருந்தார்கள். அதனால் அவருக்குப் பசி என்ற கவலை ஏறக்குறைய இல்லையெனலாம். ஏனென்றால் அவருடைய தேவைகள் வெகு கொஞ்சம். குடும்ப பாரம் கிடையாது. கனவு கண்டு கொண்டிருப் பதற்குப் போதிய அவகாசம் இருந்தது. எனினும் அதை இலக்கியமாக வடிவெடுக்க வைக்கும் ஊக்கம் குறைந்துவர ஆரம்பித்தது.

புகழ் இல்லாமல் இலக்கிய கர்த்தா உயிர் வாழ முடியாது. முகஸ்துதி வேண்டாம். இல்லாததை நீங்கள் சொல்லிவிட வேண்டாம். செய்வது சரிதான், நன்றாயிருக்கிறது என்று சொல்லவாவது வேண்டாமா? நேர்மையான புகழ் இலக்கிய கர்த்தாவுக்கு ஊக்கமளிக்கும் உணவு. இதைக் கொடுக்கக் கூடச் சக்தியற்ற கோழையான ஒரு சமூகத்திற்கு என்ன எழுதிக் கொட்ட வேண்டியிருக்கிறது! இதில் வாழும் கிரந்த

கர்த்தா மனமிடிந்து பாழாய்ப் போவான். ஆனால் சிங்காரவேலு இப்படி நாசமாவதற்குக் கோழையல்லர். தைரியத்தினால் ஏற்பட்ட மனக் கசப்பு அவரை ஒன்றும் எழுதவிடவில்லை.

அவர் சமூகத்தில் நம்பிக்கை வைத்த மனிதர். ஓடித் தளர்ந்த சிந்தனைகள் எல்லாம், ஈட்டி குத்தும் மாதிரி, கதைகளைச் சிருஷ்டித்தன.

அன்று...

எப்பொழுதும்போல் அந்தத் தனியறையில் பாயில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.

வெற்றிலையை மென்று மென்று துப்பியாகிவிட்டது.

என்ன செயற்கை ஊக்கம் கொடுத்தாலும் அந்தக் கதையைத் தொட முடியவில்லை.

ஏழு நாட்களாக இந்தக் கதிதான்.

கையிலிருந்த பேனாவையும் காகிதத்தையும் கீழே பொத்தென்று போட்டார்.

பின்புறமிருந்த தலையணையில் சாய்ந்துகொண்டு, வெற்றிலைச் செல்லத்தைப் பக்கத்தில் இழுத்து வைத்துக்கொண்டு, வெற்றிலை போட ஆரம்பித்தார்.

அதுவும் ஒரு கலை - அவருக்கு.

தெரு வாசற்படியில் யாரோ வருவதுபோல் காலடிச் சப்தம்.

"சிங்காரம்!" என்ற குரல்.

"சுந்தரமா? வா!"

அவருடைய நண்பர் சுந்தரம் வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, "என்ன வெளியே போகலாமா? மணி ஐந்திருக்குமே!" என்றார்.

"வெற்றிலையைப் போடு, முதலில்!"

"என்ன, இன்னும் கதையை முடிக்கவில்லையே! ஆரம்பம் வெகு ஜோராய் இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்!"

"ஆமாம், வேலையில்லை! எழுதித் தூக்கி நிறுத்துகிற அவசரம் ஒன்றுமில்லை. என்னடா, நல்ல கதையை ரஸிக்கிறதற்கு ஒரு பயலும் இல்லை. சும்மா எழுது எழுது என்றால்! நான்கு பகுத்தறிவற்ற குயில் இல்லை. எனக்கு நான் எழுதுவதைச் 'சரி, நன்றாயிருக்கிறது' என்று

சொல்ல நான்கு பேர்கள் வேண்டும். சுற்றி ஒன்றுக்குமற்ற கழுதைகளை வைத்துக்கொண்டு என்ன செய்கிறது?" என்றார் சிங்காரம்.

"ரஸிக்கிறதற்கு நாங்கள் எல்லாரும் இல்லையா?" என்றார் சுந்தரம்.

"நீ எனது சிநேகிதன். உனக்கு என்மேல் பிரேமை. நான் என்ன எழுதினாலும் உனக்கு நன்றாகத்தான் தெரியும். மூன்றாவது மனிதன் எவனாவது இதுவரை என் கதை நன்றாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறானா? அதிருக்கட்டுமப்பா! நான் கதை எழுதுகிறேன் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? வா, போகலாம்! கதை எழுதி..." என்று சொல்லி எழுந்து வெளியே புறப்படத் தயாரானார்.

மௌனமாகக் கையிலிருந்த புகையிலையை வாயில் போட்டுக் கொண்டு நண்பரும் எழுந்தார்.

அன்று பேச்சு எங்கெல்லாமோ சுற்றியும் கடைசியில் இதில்தான் வந்து விழுந்து கொண்டிருந்தது.

ஐந்தாறு நாட்கள் கழித்து...

இரவு ஏழு மணி இருக்கும்.

சிங்கார வேலு தமது அறையில் உட்கார்ந்து ஏதோ வாசித்துக் கொண்டிருக்கிறார்.

அந்தக் கதை அதுவும் அப்படியே அரைகுறையாகத்தான் கிடக்கிறது.

"ஸார், தபால்!" என்ற சப்தம்.

சிங்காரவேலுவுக்குக் கடிதம் வருவது விதி விலக்கு. முக்கால் வாசி வேறு யாருக்காவது போகவேண்டிய கடிதம் தவறுதலாக இங்கு வந்துவிடுவது உண்டு. துணைத் தபால்காரனாக இவரும் சிரமப்பட வேண்டியதிருக்கும்.

ஜன்னல் வழியாக விழுந்த கடிதத்தை எடுத்து விலாசத்தைக் கவனித்தார். அதில் தவறு ஒன்றுமில்லை. விலாசம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் கையெழுத்து அவருக்கு அறிமுகமானதாக இல்லை. தபால் முத்திரை எப்பொழுதும்போல் ஒரே கறுப்புமயமாக இருந்தது. பிரித்து வாசித்தார்.

விசாகப்பட்டி,

10.9.33

இலக்கிய கர்த்தரான திரு.சிங்காரவேலு அவர்கள் திவ்விய சமூகத்திற்கு,

நான் பெரிய படிப்பாளி ஒன்றுமில்லை. ஆனால் கலையில் எனக்கு ஆர்வம் மிகுதியும் உண்டு.

தங்கள் சிறுகதைகளுக்கு நிகராகத் தமிழ் இலக்கியத்தில், ஏன், உலக இலக்கியத்திலேயே - எனக்கு ஆங்கிலத்திலும் சிறிது பயிற்சியுண்டு - பெரும்பான்மையாகக் கிடையாது என்றே சொல்லுவேன். தங்கள் 'சாலாவின் சங்கடங்கள்' என்ற சிறுகதை வாழ்க்கையின் உயிர்பெய் ஓவியமாக இருக்கிறது.

அது ஒரு புதிய மானத உலகத்தையே திறந்து காண்பிக்கிறது. அதைப் பற்றிப் புகழ்வதற்கு, நானும் ஓரளவு எழுதும் பயிற்சி பெற்றவனாக இருந்தால் எனது உள்ளத்தில் தோன்றியதை அப்படியே எடுத்துரைப்பேன். ஆனால் அந்தோ, அவ்வளவும் மூங்கையன் கண்ட கனவாகவே இருக்கின்றன. இன்னும் தங்கள் எண்ணிறந்த கதைகளை விடாது படித்துவந்தவர்களில் நானும் ஒருவன். இன்னும் புதிய கற்பனைகளை, கனவு லோகங்களைச் சிருஷ்டிக்க இறைவன் தங்களுக்குப் போதிய சக்தி அருளுவானாக.

இப்படிக்கு

தங்கள் விதேயன்

நாகப்பன்.

கடிதத்தை வாசித்ததும் முகம் மலர்ச்சியடைந்தது. உள்ளம் பூரிப்படைந்தது. குதூகலம் பிறந்தது. மறுபடியும் வாசித்தார். இன்னொரு முறையும் வாசித்தார். அந்தக் கடிதம் அவருடைய ஒரு பெரிய தாபத்தைத் தீர்த்தது.

"நீ ஒருவன் தான் - எண்ணிறந்தவர்களில் ஒருவனல்லன்! சமூகத்தில் கொஞ்சம் நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது. முழு மோசமில்லை!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.

கடிதத்தைச் சுந்தரத்திற்குக் காட்ட வேண்டும் என்ற ஆசை. ஆனால் அதில் என்னதான் இருக்கிறதோ? மறுபடியும் படிக்க ஆரம்பிக்கிறார். நாகப்பனுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதவேண்டும் என்று நிச்சயித்தாகி விட்டது.

மறுபடியும் படிக்க ஆரம்பித்த பிறகு மனது திடீரென்று மாறுகிறது. சில சில எழுத்துக்கள் தமக்கு அறிமுகமான யாரோ ஒருவரின் கையெழுத்து மாதிரித் தெரிகின்றன. ஆமாம்! யாரோ நமக்குத் தெரிந்த பயலுடைய வேலைதான். இல்லாவிட்டால் என் விலாசத்தை விசாகப்பட்டிக்கு யார் கொண்டுபோய்க் கொடுக்கப்போகிறார்கள். இந்தப் புளுகு மூட்டையை என்னிடமா அவிழ்க்க வேண்டும்? சீச்சீ! முட்டாள்! கோழை! தைரியமிருந்தால், உண்மையில் ரஸித்தால், பகிரங்கமாகப் பத்திரிகைக்கு ஏன் எழுதக் கூடாது? அவன் ரஸித்தது என் சிநேகத்திற்காகத்தான். சீ! இதை எழுதிவிட்டால் எனக்குத் திருப்தி, சாந்தி, எல்லாக் குட்டிச்சுவரும் வந்துவிடுமென்று எண்ணினானாக்கும்! முட்டாள்! அவனும் இந்தச் சமூகத்தில் ஒரு ஜந்துதானே! இந்த முட்டாள் கூட்டத்திற்குக் கதை எழுத வேண்டுமாம், கதை! அதைவிடக் கசையடி கொடுப்பேன்! முட்டாள்கள்! தரித்திரக் கழுதைகள்! நாளைக்கு வரட்டும்! கதை வேண்டுமாம், கதை!

இந்தப் பயல்கள் சாவகாசமே வேண்டாம். தொலைந்தால்தான் இந்தப் பீடை ஒழியும். உண்மைப் பற்றுதலைக் காண்பிக்க தைரிய மில்லாத கோழைகள்! கடிதம் எழுதினானே கடிதம், என்னை முட்டாள் என்று நினைத்துக் கொண்டானா? சீச்சீ! முட்டாள்! அவனை என்ன சொல்ல?... பெற்று வளர்த்த சமூகம் இப்படிப்பட்டது. இதற்காக எழுதாமலும் இருக்கிறதில்லை.

காகிதம் எரியும் நாற்றம் அறை முழுவதும் பரந்தது.

விளக்கும் கரி பிடித்து எரிந்து, எண்ணெயற்றுச் சோர்ந்து மங்கிக் கொண்டே வந்தது. வெற்றிலைப் பெட்டியை எடுக்கும் சப்தம். சிங்கார வேலு வெற்றிலை போட்டுக்கொண்டார்.

விளக்கு அணைந்தது.

அவர் மனத்தில் புழுங்கிய தணலும் அவிந்தது.

அன்று அவர் வெகு நேரம் தூங்கவில்லை.

இந்த மாதிரி அசட்டுத்தனமான சமூகத்தை எப்படித் தூக்குவது?

கோழைத்தனம் பிறப்புரிமையாக இருக்கிற இந்தப் புழுக்களை மனிதர்கள் ஆக்குவது எப்படி?

இருள் இருந்தால்தானே ஒளி? ஒளி வராமல் போய்விடுமா?

அதுவரை காத்திருக்க வேண்டியதுதான்.

எத்தனை காலமோ?

ஒளி வரும்பொழுது நாம் இருக்க வேண்டும் என்ற அவசியமுண்டா? எனது சிருஷ்டிகள் இருந்தால் போதும்!

3. கரு

- உமாமகேஸ்வரி

கதை எழுதவேண்டுமென்ற விபரீத ஆசை தனக்கு ஏற்படுமென்று லதா நேற்றுவரை நினைத்திருக்கவில்லை. புள்ளிகளிடாத பூக்கோலத்தின் இதழ்கள் பொறுமையும், நேரமும் இன்மையால், அகலமாய் விரியாமல் சிறுவட்டமாக முடிந்தன. மணி ஐந்தரை என்ற அவசரத்தில் கோலப் பொடி டப்பாவை ஜன்னலில் எறிந்துவிட்டு அடுப்படிக்கு ஓடினாள். வழக்கம்போல lighter ஒத்துழைக்காமல் மல்லுக்கட்டி, அடுப்புப் பற்றி, பாலைக் காச்சியபடியே, மறு அடுப்பில் பருப்பை வேகப்போட்டாள். சரசரவென்று சாம்பாருக்கான காய்கறிகளை ப்ரிஜ்ஜிலிருந்து எடுத்து நறுக்கினாள்.

என்ன கதையெழுத? எழுதும்படியான கதைகள் ஏதும் என்னிட மிருக்கா? சாதாரண விஷயங்களை அசாதாரணமான முறையில் சொல்கிற கலையில் நிச்சயம் நான் நிபுணியமல்ல. குக்கரிலிருந்து ஆவி வெளியேறவும் குண்டைப் பொருத்தினான். குழந்தை சிணுங்கும் சப்தம். மாடியறைக்கு ஓடித் தொட்டிலை விரித்து முகம் காட்டியதும் குழந்தை சிணுங்கலை நிறுத்திப் புன்னகைத்து, இரு கைகளையும் விரித்து, என்னைத் தூக்கு என்பதாக பாவனை காட்டினான். அவனுக்குப் பசிக்கும். இடுப்பில் குழந்தையோடே, பாலைக் கனத்த கரண்டியால் கிண்டினாள். ''காபி'' என்று கேட்டுவிட்டு, வராண்டாவிற்கு செய்தித் தாளோடு நகர்த்த கணவனின் பின் ஓடி, ''பிடிங்க இவனை. குழந்தையை வச்சிக்கிட்டு நான் எப்படி காபி கலக்கிறது" என்று கொடுத்ததும் நின்றிருந்த குழந்தையின் அழுகை பெரிதாக வீறிட்டுத் துவங்கியது. ''உன்னிடம்தான் வரணுமாம். பிடி இவனை'' என்று வெற்றிகரமாகக் கொடுத்துவிட்டு, மறுபடி செய்தித்தாளுக்குள் போய்விட்டார் அவர். இடுப்புக் குழந்தையோடு அடுப்பி லிருந்து குக்கரை இறக்குவதும், காஃபி கலக்குவதும் பகீரதப் பிரயத்தனமாய் இருந்தன. ''காஃபி வந்து எடுத்துக்கிறீங்களா?'' வராத்தாவிற்குக் கேட்குமளவு குரலை உயர்த்த வேண்டியிருந்தது. ''முக்கியமான செய்தி படிச்சிட்டிருக்கேன். வத்து குடுக்கிறியா?'' கொண்டு கொடுத்துவிட்டு தன் டம்ளரைக் கையிலெடுத்தாள். கொதித்தது. சிறு குழந்தைக்குப் பாலூட்டும் காலத்தில் சூடாக எதுவும் குடித்தால் குழந்தை உடம்புக்கு நல்லதில்லை என்பது அம்மாவின் திடமான அறிவுரை. அது அறிவியல் ரீதியாகச் சரியா என்பது

தெரியவில்லை. எதற்கும் ஆறட்டும் என்று அகலக் கிண்ணத்தில் ஊற்றி வைத்துவிட்டு இன்னொரு பாத்திரத்தில் அரிசியை அளந்தெடுத்துக் கழுவினாள்.

ஆறிய காபியைக் குடித்து, மூத்தபெண் பாரதியை எழுப்பிப் பற்பசை எடுத்துக் கொடுத்து, உட்கார்ந்து நைட்டியைத் தளர்த்தி குழந்தையை மார்பிலிட்டாள் அவள். அவசர, அவசரமாய் உறிஞ்சிய வலியில் கண் மூடியபோது, குழந்தை பிறந்த முதல் தினம் பாலூட்டிய அனுபவம் ஞாபகமானது. அடிக்கடி நேர்ந்து, வழக்கமாகி விடும்போது அனுபவங்கள் அற்புதத் தன்மையை இழந்து விடுகின்றன என்று பட்டது. இப்போதெல்லாம் பாலூட்டுதல் இருபது நிமிடம் போல நீளும்போது, குழந்தையை இறுக அணைத்தபடியே, மறுகையால் ஏதாவது புத்தகம் புரட்டுகிறாள்; அல்லது, அவளும் தூங்கிப் போகிறாள்.

குழந்தை தூங்கியதும் மெல்ல விடுவித்து தொட்டிலில், இருபுறமும் சிறு தலையணைகளை அமைத்துக் கிடத்தினாள். பாரதியைக் குளிக்கவைத்து உடைமாற்றிச் சடைபின்னி, சாம்பார் தாளித்து இட்லியை அவித்தெடுத்து, வெந்த சாதத்தை டிபன் பாக்ஸில் பருப்பும், நெய்யும் போட்டு நிரப்பி, பாட்டிலில் தண்ணீர் ஊற்றி... அவளுக்கு இட்லியை ஊட்டி, வெளிக்கிளம்பியபோது "ஏம்மாதம்பி பிறந்ததிலேர்ந்து என்னை நீ தூக்கிக்கவே மாட்டேனுற?" என்று கேட்டவளை ஒரு புறமும், பை, சாப்பாட்டுக் கூடைகளை மறுகையிலும் இடுக்கி, ஸ்கூல் பஸ்ஸில் ஏற்றிக் கையசைத்தபோது, 'அப்பாடா' என்றிருந்தது.

வந்து அரக்கப் பரக்கக் குளியல். தண்ணீர் எல்லாவற்றையும் கழுவி விடுகிறது. அழுக்கு, அலுப்பு என்றெல்லாமே இந்தப் பூச்சாரலிலே கரைந்து காணாமல் போய்விடுகின்றன.

வெயிலில் ஒளிரும் வெள்ளித்தூறல். சுவர் விளிம்புகளில் வானவில் சிதறல்... மறுபடி கதை ஞாபகம். பெரிய, பெரிய எழுத்தாளர்களுக் கெல்லாம் திடீரென்று ஒரு பொறி தெறிக்குமாம். அப்புறம் அது ஜுவாலையாகி கதை கருக்கொண்டு அதற்குக் கண், காது, மூக்கு, கை, கால் முளைத்து....

"என்ன பண்ணுறே பாத்ரூமில்? எனக்கு லேட்டாகுது. இட்லி எடுத்து வைக்கிறியா?" பாரதி அப்பா. அவசரமாய் உடை மாற்றி, வெளிவத்து, அடுப்படிக்கு ஓட்டம். இட்லியைப் பரிமாறிவிட்டு, கடப்பாக்கல் மேடையில் உட்கார்ந்து அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் - இட்லியின் மென்மை, அல்லது அது இன்மை என்றேதேனும் சொல்வாராக்கும் என்று. கைதான் வட்டிலுக்கும், அலைந்து கொண்டிருந்தது. முகம் ஹாலில் ஓடுகிற டி.வி.யில் திரும்பி இருந்தது.

கை கழுவத் தண்ணீர் எடுத்துவைத்து, ஸ்கூட்டர் சீட்டையும், செருப்பையும் தூசி தட்டி, மேலே தொட்டில் அசைகிறதா என்று எட்டிப் பார்ப்பதற்குள் வெளியே ஸ்கூட்டர் கிளம்பும் சத்தம். ஓடி வாசலுக்கு வந்து பார்த்தால் அது தெரு தாண்டிவிட்டது.

இவர் ஏன் இன்னிக்கு போய்ட்டு வரேன்னு சொல்லிக்கவே இல்லை?

உள்ளே வந்தபோது அத்தையின் அறை இன்னும் திறக்கவில்லை. அவர்களுக்கான இட்லியை ஹாட்பாகில் மூடிவைத்து, அவள் சாப்பிடும்போது மறுபடி குழந்தையின் சிணுங்கல். அவனுக்கு இட்லி ஊட்டும் படலம் ரொம்பச் சிரமமானது. குழந்தைகளுக்கு திட உணவை அறிமுகப்படுத்துவதே கஷ்டம்தான். சின்னச் சின்ன தாய்ப் பிய்த்து, சாம்பாரில் ஒற்றி மசித்து, நாக்கில் வைத்தால் உடனே வெளியில் துப்புவான். விடாமுயற்சியில் சற்றும் மனம் தளராத விக்ரமாதித்தியனாக மறு முயற்சி. "அந்த மரம் பார்த்தியா, டான்ஸ் ஆடுது. இந்தப் பூ என்னம்மா உன்னைப் பார்த்து இப்படிச் சிரிக்குது. காக்கா உன் இட்லியை 'தா தா'னு கேக்குது" நீள, நீளமாய் பேசினால் அரை இட்லியை உள்ளே தள்ளலாம். பிறகு அவனை வட்டச் சக்கர நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு, வீட்டைத் தூசி தட்டலாம். அத்தை சாப்பிட்டதும் தொட்டியில் குவிந்த பாத்திரங்களைத் துலக்கலாம். குழந்தை மறுபடி தூங்கணுமென்றால் அவள் தான் மீண்டும் பாலூட்ட வேண்டும். மார்பில் பூப்போலப் புதைந்த குழந்தை முகம், குவிந்த இதழ்கள், தலை கோதினால் சொக்கும் கண்கள்... ஐந்து நிமிடம், பத்து நிமிடம், பதினைந்து... அவனை மார்பிலிருந்து நகர்த்தினால் வீறிட்ட அலறல். மறுபடி அணைத்து அவன், அயர அயர அலுப்பும், அயர்வுமாக அவளும் கண்மூடினாள். மற்ற உணவூட்டும் முறைகளைவிட இயற்கை ஏற்படுத்திய இது சுலபம், சுகாதாரம், இருவருக்கும் நலம் என்பதன்றி, தாய்மையின் புளகாங்கிதம் என்பதெல்லாம் சற்று மிகைப்படுத்தப் பட்ட வார்த்தையோ என்று தோன்றியது.

மதியம் சமைத்து, வீடு துடைத்து... அம்மா போனமுறை வந்த போது அத்தையிடம் மெதுவாக ஆரம்பித்தார்கள். "ஏன் மதினி, இவளும் கைக்குழந்தையோடு இருக்காளே, 100 ரூபா குடுத்தா வேலைக்கு ஆள் கிடைக்காதா!"

"இங்கெல்லாம் வீட்டு வேலைக்கு சக்கிலிச்சிதான் கிடைப்பா. எனக்கு வீட்டுக்குள் நொழையவிடப் பிடிக்காது."

அத்தையின் நிஷ்டூரமான பதிலை யோசித்தபடியே காலி ஃப்ளவர் துண்டங்கள் உதிர்ந்துவிடாமல் கடலைமாவு, உப்பு, மிளகாய்ப்

பொடியில் பிசிறினாள். சாதம் குழையுமுன் அடுப்பையணைத்து, அடுப்பு மேடையை ஒதுக்கித் துடைத்தபடி இதையெழுதவா, அதையெழுதவா என்று குழம்பிய யோசனைக்குள்ளிருந்து ஒரு முதல் வரி நீண்டது. மதியச் சாப்பாடு முடிந்து, உணவு மேஜையை சுத்தமாக்கி, குழந்தை உறங்கியதும்தான் பேனாவுடன் அவளிருக்கும் நேரம் வாய்த்தது.

சாத்திய கதவு. வழுவழுத்த உறுதியோடு தன் உள்ளேயே ஒரு உலகை ஆக்கும் முயற்சியிலிருந்தாற்போல் பிணைந்த அதன் இருபக்கங்கள். ஏதோ ஓர் அபூர்வ மனோநிலையில் நாங்களிருவரும். தடம் புரளாத நாட்களின் ஒத்திசைவிலிருந்து தப்பிய மாறுதல் இன்று. வெளிர் மஞ்சள் பூங்கொத்தாய் இரவு விளக்கு சுவரில் ஒளி விரித்திருக்க, உரையாடல்கள் மட்டும் தொட்டுக்கொண்ட அதிசய சமயம். சொற்களின் ஒலி தாண்டிய எதனாலோ நெய்யப்பட்ட அந் நேரத்தின் இனிமையை நொறுக்கியது கதவு இடிபடும் சப்தம். கூடவே ரவியின் அம்மாவின் குரல். "ரவி, நீ காலையில் வெள்ளனே கடைக்குக் கிளம்ப வேண்டாமா? இன்னும் என்ன பேச்சு?" காரமாய் வந்து விழந்தது. மௌனம். கதவையிடித்த ஒலியை விடவும் வலி தருவதாயிருந்தது இவரது உடனடி விலகலும் உறக்க பாவனையும். வெதுவெதுப்பாய் என் நெஞ்சில் இறங்கியது கொஞ்சம் ஆறுதலாக.

விடியல். எதுவுமே நடக்காததுபோல எல்லாவற்றையும் அழித் தெழுதிவிடுகிற வெயில். சமையலறையின் வெம்மை, கொதிக்கிற எண்ணெய்க்குள்ளிருந்து குழந்தை கைபலூன்களைபோல் உப்பிப் பருக்கிற பூரிகள். வலையிட்ட ஜன்னலுக்கு வெளியே பூக்காத குரோட்டன்ஸ்கள் ஆடுகின்றன. பூக்காமலிருப்பதே தங்கள் விசேசத் தன்மையென்று இலைகளிலெல்லாம் நிதமொரு வர்ணம் வரைந்து கொண்டு. கல்வாழையும் கட்டாயங்களின்றி இஷ்டம்போல் பூக்கிறது. எப்போதாவது மஞ்சளும் சிவப்பும் குழைத்து விரிந்து அது திடீரென்று பூக்காட்டும். பின்புறம் ஓடியோடி அவ்வப்போது அந்தப் பூக்களைத் தொட்டுப்பார்க்க எனக்குப் பிடிக்கும்.

இந்த நர்ஸிங்ஹோமில் மூலைக்கு மூலை நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் செயற்கைப் பூந்தொட்டிகள் எரிச்சலூட்டுகின்றன. எரிச்சலை மாற்றிக் குளுமைப்படுத்தினார்கள் அறை நிறைந்த பெண்கள். குவிந்த அடிவயிற்றோடு; கனவும், களைப்பும் அழகிட்ட முகங்களோடு; நெஞ்சுவரை மேலேறி, மேடிட்ட கர்ப்பச் சுமையால் இரைக்கும் மூச்சோடு உள்ளறையிலிருந்து வருகையில் கலைந்த புடவையைத் திருத்தியபடி. தளர்ந்த நடையோடு. அம்மாவிற்கிருக்கும் பரபரப்பில் பாதிகூட எனக்கில்லையென்பதில் ஆச்சரியம் தான். அம்மா தனக்குத் தானே பதிலை எதிர்பார்க்காததுபோல பேசிக்கொண்டு போகிறார்கள்.

"குடும்பத்தில யாருக்கும் இந்தக் கதியில்லை."

"வதவதவென்று நிறையக் குழந்தைகள்."

"அம்மாவே எத்தனை பெற்றாள் சுலபமாக."

"வேண்டாமென்று கலைத்ததும் தான் எத்தனை."

"இவ்வளவு தாமதமாகுதே, என்னவோ, ஏதோ..."

"அம்மா, சும்மாயிருங்களேன். "சும்மா, சும்மா, சும்மா என்று என்னை நோக்கி நீண்ட கேள்விகளை நினைத்தேன்.

"இன்னும் சும்மாதான் இருக்கிறாயா?" என்று கல்யாணங்களில், திருவிழாக்களில் அம்பாய் அடிவயிற்றைத் தைத்த பார்வைகள். மணமாகி ஒரு வருடம் கழிந்தால் போதும்; கருவுறாவிட்டால் ஒரு பெண் 'சும்மா'. அவள்தன் பெண்மையை, தாய்மைகொண்டு நிரூபித்தாக வேண்டும். என் வயிறு சும்மாயில்லை. சரியான ஜனன உற்பத்திச் சாலையென்று காட்டியாகவேண்டும். அதைத்தவிர, வேறு எது செய்யினும் அவள் சும்மா. என்னுடைய நூல் வேலைப்பாடுகள், பெரிய பெரிய வயர்கூடைகள், கம்பளிப் பின்னல்கள், குட்டி குட்டியாக தொட்டிச்செடிகள், தினம் தொடுக்கும் பிச்சிப்பூச் சரங்கள், சின்னப் பெருக்கல் தையல்களில் ஸ்வாமி உருவங்கள் செய்து கோர்த்த நிலைத்திரைகள் - என்று என்ன இருந்தென்ன? ஒரு பிள்ளையை, அதுவும் ஆணாகப் (எத்தனை பெற்றாலும் மலடியாம் பெண்களைப் பெற்றவள்) பெறவில்லையென்றால் 'நீ சும்மா' என்று குத்தும் சொற்கள். அடுத்தவர் அந்தரங்கத்துள் இங்கிதமற்று நுழையும் கேள்விகள். பெண்மையின் நிறைவு தாய்மையில்தான் என்று பெண்களே உறுதியாய் நம்பும் சூழல், பயங்கரமான வைத்தியக் குறிப்புகள் வேறு;

"தலை குளித்த ஐந்து காலைல செம்பருத்தி இதழை வெறும் வயிற்றில் மென்று முழுங்கு."

"அதுக்கப்புறம் வலதுபக்கம் திரும்பிப் படு."

"வெறும் வயிற்றில் பூண்டும், மினகும் அரைத்து ஒரு உருண்டை சாப்பிடு."

"பூண்டும், மிளகும் சேர்ந்த காரத்தில வயிறு புண்ணாகி, அல்சர் தான் வரும்" என்று புன்னகைத்தாள் அந்த வயதான டாக்டரம்மா. மிக நிதானமான விசாரணைகளுக்குப்பின் அவள் கையுறைகளை மாட்டிக் கொண்ட கணம்தான் கலவரப்படுத்தியது. கால்புறம் புடவை விலக்கப்பட்டது. வலி பொறுத்துக்கொள்ள வேண்டும். தாங்கக் கற்க வேண்டும். தானும் பெண்ணென்று காட்ட தனக்கென்று ஓர் சின்ன பிம்பம் செய்துகொள்ள, தான் வந்த வம்சத்தை வளர வைக்க...

'ஆமா, பெரிய முகலாய வம்சம்' என்று நினைத்துச் சிரித்து நாக்கைக் கடித்துக் கொண்டேன். நீளமான மருந்துப் பட்டியல்கள், அறிவுரைகள், இன்னும் பாக்கியிருக்கிற பரிசோதனைகள், இவை என்னை விடவும் அம்மாவை அதிகம் அலைக்கழித்து வேதனைப்படுத்தின.

சடசடவென்று துளிகள் தெறித்தன கதை மீது. அய்யய்யோ, மழை! மேலே துணிகள். லதா மொட்டை மாடியில் உலர்த்திய துணிகளை ஓடி உருவுவதற்குள் மழை பாதி நனைத்துவிட்டது. நின்று மழை பார்க்க முடியாமல் கையில் துணிப் பொட்டலம். அதைக் கட்டிலில் விரித்துப் போடும்போதே பால்காரரின் சைக்கிள் மணி. அதைக்கேட்டு விழித்த தொட்டில் பிள்ளையின் அழுகை. அவனைத் தூக்கிக்கொண்டே பால் காய்ச்சினாள். பெரியவள் பள்ளியிலிருந்து வர அவளுக்கு வீட்டுப் பாடம். மான், மயில், ரயில் என்று கதை பேசிப்பேசி குழந்தைக்கு ஸெரிலாக் ஊட்டல். மழையைக் காணோம்; அவள் அய்யய்யோவில் அரண்டு ஓடிப்போயிருக்கும். குக்கரில் வேகிற சாதம். காலைச் சமையலுக்கு காய்கனை ஆய்ந்து, அரிந்து, நறுக்கி ஃப்ரிஜ்ஜில் திணித்து முடித்தால் ராத்திரிச் சாப்பாடு தொடங்கும். எல்லோரும் டி.வி. பார்ப்பதால் அது கூடத்துக்குப் போகவேண்டும். தொடர் நாடகம் பூதம்போல் அத்தனை பேரையும் ஆக்கிரமிக்கும். வட்டில்கள், சாதம், ரசம், பொரியல், பால், தண்ணீர் டம்ளர்கள் என்று ஒவ்வொன்றாய் கூடத்தில் கொண்டுபோய்ப் பரப்ப எரிச்சலாய் வரும்.

"ஐந்து நிமிடம் சாப்பிட்டுவிட்டு அப்புறம் டி.வி. முன் உட்கார்ந்தா என்னவாம்" என்ற அவள் முனகல் யார் காதிலும் ஏறாது. அடுப்படி துடைத்து, கூடம் பெருக்கி, குழந்தையைப் பாலூட்டித் தூங்கப் போட்டால், மேலேபடும் விரலைத் தொடர்ந்து, "இன்னிக்கு வேணாமே!" "எனக்கு வேணுமே!" போன்ற உரையாடல்களின் இறுதிச் சரணாகதிக்கும்பின் நோட்டுடன் உட்காருவாள். யார் தூக்கத்தையும் கெடுக்காமல் விளக்கமைத்து, காகிதத்தில் குனிந்தால் கண்ணில் புகை வரும். கொட்டாவி சுழற்றும். உடம்பு படுக்கக் கெஞ்சும். பேனா பிடிவாதமாய் ஓடும்.

மறுபடி அம்மாவோடு மதுரை ஆஸ்பத்திரிக்கு. டாக்டரம்மா குறித்துக்கொடுத்த நாளில் மாதவிலக்குத் தொடங்கி எட்டாவது நாள். பயணப் பொழுதில், வழி ஓரத்தில் மண் பொம்மைகளும், உயரஉயர ஜாடிகளும் செய்யும் வடக்கத்தியக் குடும்பம். விதவிதமான பிள்ளையார்கள். ராதையைக் கொஞ்சும், குழலுதும், விரல் சூப்பும் கிருஷ்ணர்கள். பூவரசமரக் கிளையிலாடும் தொட்டிலின் வெளியே நீண்ட, சிவந்த சின்னஞ்சிறு பாதங்கள். கூடார வாசலில் குதிரைப் பொம்மைக்கு வர்ணம் தீட்டும் ஒருவன். நிறங்கள் சிதறிய பாவாடை,

தலையில் வழியும் முக்காடோடு மூன்று கற்களையே அடுப்பாக்கிச் சமைக்கும் ஒருத்தி. கையுறையணிந்த விரல்கள் தன்னுள் நெருடும் வலியை அவள் அறிந்திருக்கமாட்டாள். இதுபோன்ற ஏதோ ஒரு கூடாரத்தில் அந்தத் தொட்டில் குழந்தை பிறந்திருக்கும். அல்லது, பிறக்காமலிருந்தாலும் அவள் அதன் பொருட்டு அதிகம் மெனக் கெட்டிருக்க வேண்டியிருந்திருக்காது. நாகரிகம் என்ற பெயரில் நடைமுறைப் படுத்தப்படும் நிர்ப்பந்தங்கள் அழுத்தாததாகத் தெரிகிறது அவர்களின் வாழ்க்கை.

இன்றைக்கென்னவோ எரிச்சலூட்டுவதாயிருக்கிறது டாக்டரின் புன்னகை. அம்மாவிற்கு அனுமதியில்லாத அறையின் இருட்டு. தன் அழகை, அடைத்த அறைக்குள் முற்றிலுமாய் இழந்துவிட்ட இருட்டு. விறைத்த இரும்பு மேஜை - காற்பக்கம் அரைவட்டமாய்க் குழிந்தது. அதனருகில் வளைந்த மின்விளக்கு. என்மேல் கவிழ்ந்தது எக்ஸ்ரே இயந்திரம். அதைக் கவனித்துப் பார்ப்பதற்குள் என் இடுப்பில் இறங்கியது ஊசிமருந்து. கருக்குழாய்கள் அடைப்பேதுமின்றி இருக்கின்றனவாவென சோதனை. தினம் சொல்லி, மனப்பாடமாகிய சஷ்டிகவசம் நினைவுக்கு வரவே வராமல், வாயுலர்ந்து, உடல் அசந்து போனது. அரைமயக்க நிலையில் கால்களை விலக்கும் அன்னியக் கைகள் கூச்சமும், அவமானமும், வலியும் தருவனவாயிருந்தன. அடிவயிற்றின் உள்ளே நீண்டது எதுவென அனுமானிக்க முடியவில்லை. வலி, வலி, வலியென்று வலியின் சிகரத்தில் நான் முற்றிலுமாய் பிரக்ஞையியழத்தேன். விழித்தபோது அம்மாவின் அழுத முகம். சன்னலின் ஏதோ ஒரு செடியில் பெரிய ரத்தத்துளி போலசையும் செம்மொட்டு. எனக்கு அழுகை வரவில்லை. மூடிய கண்களுக்குள் கண்ணீரை அழுத்திப் புதைத்தேன். எழ முடியாமல் எழுந்து, அம்மாவின் உதவியோடு, கழிவறைக்குள் போய் நாப்கினால் ரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தியபோது, அழுத்தம் தாண்டி அழுகை பீறிட்டது.

“நன்கு திறந்த, ஆரோக்கியமான, தூய்மையான...” என்று என் கருக் குழாய்களின் அமைப்பைப் பற்றிய ஆங்கில வர்ணனையை அம்மாவிற்கு மொழிபெயர்த்துச் சொன்னேன். அம்மா வழிவிடும் முருகனுக்கு நேர்ந்தது வீண்போகவில்லையென்றார்கள். இன்னும் சோதனைகள் நீண்டன. என் ரத்தத்தில் காசநோய்க் கிருமிகள் ஏதேனும் கருவுறுவதைத் தடுக்கின்றனவா? சிறுநீரில் சர்க்கரையின் அளவு சரியாய் இருக்கிறதா? தேவையா இல்லையா என்று புரியாமல் என்னைச் சுற்றிலும் கூண்டுக் கம்பிகள் அமைத்து, சின்னச்சின்ன ஊசிகளாலும், கத்திகளாலும் என்னைக் கீறிப்பார்க்கும் சோதனைகள். மருத்துவமனையின் பினைல் நெடி. மாதாந்திர ஏமாற்றங்களின் போது தவிர்க்க முடியாத நக்கலும், குத்தலும்.

“இந்த மாசமும் ஆச்சா?”

“குடுத்து வச்சது இவ்வளவுதான்.”

“இந்த வீட்டில் எப்பத்தான் தொட்டில் ஆடுமோ?”

“என்ன செல்வமிருந்தென்ன; அதல்லவா பெண்ணுக்குப் பெருஞ் செல்வம்.”

தூக்கத்திலும் நெருஞ்சியாய் உறுத்தும் சொற்கள். இவை யாதொன்றிலும் தொடர்பில்லாதவர் போன்ற அமைதி அவருக்கு வாய்த்தது எப்படி? கேள்விகளின் கொக்கிகளில் அவர் கிழிபடாதிருக் கிறாரா? நடக்கட்டும் என்ற நிச்சிந்தையான உறக்கம் எனக்கு மட்டும் தூரமானது ஏன்?

சமையலறையிலும், படுக்கையறையிலும் முட்டிமோதி உருண்டு கொண்டிருந்தது வாழ்க்கை. பொன்முறுவலாக வதக்கல்கள், பொரியல்கள், அவியல்கள், நாக்குகளின் சுவைக்கு ஈடுகொடுக்க வேண்டிய மாற்றங்கள். குக்கரின் சீற்றம். விதவிதமான மசாலாக்கள் மிதக்கும் நிதமொரு குழம்புகள். இதில் நான் எங்கிருக்கிறேன்? என்னைத் தேடித் தெரிந்து கொள்ளக்கூடச் சமயமில்லாத அர்த்தங்களற்ற சூழலில் அலைக்கழிகிறேன். நான் அடைந்தேயாக வேண்டிய குழந்தைப் பாக்கியம் என் கையிலிருக்கிறதா? விஞ்ஞான காலத்தில், சோதனைக் குழாய்க் குழந்தை யுகத்தில் எல்லாம் சாத்தியம் என்னும் உறுதியும், உத்திரவாதமும் முன்வைக்கப்படுகின்றன. என் அங்கங்கள் பிய்த்து ஆராயப்படுகின்றன. கருப் பதியவென்று தடிமனாய்த் தயாராகும் ரத்தமெத்தை கிழிந்த நாளிலிருந்து கணக்கிட்டுத் துவங்கி, சுரு முட்டை வெளியாகும் நாளைச் சோதிக்க தினந்தோறும் மருத்துவ மனைக்கு அலைச்சல். அங்குள்ள சிறிய, பூக்காத தொட்டிகளின் எண்ணிக்கை எனக்கு மனனமாகிவிட்டது.

இப்போதெல்லாம் அந்த பொம்மைக்காரப் பெண் என்னைப் பார்த்து புன்னகைக்கிறாள். கழிவறை கழுவும் பெண் என் பெயரைத் தெரிந்து அழைக்கிறாள். இரும்பு மேஜையின் சொரசொரப்புக்கு என் உடல் பழகிவிட்டது. புடவையை விலக்கி அடிவயிற்றில் ஜெல் தடவி, அல்ட்ரா ஸ்கேன் இயந்திரம் என்மேல் வைக்கப்படும்போது சிறு உலுக்கல் என்னுள் ஓடுகிறது. என்னை ஊடுருவும் கதிர்கள் கருவறைச் சுவர்களை எதிரொலிக்கின்றன. என் உடலுல் நேரும் சிறு சிறு மாற்றங்களை உற்று நோக்குகிறார்கள். கருவறையின் தசைகள், கருமுட்டைகள் தாங்கிய சிறு உறைகள், தினம்தினம் படிப்படியாய் அவற்றின் வளர்ச்சி, கருமுட்டை முதிரும் நாளைக் குறித்துக் கணித்துச் சொல்கிறார்கள்.

“இன்று முட்டை வெளிவந்துள்ளது. அதன் ஆயுள் மிகச் சிறிது. அதற்குள் அதனுள் வித்து நுழையவேண்டும். எனவே இன்றிரவு நீங்களிருவரும் கட்டாயமாக...” அருவருப்பாகக்கூட இருக்கிறது. எங்கள் அந்தரங்கத்தின் இனிமை சிந்திப் போய்விட்டது. இயல்பாய் நேரவேண்டிய மன, உடல் நெருக்கம் நேரக்குறிப்பாலும், நிர்ப்பந்தத்தாலும் வெறும் இயந்திர முடுக்கமாகிவிட்டது. அவரது மூச்சுக் காற்றால் என் கழுத்து குறுகுறுக்கவில்லை. நான் தொடப்படுவதையே உணராதவனாய் உவர்ந்து போனேன். ஜன்னலுக்கு வெளியே நீண்டது சிந்தனை. உடம்பிலிருந்து உடைந்து பிரிந்த மனம் நடப்பதைத் தனித்து நின்று வேடிக்கை பார்க்கிறது. இறுகக் கடித்த பற்கள். இந்தச் சடங்கின் முடிவுக்குக் காத்துப் படுத்துக்கிடக்கிறேன் வெறுமனே.

என் திறந்த, ஆரோக்கியமான கருக்குழாய்களின் வழியே அவருடைய உயிர்த்துளி பயணமாகி, கருமுட்டையின் சுவருடைத்து உட்புகுந்து, வளர்ந்து கரு உருக்கொள்ளும் என்ற அறிவியல் சந்தேகங்களே என்னைக் குடைந்தன. கருவுறுதலை மட்டுமே குறிக்கோளாய் கொள்ளும் போது உணர்வுகள் இற்று விடுகின்றன. உற்பத்தி நோக்கத்தைக் குறியாக்கி நகரும் தொடல்களில் இனிமை அற்றுப் போய்விடுகிறது. அதன் பின்னான இரவு நகர்த்த முடியாத கனத்தோடு என்னை நசுக்கி அழுத்திக்கொண்டிருக்கிறது.

“அடுத்தடுத்த நாட்களில் வினைக்கான விளைவை எதிர்நோக்கிய இறுக்கமும், பதற்றமும். வீட்டுவேலைகளில் உடல் ஈடுபட மனம் தன் தனித்தளத்தில் உழன்றுகொண்டு... என்ன ஆகியிருக்கும்? ஏதாவது ஆகியிருக்குமா?” இந்த மாதம் வெறுமையானால் அடுத்த மாதம். அதே மருத்துவமனை. அதே இயந்திரச் சோதனைகள், கருமுட்டை வெடிப்பைக் கண்டறிதல். அதிலுமில்லையென்றால் அடுத்த மாதம். அதற்கடுத்தது என்று மாதங்களின் எண்ணிக்கை கூடியது. என் மாதாந்திரத் தேதி நெருங்கி வந்தாலே உடல் படபடத்து நடுங்கத் தொடங்கியது. தாளமுடியாத மன உளைச்சலில் உறக்கம் தொலைந்தது.

“அம்மா”வென்ற அலறலில் லதாவின் பேனா தெறித்து விழுந்தது. நெற்றியிலிருந்து ரத்தச் சரங்களோடு பாரதி, சுவர் விளிம்பில் இடித்திருக்கிறாள்... அய்யோ, இப்ப என்ன செய்ய? துணி தேடி நனைத்துச் சுற்றி, ரத்தம் நிற்காமல் ஓட, மருத்துவமனைக்கு ஓடி, அவள் அலற அலறத் தையல் போடும்போது, தன்னைத் திடப்படுத்தி, தைரியம் சொல்லி, வீடு திரும்பி, இதம் காட்டி உறங்க வைத்து... ‘என்னாலா எல்லாம்?- நான்தான் எழுதுகிறேன். படிக்கிறேனென்று குழந்தையைச் சரியாய்க் கவனிக்கலையோ?’ தொட்டிலை ஆட்டிய படியே, குற்ற உணர்வில் குறுகினாள்.

மாதக்கணக்காய் கதை மூடிக் கிடந்தது. அம்மா வீடு போகும் விடுமுறைக்காலம். நொண்டி விளையாடிய குழந்தைப் பருவம். நிழலாடும் ஆலமரம். இப்போது நொண்டியோ, பம்பரமோ விளையாடும் குழந்தைகளேயில்லை. டி.வி.தான். வருடங்களைத் தேக்கி பசும் குளுமை கொண்ட மொட்டைமாடித் தரை... அப்புறம் அம்மா! அம்மாவை முழுமையாகச் சொல்ல வார்த்தைகளேது? குழந்தைகள் அம்மாவிடம் ஒட்டிக்கொள்ள, மறுபடி திறந்தது கதை.

நளினியின் வருகை, உயிர்ப்பூங்கொத்தாய் குழந்தையோடு. அருகில் சென்று கொஞ்சக்கூட முடியாமல் கூச்சம். இவ்வாமையின் நிழலை என் கொஞ்சல்களின்மீது ஏற்றிச் சொல்வார்கள். சின்னச் சின்ன அழகில் செய்த முகமும், கைகால்களும். மனித வாழ்வின் அழுக்குகளும், அவலங்களும் ஒட்டாத மிருதுவான வழவழப்பு. பார்த்து நின்றேன். காபி கலக்கப் போனபோது, காதில் விழுந்தால் விழட்டுமேயென உரத்து ஒலித்த பேச்சு,

"தொட்டாளா பாரேன் பிள்ளையை! பெத்தாத்தானே தெரியும்."

"எங்க பரம்பரையிலேயே இப்படியில்லை. இதுக்கு வக்கில்லாம..."

அடுப்புச் சுடரை வெறித்தவாறே வெந்து தணிந்தேன்.

மருந்தோ, மாயமோ, அம்மா சொன்னபடி எந்தச் சாமி புண்ணியமோ... இந்த முறை நாட்கள் கூடின. ஒன்று, இரண்டு, ஒருவாரம் என்று உயிரைத்தான் சுமக்கிறேனென பரிசோதனைகள் உறுதியிட்டன.

மகிழ்வை மீறிய பயம். நம்பிக்கையின் அடி இழையை அறுத்து எறியக் கூராக்கிய கொடூர முனைகளுடன் பயம் சூழ்ந்து நின்றது எப்போதும். அந்திவானின் செந்திட்டில் அலறிக் குலைந்தேன். தோட்டத்தரையில் சிதறிய செம்பருத்தி இதழ்களின் குருதிச் சிவப்பில் திகைத்து, உடுத்தியிருக்கும் நைட்டியை உற்றுக் குனிந்தேன். உறக்கமும், கனவும் சிவப்பால் நிரம்பியது. கருஞ்சிவப்பு.

என் நம்பிக்கையின், தீர்மானிப்பின், ஆசையின் முற்றுப் புள்ளியாக என்னுள்ளிருந்தே சிதைந்து வழிந்தது அந்தச் சிவப்பு ஒருநாள், என்னையே உருக்கி ஊற்றினாற்போல் அடர்ந்தும், கனத்தும். அத்தையின் மலர்ந்த முகம். அம்மா தந்த மாங்காய் ஊறுகாயின் மிளகாய்க் கரைசல் எல்லாவற்றிலும் தெறித்துப் படர்ந்தது அதே சிவப்பு. அச்சம் எப்படி உயிர் வளர்க்கும் என்று தோன்றியது. ஓய்ந்த உடல் தேறட்டும்; அடுத்த பரிசோதனையை ஒத்திவைக்கலாம் என்று டாக்டர் சொன்னது ஆறுதலாயிருந்தது. பின்னர் "உன் கணவரும் ஒரு சோதனை - லேசானதுதான் - செய்துக்கட்டும்" குனித்து எழுதிய டாக்டரம்மாவின் தலையில் ஒரு பெரிய கல்லைத்தூக்கிப் போடணும் போல் ஆண்களுக்கான சோதனை மட்டும் இறுதிக்கட்டம் தான்.

மீனாட்சியம்மன் கோயில். அம்மாவும் நானும். கணபதி மேல் வேண்டுதல்களை விபூதியாகக் கொட்டுகிறார்கள். விருப்பங்கள், நிராசைகளை வெண்ணெயாய் உருட்டிக் காளி மீது எறிகிறார்கள். அந்தச் சிற்பங்களுக்கு ஏதும் ஆகிடாதாவென்று கேட்டதால் சாமி குத்தமாம். பிரச்னைகள் ஏராளம் புரண்ட பிரகாரங்கள். எலுமிச்சை தீபங்கள். வருடக்கணக்காய் புன்னகை வாடாத அம்மன்

“நல்லாக் கும்பிட்டுக்கோ” அம்மா.

நல்ல கும்பிடு எது?

கரங்கள் வெறுமனே குவிந்தன. கண்கள் ஏன் என்று வினவி நிறைந்தன.

வீட்டின் வாசலில் கனகாம்பரத்தின் மொட்டுக்கள், ரத்த அம்புகளாக, வெடிகளின் குளிச்சிக்கு விகற்பமாக உட்புற வெம்மை, கசிந்து வழியும் நிசப்தம். அத்தையின் மௌனமும், பாராமுகமும் கடுஞ்சொற்களை விடவும் கொடியவை. அவர்களுடைய கனவுகள் எத்தகையனவோ? ஊரில் உலகத்தில் எல்லோரையும்போல் பேரக் குழந்தைகளைக் கொஞ்ச வேண்டும் என்ற அவர்களின் நியாயமான ஆசையை நிறைவேற்ற முடியாதது என் தவறுதானோ என்னவோ, இயற்கையின் புரியாத விதிகளை, பூடகமான நியதிகளை நான் மட்டும் எவ்விதம் அறியமுடியும்? முழுக்கவே என்னால் சாதிக்க முடியாத, என் கைவச மில்லாத ஒன்றை நான் உடனடியாக எப்படி உருவாக்க முடியும்?

துவைத்த துணிகளைக் கொடியில் உலர்த்தினேன். மொட்டை மாடியின் செங்கட்டங்களில் சொல்லொணா ஆறுதல் கிடைத்தது. எதிர்வீட்டில் சிஸ்டர் ஜோஸபினின் குரல், முழுக்க உடல் மூடிய அங்கி, முக்காடிட்ட தலை, எதனாலும் மறைபடாத இந்த இனமைக்குள் கனவுகளேயில்லையென்றா சொல்லிவிட முடியும்? குழந்தைகளைக் கொஞ்சிச் சிரிக்கும் சிஸ்டரின் குரலில் ததும்புவது தாய்மை யில்லையா? உலகையே ஸ்வீகரிக்கிற தாய்மை. சாக்கடை தள்ளுபவனுக்கு குளிர் அலமாரியிலிருந்து ஐஸ்துண்டுகள் மிதக்க நீர் தரும் காமாட்சி சித்தியின் செயலில் தாய்மைத் துணுக்கில்லையா? மாமியாருக்கு முகம் கோணாமல் பெட்பான் பைக்கும் வசந்தி தாய்மை காட்டவில்லையா? உடலுறுப்புகளின் உற்பத்தித் திறத்தை உறுதி செய்யும் செயல் மட்டுமா தாய்மையென்பது? அது எங்கும், எப்போதும் பொழியும் உயிரின் வெளிப்பாடில்லையா? துணிகள் பறந்துவிடாமல் க்ளிப் போட்டேன், மாலையில் ஒரு...

வெடுக்கென்று லதாலின் நோட்டைப் பிடுங்கினார்கள் அம்மா.

“குழந்தை அழுறது கேக்கலையா? தூக்கம் வருது அவனுக்கு. நீதூக்கிப் பால் தரணும்னு நினைக்கிறான் போல. கைக் குழந்தைக்காரி பிள்ளை பெற்றதிலிருந்து தேறாத பச்சை இப்படிக் குறுக்கொடிய உட்கார்ந்து, மாய்ஞ்சு மாய்ஞ்சு என்ன எழுத வேண்டிக் கிடக்கு? இதெல்லாம் உடம்புக்குக் கெடுதி. பிள்ளையைக் கவனிச்சோமா? புருஷனைப் பார்த்தோமா? வேண்டியதைச் சாப்பிட்டு உன் உடம்பையும் கவனித்து தகை, நட்டு, வீடு, வாசல் என்று இருக்காமல்...

அம்மா நோட்டைப் பிடுங்கி பரணில் எறிந்து, குழந்தையை மடியில் போட்டுப் போய்விட்டார்கள்.

ஊருக்குப் புறப்படும்போது ஞாபகமாக தேடியெடுத்துக் கொண்ட லதாவிடம் அம்மா “உன்னைத் திருத்தவே முடியாதுடி. என்னத்த எழுதி... என்னத்த...” என்று முணுமுணுக்கவும் அவள் நாக்கைத் துருத்திச் சிரித்தாள்.

நாட்கள் பழையபடி, அதீதப் பரபரப்பில் நகர்ந்தன. தொட்டில், கட்டில் எல்லாம் தூங்கிய ஒரு அமைதியான இராப்பொழுது வாய்த்தபோது இன்று எப்படியும் எழுதி முடித்தாக வேண்டும் என்று பேனா தேடினால் கிடைக்கவில்லை. முனை மழுங்கிய பென்சிலை பிளேடினால் கூராக்கி எழுத ஆரம்பித்தாள்.

மாலை ஒரு வளைகாப்பு. பட்டு மினுங்கல், நகை ஜொலிப்பு. பூவாசனை. கூடத்தின் நடுவில் தாம்பாளங்களில் மஞ்சள், குங்குமம், பழங்கள், பலகாரங்கள், நெய்யும் இனிப்பும் சேர்த்துச் செய்த அரிசி மாவுருண்டைகள். அந்தப் பெண் இந்தச் சமயத்தின் தனி அழகோடிருந்தாள்.

“எப்படித் துள்ளுது பாரேன்” என அவள் என் உள்ளங்கையை அடிவயிற்றின் அசைவை உணர்த்தப் பதித்துக்கொண்டது எனக்கு மிகப் பிடித்தமாயிருந்தது. வளையல்கள் - பொன்னில், வெள்ளியில், நிறம் - நிறமாய்க் கண்ணாடியில் என்னென்ன வளையல்கள். சின்னச் சின்ன வட்டங்களுக்குள் தங்களைச் செருகிக்கொள்வதில் என்னவொரு ஆனந்தம் இந்தப் பெண்களுக்கு. அழகு செய்யவென்று ஆரம்பித்து, ஆபரணங்களே விலங்காய் மாறிப் போய்விடுகிற அபாய மறியாத மகிழ்ச்சி. உடைக்க விருப்பமின்றி, தம்மைத் தாமே உள்ளடைத்துக் கொண்ட கண்ணாடி வட்டங்கள். இன்னும் அடுக்குங்கள் முழங்கை வரைக்கும். அசைவுகளை ஒலித்து அறிவிக்கும் வளையல்களைப் பூட்டிக் கொள்ளுங்கள். பார்த்துப் பார்த்து பரவசமும், பெருமையும் அடையுங்கள். திருப்பங்களற்ற செக்கு வட்டச்சுழற்சியில் சுற்றுங்கள் உலகமே அதிலடங்கிய திகட்டலோடு.

வளையல் போட்டுவிட அழைக்கப்படுகிறார்கள் ஒவ்வொருவராக ப்ரேமா, ராதா, லட்சுமி, கனகா...

பெரியம்மாவின் பார்வை என் முகத்தில் அலட்சியமாய் உரசி விலகுகிறது. என் தகுதியின்மையை அடிக்கோடிடும் ஒதுக்கல் என்னை அறைந்து தள்ளுகிறது. பற்றிக் கொள்ள எதுவுமற்றுத் தடுமாறி, கண்ணில் முட்டும் நீர், விளிம்பைத் தாண்டிவிடாத பிரயாசையோடு என் சுவர்களுக்குள் நகர்கிறேன். கயல்விழியின் கை தோளில் பதிகிறது. "கவலைப்படாதே! தைரியமாயிரு. இதை எல்லாம் பொருட்படுத்தாதே" என்று சொல்லும் கை, ஏன் இப்படியெல்லாம் பெண்களைப் பெண்களே..

இரவில் என் ஜன்னலில் பாரதியாரோடு.
கண்கள் இரண்டிருந்தும்
காணும் திறமையற்ற
பெண்களின்கூட்டமடி கிளியே!
பேசிப் பயனென்னடி

பேனாநின்றது. ஜன்னலில் ஆடும் மரக்கிளை, லதா உள்ளறையில் தொட்டில் ஆடவில்லையென உறுதிப்படுத்திக்கொண்டாள். கொசுவர்த்தி வில்லை புதிது மாற்றினாள். துண்டு துண்டாகக் கிடந்த கதையைப் பார்த்தாள். இவை ஒன்றி உருக்கொள்ளுமா? என்ன முடிவமைக்கலாம்? அவள் குழந்தைப் பாக்கியம் அடைந்ததால் சர்வ மங்களமும் பெற்று நீடூழி வாழ்ந்தாளென்றா இல்லை, குழந்தை பெறமுடியாதால் மனமுடைந்து தூக்கில் தொங்கி உயிர்விட்டதாகவா? அவள் கணவர் இன்னொரு பெண்ணை மணக்க, அவள் வீட்டை விட்டு வெளியேறி புதுமைப்பெண்ணாக என்பதுபோல்... எதுவும் தோன்றவில்லை. ஒன்றும் புரிபடவில்லை. கதை தன்னைத்தானே முடித்துக்கொள்ளும் என்றிருந்தது. எப்படி அது தன் போக்கில் வளர்ந்ததோ அப்படியே...

பழைய மருத்துவமனையை மாற்றவேண்டும் என்பது அம்மாவின் ஆசை. அது ராசியில்லையாம். கலங்கும் கண்களை அம்மாவைப்போல சட்டென்று இறுக்கிக் கொள்ள தான் எப்போது கற்கப் போகிறேன் என்றிருந்தது. இந்தப் புதிய மருத்துவமனையின் செடிகள் உண்மையானவை. உயிருள்ளவை. கூடத்திலும் வரவேற்பறையிலும் வாசலிலும் குட்டிக்குட்டித் தொட்டிகளில் குழந்தைகள் போல் சிரித்துக்கொண்டிருப்பவை.

இந்த டாக்டரம்மாவரிசையாக என் சோதனைக் குறிப்புகளைப் பார்த்தார்கள். அல்ட்ரா ஸ்கேன் ரிப்போர்ட்கள். கரு முட்டையின் மாதாந்திரக் கண்டுபிடிப்புகள்; ரத்தப் பரிசோதனைகள். கருக்குழாய் ஆராய்ச்சி.

"ஒரு குழந்தையைப் பெறவேண்டும் என்ற உன் ஆசையும். ஆதங்கமும் புரிகிறது. ஆனால் ஏன் இவ்வளவு அவசரம்? இத்தனை குறுகிய காலத்தில் இவ்வளவு சோதனைகளால் உன்னை வருத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் என்ன? குடும்பச் சூழலா? இன்னும் வயதிருக்கிறது! வருடங்களிருக்கின்றன. இருவருக்கும் ஒரு குறைவு மில்லாமலிருக்கிறது! இயற்கைக்கு இடம்கொடுத்து ஏன் நீங்கள் சற்றுக் காத்திருக்கக் கூடாது? இந்த அவசரமும் வதைபடலும் எதற்காக?"

பதில் சொல்ல முடியாத இயலாமையில் நான். மறுபடியும் விறைத்த, காற்புறம் குழிந்த மேஜை என்மேல் கவிழ்ந்த ராட்சஸ விளக்குகள். தளர்த்தப்பட்ட என் உடைகள். ஸ்கேன் இயந்திரத்தைச் சரியாய் அமைத்து, என் அடி வயிற்றில் மெல்ல ஜெல் தடவி, நீவியபடி, "பயப்படாதே" என்று டாக்டர் புன்னகைத்தபோதுதான் அது நிகழ்ந்தது.

என் தலை கழன்று அறையின் மூலைக்கு உருண்டுபோனது. கை, கால்கள் பக்கங்களில் பிய்ந்து விழுந்தன. இருதயம் உலர்ந்து, சருகாகி, நொறுங்கியது. நான் ஒரு சிறிய, பேரிக்காய் வடிவ, கிட்டத்தட்ட மூன்றங்குல நீளமும், இரண்டங்குல அகலமும் உள்ள வெற்றுப் பையாக மட்டும் மாறித் தொங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

4. முள்முடி

- தி.ஜானகிராமன்

“அப்ப எங்களுக்கு உத்தரவு கொடுக்கிறீங்களா?” என்று கண்ணுசாமி எழுந்ததும் கூடத்தை அடைத்து உட்கார்ந்திருந்த கூட்டமும் எழுந்து கொண்டது.

“நான் வரேன் சார்!”

“நான் வரேன் சார்!”

“சார்!. போய்ட்டு வரேன் சார்!”

நடுவில் ஒரு பையன் அவர் காலைத்தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான். சட்டென்று காலை இழுத்துக்கொண்டார் அனுகூலசாமி.

“அட, இதென்னடா தம்பி!”

“செய்யட்டும் சார் - இந்த மாதிரி யார் கிடைக்கப் போறாங்க அவங்களுக்கு? - நல்லாயிருக்கணும்னு உங்க வாயாலே சொல்லுங்க, நடக்கும்” என்றார் கண்ணுசாமி.

அந்தப் பையனைப் பார்த்து மற்றப் பையன்கள் அத்தனை பேரும் அவர் காலைத் தொட்டுத் தொட்டு ஒற்றிக் கொண்டார்கள்.

அனுகூலசாமி குன்றிப்போய் நின்றார்.

“இதெல்லாம்...” என்று அவர் இழுப்பதற்குள் கண்ணுசாமி இடைமறித்தார் - “அனுகூலசாமி, நீங்க நிஜமான கிறிஸ்தவர். முகத்துக்கு சொல்லலே. முப்பத்தாறு வருஷம் பிரம்பைத் தொடாம, அதிர்ந்து ஒரு வார்த்தை சொல்லாம, வாத்தியாராய் இருக்கிறதுன்னா, அந்தத் தெய்வத்தை விழுந்து கும்பிட்டாத்தான் என்ன?”

“அதெல்லாம் சொல்லாதீங்க”

“நான் சொல்லலே. ஊர் முழுக்கச் சொல்லுது. கடைத் தெருவிலே உக்காந்து நானும் விசாரிக்கிறேனா? வயத்திலே பொறந்த பிள்ளையைக் கூட ஒரு அடியாவது எப்பவாவது அடிக்காம இருக்க மாட்டாங்க. ஒரு வெசவாவது வெய்வாங்க. அதுகூட இங்கே பேசப்படாது! இந்த மாதிரி யாரால் இருக்க முடியும்? குழந்தையும் தெய்வமும் கொண்டாடற இடத்திலே. இந்தக் குழந்தைகளை, இன்னும் எத்தனையோ புள்ளைங்களை மனுஷப் பிறவிக்குக் கொடுக்கிற மரியாதை கொடுத்து மதிச்சீங்க...”

கண்ணுசாமி பேசும்போது பையன்கள் குனிந்து கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அனுகூலசாமிக்கு வாயைத் திறக்கவே முடிய வில்லை. வாயைத் திறந்தால் குரல் உடைந்து நாக்குப் புரளும் போலிருந்தது.

"நான் வரட்டுமா.. அப்ப?"

"செய்யுங்க..." என்று சிரமப்பட்டு வாயைத் திறந்து உடனே மூடிக் கொண்டார் அவர்.

"எங்களுக்கு உத்தரவு கொடுக்கணும்" என்று முற்றத்தில் நாயனக்காரர் கும்பிட்டார். அதற்கும் அவரால் தலையசைக்கத்தான் முடிந்தது.

கூடத்துக் கூட்டம் முழுவதும் வாசற்படி வழியாக வெளியே இரண்டு நிமிஷமாயிற்று.

இரண்டு மூன்று பையன்கள் கிசுகிசுவென்று பேசிவிட்டு "சார், விளக்கு ரண்டும் இங்கியே இருக்கட்டும். காலமே வந்து எடுத்துக்கறோம்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்கள்.

வாசல் வரை கொண்டு விட்டுத் திரும்பி வந்தபோது கூடம் வெறிச்சிட்டுக் கிடந்தது. அந்தச் சூன்யமும் நெஞ்சைப் பிடுங்குகிற ஏக்கமும் முன்னே ஒரு தடவை வந்ததுண்டு. பத்து வருடம் முன்னால் லூயிசாவை மாப்பிள்ளை வீட்டில் கொண்டு விட்டுவிட்டு வரும்போது வந்த அதே சூன்யம். அதே ஏக்கம்.

'புஸ்ஸ்' என்று பெட்ரோமாக்ஸ் இரண்டும் சூன்யத்தை நிரப்பிக் கொண்டிருந்தன.

தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நாளைக்குப் புதன் கிழமை. ஆனால் அவருக்கு சனி, ஞாயிறு, நாளை, மறுநாள். அதற்கும் மறுநாள் - இனிமேல் எப்போதுமே சனி, ஞாயிறுதான். பள்ளிக் கூடத்துக்கு இனிமேல் போக முடியாது. அவருக்கு வயது அறுபதாகி விட்டது. ஓய்வு கிடைத்து விட்டது.பள்ளிக்கூடத்துக்கு இனிமேல் போக முடியாது. அவருக்கு வயது அறுபதாகி விட்டது. ஓய்வு கிடைத்து விட்டது.

ஊஞ்சல் மீது உட்கார்ந்து கொண்டார் அவர். பக்கத்தில் ப்ரேம் போட்ட ஏழெட்டு உபசாரப் பத்திரங்கள். ஒரு வெள்ளித் தட்டு, ஒரு பேனா. கடையில நாலு ரூபாய் விலை. ஆனால் இங்கு இந்தப் பேனாவுக்கு விலை கிடையாது. நாலு லட்சம், நாலு கோடி பெறும் என்று சொன்னால் -வீண் வார்த்தை - ஏதோ இரண்டும் சமம் என்று ஆகிவிடும்.

கொர்னாப் பட்டையும் வெள்ளி நூலுமாக நாலைந்து ரோஜா மாலைகள் சுருண்டு கிடந்தன.

ஊஞ்சல் சங்கிலி இரண்டையும் பிடித்துக் கொண்டு நின்றாள் மகிமை. பேசவில்லை; அவரையே பார்த்துக் கொண்டு நின்றாள். இத்தனை மேளதாளங்களும் தழதழப்பும் தனக்குக் கிடைத்தாற்போல ஒரு பார்வை. ஒரு நிமிஷம். அவரைப் பருகிக் கொண்டு நின்றவள், சட்டென்று வாசலுக்குப் போய்க் கதவைத் தாழிட்டு வந்து மாலைகளை ஒவ்வொன்றாக அவர் கழுத்தில் போட்டு, தோள்களைப் பற்றி முகத்தைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

"என்னைக் கூடத்தான் நீங்க அடிச்சதில்லே. அதிர்ந்து சொன்னதில்லே" என்று மார்பில் தலையைச் சாத்திக் கொண்டாள்.

"உலகத்திலே வந்து இருக்கிறது கொஞ்ச காலம், ஈசல் மழைக்கு வந்து மடியறாப்பல. அந்தப் பொழுதை அடிச்சுக் கோச்சுக்கிட்டுப் போக்கணுமா? அடிச்சு யாரைத் திருத்த முடியும்?"

"ராட்சசன் மாதிரி கோச்சுக்க வாணாம். ஆம்பிளையா இருக்கறதுக்காவது ஒரு தடவை கோபம் வர வேணாம்?"

"வராமயா இருக்கும்?"

"வெளியிலே காமிக்கணும்"

"அதுக்குத்தான் பால்காரி, வேலைக்காரி எல்லாம் இருக்கறாங்க உனக்கு. நான் வேற கோச்சுக்கணுமா?"

"பள்ளிக்கூடத்திலே அடிக்காம அதட்டாம இருக்க முடியுமா?"

"இருக்க முடிஞ்சுதே!"

பரவசமாகப் பார்த்துவிட்டு அவர் மீசையை இழுத்துவிட்டு "காபி சாப்பிடறீங்களா?" என்று நகர்ந்து நின்றாள் மகிமை.

அவள் உள்ளே விரைந்தபோது தன் பிராணனே இன்னோல் உடம்பு எடுத்து விரைவது போலிருந்தது. மேலே சுவரைப் பார்த்தார். முள்முடியுடன் அந்த முகம் கருணை வெள்ளமாகப் பொழிந்து கொண்டிருந்தது. நாலைந்து படம் தள்ளி இன்னொரு படத்தில் அதே முகம் ஓர் ஆட்டுச் சிசுவை அணைத்துக் கொண்டிருந்தது.

கண்ணுசாமி சொன்னது அப்படியே உண்மைதான். முப்பத்தாறு வருஷ உத்தியோகத்தில் ஒரு பையனைக்கூட அடிக்கவில்லை. அதட்டிப் பேசவில்லை அவர்.

சுபாவமே அப்படி. ஹூயிசா பிறந்து, பள்ளிக்கூடம் சேர்ந்து, ஆறுவயதில் ஏதோ விஷமம் பண்ணியதற்காக வாத்தியாரிடம் அடி வாங்கிவிட்டது. அந்த வாத்தியார் ஸ்கேலால் அடித்தபோது சட்டைக்குள் இருந்த கோடைக்கட்டியின் மீது பட்டு... அப்பப்பா! - அன்று துடித்த துடி! அதைப் பார்த்ததும் சுபாவத்தை சங்கல்பமாகச் செய்துகொண்டார் அனுகூலசாமி. எல்லோரும் செய்த பாவங்களுக்குத் தன் உயிரை விலை கொடுத்தானே. அவன் எல்லாத் தலைமுறைகளுக்கும் சேர்த்துத்தான் கொடுத்தான்.

அந்த உறுதி முப்பத்தாறு வருஷமும் ஒரு மூளி விழாமல் பிழைத்து விட்டது. இல்லாவிட்டால் பதவியைவிட்டு ஓய்வு எடுக்கிற எந்த வாத்தியாரை மேளதாளத்துடன் வீடுவரை கொண்டுவிட்டுப் போயிருக்கிறார்கள்?

பள்ளிக்கூடத்தில நேற்று நடந்த பாராட்டுக்கள் போதாதென்று. அவர் வகுப்பு என்று நாற்பது பையன்கள் இருக்கிறார்களே அவர்கள் நினைத்திருக்க வேண்டும். இன்று நடந்தது அந்தக் கூட்டம்தான். மாலை மாலையாகப் போட்டார்கள். மடல் மடலாக வாசித்துக் கொடுத்தார்கள். இருந்தாற் போலிருந்து வராந்தாவில் ''உம்'' என்ற ஒத்தும், தொடர்ந்து தவுலும் ஒலித்தன.

''என்ன தம்பி, இதெல்லாம்?''

''வேற யாருக்கு சார் செய்யப் போறோம்? வாங்க சார்'' என்று நாட்டாண்மை மாதிரி நின்ற பெரிய பையன் அவரை அழைத்தான். அந்த ஆறுமுகத்துக்கு வயது இருபத்து மூன்று. இன்னும் பள்ளிக்கூடப் படிப்பு முடியவில்லை. வெகுகாலமாக வாசிக்கிறான். மற்றபடி உலக ஞானம் அதிகம். அனுகூலசாமி பதில் சொல்லாமல் அவன் வேண்டு கோளுக்குக் கட்டுப்பட்டுவிட்டார். இல்லாவிட்டால் மற்ற வாத்தியார் களைப் பற்றி ஆரம்பித்து விடுவான். நாலு வார்த்தை சொல்லிக் கூட விட்டான்.

''எங்களுக்குத் தெரியாதா சார்? நான் ரிடயராகப் போறேன் நிதி திரட்டுங்கன்னு நீங்க சொல்லலே. கில்ட்டு நகையை வச்சுக் கடன் வாங்கலே. கடுதாசைக் காட்டிக் கடன் வாங்கி ஊர்ப்பாவத்தைக் கொட்டிக்கலே.''

''சரி, கொஞ்சம் தண்ணி கொண்டு வா'' என்று என்னமோ சொல்லி அவனை அனுப்பிப் பேச்சை மாற்ற வேண்டியிருந்தது.

அவன் வாயை அடைக்க வேண்டியிருந்ததே தவிர, சொன்னது என்னமோ தப்பில்லை. ஊர்ப்பாவத்தைக் கொட்டிக்கொண்டதில்லை.

ஓங்கி ஒருவனை அறைந்தால் என்ன. கடனை நாமம் சாத்தினால் என்ன? எல்லாம் ஒன்றுதான். அந்த ஹிம்சையும் அவர் கொடுத்ததில்லை.

நாரணப்பய்யரும் அவர் மாதிரிதான். சம்சாரம் அதிகம் இல்லை. ஒரு பிள்ளை, ஒரு பெண். ஆனால் மனுஷனுக்கு நவத்துவாரமும் கடன். ஜவுளிக் கடையிலிருந்து கொத்தமல்லிக்காரி வரை காலணாவுக்கு மதிக்க முடியாத நிலை வந்துவிட்டது. இந்த நிலையிலும் நாரணப்பய்யர் சும்மா இருக்கவில்லை. பட்டணத்தில் கல்வி டைரக்டர் ஆபீஸிலே வேலை செய்கிற யாரோ உறவுக்காரன், "உங்களை இந்த வருஷம் பரீட்சை அதிகாரிகளில் ஒருவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். உத்தியோக பூர்வமாக இன்னும் இரண்டு வாரத்தில் கடிதம் வரும்" என்று ஒரு கடிதம் எழுதியிருந்தான். அந்தக் கடிதத்தைக் காட்டியே ஐம்பது எழுபத்தைந்து என்று இருபது பேரிடம் கடன் வாங்கிவிட்டார். அந்த வேலைக்குக் கிடைக்கப்போகிற கூலி என்னமோ இருநூற்றுச் சொச்சம்தான். கடைசியில் கடிதம் பொய்த்துவிட்டது. அவ்வளவுதான்; ஷராப் கடை நாயுடு நாராணப்பய்யரை வளைத்துக் கொண்டு சைக்கிளைப் பிடுங்கிக் கொண்டுவிட்டார். ஏமாந்த கோபம். பிடுங்கினதா பெரிசு? சைக்கிளை ஓட்டுகிறது யார்? வாத்தியாராயிற்றே! நாராணப்பய்யரே உம்மால் இந்த இனத்துக்கே அவமானம்!

பாங்க் ஏஜெண்ட் அய்யங்காரை யாராவது ஏமாற்ற முடியுமோ? கடைந்த மோரில் வெண்ணெய் எடுக்கிறவர்! அவரிடம் இந்த சாமிநாதன் கைவரிசையைக் காட்டினாரே! வாத்தியார் என்று நம்பி சாமிநாதன் கொடுத்த சங்கிலியை எடைபோட்டு ஒன்பது பவுனுக்கு முன்னூறு ரூபாய் கடன் கொடுத்தார் அய்யங்கார். சாமிநாதன் பேசாமலிருந்திருக்கலாம். பதினைந்தாம் நாள் இன்னொரு சங்கிலியைக் கொண்டு போனால் அதையுமா உரைத்துப் பார்க்காமல் பணத்தை தூக்கிக் கொடுப்பார்கள்? சங்கிலியை உரைத்துக்கொண்டே புன்சிரிப்புடன் "என்ன அய்யர்வாள்! பள்ளிக்கூடத்திலே பையன் சந்தேகம் கேட்டால், 'சீ'. அதிகப் பிரசங்கி. உட்காரு"ன்னு அதட்டி நம்ம அஞ்ஞானத்தை மறைச்சுக்கலாம். ஆனால் கடைத்தெருவிலே அது செல்லுமோ என்னமோ எனக்குத்தான் சரியாகத் தெரியலியோ என்னமோ.. "சித்தே இருங்கோ. பத்தரை அழைச்சிண்டு வரேன்" என்று வெளியே எழுந்து போனாராம் அய்யங்கார். சாமிநாதய்யருக்கு வயிற்றைப் புரட்டியது. பத்தரைக் கூப்பிட ஆள் இல்லையா? என்று சமாதானம் சொல்லலாம் என்று அவர் தேடுவதற்குள் பத்தர் வந்துவிட்டார். "ஏட்டு"ம் வந்துவிட்டார். அந்த சாட்சிகளோடு கஜானா அறையைத்திறந்து பார்த்தபோது, போன தடவை கொடுத்த சங்கிலியும் 'நான் பித்தளை' என்று பல்லை இளித்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்திலேகூட அய்யங்கார் வாத்தியார்

குலத்துக்கு மதிப்புக்கொடுத்துவிட்டார். மூன்றாம் பேருக்குத் தெரியாமல் சாமிநாதய்யரின் அப்பத குழித் தோட்டத்தை எழுதி வாங்கிக்கொண்டு ஆளை விட்டுவிட்டார். நல்ல வேளை "ஏட்டு"ம் உடையில் வராமல் வேட்டி சட்டையோடு போயிருந்தார்.கூட்டமில்லை. ஊர் சிரிக்காமல் போயிற்று.

இன்னும் நாலைந்துபேரின் நினைவு வந்தது. "ஏண்டலெ! ரிடையராயாச்சு. இன்னமே கால் வயிறு சாப்பாடுதான். அந்த நாள்ளெ எங்க வாத்யாருக்கு நிதிதிரட்டிக் கொடுத்தோம் நாங்க" என்று ஒரு பையனைக் குழையடித்து வசூலுக்குக் கிளப்பிவிட்டார் ராமலிங்கம்.

காப்பியை எடுத்துக்கொண்டு வந்தாள் மகிமை.

"என்ன யோசனை? சாப்பிடுங்க. சூடு சரியாயிருக்கு" என்று உபசாரப் பத்திரங்களை ஒவ்வொன்றாக வாசித்துக் கொண்டிருந்தாள். நடுநடுவே பெருமையுடன் அவரை நிமிர்ந்து பார்த்துக்கொண்டாள்.

"அதெல்லாம் நெசம்னு நெனைச்சுக்காதே. இனிமே வேலைக்கு வரமுடியாதுன்னா அளப்பொறானேன்னு உளுவாக் காட்டியிருக்காங்க... சக்கரை முட்டாயி"

"தெரியும். ஆனா நெசத்தை மட்டும் எல்லாரும் சொல்லியிருக்காங்க" என்றாள் மகிமை. "உங்கள் கை நீளாம குரல் வெடுவெடுக்காம இருந்தது நெசம்."

"த்ஸ... பெரிய நெசத்தைக் கண்டுபிட்டாங்க"

"திறமைன்னு சொல்றதும் நெசந்தான்" என்றாள் மகிமை. "தடியெடுக்காம அதட்டாம அப்படியே கெட்டிக்காரன்னு பேர் எடுக்கறதும் கஷ்டம்தானே?"

அனுகூலசாமி யோசித்துப் பார்த்தார். அதுவும் உண்மைதான் என்று பட்டது. அவருக்குக் கர்வப்படக்கூட உரிமை உண்டு என்று தோன்றிற்று.

"ஒரு கஷ்டமும் இல்லே. பால்காரி, கூட்டுக்காரிகிட்டயும் அப்படி இருக்கலாம். மனுஷனாயப் பொறந்தவன் யாரும், புத்தியிருக்கறவன் யாரும் அடியிலே நம்பிக்கை வைப்பானா?"

"எல்லாருக்கும் முடியாதுங்க!"

"என்னமோ நான் இருந்துட்டேன்" என்றார் அவர்.

"சார்! என்று வாசற் கதவைத் தட்டுவது கேட்டது.

"யாரு?"

"நான்தான் சார்!" மகிமை போய்த்திறந்தாள்.

"சார் இருக்காங்களா?"

"இருக்காங்க.. யாரு? ஆறுமுகமா... வா!"

ஆறுமுகம் மட்டும் வரவில்லை. இன்னொரு பையனும் வந்திருந்தான். அவர் வகுப்பில படிக்கிற பையன்தான். கூட ஒரு அம்மாள். வயது நாற்பது நாற்பத்திரண்டு இருக்கும். நெற்றி, காது, மூக்கு, கைகளில் ஒன்றுமில்லை. அனுகூலசாமி எழுந்து நின்றார்.

"என்ன சேதி, சின்னையா?"

"சின்னையன் அம்மா சார், இது" என்றான் ஆறுமுகம்.

"வாங்க!"

ஆறுமுகம் யாரையாவது அழைத்து வருவதென்றால் சிபார்சு என்று அர்த்தம். இருபத்து மூன்று வயதில் இன்னும் பள்ளிக்கூடத்தை முடிக்காத பையன்! நாட்டாண்மைக்காரன் மாதிரி ஒரு அந்தஸ்து உண்டு அவனுக்கு. எதற்கு வந்திருக்கிறானோ? பரீட்சை பேப்பர் கூட இல்லையே!

"என்ன ஆறுமுகம்?"

"சின்னையன் பார்கணும்னான் சார்!"

"என்ன சேதி.. சின்னையா?"

சின்னையன் பதில் பேசவில்லை. தலைகுனிந்து நின்றான். கேட்டு அரை நிமிஷம் ஆயிற்று, குனிந்த தலை நிமிரவில்லை அழுதான்.

"சொல்லுடா!" என்றாள் அந்த அம்மாள். உற்றுப் பார்த்தார் அனுகூலசாமி. பையனின் முகச்சதை கோணிற்று. உதடு நடுங்கிற்று. "சொல்லேண்டா" என்றான் ஆறுமுகம்.

"ஒரு வருஷமாத் துடிச்சுப் போயிட்டுதுங்க அது" என்றாள் அம்மா.

"ஒரு வருஷமாத் துடிச்சுப் போயிட்டுதா?"

"ஆமாம் சார்" என்றான் ஆறுமுகம். "நீங்க இனிமே பேசலாம்னு சொல்லிடுங்க சார்!"

"நல்லாச் சொல்லேண்டா. எனக்கு ஒன்றும் புரியலியே!"

"சாருக்கு மறந்து போச்சு" என்று அந்த அம்மாளையும் மகிமையையும் பார்த்தான் ஆறுமுகம்.

"எனக்கு என்ன மறந்துபோய் விட்டது?" அனுகூலசாமி யோசித்து யோசித்துப் பார்த்தார். ஒன்றும் ஞாபகமில்லை.

ஆறுமுகம் சொன்னான். ''சார்! போனவருஷம் இவன் காயாரோ கணத்தோட இங்கிலீஷ் புஸ்தகத்தைத் திருடிட்டுப் போயி, வேறே பேர் ஒட்டி, கடையிலே பாதி விலைக்கு வித்துப்பிட்டான். நான்தான் அதைக் கண்டு பிடிச்சு உங்களிட்ட கொண்டாந்து நிறுத்தினேன்...''

பையன் விசும்பி விசும்பி அழவே ''சும்மா இருடா'' என்று தாயார் அவனைச் சமாதானம் செய்தாள்.

''அப்புறம்?''

''நீங்க அவனைச் சித்த நேரம் பாத்தீங்க. நம்ப கிளாசிலே ஒரு பய இதுவரைக்கும் இந்த மாதிரி பண்ணினதில்லே. இனிமெ இந்தப் பயலோட ஒருத்தரும் பேசாதீங்கடா'' ன்னு சொன்னீங்க''

பையன் அழுகை நிற்கவில்லை.

''அன்னிலேந்து அவனை நாங்க ஒதுக்கிப்பிட்டோம் சார். யாரும் பேசறதில்லே. அப்புறம் இன்னக்கி பார்ட்டி நடத்தினோமில்ல? அதற்கு ரண்டு ஒண்ணுன்னு பையன்கள் கிட்ட வசூல் பண்ணினோம். இவனும் ஒரு ரூபா கொடுக்க வந்தான். வாண்டாம்னுட்டோம். பார்ட்டிக்கும் வரக்கூடாதுன்னிட்டோம். ஒன்னும் பேசாத போயிட்டான் நேத்து. இப்ப இங்கே வந்திட்டு வீட்டுக்குப் போனேனில்ல, அவங்க அம்மாளை அழச்சிட்டு வந்து திணணையிலே நின்னுக்கிட்டிருந்தான். இவங்க அம்மாவும் சொன்னாங்க அழச்சிட்டு வந்தேன்'' என்று, பயந்து, மென்று விழுங்கிக் கொண்டே சொன்னான்.

அனுகூலசாமிக்கு அந்தச் சம்பவம் ஞாபகம் வந்துவிட்டது. ஆனால் இவ்வளவு கடுமையான தண்டனையா விதித்தோம்? ஏதோ சொல்லி வைத்தார். ஆனால் இவ்வளவு கண்டிப்பாகவா அதை நடத்தவேண்டும்?

''சின்னையா, அழாதடா ஏய்!'' என்றார் அவர்.

''நாங்கள்ளாம் அவனோட பேசலாம்னு சொல்லுங்க சார், நீங்க!''

''ஒரு வருஷமா அவன் சொரத்தாவே இல்லீங்க. எப்பவும் சிரிச்சுப் பேசிட்டு இருப்பான். இப்ப சரியாகப் பேசறதில்லே. ஒரு வார்ததை பேசுவான், போயிடுவான். என்னமோ அதுங்க மனசிலே இருக்கிறது நமக்குத் தெரியுதுங்களா? தங்கச்சிகளோட சரியாப் பேசறதிலலே. இன்னிக்கிச் சாயங்காலம்தான் எல்லாத்தியும் சொன்னான். ஊட்டுலே அதெல்லாம் விளையாடப் போயிருந்திச்சு. வாத்தியாரை இன்னிக்குப் பார்த்தாத்தான் உண்டுன்னான். வந்தேன். நீங்க பெரிய மனசு பண்ணுங்க''

அனுகூலசாமி கையும் களவுமாகப் பிடிபட்டு விழித்தார். புழுத்து துடிப்பாக அவர் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது.

"பையனைச் சேத்துக்க மாட்டேன்னுட்டாங்களாம். இதை உங்க கையாலே வாங்கிக்கிங்க. எல்லாரும் செய்யறப்ப அவன் மனசு கேக்குங்களா.. கொடுடா" என்றாள் அம்மா.

பையனுக்கு அழுகை அதிகமாகிவிட்டது. கையில் வேர்த்துக் கொண்டிருந்த ரூபாயை அவரிடம் நீட்டினான்.

"வாங்கிக்கிங்க சார்" என்று கெஞ்சினான் ஆறுமுகம்.

பேசாமல் வாங்கிக்கொண்டார்.

"ரொம்ப நல்ல பையன் சார். அன்னிக்கி ஏதோ புத்திபிசகாப் பண்ணிட்டான். அப்புறம் ஒரு புகார் கிடையாது சார், அவன்மேலே"

"நீங்க சொல்லுங்க பெரிய மனசு பண்ணி. கூட இருக்கறதுங்க பேசாம இருந்தா என்ன செய்யும்? சிறுசுதாங்களே!" என்றாள் அம்மாள்.

"இந்தப் பயலுங்க இப்படிப் பண்ணுவாங்கன்னு தெரியாம போயிடிச்சே எனக்கு" என்றார் அவர்.

"நீங்க சொன்னதைத்தானே செய்தாங்க" என்றாள் மகிமை.

"அது சரி" என்று லேசாகச் சிரித்தார் அவர். அழுகைதான் சிரிப்பாக வந்தது. மேலே படத்தில் தோன்றிய முள்முடி அவர் தலையை ஒருமுறை அழுத்திற்று.

5. சிதற™கள்

- விழி பா. இதயவேந்தன்

அவன் ஆழ்ந்த நம்பிக்கையோடுதான் கடைவிரிக்க ஆரம்பித்தான். எப்படியும் இங்காவது ஆட்களை வளைத்துப் பிடித்து விடலாம் என்கிற எண்ணம் உள்ளுக்குள் வலுத்தது. பொழுதின் உயிர்நாடியே இங்குதான் இருக்கிறது. அவன் நெஞ்சின் இறுக்கம் கலைந்து துரிதமாய் செயல்பட்டான்.

தொடர்ந்து இரண்டு இடங்களில் வைத்துப் பார்த்தான். யாரும் வருவதாய் இல்லை. ஆஞ்சநேயர் கோயில் குளத்தைச் சுற்றி நிறைய வண்டிகள் வந்து நிற்கும். வெளியூர் வண்டிகள், ஊரிலிருந்து காய்கறி, மளிகை-சாமான் என சிற்றூர்களுக்கு மொத்தமாக வாங்கி எடுத்துச் செல்வதற்கு வந்து குளத்தைச் சுற்றி நிற்கும்.

'பில்லூர் முனுசாமி' லாடம் என்றால் அந்தப் பகுதி வண்டிக்காரர் களுக்கும் சரி, வெளி ஊரிலிருந்து வரும் வண்டிக்காரர்களுக்கும் சரி, பிடிக்கும்படி இருக்கும். தொழில் சுத்தம் இருக்கிறதோ இல்லையோ, பேசும் பேச்சில் சுத்தம் தெரியும். ஊரையே வளைத்துப் பேசுவான்.

அதற்குத் தகுந்தாற்போல 'லாடம்' அடிக்க மாட்டைக் கொண்டு வரும்போது, "இதப்பாரு முனுசாமி, போன தடவ அவசரத்தில் அந்த ஓதவாக்கர கோவிந்தன் கிட்ட அடிச்சேன். உடம்புல இரத்தம் இருந்தாதான் அடி பலமா விழும். தோ பாரு ஆணி கழட்டிக்கிட்டு லாடம் நிக்கில. மாடு வேற நொண்டுது" என்பார்கள்.

"அதப்பத்திக் கவலப்படாதீங்க, அருமையா வேலய முடிச்சிர்ரேன். தோ பாருங்க லாடம், ஆணியெல்லாம் மெட்ராசிலேர்ந்து வர்றது. நம்மகிட்ட காசு பிரச்சின இல்ல, தொழிலுதான் முக்கியம். பணம் இன்னிக்கு போவும் நாளைக்கு வரும். மனுசன் நாலுபேர் நம்மளத் தேடி வரணும். இன்னா சொல்ற" என்பான்.

அவன் சொல்லுவதுபோல் விரித்து வைத்த சாக்குப் பையில் ஆணிகளும் லாடங்களும் வெவ்வேறு அளவுகளில் பளபளவென மின்னிக் கொண்டிருக்கும்... உள்ளூர்க்காரன் மட்டமான லாடங்களையும் ஆணிகளையும் வரவழைத்து விற்பதைப் பலர் வாங்கி ஏதோ அன்றைக்குப் பொழுதைக் கச்சிதமாய் முடித்துவிட வேண்டும் என்று துடிப்பார்கள்.

முனுசாமிக்கு அப்படி எண்ணமில்லை. உள்ளூர்லேயே கொஞ்சம் கூட ஆனாலும் விலையுயர்ந்த லாடங்களை வாங்கித் தொழில் செய்வான். ஆணிகளும் அவ்வளவு சீக்கிரம் ஒடிந்து போகாது. என்னதான் மாடுகள் ஓட்டம் ஓடினாலும் ஆட்டம் ஆடினாலும் உடும்புப்பிடியாக நகங்களைப் பிடித்துக்கொள்ளும் லாடங்களோடு ஆணிகள். தொழிலில் குறை இல்லாதவாறு தனது கற்பனையைச் செலுத்தி தனது அப்பா சொல்லிக் கொடுத்த அத்துணை வேலைப்பாடுகளையும் திரட்டி இடையிடையே ஏராளமான பேச்சுக்களோடு ஆளையும் சேர்த்து வளைத்துப் போட்டு விடுவான்.

அன்றைக்குப் பார்த்து ஒருவனும் வந்து தமது பிடியில் சிக்காதவாறு விலகி விலகி நின்றது அவனுக்கு வருத்தம் ஏற்பட்டது. ''என்ன கோபாலு ரொம்ப நாளு ஆச்சே மாடு இன்னா சொல்லுது?''

''வா, வா முனுசாமி சவுக்கியமா? மாடு இன்னா சொல்லுது, விக்கிற வெலவாசில அதுக்குத் தீனிகூட எட்டல, பேசாம வித்திட்டு வேற கூலி வேல செய்யலாம்.''

''ஆமாமாம், முன்ன மாதிரி சுறுசுறுப்பா இல்லியே உன் மாடு''

''எப்பிடி சொல்ற?''

''பாத்தாதான் தெரிதே, காலெல்லாம் குச்சி மாதிரி கெடக்குது.'' ''இன்னா செய்யிறது. இதவெச்சிக்கிட்டுத்தான் நானும் பொழப்பு நடத்துறேன்.''

''ஆமாம் எப்ப லாடம் அடிச்சே, ஆறு மாசம் இருக்காது?''

''மேலேயே ஆயிடுச்சு. நீ அடிச்சதுதான். எல்லாம் போயிடுச்சு'' ''இப்ப அடிச்சிடலாமா?''

''வேணாம்பா, இந்த மாசம் நெறைய செலவு. ஒன்னும் சமாளிக்க முடியல.''

முனுசாமிக்கு அவன் குறையைச் சொன்னதும் தன் குறையை யாரிடம் சொல்வது என்றாகிவிட்டது. இரண்டு மாட்டுக்கு லாடம் அடிச்சாலும் வாற காசில் அரிசி, காய்கறி வாங்கிப் போய் ராத்திரியா ஏதாச்சும் ஆக்கித் தின்றுவிடலாம். ராத்திரியோட பையன் வேறு அவன் வரும்போதே பட்டாணியும் வருக்கயும் கேட்டிருந்தான். ஆசையைத் தீர்க்க வேண்டும். முழுகாமல் இருக்கும் மனைவி வரும்போதே, 'மாங்காயும் கருவாடும் வாங்கி வாங்க. நல்லா கொழம்பு வெச்சித்தர்றேன்' என்று தன் ஆசையை மறைமுகமாகச் சொல்லி அனுப்பியிருந்தாள்.

''சரி கோபாலு, இருக்கிறதக் குடுப்பா, லாடம் அடிக்கிறேன். மீதி நாளைக்கு வாங்கிக்கிறேன். எங்கப் போயிடப் போவது உன்கிட்ட காசு'' முனுசாமி வளைத்துப் பிடித்தான்.

“இப்ப எவ்வளவு ஜோடி மாட்டுக்கு?”

முனுசாமிக்கு உற்சாகம் அதிகமானது. கோபால் சற்று இறங்கி வருவதாகத் தெரிந்தது.

“கொஞ்சதான் ஏறிருக்கு இருவது ரூபா. ஆணி, லாடம் வெலயெல்லாம் ஏறிடுச்சி தெரியுமில்ல.”

“அப்பிடியா, என்னப்பா போளதடவ பாஞ்சு ரூபாய்க்கு அடிச்சேன், இப்ப இருவது இன்ற.”

“சரி கோபாலு நமக்குள்ளே இன்னா, ஒரூபா சேத்துக்குடேன்.”

“ஜாமான எடுத்து வாடா” “இரு இரு வேணாம், நாளைக்கு அடிக்கிறேன்.”

முனுசாமிக்கு பேச்சுத் தளர்ந்தது. வேறு திசையில் பார்வைகள் துழவின. “அந்த காலத்தில் ஒருபா குடுத்தா ங்கொப்பன் அடிப்பாரு தெரியுமா?” சரி, அது யாரு வண்டி முன்ன நிக்கிறது?

“அதுவா, கோலியனூரான் வண்டி”

“யாரு சின்னப்பன் மவனா?”

“கடத்தெருவுக்கு ஜாமான் வாங்கப் போயிருக்கான்”

முனுசாமி கொஞ்சம் முன்னேறி அடுத்த வண்டி அருகே மாடு தன்னுள் மடக்கிக் கொண்டிருந்த கால்களை இழுத்தான். அவைகள் மிரண்டு எழுந்தன. லாடங்கள் முழுக்க தேய்ந்திருந்தது. சாய்வாய் நின்றிருந்த வண்டியில் ஒருவன் படுத்திருந்தான். கவனமாய் எழுப்பினான்,

“தம்பி தம்பி.”

“என்னங்க?”

“லாடம் கட்டலாமா?”

“வேணாங்க, அப்புறம் பாக்கலாம்.”

“மாடு சரியாவே நடக்காதே?”

“எப்பேர்பட்ட மாடும் என்கிட்ட நடக்கிறதின்னா,” ஓடும்.

“அப்பிடியா?”

“ம்..”

“எப்பிடி?”

“குடுக்கிற எடத்தில் நாலுகுடுத்தா ஓடாதா?”

“அதெல்லாம் பாவம், வாயில்லா ஜீவன்.”

"வாயில்லா ஜீவன்னு நெனைச்சுதான் தண்ணீ காட்டறோம். தீனி போடறமில்ல."

"அதுமட்டும் போதுமா, அடிக்கடி குளிப்பாட்டணும். கொம்புகள் சீவிவிடணும், லாடம் அடிக்கணும். அப்பதான் அதுங்க தெம்பா இருக்கும், இல்ல நிறைய வியாதி வரும் தெரிமா?"

"நம்ம வியாதிய கவனிக்கவே முடியல, இது..."

"அப்பிடியெல்லாம் சொல்லாத தம்பி. இதுங்கள வெச்சுதான பொழப்பு நடத்துறோம்."

ஏங்க இப்ப காசில்ல, அப்புறம் பாத்துக்கலாம் அவன் வெடுக்கென சொல்லிவிட்டுப் படுத்துக் கொண்டான். எவ்வளவு நன்மை தீமைகளை எடுத்துச் சொல்லியும் அவன் பிடிகொடுப்பதாய் இல்லை. அடுத்தடுத்து வண்டிகள் வரிசையாய் நின்றிருந்தும் ஒருவரும் ஆட்கள் இல்லை. குளத்தோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் தள்ளிக்கொண்டு சாக்கு மூட்டை பின்னால் வைத்தபடி உள்ளதா என்பதைப் பார்த்துக் கொண்டு அடுத்து அவன் கடைபோடும் இடத்திற்கு வந்தான்.

பூங்கா சந்தில் வரிசையாக வாடகை நிறுத்தப்பட்டிருக்கும். சற்று தூரத்தில் மரத்தடியில் வண்டியை நிறுத்திவிட்டு, மெயின் ரோட்டில் போகும் வரும் வண்டிகளைப் பார்த்தபடி நின்றிருந்தான். வேன்கள் தூரத்தில் செங்கல் ஏற்றிக்கொண்டு டயர்வண்டியில் ஒருவன் எதிரே வந்தான். தெரிந்தவன்தான். இந்த மாடு பொல்லாத மாடு ஏற்கனவே லாடம் அடிக்கும்போது நெஞ்சில் விட்ட அடியில் ஒருமாதம் பிழைப்பின்றி கஷ்டப்பட்டது நினைவுக்கு வந்தது.

"என்னப்பா கட்டிடலாமா?" அவன் புரிந்து கொண்டான்.

"அவசரமா போய் எறக்கணும்?"

"பத்து நிமிசத்தில் அடிச்சிர்றேன், மாடு பாரு எப்பிடி போவது இந்த வெய்யில்ல?"

"வேணாம் ஆளுங்க கட்டடத்தில நிக்கும். கல்லும் போவணும், பார்க்கலாம்."

காலைலேர்ந்து டீத்தண்ணிக்குக் கூட வழியின்றி, சாப்பிடவும் வழியின்றி அரை மயக்கத்திலிருந்தான் முனுசாமி,

ஒவ்வொரு வண்டிக்காரனும் ஒவ்வொரு சோகக் கதையைச் சொல்லிவிட்டுப் போனான். 25 ரூபா வட்டிக்காரனிடம் வாங்கி, ஆணியும் லாடங்களும் வாங்கி வைத்தது அப்படியே இருக்கிறது. அவனுக்கும் பொழுதுபோய் பதில் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால்

அவன் வாயில் வந்தபடி திட்டுவான். பொழுது சாய நின்று ஒருவனும் சிக்கவில்லை. பிறகொரு யோசனை வந்து புத்துணர்ச்சி பெற்றவனாய் சைக்கிளைத் தள்ளிக் கொண்டுக் கிளம்பினான்.

சைக்கிள் அவன் ஓட்டுவதைவிடத் தள்ளிக் கொண்டு போவதுதான் அதிகம். முன் டயர் வெடித்து அது தைக்கப்பட்டிருந்தது பின்னால் டயர் காற்றடித்து கிழிந்ததில் உப்பிக் கொண்டிருந்தது. கமிட்டிக்கு போனான். விவசாயிகள் கொண்டு வந்த பருத்தி, மணிலா... போட்டு விட்டு இந்நேரம் பணம் பெற்றுத் திரும்பும் நேரம். ரெண்டு வண்டி மாடுகள் கிடைத்தால்போதும். இன்றைய பொழுது ஓடிவிடும். கடன் காரனுக்கும் ஏதாவது கொஞ்சம் கொடுத்துவிடலாம் என்ற லட்சியக் கனவில் வேகமாய் தள்ளிக் கொண்டு வந்தான். முழுமூச்சாய் இங்கு வந்து சேர்ந்தான்.

கமிட்டியின் வாசலில் வரிசையாய் லாரிகள் நிறுத்தப் பட்டிருந்தன. கொஞ்சம் தள்ளி அந்த சுவரோரம் வெற்று இடம். சைக்கிளை நிறுத்திவிட்டு சாக்கு மூட்டையை அவிழ்த்தான். பெருக்கல் குறி மாதிரி இருந்த கட்டை, சுத்தி, லாடங்கள், ஆணி என்று தனித்தனியாய் விரித்துகடை பரப்பி இருந்தான்.

கமிட்டியின் வாசலிலிருந்து வெளிவந்த ஒரு மாட்டு வண்டியைப் பார்த்துக் கையைக் காட்டினான். அவன் காதில் விழாததுபோல் மாட்டு வாலைத் திருகி வேகமாக ஓட்டினான். ‘‘லாடம் கட்டிடலாமா?’’

‘‘எவ்ளோ கேக்கற?’’ வண்டிக்காரனின் கேள்வி முனுசாமியின் உள்ளம் குளிர்ந்தது.

‘‘எல்லாரும் குடுக்கிற மாதிரி குடுங்க. வண்டிய ஓரம் நிறுத்துங்க. மாட்ட அவுருங்க.’’

முனுசாமி வேட்டியை இழுத்துக்கட்டிக் கொண்டு தலைப்பாகையை அழுத்தி சொறுவினான்.

‘‘தோ பாருப்பா, கரக்டா சொல்லிடு, அப்புறம் லாடம் கட்ன பிறகு சண்ட வேணாம்.’’

‘‘நமக்குள்ள இன்னாங்க சண்ட, நீங்களும் கூலிக்காரன். நானும் கூலிக்காரன். ரெண்டு மாட்டுக்கும் இருவது ரூபா தான். மாட்ட கொண்டாங்க.

‘‘வேணாம் வேனாம், ரெண்டு மாசத்துக்கு முன்னாடி கொளத்தூரான்கிட்ட அடிச்சேன், பாஞ்சு ரூபா தான். நீ இன்னா இப்படி கேக்கற?’’

“தோ பாருங்க நம்மகிட்ட தொழிலு சுத்தமா இருக்கும். நகத்த சமமா சீவிட்டு ரெண்டு இறுக்கு இறுக்குனா ஆறு மாசம் ஆனாலும் லாடம் உடாது. ஒஸ்தி லாடம் வேணும்னா தோ பாருங்க. அவ்ளோ சீக்கிரம் தேயவும் தேயாது.”

“அதெல்லாம் வேணாம். பாஞ்சு ரூபாதான் தருவேன். இன்னா சொல்ற பொழுதுபோச்சு, நான் ஊரு போயி சேரணும்.”

முனுசாமி சற்றுத் தயங்கியபடியே, “வாங்க வாங்க” என்றபடி நிறுத்தி மாட்டை அவிழ்த்து வரச்சொன்னான்.

எந்திரமயமாக கட்டையைத் தூக்கிப் போடுவதும் சுத்தியலை எடுப்பதும் லாடங்களைக் கலைத்து தரமான லாடங்களைப் பொறுக்கி எடுப்பதும் ஆக இருந்தான். கயிற்றை எடுத்து மாட்டு முன்காலில் போட்டு சுறுக்குக் கட்டி இழுத்து வண்டிக்காரன் உதவியின்றி மாட்டை லேசாய் சாய்ந்து விழுமாறு செய்த பின்பு நான்கு காலையும் சேர்த்துக் கட்டி, கட்டை மேல் வைத்து நிறுத்தி நான்கு காலின் நகங்களை மருத்துவர்கள் பரிசோதிப்பதுபோல் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு மீண்டும் தனது சாமான்களின் பக்கம் திரும்பியதும் மோட்டார் வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தான்.

முனுசாமி எழுந்து கும்பிட்டான்.

“எடத்த காலிபண்ணு மொதல்ல” என்றபடி எட்டி உதைத்தான்.

பின்னால் உட்கார்ந்திருந்தவன் இறங்கி பளீர் பளீரென்று அறைந்தான். மாடு எழுந்து நிற்கத் துள்ளியது.

“கட்ட அவுறுடா, வண்டி உன்னதுதான் எடு. டேய் நீ ஏண்டா பாக்குற? என்றபடி லாடங்களை ரோட்டில் தூக்கி எறிந்தான். சைக்கிளைப் பூட்சு காலால் எட்டி உதைத்தான்.

“நாங்க போய் வருவோம். வரும்போது திரும்ப இருந்திச்சு, அப்புறம் உள்ளத் தள்ளிடுவேன்.” வண்டி வேகமாக சீறிட்டுச் சென்றது.

வண்டிக்காரன் விட்டால்போதும் என்று மாட்டை அவிழ்த்துக் கொண்டு ஓடினான்.

முனுசாமி வரிசையாய் நின்றிருந்த லாரிகளைத் தாண்டி ரோட்டில் மோட்டார் வண்டி சென்ற பாதையைக் கவனித்தான். இருட்டில் அதன் சத்தம் மட்டும் கேட்டது.

சைக்கிள், லாடங்கள் பக்கம்-அவன் கவனம் திரும்பியது. கண்கள் இருட்டத் தொடங்கின.

6. காகித உறவு

- சு.சமுத்திரம்

முதல் 'காலத்தில்' 'பெயர்' என்ற வார்த்தைக்கு முன்னால் 'மாடசாமி' என்று எழுதினான்.

இரண்டாவது காலமான 'உத்தியோகம்' என்ற வார்த்தைக்கு வந்தான். 'அக்கௌண்டன்ட்.'

மூன்றாவது காலமான 'சம்பளத்திற்கு' வந்தான். எந்தச் சம்பளம்? அடிப்படைச் சம்பளமான ரூபாய் ஐந்நூறா, இல்லை அலவன்ஸோடு சேர்த்த தொகையா? போகட்டும், வாங்கும் சம்பளமா? அல்லது வாங்க வேண்டிய சம்பளமா? சிறிது குழம்பி, எப்படியோ அந்த இடத்தையும் நிரப்பினான்.

'சென்ற தடவை என்ன காரணத்திற்காகப் பணம் எடுக்கப் பட்டது?' என்ற காலத்திற்கு முன்னால் வந்து, சிறிது நொண்டினான். என்ன காரணம்?

ஞாபகத்துக்கு வந்துவிட்டது. அவனால் மறக்க முடியாத காரணம்தான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, கிராமத்தில் அவன் தந்தை உயிரோடு இருந்தபோது அவர் இறந்துவிட்ட ஈமச் சடங்கிற்காக, இரண்டாயிரம் ரூபாய் கேட்டு மனுப் போட்டான் அவன், அவன் எந்தச் சமயத்தில் எழுதினானோ தெரியவில்லை. சொல்லி வைத்தது போல், அவன் தந்தை அடுத்த மாதம் அதே தேதியில், அவன் 'காரண காலத்தை'ப் பூர்த்தி செய்த அதே காலத்தில் காலமானார் என்றாலும் அய்யாவின் சாவுக்காக, வாங்கிய இரண்டாயிரத்தை, அவர் இறப்பதற்கு முன்னதாகவே, அருமை மகள் ஸ்டெல்லாவுக்கு ஐந்து பவுன் தங்கத்தில் சங்கிலி செய்து போட்டு விட்டான். அப்பன் இறந்தபோது அந்தச் சங்கிலியை, அவனால் மகள் கழுத்திலிருந்து இறக்கவும் முடியவில்லை. இறந்தபோது தந்தையின் ஈமச்சடங்கிற்கென்று சித்திக்குப் பணமும் கொடுக்கவில்லை.

'எவ்வளவு வேண்டும்?' என்ற இடத்திற்கு முன்னால் மூவாயிரம் ரூபாய் என்று எழுதிவிட்டு, கடைசி காலத்திற்கு வந்தான். உடனே உண்மையிலேயே திணறிப் போனான். அந்தக் 'காலம்', தன் மனுவுக்கு 'காலன்' போல் வந்திருப்பதை நினைத்து, அவனுக்குக் கொஞ்சம் கோபங்கூட வந்தது. என்ன காரணத்தை எழுதுவது?

அய்யாவை, இரண்டாவது தடவையாகச் சாகடிக்க முடியாது. அம்மாவை... அவள் இளைய தாயார் தானே... சாகடிச்சால் என்ன? வேண்டாம். வேண்டவே வேண்டாம். இந்தக் காலத்தில் எழுதப் போய், அவள் காலம் முடிந்து விட்டால், அவளோடு கன்னிகழியாமல் இருக்கும் இரண்டு தங்கச்சி சனியன்களும் அவன் காலில் வந்து உட்கார்ந்தால், அவனால் வாழ்க்கையை எப்படி நடத்த முடியும்?

முடியாது.

அவனுடைய பெண் குழந்தைகளான பப்பிக்கும், ஸ்டெல்லாவுக்கும் காது குத்தலாமா? முடியாது. அவர்களுக்கு ஏற்கனவே இரண்டு மூன்று தடவை, பேப்பரில் காது குத்தியாகிவிட்டது. இனிமேல் அந்தக் 'காதுகுத்து' வேலை எடுபடாது. அப்படியானால் என்ன செய்யலாம்?

அரை மணிநேரம் கழித்து, அவன் இருக்கைக்கு வந்த போது, நிர்வாக அதிகாரி, 'என்னாச்சி?' என்றார்.

''மூளையைக் குழப்பிக்கிட்டிருகேன்" என்று அவன் பதிலளித்த போது தபால்காரர் ஒரு கடிதத்தை நீட்டினார். அதை அவன் வாங்கிக் கொண்டே, கடித உறையைப் பார்த்தான். தங்கை தமயந்தி கிராமத்திலிருந்து எழுதியிருக்கிறாள். இந்தச் சனியனுக்கு வேறு வேலை இல்லை... வழக்கமான பல்லவியாகத்தான் இருக்கும்.

அன்பில்லாத அண்ணாவுக்கு.

எல்லாம் வல்ல, நியாய அநியாயங்களைக் கடந்த இறைவன் அருளால், நானும் என்விரக்தியும், எழுபது வயது அம்மாவும் அவள் நோயும், இருபத்தெட்டு வயதுத் தங்கை கல்யாணியும், அவளது கல்யான நிராசையும், வழக்கம் போல், நல்லபடியாகவும், ஒற்றுமையாகவும், சொத்தில்லா சுகத்தோடும் சுகமில்லா மனத்தோடும் இருக்கிறோம். இது போல் நீயும், உன் ஸ்கூட்டரும், அண்ணியும், அவள் நகைகளும், பப்பியும், அவள் நாட்டியமும், ஸ்டெல்லாவும், அவள் ஐந்து பவுன் சங்கிலியும் நலமாக இருக்க, சத்தியமாக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அண்ணா! நன்றாக நினைத்துப்பார். உனக்கு மூன்று வயதான போது, உன் அம்மா - என் பெரியம்மா - இறந்து போனாள். எனக்கு விவரம் தெரியாத பருவத்தில், உன் இளைய தாயாரான என் அம்மா, உன்னைக் கொடுமைப்படுத்தினாளோ என்னவோ. ஆனால் எனக்கு விவரம் தெரிந்த வயதிலிருந்து அவள் உன்னிடம் இளைய தாயாராக நடக்காமல், உன் பொருட்டு இளைத்த தாயாராகத்தான் நடந்து கொண்டு வந்தாள் என்று நான் - தெய்வ பக்தியுள்ள நான் - எந்தக் கோவிலிலும் கற்பூரத்தை அணைக்கத் தாயார். அக்கம் பக்கத்துக்காரர்கள் அம்மாவிடம்

வந்து 'ஒனக்கு பகவான் கிருமையில் ஒரு ஆம்புளப் பிள்ளை பிறக்கணும்', என்று சொல்லும்போதெல்லாம், எனக்கு இனிமே பிள்ளையே வேண்டாம். என் ஒரே மவன் மாடசாமி காலும் கையும் கெதியா இருந்தால் அதுவே போதும், என்று நீ இல்லாத சமயங்களில் அவர்களுக்கு அம்மா பல தடவை பதிலளித்ததைக் காதுபடக் கேட்டிருக் கிறேன். நீ ஈ.எஸ்.எஸ்.எல்.சி முடித்தவுடன் உன்னை உயர்நிலைப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றவள் அவள். நீ எஸ்.எஸ்.எல்.சி. முடித்ததும், நமக்கும் தோளுக்குமேல் ரெண்டு பொட்டப்பிள்ளைங்க இருக்கு. இவனை வேலைக்கு மனுப்போடச் சொல்லலாம் என்று அப்பா சொன்னபோது, நீ மேற்கொண்டு படித்துத் தான் ஆகவேண்டும் என்று அப்பாவை அடிக்காத குறையாகப் பேசி வெற்றி கண்டவள் அம்மா. அப்படின்னா ஒன் வயத்துல பிறந்த ஒருத்தியையாவது படிக்க வைக்கனும் என்று அவர் சொன்னதும், அம்மா அரைகுறையாகச் சம்மதிக்க, நான் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தேன். நான் பி.யூ.சி. படிக்க விரும்பியபோது நீ காலேஜில் கஷ்டமின்றிப் படிப்பதற்காகவும், உன் ஹாஸ்டல் செலவுகளுக்காகவும், என்னைப் படிக்க வைக்கக்கூடாது என்று வாதாடி, காரியத்தைச் சாதித்துக் கொண்டவள் உன் சித்தி. பட்டப் படிப்பை முடித்து, வேலையில் சேர்ந்த கையோடு நீ கல்லூரித் தோழியைக் கல்யாணம் செய்ய நினைத்தபோது, ரெண்டு குமரிங்கள கரையேத்தாம. ஒனக்குக் கல்யாணம் இல்லை" என்று கோபமாகத் திட்டிய அய்யாமீது கோபப் பட்டு, கல்யாணத்தை மேளதாளத்துடன் நடத்தி வைத்தவள் உன் அம்மாவுக்கு மாற்றாகவும், மாற்றுக் குறையாமலும் வந்த என் அம்மா.

நீ பணம் அனுப்பவில்லை என்பதைவிட, போட்ட கடிதத்திற்குப் பதில் அனுப்பவில்லையே என்ற எண்னத்திலும், வயது வந்த இரண்டு பெண்களை எப்படிக் கரையேற்றுவது என்று புரியாமலும் நாடி நரம்பெல்லாம் வாடி வதங்க எங்களை வாடிய மலர்களாக்கி, மயான பூமியில் அய்யா மறைந்து கொண்டார். நீ ஈமச் சடங்கிற்கு வந்தாய் இருக்கிற நிலத்தை விற்பதற்கான பத்திரத்தில் பெரிய மனது பண்ணிக் கையெழுத்துப் போட்டு, அந்தப் பணத்தை அய்யாவின் ஈமச் சடங்கிற்கும், அம்மாவிற்கு வெள்ளைப் புடவை வாங்குவதற்கும் அனுமதித்த உனக்கு, நாங்கள் நன்றி செலுத்திக் கொண்டோம். நீயும் ஏதோ ஒரு வேகத்தில் பெஸண்ட் நகரில் குவார்ட்டர்ஸ்ல இருக்கிறேன். வசதியா இருக்கும். வந்துடுங்க', என்று சொல்லிவிட்டுப் போய், பிறகு பதிலே போடவில்லை. என்றாலும், ஆதரவற்ற அனாதைகளான நாங்கள், உனக்குக் கடிதமெழுத நேரமிருந்திருக்காது என்று எங்களையே நாங்கள் ஏமாற்றிக்கொண்டு உன் வீட்டிற்கு வந்தோம்.

வாசலுக்கு வந்த அண்ணி, வாங்கவென்று கூப்பிடாமலே அறைக்குப் போய்விட்டாள். ஓடிவந்த பிள்ளைகளையும் அடித்தாள். இருந்தாலும் நாங்கள் செஞ்சோற்றுக் கடன் கழித்தோம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம். மாதம் இருபது ரூபாய்க்கு அமர்த்தியிருந்த வேலைக்காரியை நீக்கச் சொல்லிவிட்டு, அம்மாவே வீட்டு வேலைகளைச் செய்தாள். வேலைக்காரிக்குக் கொடுத்த பழையதைச் சாப்பிட்டாள். மாதம் இருபது ரூபாய்க்கு பிள்ளைகளை கான்வென்ட் களுக்கு இட்டுச் சென்ற ஆயாவிற்கு, நான் மாற்று ஆயாவானேன். தங்கை கல்யாணி துணிமணிகளைத் துவைப்பதிலிருந்து கடை கண்ணிகள் வரை போய்க் கொண்டிருந்தாள். நீ அலுவலகம் போனதும் அறைக்குள் போகும் அண்ணி, மத்தியானம் சாப்பிடமட்டும் ஹாலுக்குள் வருவாள். சாப்பாடு மோசம் என்று பாதியில் வைத்துவிட்டு, கல்யாணியைப் பழம் வாங்கிகொண்டு வரச் சொல்வாள். ஜாடைமாடையாகத் திட்டுவாள். சுயமரியாதைக் காரியான அம்மா, எங்களின் எதிர்காலத்திற் காகவும், உன் மனம் நோகக்கூடாது என்பதற்காகவும் பொறுத்துக் கொண்டாள். அண்ணி, ‘எங்க பப்பிக்கு வாரவன் கலெக்டரா இருப்பான். இல்லன்னா சயன்டிஸ்டா இருப்பான்’, என்று வயதுக்குவராத பெண்ணைப் பற்றிக் கனவு காணும்போது, கனவுகள் நனவாகாமல் நசித்துப் போயிருந்த வயதுக்கு வந்த நாங்கள், கொஞ்சம் பொறாமைப்பட்டதும் உண்மைதான். அம்மாவிடம் இதை இலைமறைவு காய்மறைவாகக் காட்டும்போது, அவள் எங்களை ஏசிய ஏச்சை இங்கே எழுத முடியாது.

பெஸண்ட நகரில் உள்ள வரசித்தி விநாயகர் கோவிலை அதிகாலையில் ஒன்பது தடவை சுற்றினால், கல்யாணம் கூடும் என்று அம்மாவிடம் ஒரு மாமி கூறியதை ஒட்டுக் கேட்ட நான், மறு நாளிலிருந்து பிள்ளையாரைச் சுற்றினேன். அதற்கு ஏற்றாற்போல், ஒரு வரன்வந்தது உனக்கு ஞாபகம் இருக்கும். வெள்ளிக்கிழமை நல்ல நாள். நிறைந்த பௌர்ணமி நாள். ஞாபகம் இருக்கா அண்ணா?

‘நாலாயிரம் ரொக்கம். நகை போட்டா போதுமாம். திருவான்மியூர்ல மளிகைக்கடை வச்சிருக்கற பையனுக்குக் கேட்டாக என்று அம்மா சென்னாள்.

உடனே, ‘நாலாயிரம் ரூபாய்க்கு எங்க போவ? ஸ்கூட்டர் கடன், பெஸ்டிவல் கடன், ஜி.பி.எப். கடன், பரீட்சை பீஸ், பால் கார்டு அது இது என்று போக பைசா மிச்சமில்லை...’ என்று நீ இழுத்தாய். அம்மாவாவது சும்மா இருந்திருக்கலாம் மனம் இருந்தா மார்க்கம் இல்லாமலா போகும்? என்று சொல்லிவிட்டு, நாக்கைக் கடித்தாள். உன் மனைவி, தன் பங்குக்கு நாக்கை நீட்டிவிட்டாள். ‘இந்த சனியங்க

வந்ததிலிருந்து எனக்கு நிம்மதியில்லாமப் போச்சி. போன பிறவியில் செய்த கர்மம் எவ எவளுக்கெல்லாமோ இங்கு அழனுமாம். வைக்க வேண்டிய இடத்துல வச்சிருந்தா இப்படி வாய்க் கொழுப்பு இருக்குமா? கிழவிக்கு மாப்பிள்ள பார்க்க முடியுமா? மனதிருந்தாலும், கிழடா போனவளுக்கு வாலிபன் கிடைக்கறது லேசா? என்று கொட்டினாள்.

நீயாவது அண்ணியைத் தடுத்துக் கேட்டிருக்கலாம் அண்ணன் தடுக்கவில்லையே என்ற ஆத்திரத்தை நானாவது அடக்கியிருக்கலாம். என்னால் இயலவில்லை.

நானும், 'அம்மா சொன்னதுல என்ன அண்ணி தப்பு? மனம் இருந்தா மார்க்கமும் தானாக வரும். நீங்க போட்டிருக்கிற நகைய எனக்குப் போடப்படாதா? சின்னப் பொண்ணு ஸ்டெல்லாவின் சங்கிலியைத் தரப்படாதா, ஜடமா இருக்கிற ஸ்கூட்டர வித்து இந்த ஜடங்கள கரையேத்தக் கூடாதா? அப்படியே இல்லாவிட்டாலும் பி.ஏ. படிச்ச நீங்க, கொஞ்ச நாளைக்கு வேலைக்குப் போயி எங்களுக்கு வழி பண்ண முடியாதா? அண்ணன் ஒரு நாளைக்கு மூணு ரூபாய்க்கு மூணு பாக்கெட் சிகரெட் பிடிக்காரு தங்கச்சிக்குக் கல்யாணம் பண்ணனும் என்கிற வைராக்யத்துல அத விட்டா மாசம் நூறு ரூபாய் தேறும். போகட்டும். பப்பிக்கு முப்பது ரூபாய் செலவுல டான்ஸ் முக்கியமா? பதினைஞ்சு ரூபாய் தந்தா டைப்ரைட்டிங் கத்து, நான் வேலைக்குப் போயி, எனக்கு நானே ஒரு வழி பண்ணியிருப்பேன். முடியாததுன்னு உலகத்துல எதுவுமே இல்ல அண்ணி மனசுதான் வேணும் என்று ஏதோ ஒரு வேகத்தில் கேட்டுவிட்டேன்.

நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாதுதான். ஆனால் அதற்கு நஷ்டஈடு கொடுப்பதுபோல், அம்மா என் தலைமுடியைத் தன் கைக்குள் சுற்றி வளைத்துக்கொண்டு முதுகிலும் பிடரியிலுமாகக் கொடுத்தாள். என்னைக் கோபத்தோடு பார்த்த உன் காலைத் தொட்டு அம்மா கும்பிட்டதுடன், 'திமிர் பிடிச்ச கழுத பேசுறத தப்பா நினைச்சிக்காதப்பா பால் குடுக்கிற மாட்ட பல்லப் பிடிக்கிற ஜென்மம் இவா' என்று சொல்லிவிட்டு மீண்டும் என்னை அடித்தாள். எனக்கு அவள்மேல் அனுதாபந்தான் ஏற்பட்டது.

போதாத வேளை பப்பிக்கு ஜுரம் வந்துவிட்டது. சீஸன் கோளாறுதான். ஆனால் அண்ணியோ, எந்த வேளையில இந்த முண்ட நீ பெத்த பொண்ணுக்கு டான்ஸ் எதுக்குன்னு கேட்டாளோ என் பொண்ணு உடம்பெல்லம் ஆடுது. இந்த நிமிஷத்துல இருந்து இவளுக இங்க இருக்கப்படாது. ஒண்ணு அவளுக போகனும். இல்லன்னா நான் போகணும் என்றாள்.

இரண்டு மூன்று நாட்களில் நீ மூன்று டிக்கெட்டுகளை வாங்கி, மௌனமாக எங்களிடம் நீட்டினாய்.

கிராமத்திற்கு வந்த நாங்கள் மனமிரங்கி லெட்டர் போட மாட்டாயா என்று ஏங்கினோம். போஸ்ட் மேனிடம் உன் கடிதம் வருகிறதா என்று உனக்காக அவரிடம் பேசி, இறுதியில் அவருக்காகவே பேசத் துவங்கினேன். முப்பது வயது பிரம்மசாரி அவர் என்னைப் போல் எஸ்.எஸ்.எல்.சி. வரசித்தி விநாயகர் ஏமாற்றவில்லை. எப்படியோ எங்கள் உள்ளங்கள் ஒன்றிப் போய்விட்டன. அவர் நல்லவர். ஏனென்றால் பேனாவைப் பிடிக்காமல், உத்தியோகம் பார்ப்பவர். நம்பிக்கையானவர். ஏனென்றால் அதிகம் படிக்காதவர், இன்னும் ஒரு வாரத்தில் எங்கள் திருமணம் தோரணமலை முருகன் கோவிலில் நடக்கப்போகிறது.

எப்படியோ, நீ கல்யாணத்துக்கு வந்தால், தாரை வார்த்துக் கொடுக்க வேறு ஆள்பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது. பணம் இல்லையென்றாலும், எப்படியாவது வருவதற்கு டிக்கெட்டு வாங்கிவிடு. போகும்போது அவர் டிக்கெட் வாங்கிக் கொடுப்பார்.

அன்புள்ள ஒன்றுவிட்ட தங்கை,

தமயந்தி

கடிதத்தைப் பாதி படிக்கும் போதே பல்லைக் கடித்த மாடசாமி, முழுவதும் படித்ததும் அதிர்ந்து போனான். தமயந்தி மீது கோபம் வந்தது.

மாலையில் வீட்டுக்கு வந்ததும், மனைவியிடம் கடிதத்தைக் கொடுத்தான்.

“லெட்டரா எழுதியிருக்கா? அந்தக் காலத்துல பில்லி சூன்யம் வைக்கறதுக்காக, மந்திரச் சொல்ல இப்படித்தான் மறச்சி வைப்பாங் களாம். நாம நாசமா போகணுமுன்னு சாபமிட்டிருக்கா.”

நாலைந்து நாட்கள் நடந்தன. தமயந்தியின் கடிதத்தை மறந்தே விட்டார்கள். ஆனால் ஜி.பி.எப் லோனை மட்டும் மறக்கவில்லை. மாட சாமி மனைவியிடம், லோனுக்கு அத்தாட்சியோடு கூடிய காரணத்தை எப்படிக் கற்பிக்கலாம் என்று கேட்டபோது, அவள் சளைக்காமல் பதில் சொன்னாள்.

“தமயந்தி கல்யாணமுன்னு சொல்லுங்க. அவள் ஒங்கள அண்ணன்னு நினைக்கலன்னாலும், நீங்க அவளை தங்கச்சிங்கறத மறக்காமத்தான் இருக்கீங்க கல்யாண நோட்டீஸ் வச்சி அனுப்புங்க.”

“அதெப்படி முடியும்? அது நியாயமில்ல.”

“எது நியாயமில்ல? இன்னையோட உறவு போயிடப் போறதா, என்ன? நாளைக்கி, அவள் வாயும் வயிறோட இருக்கையில் நாம கவனிக்க வேண்டியது இருக்குமே. அவகிடக்கட்டும். கவனிக்காண்டாம். அத்தையையும், கல்யாணியையும் அவா அடிச்சி விரட்டமாட்டாங்கறது என்ன நிச்சயம்? அப்போ நாமதான கவனிக்கணும்.”

அவன் ஒருநாள் யோசித்தான். மறுநாள் பிகு செய்தான். அதற்கு அடுத்த நாள் கல்யாண அழைப்பிதழுடன், விண்ணப்பத்தை அனுப்பினான். அருமைத் தங்கைக்குத் தன்னை விட்டால் வழியில்லை என்று விளக்கமாக எழுதியிருந்தான். மூவாயிரம் ரூபாய் நாலு நாளில் சாங்கவடினாகி பி.ஏ.ஓ ஆபீசுக்குப் போய் பணமும் வந்து, ‘பப்பி’ பேரில் பிக்ஸாகிவிட்டது.

மிஸஸ் மாடசாமிக்கு இன்னும் திருப்தியில்லை. ஸ்டெல்லாவுக்கும் ஒரு வழி பண்ன வேண்டாமா? அரசாங்க கஜானாவில் அவன் பேரில் உள்ள அடிவடினல் கிராக்கிப்படி இரண்டாயிரம் ரூபாய் தேறும். சார்ந்திருக்கும் உறவினர்களில் ஒருவருக்குத் தீரா நோய் இருப்பதாக மருத்துவ அத்தாட்சியுடன் காட்டினால் அவ்வளவு பணத்தையும் கொடுத்துவிடுகிறார்களாம். கணவனை நம்பியிருக்கும் அவனது சிறிய தாயாருக்கு - அவளின் மாமியாருக்கு தீராத வாதநோய், ஏற்கனவே அவளுக்குச் சென்னையிலிருந்து வாங்கி மெடிக்கல் ரி எம்பர்ஸ்மெண்ட் செய்த ‘பில்லுகள்’ நிறைய வருகின்றன. அவற்றை அத்தாட்சியாகக் காட்டி இரண்டாயிரம் ரூபாயையும் வாங்கிவிடலாம் `என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

7. வீ† டின் மூலையி™ ஒரு சமையலறை

- அம்பை

ஒரு சதுர கஜம் எட்டரை விலைக்கு நிலம் வாங்கி வீடு கட்டினாராம் கிஷனின் அப்பா. ரயில்பெட்டித் தொடர் மாதிரி வரிசையாய் அறைகள். எல்லா அறைகளும் முடிந்தபின் போனால் போகிறது என்று ஒட்டவைத்தாற்போல் ஒரு சமையலறை. இரு ஜன்னல்கள். ஒரு ஜன்னலின் கீழ், குழாய் வைத்த தொட்டி, ஒரு பெரிய தட்டுக்கூட வைக்க வகையில்லாமல் குறுகியது. கீழே, செங்கல் தடுப்பு இல்லாத சாக்கடை முற்றம். மேலே குழாயைத் திறந்ததும் கீழே பாதங்கள் குறுகுறுக்கும். பத்து நிமிடங்களில் ஒரு சிறு வெள்ளக்காடு காலடியில். அதில் நின்று நின்று அடிப்பாதம் எல்லாம் வெடிப்புக் கீறல்கள். சமையலறையில் அடி வைத்து, முதல் நாள் சமைத்து, கைக்குத் தங்க வளையல் போட்ட உடனேயே வெடிப்புக்குத் தடவ ஒரு மெழுகுக் களிம்பு தந்து விடுவாள், ஜீஜி என்று எல்லோரும் கூப்பிடும் கிஷனின் அம்மா.

சமையலறையின் கிழக்குப்புறம் பார்த்த ஜன்னல் வழியே பச்சை மலைகள். மேலே ஒரு வெள்ளைப் பொட்டுக் கோவில். பிள்ளையார் கோவில். அந்த ஜன்னலின் கீழேதான் சமைக்கும் மேடை. வெடிப்புப் பாதங்கள் பச்சை மலையில் உறுத்தாமல் இருந்திருக்கலாம். ஆனால் அந்த ஜன்னல் வெளியேதான் துணி உலர்த்தும் கொடி. கால்சராய், சட்டை, பைஜாமா, புடவை, பாவாடை விரிந்து ஜன்னலை மறைக்கும்.

கொத்தமல்லிப் பொடி, காரப் பொடி, கரம் மசாலாப் பொடி தூவி,அரைத்த பசு மஞ்சளும், இஞ்சியும் தடவப்பட்டுத் தயிரில் ஊறிய மாமிசத் துண்டங்களைக் கிளறி நிமிர்பவர்களை எதிர்கொள்வது ஒரு நாடா தொங்கும் பைஜாமாவாக இருக்கலாம். இதில் யாருக்கும் ஆட்சேபணை இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் வாழும் பாங்கு சமையலறையைச் சுற்றியே இருந்தது. சமையலறை என்ற தத்துவத்தை ஒட்டி, சாப்பாட்டுப் பிரியர்கள் - மதுப் பிரியர்கள் என்றே பெயரெடுத்த வம்சம். அனுபவிப்பவர்கள். உல்லாசிகள். பார்க்கப்போனால் இவர்கள் கல்யாணத்தில் அஜ்மீர் உறவினர்களுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காத விஷயம் யாருக்கும் எந்தவித மதுபானமும் குடிக்கத் தரவில்லை என்பதுதான்.

குலதெய்வம் அம்பாவுக்குக்கூட மதுதான் பிரஸாதம். ஸ்காட்சிலிருந்து நாட்டுச் சரக்குவரை எதைத் திறந்தாலும் சுவரில் தெளித்து "ஜெய் அம்பே" சொல்லிவிட்டுத்தான் குடிப்பது. பிறந்த குழந்தையின் வாயில் முதலில் மதுவில் முக்கிய விரலைத்தான் இடுவது. அப்படி இருக்கும் போது இப்படிக் கல்யாணம் செய்துகொண்டால்? சரி. ரம், ஜின், விஸ்கி வேண்டாம். அஜ்மீரிலேயே தயாராகும் ஆரஞ்சு வண்ணக் கேஸர் கஸ்தூரி இல்லையா? மண்டையைப் போய் ஒரு உதை உதைக்குமே? சே சே. இது என்ன இப்படிக் கல்யாணம் செய்து கொண்டாய் என்றார்கள் அவனிடம். வீரனுக்கு லட்சணமான குதிரையும் மதுவும் இல்லாமல் ஒரு கல்யாணமா? ராட்சஸப் பூக்கள் வரைந்த கடும் செம்மண், பச்சை, ஆரஞ்சு, சிவப்பு வண்ணப் பாவாடைகள் இடுப்பிலிருந்து உப்பிப் பருத்த பிருஷ்டங்களின்மேல் மடங்கி மடங்கிச் சரிய, வெள்ளி நிறச் சரிகைகள் இட்ட முக்காடுகளைத் தூக்கி வயதான பெண்கள் அவனிடம் கேட்டார்கள்: குடிக்க ஒன்றுமில்லையா?

ஜீஜி நடமாடிக்கொண்டிருந்தபோது டாணென்று மாலை ஏழு மணிக்கு அப்பளம் சுட ஆரம்பித்துவிடுவாள். பப்பாஜி வெளியறை முக்காலியில் மற்ற விஷயங்களை வைத்துவிட்டுத் தயாராக இருப்பார். ஜீஜி கார அப்பளம் தட்டில் அடுக்கி வைத்து வருவாள். கார அப்பளம் தீர்ந்ததும் நாக்கில் சுள்ளென்று உறைக்கும் பிகானீர் ஸேவ். அது அலுத்தால் சோளப் பக்கோடா. அல்லது மிளகாயும் கடலை மாவும் தடவிப் பொரித்த நிலக்கடலை. எதிரெதிரே அமர்ந்து 'ஜெய் அம்பே' என்று விட்டு ஆரம்பிப்பார்கள். பிள்ளைகளும் பெண்களும் இருந்தால் குடும்பத்தோடு சிரித்துக்கொண்டு. ஜீஜி நாட்டுப் பாடல்கள் பாடுவாள் - 'சந்தைக்குப் போனால் எனக்கொரு குஞ்சலம் வாங்கி வா.... நல்ல வண்ணத் தாவணி வாங்கிவா....' 'இன்னமுமா ஆசை?' என்று பப்பாஜி சிரிப்பார்.

சமையலறை மூலையில் ஒரு கும்மட்டி அடுப்பில் சாய் செய்யத் தண்ணீர் கொதித்தவாறே இருக்கும். சாப்பிடும் சமயத்தில் வீட்டு வாசலில் யாராவது தெரிந்தவர் வந்துவிட்டால் முதலில் 'ஜில்'லென்று தண்ணீர்.

"சாப்பிடுங்களேன். சாச்சாவுக்கு ஒரு தட்டு கொடு" என்று ஆரம்பிப்பார் பப்பாஜி.

"இல்லை. சும்மா இப்படி வந்தேன்."

"சரி, சாய் குடிக்க என்ன வந்தது?"

"வேண்டாமே."

"காஃபி?"

"தண்ணி போதும்."

"அதெப்படி வெறும் தண்ணி. கொஞ்சம் ஷர்பத் போட்டுக் குடியுங்கள்."

'சரி."

ஜீஜி எழுந்திருப்பாள்.

"அப்படியே ஒரு தட்டில் ரெண்டு கபாப் கொடு."

ஜீஜி சமையலறையை எட்டும்முன் காலையில் செய்த வெந்தயக் கீரை பரோட்டா பப்பாஜிக்கு நினைவு வரும். "ஸுனியேஜி" என்று மனைவியை விளிப்பார். "அந்த மேதி பரோட்டாவும் ரெண்டு சூடாக்கி எண்ணெய் தடவிக் கொண்டுவா. சாச்சா ருசி பார்க்கட்டும்" என்பார்.

வந்தவர் தோல்வியை ஒப்புக்கொள்வார்.

"நான் சாப்பிட்டே விடுகிறேன்."

ஜீஜி எப்படியும் சமையலறைக்குப் போவாள். இரண்டு முட்டைகள் மிளகும் உப்பும் தூவிப் பொரிக்க. ஒருவேளை, சாப்பாட்டு அளவில் ஏதாவது குறைந்துவிட்டால்?

ஆனால் சமையலறை என்ற பௌதிக விவரம் அவர்களைப் பாதிக்கவில்லை. அப்படிப்பட்ட ஒன்று இல்லாததுபோல் இருந்தார்கள். அவர்கள் கூட்டுக் குடும்ப வீடுகளில் பரந்த கல்தரை முற்றம், கூடம் இவற்றைத் தாண்டிய இருள் மூலை சமையலறை. பூஜ்ய வாட் விளக்கு எரியும் அங்கு. முக்காடு அணிந்து, அழுத்தமான வண்ணப் பாவாடைகள் இருளை ஒட்டியே இருக்க, பெண்கள் நிழல்களாய்த் தெரிவார்கள் அந்த அறையில். அறைந்து அறைந்து சப்பாத்தி மாவு பிசைந்து கொண்டோ, அடுப்படியில் கும்மென்று மணக்கும் மசாலா பருப்பைக் கிளறியவாறோ. சமையலறை ஓர் இடம் இல்லை. ஒரு கோட்பாடு மட்டுமே. அத்தனை ருசியான, நாக்கை அடிமைப்படுத்தும் சாப்பாடும் மாயக் கம்பளத்தில் வந்ததுபோல் அலட்டிக்கொள்ளாமல் இருந்தார்கள்.

மீனாட்சிதான் ஒரு முறை சாப்பிடும் நேரத்தில் அந்த விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள். பப்பாஜி அப்போது கீழே இருந்த கார் 'ஷெட்'டின் மேல் ஒரு அறை கட்டிக்கொண்டிருந்தார்.

"பப்பாஜி, சமையலறைக்கு வெளியே உள்ள தாழ்வாரத்தைப் பெரிது பண்ணிவிடுங்களேன். அதை நீங்கள் அகலமாக்கினால் நாற்காலி போட்டு உட்காரலாம். இடது பக்கம் ஒரு பாத்ரூம் கட்டினால் அதில்

பெரிய தொட்டி போடலாம். பாத்திரம் தேய்க்க. பாத்ரூமுக்கு வெளியே துணி உலர்த்த அலுமினியக் கம்பி போட்டு விடலாம்."

பப்பாஜி இந்த அபிப்ராயத்தால் தாக்கப்பட்டவர்போல் பார்த்தார்.

ஜீஜியும் வியப்படைந்தவள்போல் அவரைப் பார்த்தாள். மருமகள்கள் இதுவரை இப்படிப்பட்ட அபிப்ராயங்களை முன்வைத்ததில்லை. ராதா பாபிஜி, தட்டை வெறித்துப் பார்த்தாள். குஸுமா தலை முக்காட்டைச் சரி செய்துகொண்டாள், அவள் படபடப்பை மறைக்க, பப்பாஜி கிஷனை நோக்கினார். அவன் நிதானமாகச் சாப்பிட்டவாறிருந்தான்.

பப்பாஜி தொண்டையைச் செருமிக்கொண்டு, "எதற்காக?" என்றார்.

"இந்த சமையலறைத் தொட்டி ரொம்பச் சின்னது. தண்ணி வேறு சரியாகப் போவதில்லை. வேலைக்காரி அங்கேயே பாத்திரம் தேய்த்தால் சமையலறை முழுவதும் தண்ணீர். நிற்க முடியவில்லை. ஜன்னலுக்கு வெளியில் துணி தொங்கினால் மலையை மறைக்கிறது பப்பாஜி."

கிஷனைப் பார்த்தார் மீண்டும். அந்தக் கட்டடக் கலை நிபுணன் தன் மனைவியோடு உடன்பட்டான்.

"அவள் சொல்வது சரிதான் பப்பாஜி. அப்படியே செய்து விடலாம்."

"நீ எங்கே சமையலறைப் பக்கம் போனாய்?"

"அவள் மைசூர் சமையல் செய்யும்போது இவன்தான் மிளகாய், வெங்காயம் அரிந்தான்" என்றாள் ஜீஜி.

"பேசாமல் உனக்கே தங்க வளையல் போடலாம் போலிருக்கிறதே."

"தங்கவளையல் எதற்கு பப்பாஜி. மோதிரம் போடுங்கள்."

பப்பாஜி சிரித்தார்.

அறை கட்டி முடித்தாகிவிட்டது. சமையலறை நிலவரம் மாற்றப்பட வில்லை. துணி உலர்த்த இன்னும் இரண்டு நைலான் கயிறுகள் கட்டப்பட்டன, ஜன்னல் எதிரே. பப்பாஜியின் மௌனச் சவால்: பெண்ணே, மைசூர்ப் பெண்ணே, இங்கே நிரந்தரமாக வாழாத உனக்கு மலை எதற்கு? அதன் பச்சை எதற்கு? ராஜஸ்தானத்து சமையல் பண்பாட்டுக்கும் ஜன்னலுக்கும், பாத்திரம் அலம்பும் தொட்டிக்கும், என்ன சம்பந்தம் பெண்ணே. கறுத்த நிறமுடைய, முக்காடு அணிய மறுக்கும், என் பையனை வசியப்படுத்திய, நிறையப் பேசும் பெண்ணே...

பின்னிரவு மூன்று மணி வாக்கில் மயில்கள் அகவ ஆரம்பித்தன. ஒன்றன்பின் ஒன்றாக. கர்ண கடூரமாக. குரல் இழந்த சாதகம். ஐந்தரை மணிக்கு அவளும் கிஷனும் மொட்டை மாடி போனபோது எதிரே மரத்தில் சிவன் விரித்த ஜடையாய் மயில் வால் தொங்கியது. கரு நீலமும், மென் பச்சையும், தீர்க்கப் பச்சையும் பளீரிடத் திரும்பியது. எதிர்பாராதபோது பறந்து மொட்டைமாடிச் சுவரில் அமர்ந்து வாலை நீட்டிப்போட்டது. பிறகு, இரண்டு மொட்டை வால் மயில்கள். திரும்புவதற்குள் இன்னும் இரண்டு, சாட்டை வால்களுடன். வயிற்றினுள் ஒரு மென் தண்மை இதமாய்ப் பரவியது. காலைக் கடன்களை முடித்ததும் வயிற்றுக் கனம் அகலும் இதம். அந்தக் கருநீலப் பச்சை ஐஸ் துகள் சிலீருடன் எல்லா அடங்காச் சூட்டையும் தணித்தது. கிஷனின் உதடுகளில் ஒரு முறை நாக்கால் தடவி மென்மையாக முத்தமிட்டாள். பனித்துளி ஒட்டிய, அடித்தளச் சூட்டை இனம் காட்டிய முத்தம்.

மொட்டை மாடிக் கதவு கிர்ரிட்டது. படி ஜீஜி (பெரிய ஜீஜி) எழுந்தாயிற்று. கதவருகே இருந்த பெரிய ட்ரம்மிலிருந்து கரி எடுக்க வந்திருப்பாள். கும்மட்டி அடுப்புப் பற்றவைக்க. படி ஜீஜி பப்பாஜியின் சிறிய தாயார். பப்பாஜிக்கு பதினேழு வயதாகும்போது அவருடைய தந்தை இன்னொரு திருமணம் செய்து கொண்டார் ஒரு பதினேழு வயதுப் பெண்ணை. ஐந்து பெண்கள் பெற்றாள். பப்பாஜிதான் ஆதரவு. பெயர்தான் படி ஜீஜி. அவளுக்கும் ஜீஜிக்கும் இடையே இரண்டே வயதுதான் வித்தியாசம். பொக்கை வாய். பொய்ப் பல் வேண்டாம் என்று விட்டாள். மாமிஸம் சாப்பிடுவதை விட்ட பின்னர் எதற்குப் பல் என்று கூறிவிட்டாள்.

காலில் அணிந்த கனத்த வெள்ளித் தண்டை படியில் இடிக்க, போய்விட்டாள் படி ஜீஜி.

“சாய் கொண்டு வரட்டுமா மீனா?”

“ம்.”

கிஷன் போனதும் மாடி இரும்புத் தொட்டிக் குழாயைத் திறந்து முகம் கழுவி, பல் தேய்த்தாள்.

தொப்பியால் மூடிய கெட்டிலில் சாய் கொண்டுவந்தான் கிஷன். கீழே வைத்து இரு கோப்பைகளில் சாய் ஊற்றியபோது இஞ்சி, துளசி மணம் பரவியது. ஒரு காலை நட்சத்திரம் மினுக்கியது. மயில் நீலப் பச்சையில் தெறித்தது. சாய் தொண்டையில் சூடாய் இறங்கியது.

கீழே போனபோது சமையலறை மூலையில் பெரிய பித்தளை டம்ளரில் கிஷன் ஊற்றித் தந்திருந்த சாயை முக்காட்டுத் தாவணித் துணியால் பிடித்தவாறு அமர்ந்து, ஊதி ஊதிக் குடித்துக் கொண்டிருந்தாள் படி ஜீஜி. ராதா பாபிஜி இன்னொரு பெரிய கெட்டிலில் சாய்த் தூளைப் போட்டுச் சுடுதண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

"நாஸ்தாவுக்கு மாவு பிசையட்டுமா?" என்றாள் படி ஜீஜி.

"பப்பாஜி உலவப் போயிருக்கிறார். சமோசாவும் ஜிலேபியும் வாங்கி வருவார். ரொட்டி வாட்டினால் போதும், அதை நான் வெளியில் டோஸ்ட் செய்துகொள்கிறேன். இன்றைக்கு என்ன நம் சமையலா, இல்லை மைசூர் சமையலா?"

"அவளும் கிஷனுமாய் நேற்று காய்கறியும் தேங்காயும் வாங்கி வந்தார்கள்."

"என்ன தேங்காய் சமையல் சப்புச்சப்பென்று? நீங்கள் ஒன்று செய்யுங்கள், படி ஜீஜி. மஞ்சளும் இஞ்சியும் அரைத்துவிடுங்கள். மட்டன் புலாவ் செய்துவிடலாம். சுரைக்காய் துருவிவைத்து விடுங்கள். கோஃப்தா செய்துவிடலாம். சேப்பங்கிழங்கைத் தொலி சீவிவிடுங்கள். பெரிய ஏலம், மிளகு, லவங்கப்பட்டை, தனியா, லவங்கம் இடித்து விடுங்கள். நல்லா நைஸாக. தனியாவை வேறாக எடுத்து இடியுங்கள் கொஞ்சம். ராத்திரி ஆலு-கோபிக்குப் போடலாம்."

சமையலறைக்கு வெளியே வந்தாள் சாய் கெட்டிலும் கோப்பைகளும் வைத்த தட்டை ஏந்தியவாறு.

"என்ன மீனா. இன்றைக்கு என்ன சமைக்கப் போகிறாய்?"

"எதுவும் இல்லை. நாங்கள் கணேஷ் மந்திர் மலையில் ஏறப்போகிறோம்."

"சரிதான்."

மீனாட்சி சமையலறையில் நுழைந்தாள் இரண்டாம் ஈடு சாய் தயாரிக்க.

படி ஜீஜி பொக்கை வாய் திறந்து சிரித்தாள். தன் பித்தளை டம்ளரை நீட்டினாள்.

"எனக்கும் சாய்."

"இஞ்சி போடவா படி ஜீஜி?"

"ம். போடு. எனக்கு, நீ போடும் சாய் பிடிக்கும்."

“சமோசாவும் ஜிலேபியும் வாங்கி வந்திருக்கிறேன். கொஞ்சம் ஜிலேபியைப் பாலில் போடுங்கள்” என்று ஒரு பொது உத்தரவு வெளியிலிருந்து வந்தது. மீனாட்சி ஜிலேபிப் பொட்டலத்தைச் சமையலறைக்குக் கொண்டுவந்து பிரித்தாள்.

“உஷ்..... இதோ.... இதோ....”

மீனாட்சி திரும்பினாள். “எனக்கு நாலு குடு” என்றாள் படி ஜீஜி.

அது ஒரு உணவுப் போர். நிதர்சனமாகப் பங்குபெறுவோர் - ஜீஜி, படி ஜீஜி. தாத்தா உயிருடன் இருந்தபோது படி ஜீஜி கொடுங்கோல் ஆட்சி செய்தாள். மலை மலையாய்ச் சப்பாத்தி மாவு பிசைந்தாள் ஜீஜி. கூடை கூடையாய் வெங்காயம் அரிந்து கிலோ கணக்கில் மாமிசம் சமைத்தாள். மாலை வேளைகளில் படி ஜீஜி கேஸர் கஸ்தூரி குடித்தபோது அப்பளம் சுட்டாள். பக்கோடா செய்தாள். குடல் பொரித்தாள். தாத்தா இறந்தார். பத்து நாட்களில் சமையலறையில் ஜீஜிக்குப் பதவிப் பிரமாணம் நடந்தது. குங்குமம், வெற்றிலை, மது, மாமிசம் இவற்றுடன் படி ஜீஜியின் மற்ற சாப்பாடும் பறிக்கப்பட்டது. நிதம் நிதம் மாமிசம் சமைக்கப்பட்டது. மரக்கறி உணவு உண்பவர்களுக்கு (படி ஜீஜி மாத்திரம்தான்) ஜனநாயக உணர்வுடன் உருளைக்கிழங்கு வழங்கப்பட்டது. படி ஜீஜி இரவெல்லாம் ஏப்பம் விட்டுக் கொண்டும், உடம்பையே கிழிப்பதுபோல் குசுவிட்டுக் கொண்டும், கக்கூஸில் ‘உம் ஆ’ என்று முனகியவாறும் தன் போர்க்களத் தோல்வியைக் கொண்டாடிக்கொண்டிருந்தாள். மீண்டும் தாக்கப்படும்முன் அவள் இரண்டாம் போர்முனை ஒன்றைத் துவக்கினாள். ஆறு மாதத்திற்கு ஒரு முறை படி ஜீஜிமேல் அம்பா வர ஆரம்பித்தாள்.

ஜீஜியும் பப்பாஜியும் அவரவர் பானங்கள், சுட்ட அப்பளங்கள் இவற்றுடன் அமரும் மாலை வேளைகளை அம்பா தேர்ந்தெடுத்தாள். முதலில் அறையிலிருந்து ‘ஹே’ என்று குரல் கொடுத்தாள் அடி வயிற்றிலிருந்து. பதறி ஓடி வந்ததும் “என்னை மறந்தாயா?” என்று சீறினாள். தாழ்ந்து வணங்கி “உத்தரவிடுங்கள் அம்பே” என்று ஜீஜி சொன்னதும், “எனக்கான பானத்தைத் தா, கேஸர் கஸ்தூரி வேண்டும். ஒரு கிலோ பர்பி வேண்டும். வறுத்த இறைச்சி வேண்டும்.... அ... ஆ...” என்று கட்டளையிட்டாள். எல்லாம் தரப்பட்டதும் அம்பா “போங்கள் எல்லோரும்” என்று உத்தரவிடுவாள். படி ஜீஜியின் அறையில் ஆரவாரம் கேட்கும் சற்று நாழிகை.

மறுநாள் காலை மதுவால் கனத்த கண் இமைகளைக் கஷ்டப் பட்டுத் திறந்து சமையலறையில் ஒரு பொக்கைவாய்ப் புன்னகையுடன் காட்சியளிப்பாள் படி ஜீஜி. “அம்பா கஷ்டப்படுத்திவிட்டாள்” என்பாள்.

படி ஜீஜியை வம்புக்கு இழுக்கலாம். அம்பாவைக் கேள்வி கேட்கும் தைரியம் ஜீஜிக்கு வரவில்லை.

"ஜிலேபி தா" என்றாள் படி ஜீஜி.

நாலு ஜிலேபிகளைத் தந்தாள் மீனாட்சி. வீட்டில் எல்லோருக்குமாக ஜிலேபி பிரிக்கப்படும்போது படி ஜீஜிக்கு அவள் பங்கு கிடைக்கும். இது ஆசையினால். ஆரம்பத்தில் இவற்றை அவள் எங்கேதான் வைக்கிறாள் என்று நினைத்தாள் மீனாட்சி. பிறகுதான் தெரிந்தது பல மடிப்புகள் தைத்த நாலு கஜப் பாவாடையினுள் அவள் இரு ஜேபிகள் தைத்திருந்தாள். அவற்றை மீனாட்சிக்குக் காட்டியிருக்கிறாள்.

தொப்பியால் சாய் கெட்டிலை மூடினாள்.

"மசாலா சாமான்களைத் தந்துவிட்டுப் போயேன்" என்றாள் படி ஜீஜி." நெய்யும் வேணும். மட்டன் புலாவ் செய்ய."

இது சமீபத்தில் எழுந்த ஒரு புதுக்களம். ஜீஜியின் ஆஸ்த்மாவும், ரத்த அழுத்தமும் அவள் நடமாட்டத்தைக் குறைத்துவிட்டன. அவள் படுக்கை அருகே உள்ள மர பீரோவில் லவங்கம், குங்குமப்பூ, லவங்கப்பட்டை, மிளகு, திராட்சை, பெரிய ஏலம், ஏலக்காய், சர்க்கரை, நெய், முந்திரி எல்லாம் இருக்கும். அவளைத் தாண்டாமல் பீரோவை எட்ட முடியாது. அதை அடையும்முன் ஒரு கேள்விப் பட்டியல் நீட்டப்படும். எதற்காக நெய்? நேற்றுத் தந்தது என்ன ஆயிற்று? சப்பாத்திக்குத் தடவினதில் மீதி அரைக் கிண்ணம் இருந்தால் இப்போதைக்குக் கால் கிண்ணம் போதுமே? மசாலா சாமான்களைக் காட்டிவிட்டு எடுத்துப்போ. காஷ்மீரத்திலிருந்து வரவழைத்த குங்குமப்பூ. அதைப் புலவில் கொட்ட வேண்டாம். மரக்கறி சாப்பிடுபவர்களுக்கு என்ன காய்கறி? நேற்று சமைத்தது ஏதும் மீறவில்லையா அவர்களுக்கு? சாப்பிட்டுச் சாப்பிட்டுக் கக்கூஸ் போனால் யாருக்கு என்ன பயன்?

ஒளியற்ற, ஜன்னல் குறுகிய அந்தச் சமையலறையிலிருந்து, கடலில் வசிக்கும் ஆக்டபஸ் ஜந்துவின் எண்கால்போல் ஆதிக்கக் கரங்கள் நீண்டு வளைத்துப்போட்டன. கால்கள் இறுக இறுகக் கட்டுண்டு கிடந்தனர் ஆனந்தமாக. அவை இடுப்பை இறுக்கினால் ஒட்டியாணம் என்றும், காலைச் சுற்றினால் கொலுசு என்றும், தலையில் பட்டால் கிரீடம் என்றும் நினைத்துக் கொண்டனர் பெண்கள். நாலா புறமும் கம்பிகள் எழும்பிய உலகில் புகுந்துகொண்டு அதை ராஜ்யம் என்று நினைத்து அரசோச்சினர். இன்று மட்டன் புலவு, நாளை பூரி மசாலா என்று பூமியைத் திருப்பிப் போடும் முடிவுகளை எடுத்தனர். பேடி அதிகாரம்.

ஜன்னலைத் திறந்து மலையையும், பச்சையையும், ஆகாசத்தையும், நீலத்தையும் உள்ளே இழுத்ததும் பலம் உறிஞ்சப்பட்டாற்போல் இளைத்தனர். வீணா மோஸியைப்போல். கிஷனின் சித்தி. ஐம்பது வயது. பதினைந்து வயதில் விதவை. ஒரு கிராமத்தில் டீச்சராக இருந்தாள். பள்ளிச் சொந்தக்காரர் வீட்டுத் தோட்டத்து மூலையில் ஒரு அறையும் சமையலறையும். அசோகமரம் வாசலில். சமையலறை பின்னால் சம்பக் மரம்.. வெள்ளைப் பூக்களும் மஞ்சள் தண்டுமாய், ஜன்னலை ஒட்டிய பூங்கொடிகள் உள்ளே நுழைந்துவிடும் சுதந்திரமாய். பசித்தால் சமையல். மாலையில் பக்கத்திலுள்ள குழந்தைகள் வந்துவிடும். டீச்சரைப் பார்க்க. இல்லாவிட்டால் அசோகமரத்துக் குயில் பாட்டு. ஆனால் வீணா மோஸி "நான் அதிகாரமற்றுப் போனேன்" என்பாள். 'டீச்சர், டீச்சர்' என்று சுற்றிக்கொள்ளும் குழந்தைகள். பள்ளியின் ஆரம்பக் கல்வியின் பூரணப் பொறுப்பு. நினைத்தால் வீசு நடை பஜார் வரை. நார்க்கட்டிலை அசோக மரத்தின் கீழே இழுத்துப் போட்டு கக்ஹூ கக்ஹூ என்று தாகம் தீரும்வரை குயில் தோழமை. காலையில் பின்கதவைத் திறந்ததும் தொடும் தூரத்தில் வெள்ளை மலர்கள். இருந்தும், வீணா மோஸிக்கு மூச்சு முட்டியது. வெட்ட வெளியில் எம்பியதும் மண்ணுக்காக வீறிட்டாள், யோனியும், கருப்பையும், மார்க்காம்புகளும் கல்லாகின. கனம், இழுப்பு, கீழ் நோக்கி விழுந்து விழுந்து, விழுந்து விழுந்து, மண்ணில் சரண். பாதங்களைப் புதைத்து அசைவற்று நிற்க.

ஏரியின் மூலையிலிருந்து வெள்ளை இறக்கைகள் நளினமாய்த் தாழ்ந்தும், உயர்ந்தும், சாய்ந்தும் நகர ஆரம்பித்தன. கண்ணில் பட்ட முதல் கணம் ஒரு சிறு வியப்பு மீனாட்சியினுள் சிதறியது. ஏரியின் முழு வீச்சிலும் சுழன்று நீரில் மிதக்கும்போது அந்தச் சிவப்பு அலகுகள் தூரத்தில் ஒளிர்ந்தன. பிறகு மீண்டும் எழும்பி வெள்ளை இறக்கைகளைச் சரேலெனப் பிரித்து இடமும் வலமும் சாய்ந்தும் எழுந்தும்.... வெகு அருகே, முகத்தின் அருகே இறக்கை வீச்சு, பவழ அலகு தட்டையாய் நீண்டு. ரஷ்யப் பறவைகள். ஆனா சாகர் ஏரியில் சில மாதங்கள் வரும் திடீர் விருந்தினராய்.

அதற்கு முந்தைய இரவுதான் ஏரிப் பயணம் தீர்மானிக்கப்பட்டது. எல்லா உறவினர்களுடனும் ஏரியைப் பார்க்கும் திட்டம். இருபது பேர்களுக்கு நூறு பூரி. உருளைக்கிழங்கு ஸப்ஜி, தக்காளிச் சட்னி, ஸாண்ட்விச் நூறு, நொறுக்குத் தீனி, குழந்தைகளுக்கு நிரப்பப்பட்ட பால் புட்டிகள், ஃப்ளாஸ்க்கில் வெந்நீர். மாலையில் சூடாகப் பக்கோடா சாப்பிட ஒரு ஸ்டவ், ஒரு பாட்டிலில் எண்ணெய், கடலை மாவு, வெங்காயம், மிளகாய்ப் பொடி, உப்பு, பெரிய மிளகாய் - பஜ்ஜி

போட - இத்யாதி. விடிகாலை நான்கு மணிக்குச் சமையலறை விளக்கு எரிந்தது. ஒரு பெரிய தாம்பாளத்தில் கோதுமை மாவைப் போட்டுப் பிசைய ஆரம்பத்தாள் ஜீஜி. குஸுமா வாணலியில் எண்ணெயை விட்டு, பிசைந்த மாவை இட்டுப் பொரிக்கத் துவங்கினாள். ராதா பாபிஜி ரொட்டியில் வெண்ணெயும் சட்னியும் தடவ ஆரம்பித்தாள். ரொட்டிப் பொட்டலங்கள் அவளைச் சுற்றி, படி ஜீஜி நொறுக்குத் தீனிகளைப் ப்ளாஸ்டிக் பொட்டலங்களில் போட்டு ரப்பர் வளையத்தால் இறுக்கினாள். ஏரிப் பயணத்தின் இந்த அம்சத்தைப் பற்றி மீனா யோசித்திருக்கவில்லை.

"மீனா, எழுந்துவிட்டாயா?" என்றாள் ராதா பாபிஜி. கூந்தல் வியர்வையில் ஒட்டிக்கொண்டிருந்தது. "சாய் போடுகிறாயா?"

மீனா இவர்கள் எல்லோருக்கும் சாய் போட ஆரம்பித்தாள். துளசி இலையைப் போட்டாள் வெந்நீரில். பல் தேய்த்துவிட்டு வந்த கிஷன் கோப்பைகளைத் தட்டில் வைத்தாள்.

ராதா பாபிஜி தனக்குத் தானே பேசிக்கொண்டிருந்தாள். "குழந்தைகளைக் குளிப்பாட்ட வேண்டும். ப்ளாஸ்டிக் பையில் ரெண்டு, மூணு ஜட்டி அதிகப்படியாய் எடுத்துக்கொள்ள வேண்டும். ப்ரியா சில சமயம் சொல்லாமலே போய்விடுவாள். புல்லில் விரிக்க ஐந்தாறு கம்பளங்களாவது சுருட்டி வைக்கவேண்டும். எத்தனை கைக் குழந்தைகள் மொத்தம்? நாலு. பால்டப்பா, க்ளாக்ஸோ மீனாவுக்கு. அர்ச்சனா குழந்தைக்கு லாக்டோஜன், மறக்காமல் பிஸ்கட் பொட்டலம். இதுக்கு உப்புதான் பிடிக்கும். இல்லாவிட்டால் வழியில் வாங்க வேண்டும். அழுது தொலைக்கும் இல்லாவிட்டால். இவருக்குப் பிடிக்காது. சர்க்கரை, ஸ்பூன் மறக்காமல். பரிமாறக் கரண்டி, தட்டுகள், குஸுமா, அந்த சோப் பாட்டிலை எடுத்துக்கொள், தட்டுக்கழுவ, அங்கே குழாய் உண்டு. படி ஜீஜி, வெங்காயம் ஒரு பத்து பதினைந்து அரிந்துவிடுங்கள். ப்ளாஸ்டிக் பொட்டலத்தில் போட்டுக்கொண்டு போனால் நிமிஷமாய் பக்கோடா. மீனா, ப்ளீஸ், குழந்தைகளைக் குளிப்பாட்டுகிறாயா?"

"பாபிஜி, ஆறு மணிதான் ஆகிறது. அமும் எழுப்பினால். கோபால் பாய் சாஹப் குளிப்பாட்டட்டுமே அப்புறமாய்."

"ஆமாம். அவர் குளிப்பாட்டுவார், நினைத்துக்கொண்டு இரு."

மீனா சாய் கோப்பையை நீட்டினாள். பித்தளை டம்ளரில் படி ஜீஜிக்கு விட்டுத் தந்தாள். ராதா பாபிஜி சலிப்புடன் பேசியது அவளுக்குப் புரிந்தது. ராதா பாபிஜி கணக்கில் புலி. அதில் மேல்படிப்பு

மேற்கொள்ள வீட்டில் அனுமதிக்காததால் ஒரு வங்கியில் பெரிய பதவியில் இருந்தாள். வங்கியில் அவளுக்கு சகுந்தலாதேவி என்றே பெயர். சில மாதங்களுக்குமுன் அவளும் கோபால்பாய் ஸாஹபும் கிஷனையும், மீனாட்சியையும் ஜோத்பூருக்கு வந்து சில நாட்கள் தங்கும்படி அழைத்திருந்தனர். அங்குள்ள ஆஸ்பத்திரியில் கோபால்பாய் சாஹப் டாக்டர். நல்ல வெய்யில் காலம். மத்தியானச் சாப்பாடு இன்னும் ஆகவில்லை.

"இந்த ஊர் வெய்யில் எரித்துவிடும். ஒன்றும் செய்ய முடியாது. ராதா பாங்க் வேலைக்காக இரண்டு நாட்கள் போனாள். தவித்து விட்டேன். சமையலறையில் நிற்க முடியவில்லை. இங்கே வேலைக்கு ஆளும் கிடைக்கமாட்டார்கள். ஒரு டீ போடக்கூட சமையலறையில் நிற்க முடியவில்லை என்றால் பார்த்துக்கொள் கிஷன்."

கிஷன் மெள்ளச் சொன்னான், "பாங்கில் பெரிய வேலை பார்க்கும் ராதா பாபிஜி இப்போது அதே சமையலறையில்தானே சமைத்துக் கொண்டிருக்கிறாள்?"

"ஆமாம் அதற்கென்ன? பெண்களுக்கு அதெல்லாம் சகஜம்தானே?"

கோபால்பாய் சாஹப் விடுமுறைக்கு வந்த வேளையில் சீக்கிரம் எழுந்து குழந்தைகளைக் குளிப்பாட்டுவார் என்று எதிர்பார்க்க முடியாதுதான்.

"ராதா பாபிஜி, எந்தப் புடவை கட்டிக்கொள்ளப்போகிறீர்கள்?" என்றாள் குஸுமா.

"அந்தச் சிவப்பு ஸில்க்தான். ராத்திரியே இஸ்திரி போட்டாகி விட்டது. அவருடையது அப்புறம் குழந்தைகளுடைய சட்டைகளுக்கும் போட்டுவிட்டேன்."

"நான் அந்தக் கறுப்புப் பொட்டுப் போட்ட வெள்ளைப் புடவை கட்டலாம் என்று நினைத்தேன். ரவிக்கை இஸ்திரி போடவில்லை. மீனா, உன் கறுப்பு ரவிக்கை தருகிறாயா?"

"எடுத்துக்கொள்ளேன். ஆனால் அது ஸ்லீவ்லெஸ்."

"அடடா! அப்படியானால் என் ரவிக்கையை இஸ்திரி போடுகிறாயா மீனா? நான் ஸ்லீவ்லெஸ் போடமுடியாது. என் கை சுத்தமாயில்லை."

"தலைப்பால் போர்த்திக்கொண்டு விடு பேசாமல். நீளத் தலைப்பு விட்டு. உன் கைக்கு அடியில் யார் வந்து பார்க்கப்போகிறார்கள்?"

"இதோ பார் மீனா. தமாஷ் பண்ணாதே. இஸ்திரி போடுகிறாயா?"

"சரி. சரி."

மெதுவாகச் சுவரைப் பிடித்து நடந்து வந்து ஜீஜி ஊறுகாய் பரணியைத் திறந்தாள்.

"என்ன செய்கிறீர்கள் ஜீஜி, போய்ப் படுங்கள் பேசாமல்" என்று அதட்டினாள் ராதா பாபிஜி.

"ஊறுகாய் பிடிக்குமே எல்லோருக்கும். எடுத்து வைக்கிறேன்."

"அங்கே சமையலறையில் என்ன சத்தம், தூங்கவிடாமல்?" என்று குரல் கேட்டது.

நச்சென்று மௌனம்.

ரகசியக் குரலில், "மீனா, சாய் அடுப்பில் உருளைக்கிழங்கை வேகப்போடுகிறாயா?"

"ராதா பாபிஜி, தாளித்து ப்ரஷர் குக்கரில் போடலாமே? வேகவிட்டு உரிக்கவேண்டாம்" குஸுமா கிசுகிசுத்தாள்.

"நீ செய் அதை. மீதி பூரி படி ஜீஜி பொரிக்கட்டும்."

எட்டு மணி அளவில் கழுத்து, அக்குள் எல்லாம் வியர்வை மழை. ரவிக்கை ஒட்டிக்கொண்டது. எண்ணெய்ப் புகை கண்ணில். முழுத்தூக்கம் இல்லாமல் கனம் ஏறிய இமைகள். பப்பாஜி சமையலறையில் எட்டிப் பார்த்தார்.

"ஏரிக்குப் போகலாம் என்றதுமே உற்சாகம் பொத்துக்கொண்டு விடுமே உங்களுக்கு?" என்றார்.

அஹ்ஹா என்று சிரித்தார்.

சிறு சிறு பறவைகள் கக்ளக் என்றபடி நீரில் மிதந்தன கறுப்பும் மஞ்சளுமாய். திடீரென்று வெள்ளை இறக்கை வீச்சு. பவழ நிழலுடன்.

கம்பளங்களில் சீட்டுக் குலுக்கல். சிலவற்றில் பெண்கள். "மம்மீஜி, டட்டி" என்று பின்பாகத்தைப் பிடித்துக்கொண்டு குழந்தை சொல்லும்வரை. பழைய பேப்பரைக் கையில் ஏந்தியபின், கக்கூஸ் பயணம். குழந்தை தலையில் ஒரு குட்டு. வலிக்க வலிக்க. அம்மாக்கள் ஒழித்த இடத்தில் கன்னிப் பெண்கள். இடையிடையே சீட்டை வைத்துவிட்டு எழுந்து தண்ணீர் உபசாரம்.

சாப்பிட்ட தட்டுகளை குஸுமாவும் ராதா பாபிஜியும் கழுவியாயிற்று.

ஸ்டவ் ஏற்றல். பக்கோடா போட ஆரம்பித்தனர்.

“அரே என்ன வர்சனை? எனக்கு இரண்டு வெறும் மிளகாயுடன்” இடையில் குழந்தைகளுடன் பேச்சு.

“ராஜூ, நீ என்ன செய்வாய் பெரியவன் ஆனதும்?”

“பைலட். ஸூய்ங்கென்று.”

“நீ, ப்ரியா?”

“நானு... நானு.... நானு.... வந்து... தப்பாத்தி தெய்வேன் எங்க வீட்டுலே.”

“என்ன சமத்தாய்ப் பேசுகிறது?” ஜீஜி சிரித்தாள்.

“அஜ்மீரைச் சுற்றியுள்ள அத்தனை மலைகளிலும் நான் ஏறியிருக்கிறேன்” என்றார் பப்பாஜி.

“ஜீஜி, நீங்கள்?” என்றாள் மீனாட்சி.

“அவர் மலை ஏறினபோதெல்லாம் எனக்கு வயிற்றில் குழந்தை” என்றாள் ஜீஜி. சிரித்தாள் வாய்விட்டு. எல்லோரும் சிரித்தனர். ஜீஜி பதினாலு குழந்தைகள் பெற்றாள்.

எல்லாவற்றையும் வாரிக்கொண்டு, இன்னொரு முறை ‘டட்டி’ போகலாமா என்று யோசித்த குழந்தைகளின் மனதைத் திசை திருப்பிவிட்டு கிளம்பினர்.

குஸூமா பின்தங்கினாள். “மீனா, மெள்ள நடவேன். இன்னும் நான் பறவைகளைச் சரியாகப் பார்க்கவில்லை.”

“ஸதீஷைக் கூப்பிடவா?”

“இல்லை, இல்லை. அவர் போகட்டும், கலாட்டா ஆகிவிடும் அவரைக் கூப்பிட்டால்.” மெதுவாக நடந்தார்கள்.

“பத்து நாள் தள்ளிப்போயிற்று. லேடி டாக்டரிடம் போகணும் என்று நினைப்பதற்குள் வந்துவிட்டது.”

“தயாராக வந்தாயா? நீ சொல்லியிருந்தால் கடைக்குப் போய் ஸானிடரி டவல் வாங்கியிருக்கலாமே...”

“தயாராய்த்தான் வந்தேன். இருந்தாலும் வெள்ளைப் புடவை. கொஞ்சம் பின்னால் பார்.”

“இல்லை. ஒன்றும் ஆகவில்லை.”

“வேகமாக நடப்போமா? ஏரிப்பக்கம் உட்கார நேரம் இல்லை. ராத்திரி சமையலுக்குப் பூண்டு உரிக்க வேண்டும்.”

"வா நீ பேசாமல்."

ஏரி அருகே குஸுமாவை உட்கார்த்தி மௌனித்தாள்.

ஜீஜியிடம் ஒரு முறை "உங்கள் மூன்றாம் பிள்ளைக்கு எப்படிப் பட்ட மருமகள் வேண்டும்?" என்றபோது சடாரென்று பதிலளித்தாள் ஜீஜி - படித்தவள். வெளுப்பானவள், பேசாதவள் என்று. "சரியாகச் சொன்னாய்" என்றார் பப்பாஜி. அப்படி ஒரு பெண் இருப்பாள் என்று மீனாட்சி நம்ப மறுத்தாள். ஜீஜியின் பதில் அன்று மத்தியானம் நடந்திருந்த சம்பவத்தின் நீட்சி என்று நினைத்தாள். மத்தியானம் பப்பாஜியின் நண்பர் வந்திருந்தார். சரும நோய் நிபுணர். அப்போது மீனாட்சிக்குக் கையில் சில வெள்ளைத் திட்டுக்கள் வந்திருந்தன. கொஞ்சம் அரிப்புடன். சரும நோய் நிபுணரிடம் பப்பாஜி அறிமுகப் படுத்தினார். இவள் கிஷனின் மனைவி. ஓயாமல் ஊர் சுற்றுகிறாள். சதா கையில் புத்தகம். வாயாடி. இவள் கையைப் பாருங்கள்.

நிபுணர் உபதேசம், நீ வீட்டில் இரு. மற்ற பெண்கள் மாதிரி. எல்லாம் சரியாகிவிடும். அவரவர் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட மாதிரி இருந்துவிட்டால் ஏது நோய்?

"ஆஹா" என்றார் பப்பாஜி.

ஜீஜி கூறியது அதை ஒட்டிய ஹாஸ்யம் என்று நினைத்தாள். ஆனால் ஜீஜியின் விளக்கத்துக்கு உரை போட்டாற்போல் கிடைத்தாள் குஸுமா.

அரசியலில் எம்.ஏ., ஃப்ரெஞ்சில் டிப்ளோமா. எதற்காக ஃப்ரெஞ்ச் படித்தாள் என்று தெரியவில்லை. திருமணத்திற்காகக் காத்திருக்கும்போது ஏதாவது மொழியில் டிப்ளோமோ வாங்குவது காத்திருத்தலின் ஒரு அம்சம் என்று தெரிந்தது. வெளியூரில் வேலை செய்யும் மாப்பிள்ளையானால் வெளிநாட்டு மொழி உபயோகமாக இருக்குமாம். பூ வேலை செய்த குஷன்கள், தலையணை உறைகள், கை வேலைப் பொருட்கள், பூ வேலையும் லேஸ் வேலையும் செய்த புடவைகள் எல்லாம் செய்திருந்தாள் குஸுமா அந்தச் சமயத்தில். பூ அலங்கார வகுப்புகள், பேக்கரி வகுப்புகள், தையல் வகுப்புகள், ஜாம், ஜூஸ், ஊறுகாய் வகுப்புகள் எதையும் அவள் விட்டுவைக்கவில்லை. எல்லா வித்தைகளையும் கற்றிருந்தாள். பூரணமான மருமகள்.

வெகு தூரத்திற்குப் போய்விட்டிருந்த வெள்ளைக் கூட்டம் நினைத்துக் கொண்டாற்போல் உயரே எழும்பி வட்டம் சுற்றி இடப் பக்கம் வந்தது. மிதமான வேகத்தில் மிதந்தாற்போல் வந்து சுழன்றது.

குஸுமா அழ ஆரம்பித்தாள்.

"அந்த அலகு... என்ன சிவப்பு..." என்று விசித்தாள்.

மெல்லச் சிவக்கத் தொடங்கிய மாலையில் பவழம் மிதந்தது இறக்கைகளுடன்.

உரிக்காத பூண்டு... இறக்கைகள் திறந்தன மறுவட்டம் அடிக்க.

உருவாகாத கரு... ஒயிலாக நீரின்மேல் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று சறுக்கி இறங்கி மிதந்தன.

விசும்பல் ஒலி.

ஹோலிப் பண்டிகை விடுமுறையில் அஜ்மீர் வந்தபோதுதான் ஜீஜிக்கு நோயின் கடுமையான தாக்குதல் நேர்ந்தது. ஒரு மத்தியானம், அன்றைய சமையலுக்கான உபகரணங்களைத் தந்துவிட்டு சாவியை இடுப்பில் செருகிக்கொண்டு குளிர்ப்பதனப் பெட்டியில் என்ன மிஞ்சியிருக்கிறது என்று பார்க்க ஜீஜி மெல்ல நடந்து வந்தாள். அதை எட்டும் முன்பே மூச்சு முட்டியது. சுவாசம் பெருத்த ஓசையுடன் இழுத்தது. மற்றவர் ஓடி வரும்முன் தன் கனத்த சரீரத்துடன் தரையில் விழுந்துவிட்டாள் ஜீஜி. வியர்வை பெருகியது. சிறுநீர் பெருகி உடையெல்லாம் ஈரம்.

"நான் போய்விடுவேன்... நான் போய்விடுவேன்... என் மருமகள்கள் எல்லோரும் வெளியூரில்... அந்தப் பாவி படி ஜீஜி என் சமையலறையை ஆளப்போகிறாள்... ஹே பக்வான்..." என்று அரற்றிக்கொண்டே தலையை இடமும் வலமும் திருப்பினாள். கீழே இருந்த டாக்டர் ஓடி வந்து ஊசி போட்டார். மூச்சு சீராகியது. இமைகள் இழுக்க உறங்கிப்போனாள்.

கண் விழித்ததும் இடுப்புச் சாவியைத் தொட்டுக்கொண்டாள். "ராத்திரி என்ன சமையல்?" என்று கேட்டாள். பீன்ஸ் என்றதும் "ஏன், நான் காலிஃப்ளவர் அல்லவா சொல்லியிருந்தேன்? அவள் மாற்றினாளா? நான் போய்விடுவேன் என்று நினைத்தாளோ?" என்று பொருமினாள்.

"இல்லை ஜீஜி. காலிஃப்ளவர் கிடைக்கவில்லை பஜாரில்."

"புடவை... வேறு புடவை... தா" என்றாள்.

குஸுமா, ஜீஜியின் பீரோவைத் திறந்து பச்சைப் புடவை, பச்சை உள்பாவாடை, இளம் மஞ்சள் ரவிக்கை எடுத்தாள். ஜீஜியின் படுக்கை அருகே வைத்தாள். தலையைத் திருப்பிப் பார்த்த ஜீஜி,

“பச்சை வளையல் எங்கே?” என்றாள் ஈனஸ்வரத்தில். மீனாட்சி வளையல் பெட்டியைத் திறந்து பச்சைக் கண்ணாடி வளையல்களை எடுத்து வைத்தாள்.

கதவை மூடி ஜீஜியின் ஆடைகளை அகற்றினர். முழுவதும் சிவக்கப் பழுத்த பழம் ஒன்று வற்றினாற்போல் இருந்தது அவள் உடம்பு. அகங்கையில் கோடுகள் கனத்து ஓடின. புறங்கை சுருங்கி நரம்புகள் பளபளத்தன. அடிவயிற்றில் ஏரிட்டு உழுதாற்போல் ஆழமான பிரசவ வரித் தழும்புகள். அவள் உறுப்பின்மேல் புறத்துமயிர் வெளேரென்று பசையற்று, அங்கங்கே உதிர்ந்து இருந்தது. பருத்துப் பின் தளர்ந்த பின்பாகமும், தொடைகளும் வெளுத்த கீறல்களுடன் சுருங்கித் தொங்கின. உள்தொடை இடுக்கின் அருகே கருகிய வாழைத் தோல்போல் வதங்கிக் கிடந்தது. ஸ்தனங்கள் சுருங்கிய திராட்சை முலைக்காம்புகளுடன் தாழ்ந்து தொங்கின. கழுத்தில் பல தங்கச் செயின்களின் கரிக்கோடுகள். நெற்றியில் வகிட்டின் முனையில் கனத்த தங்கக் குண்டுடன் தலையில் அணிந்த சுட்டிப் பட்டம் அழுத்தி அழுத்தி வழுக்கை விழுந்தாற்போல் வழவழவென்று ஒரு தழும்பு.

வாழ்ந்த உடம்பு. சிறுநீர், மலம், ரத்தம், குழந்தைகள் எல்லாவற்றையும் வெளிப்படுத்தியிருந்த உடம்பு. எத்தனை தடங்கள் அதில்!

புடவை கட்டி முடித்ததும், ஜீஜியின் தலையை வாரி, வண்ண நூல் குஞ்சலம் தொங்கும் கருத்த நூல் சவுரியைக் கூந்தலில் இணைத்துப் பின்னிவிட்டாள் ராதா பாபிஜி. பீரோ சாவியை குஸுமா ஜீஜியின் இடுப்பில் செருகினாள். ஜீஜி படுக்கையில் சாய்ந்துகொண்டாள்.

மற்றவர்கள் போனதும் ஜீஜி அருகில் உட்கார்ந்துகொண்டாள் மீனாட்சி. ஜீஜியின் கை இடுப்பைத் துழாவியது. ஜன்னல் திரைகள் மூடப்பட்ட அறை இருண்டிருந்தது.

மருந்து, தூக்கம், அயர்ச்சி சேர்ந்து ஜீஜியின் குரல் கனத்து வெளிப்பட்டது. ஆனால் காற்றினில் அலைந்துவிட்டு வந்ததுபோல் அழுத்தமின்றி இருந்தது.

“சிகப்புக் கலர் பாவாடை...”

“என்ன ஜீஜி?”

“என் கல்யாணப் பாவாடை. சிகப்புக் கலர். தங்க வெள்ளிச் சரிகை உடலெல்லாம். தங்கத் தகட்டுப் பொட்டு. பன்னிரெண்டு தங்க வளையல்கள். இரண்டு அட்டிகை, சிவப்பில், பச்சையில், முத்துத் தோடு. பவழத் தோடு. நெற்றிச் சுட்டியின் தங்கக் குண்டு அஞ்சு பவுன். ஒரு வெள்ளிச் சாவி வளையம். பதினாலு வயது எனக்கு. என்னை

வழியனுப்புகிற 'பிதாயி'ன்போது என் அம்மா காதில் சொன்னாள். நெஞ்சில் முட்டுகிறது அந்த 'பிதாய்'. முக்காட்டோடு அவள் குனிந்து என்னைக் கட்டிக்கொண்டாள். பெரிய மூக்கு வளையம். உறுத்தியது. "சமையலறையை ஆக்ரமித்துக்கொள். அலங்காரம் செய்து கொள்ள மறக்காதே.... இரண்டும்தான் உன் பலம். அதிலிருந்துதான் அதிகாரம்...."

"இருக்கட்டும் ஜீஜி. தூங்குங்கள்."

ஞாபகம் வருகிறது.... எல்லாம்... "முப்பது பேர் வீட்டில். அஞ்சு கிலோ 'ஆட்டா' பிசைவேன். முந்நூறு சப்பாத்தி இடுவேன். முதல் தடவை இரண்டு உள்ளங்கையும் ரத்தம் கட்டி நீலமாய் இருந்தது. தோள் பட்டையில் குத்திக் குத்தி வலித்தது.... பப்பாஜி சொன்னார்... சபாஷ்... நீ நல்ல உழைப்பாளி... என்று...."

ஹா என்று மூச்சு விட்டாள்.

"கோபாலுக்கு முன் ஒரு ஆண் குழந்தை. அவன் போய்விட்டான். தெரியுமா? ஒரு வயதில். பூஜை அன்று, எல்லோரும் சமையலறையில்... குழந்தை படியேறி மதில் சுவரில் ஏறப்பார்த்து விழுந்துவிட்டான்... முப்பது படி ஏறியிருந்தான்... எண்ணெயில் பூரியைப் போட்டது ஈச்சென்ற அலறல்... வயிற்றில் முட்டியது... பின் மண்டையில் பிளவு... முற்றத்துக் கல் தரையில் வெள்ளைப் புழுக்கை மாதிரி அவன் மூளை சிதறியிருந்தது... ஆண் பிள்ளைகள் எல்லாம் வந்தபின்... பொரித்தேன்... மீனா... கேட்கிறாயா... பொரித்தேன் மீதம் பூரிகளை..." மீனாட்சி ஜீஜியின் நெற்றியில் தடவினாள்.

"மாமனார் போனதும் வெள்ளிச் சாவி வளையத்தில் சாவி கோத்துக்கொண்டேன்....."

"மீனா... எனக்கு எத்தனை செல்வாக்கு பார்த்தாயா? நான் ராணி மாதிரி அதிகாரம் செலுத்துகிறேன்... இல்லையா?" ஜீஜி முனகினாள். உறங்கினாற்போல் கிடந்தாள்.

பெரிய வட்டப் புஷ்ப வடிவில் கமலமும், நீலமும் பச்சையும், முத்தும் பதித்த தோடுகளை அணிந்த சருகுச் செவிகள் அருகே மீனாட்சி குனிந்தாள். விரிந்த கடலில் பாம்புப் படுக்கையில் மகா விஷ்ணு மிதப்பதுபோல் ஜீஜியும் அவளும் மட்டுமே. இருண்டு கிடந்த அறையில் ஒரு தொப்புள் கொடி அறுந்த தன்மை ஏற்பட்டது. அந்த உரையாடலை அவள் நிகழ்த்தினாளா, அது தன்னால் ஏற்பட்டதா, அப்படிப் பல முறை யோசித்ததால் நிகழ்ந்தது போன்ற உணர்வு ஏற்பட்டதா, அது ஜீஜிக்கும் அவளுக்கும் மட்டுமேயான உரையாடலா என்று தெரியவில்லை.

ஜீஜி, அந்தச் சமையலறை, அட்டிகை, வளை, தங்கக் குண்டு - சுட்டி அதிலெல்லாம் ஒரு பலமுமில்லை.

அதிகாரம் அதிலிருந்து வரவில்லை.

அது பப்பாஜியை ஒட்டிய அதிகாரம்.

அதிலிருந்து எல்லாம்.

விடுபடுங்கள்.

விடுபடுங்கள்.

விடுபடுங்கள்..

விடுபட்டால்... அப்புறம்.... எஞ்சுவது?

சமையலறை, நகைகள், குழந்தைகள், பப்பாஜி எல்லாவற்றையும் துறந்த நீங்கள்தான். அறுபட்ட நீங்கள், வெறும் துலாரிபாயி. துலாரிபாயி, மட்டுமே. அங்கிருந்துதான் பலம். அதிகாரம்.

"அதை எல்லாம் துறந்த நான்... நான்... யார்?"

"கண்டுபிடியுங்கள். முங்கிப் பாருங்கள்."

"எதில்?"

"கிணற்றில், உங்கள் அந்தரங்கக் கிணற்றில்."

"பற்றிக்கொள்ள எதுவுமில்லையே... பயமாக.."

"இன்னும் முங்குங்கள். முங்குங்கள். துலாரிபாயிக்கும் உலகுக்கும் என்ன சம்பந்தம் என்று பாருங்கள்."

நிதம் இடப்பட்ட அந்த முந்நூறு சப்பாத்திகளும், பதினாலு குழந்தைகளை உதைக்கவிட்ட வயிறும் இல்லாவிட்டால்... மட்டன் புலவு, மஸாலா, பூரி - ஆலு, தனியாப் பொடி, உப்பு, சர்க்கரை, பால், எண்ணெய், நெய் என்று யோசித்திருக்கா விட்டால்... நாலு நாட்களுக்கு ஒரு முறை ஸ்டவ் திரியை இழுத்துவிட வேண்டும். மண்ணெண்ணெய் கிடைக்கும்போது வாங்க வேண்டும். மழைக்காலத்தின் கவலை அரிசி, பருப்பில் பூச்சி. மாங்காய்க் காலத்தில் ஊறுகாய். வெய்யில் காலத்தில் அப்பளம். பழங்கள் வரும் காலத்தை ஒட்டி ஷர்பத், ஜூஸ், ஜாம். பழைய துணிகள் போட்டுப் பாத்திரம். சமையலறை முற்றத்துக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை சுண்ணாம்பு. மாதவிடாய் தள்ளிப் போயிற்றோ என்று கவலை. தள்ளிப் போகாவிட்டால் கவலை என்று மண்டையெல்லாம் பூச்சி, ஊறுகாய், சுண்ணாம்பு அடைத்திருக்காவிட்டால்.

மூளையின் இழுப்பறைகளை இவற்றை எல்லாம் போட்டு நிரப்பியிருக்காவிட்டால் ஒருவேளை நீங்கள் அந்த ஆப்பிள்

விழுவதைப் பார்த்திருக்கலாம். தண்ணீர் கெட்டிலின் மூக்கு நுனி ஆவியைப் பார்த்திருக்கலாம்.

புதுக் கண்டங்களைக் கண்டுபிடித்திருக்கலாம். கைலாய பர்வதத்தில் அமர்ந்து காவியம் எழுதியிருக்கலாம். குகைகளுக்குள் ஓவியம் தீட்டியிருக்கலாம். பறந்திருக்கலாம். போர்கள், சிறை, தூக்குமரங்கள், ரஸாயன யுத்தங்கள் இல்லாத உலகத்தை உண்டாக்கியிருக்கலாம்.

“நீங்கள் எங்கே போய்விட்டீர்கள் ஜீஜி?”

சரியான அளவில் எல்லாம் இடப்பட்ட சமையலில்

காதிலும் கழுத்திலும் நுதலிலும் உறுத்திய நகையில் பலம் என்று எப்படி நினைத்துக்கொண்டீர்கள்? முங்குங்கள் இன்னும் ஆழமாக.

அடியை எட்டியதும் உலகளந்த நீரைத் தொடுவீர்கள். சுற்றியுள்ள உலகுடன் தொடர்பு கொள்வீர்கள்.

உங்கள் யோனியும், ஸ்தனங்களும், கருப்பையும் சுழன்று விழும் சமையல் மணம் தூரப் போய்விடும். நகையின் மினுமினுப்பு மறைந்து விடும். பால்தன்மை அற்ற நீங்கள். அதில் சிக்காத நீங்கள், அதில் குறுகாத நீங்கள். அதனின்றும் விடுபட்ட நீங்கள்.

அதைத் தொடுங்கள் ஜீஜி.

தொட்டு

எழுங்கள்.

எழுங்கள்.

எழுங்கள்.

அதுதான் பலம். அதனின்றும்தான் அதிகாரம்.

ஜீஜி திரும்பி, மீனாட்சியின் தேடிப் பற்றிக்கொண்டாள்.

8. நாய், கார,, சீமா† டி

(மொழிபெயர்ப்பு, கதை)

- ஆண்டன் செக்காவ்

1

கடற்கரையில் புது முகம் ஒன்று நாய்க்காரச் சீமாட்டி ஒருத்தி காணப்பட்டதாகப் பேசிக் கொண்டார்கள். இரண்டு வாரங்களுக்கு முன்பு யால்தாவுக்கு வந்து அதன் வழிமுறைகளுக்குப் பழக்கப் பட்டிருந்த திமீத்ரி திமீத்ரிச் கூரொவும் புதிதாக வந்தோரிடம் அக்கறை செலுத்தத் தொடங்கியிருந்தார். நடுத்தர உயரமும் வெண்பொன் கேசமும் கொண்ட இளநங்கை ஒருத்தி பெரெட் தொப்பியணிந்து கடற்கரை நடைபாதை வழியே செல்வதை வெர்னே கபேயின் முகப்புப் பந்தலின் கீழ் அமர்ந்திருந்த அவர் கவனித்தார். வெள்ளை நாய் ஒன்று அவள் பின்னால் ஓடிற்று.

அப்புறம் அவர், நகரப் பூங்காவிலும் சதுக்கத்திலும் தினந்தோறும் பலமுறை அவளைச் சந்தித்தார். எப்போதும் அவள் அதே பெரெட் தொப்பி அணிந்து வெள்ளை நாய் பின்தொடர, தனியாகவே உலாவினாள் அவள் யார் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை எல்லோரும் அவளை "நாய்க்காரச் சீமாட்டி" என்றே அழைத்தார்கள்.

"இவள் இங்கே கணவனுடனோ தெரிந்தவர்களுடனோ இல்லை என்றால் இவளை அறிமுகப்படுத்திக் கொள்வது வீண்போகாது" என்று எண்ணமிட்டார் கூரொவ்,

அவருக்கு இன்னும் நாற்பது வயதாகவில்லை. அதற்குள் பன்னிரண்டு வயதில் ஒரு மகளும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களான இரு மகன்களும் இருந்தார்கள். கல்லூரியில் இரண்டாவது ஆண்டு படித்துக் கொண்டிருந்த பொழுதே பெரியவர்கள் அவருக்கு மணம் முடித்து விட்டார்கள். இப்போதோ அவர் மனைவி அவரைக் காட்டிலும் ஒன்றரை மடங்கு முதியவளாகத் தோற்றமளித்தாள். நல்ல உயரமும் கரும் புருவங்களும், விறைப்பும் பெருமிதமும், கம்பீரமும் வாய்ந்த இந்த மாது அவளே தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டதுபோல "சிந்தனையாளி" ஏராளமாகப் புத்தகங்கள் படிப்பாள் கணவரை மற்றெல்லோரும் அழைப்பது போன்று திமீத்ரி என அழைக்காமல் திமீத்திரி என அழைப்பாள். அவரோ அவளை நுனிப்புல் மேய்பவள்,

குறுகிய நோக்கினள், நயப் பாங்கு அற்றவள் என உள்ளூரக் கருதிவந்தார். ஆயினும், அவளிடம் அவருக்கு ஒரே அச்சம். வீட்டில் அவருக்கு இருப்பே கொள்ளாது. அவளுக்குத் துரோகம் செய்ய அவர் வெகு காலத்துக்கு முன்பே தொடங்கிவிட்டார். அடிக்கடி துரோகம் செய்து வந்தார் அந்தக் காரணத்தினால்தான் போலும் பெண்களைப் பற்றி எப்போதுமே இகழ்ச்சியாகப் பேசினார் தமக்கு முன்னிலையில் மாதரைப் பற்றிய பேச்சு எழுந்ததும், "கீழ் இனத்தவர்!" என்று அவர்களைக் குறிப்பிட்டார்.

கசப்பான அனுபவத்திலிருந்து தாம் போதிய பாடம் கற்றுக் கொண்டு விட்டதாகவும், எனவே பெண்களை எப்படி வேண்டுமாயினும் அழைக்கத் தமக்கு உரிமையுண்டென்றும் எண்ணி வந்தார். என்றாலும், இந்தக் "கீழ் இனத்தவர்" இல்லாமல் இரண்டு நாட்கள்கூட அவரால் வாழ முடிவதில்லை. ஆண்கம் கூட்டத்தில் அவருக்குச் சலிப்பாக கட்டிப் போட்டது போலிருக்கும். அவர்களிடம் கலகலப்பாகப் பேசாமல் உர்ரென்றிருப்பார். பெண்களிடையிலோ, விட்டேற்றியாயிருப்பார். அவர்களுடன் என்ன பேசுவது எப்படிப் பழகுவது என்று அவருக்குத் தெரியும். அவர்கள் நடுவே வாய் திறவாமலிருப்பது கூட அவருக்கு எளிதாயிருந்தது. அவரது தோற்றத்திலும் சுபாவத்திலும் அவர் இயல்பு முழுவதிலுமே இருந்த இனந் தெரியாத கவர்ச்சி பெண்களை அவரிடம் இணக்கங் கொள்ளச் செய்தது. வசீகரித்தது; இதை அவர் அறிந்திருந்தார். அவரையும் ஏதோ ஒரு சக்தி பெண்கள்பால் வலிய ஈர்த்தது.

அந்தரங்கத் தொடர்பு ஒவ்வொன்றும் தொடக்கத்தில் வாழ்க்கையை இன்பப் புதுமையுள்ளதாக்கி, இனிய சுளுவான நிகழ்ச்சியாக விளங்கினாலும், குல மகளிர் விஷயத்தில் அதிலும் அடியெடுத்து வைக்கத் தயங்குபவர்களும் உறுதியற்றவர்களுமான மாஸ்கோ மாதர் விஷயத்தில் அசாதாரணச் சிக்கல் நிறைந்த பெரும் பிரச்சனை ஆகிவிடுவதையும் முடிவில் நிலைமை சகிக்க முடியாத அளவு துன்பகரமாகி விடுவதையும் கூரொவ் மீண்டும் மீண்டும் நேர்ந்த உண்மையிலேயே கசப்பான அனுபவத்திலிருந்து தெரிந்து கொண்டிருந்தார். ஆனால் கவர்ச்சியான பெண் யாரையேனும் புதிதாகச் சந்திக்கும் போதெல்லாம் இந்த அனுபவம் நினைவிலிருந்து எப்படியோ நழுவிவிடும். வாழ்வு வேட்கை மேலெழும். எல்லாமே சகஜமாகவும் வேடிக்கையாகவும் தென்படும்.

இவ்வாறாக, ஒருநாள் பூங்கா ரெஸ்டாரெண்டில் அவர் உணவருந்திக் கொண்டிருக்கையில் பெரெட் தொப்பியணிந்த நங்கை நிதானமாக நடந்து வந்து பக்கத்து மேஜையெதிரே அமர்த்தாள். அவளது முகபாவம், நடை உடை முடி ஒப்பனை எல்லாம் அவள் நகரிக சமூகத்தைச் சேர்த்தவள், மணமானவள் யால்தாவுக்கு முதல் தடவையாக

வந்திருக்கிறாள். இங்கே அவளுக்குச் சலிப்பு தட்டி விட்டது என்பவற்றைக் காட்டின. யால்தா வருபவர்களது ஒழுக்கக்கேடு பற்றிய கதைகளில் பெரும்பாலானவை வெறும் புரளி. தம்மால் முடிந்தால் சந்தோஷமாக வரம்பைக் கடந்திருக்கக் கூடியவர்கள் இட்டுக்கட்டிய கற்பனை என்பது கூரொவுக்குத் தெரியும். அவர் இவற்றைக் காதில் போட்டுக் கொல்வதே இல்லை. ஆயினும் தம்மிடமிருந்து மூன்று தப்படி தள்ளிப் பக்கத்து மேஜை முன்னால் அந்தச் சீமாட்டி வந்தமர்ந்ததும் சுலபமான வெற்றிகளையும் மலைக்கு உல்லாசப் பயணங்கள் செல்வதையும் பற்றிய இந்தக் கதைகள் அவர் நினைவுக்கு வந்தன. சொற்பகாலத் தொடர்பு கொள்வது. அறிமுகமற்ற, பெயர் கூடத் தெரியாத பெண்ணுடன் காதல் லீலை புரிவது என்ற மனோகரமான எண்ணம் அவரைத் திடீரென ஆட்கொண்டது.

சீமாட்டியின் நாயைச் செல்லமாகச் சுடக்குப் போட்டுக் கூப்பிட்டு அது பக்கத்தில் வந்ததும் விரலை ஆட்டி அதைப் பயமுறுத்தினார். நாய் உறுமியது. கூரொவ் மீண்டும் விரலை ஆட்டினார். சீமாட்டி அவரை ஏறிட்டுப் பார்த்துவிட்டு மறு கணமே கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்

''சுடிக்காது'' என்று சொன்னாள்; அவள் முகம் கன்றிச் சிவந்தது. ''இதற்கு எலும்புத் துண்டு கொடுக்கலாமா?'' என்று கேட்ட கிரொவ் அவள் தலையசைப்பால் சம்மதம் தெரிவித்ததுமே ''நீங்கள் யால்தா வந்து அதிக நாள் ஆகிறதோ?'' என்று நேசம் தொனிக்க வினவினார்.

''ஐந்து நாளாகிறது''

''நான் இங்கே இரண்டாவது வாரத்தை ஓட்டிக் கொண்டிருக் கிறேன்'' இருவரும் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்கள்.

''நாட்கள் என்னவோ விரைவாகத்தான் ஓடுகின்றன. ஆனபோதிலும் ஏனே இங்கே ஒரே சலிப்பாயிருக்கிறது!'' என்று அவரை நோக்காமலே கூறினாள் அவள்.

2

''சலிப்பாயிருக்கிறது என்று சொல்வது வெறும் சம்பிரதாயம்தான். பேல்யேவ், ஷிஸ்த்ரா போன்ற மூலை முடுக்குகளில் வசிக்கும்போது யாருக்கும் சலிப்பு உண்டாவதில்லை. ஆனால் இங்கே வந்ததும், 'ஐயோ, ஒரே சலிப்பு, ஐயோ, ஒரே புழுதி!'' என்று முறையிட ஆரம்பித்து விடுகிறார்கள், 'ஏதோ இப்போதுதான் ஸ்பானிய நகர் கிரநாடாவி லிருந்து நேரே வந்து இறங்கியவர்கள் போல.'

அவள் சிரித்தாள். பின்பு இருவரும் அறிமுகமற்றவர்கள் போலப் பேசாமல் உணவருந்தினார்கள் ஆயினும் சாப்பாட்டுக்குப் பின் இருவரும் சேர்ந்து வெளியேறி, எங்கு போனாலும், எதைப் பற்றிப் பேசினாலும் ஒன்றுதான் என்ற மனோபாவங் கொண்ட கட்டற்ற, குதாகலமான மனிதர்கள் போன்று, வேடிக்கையும் விளையாட்டுமாக உரையாடலானார்கள். உலாவியவாறே, கடல்மீது தென்பட்ட விந்தையான ஒளியைப் பற்றிப் பேசினார்கள். கடல் நீர் மனோரம்மியமான இளம் ஊதா நிறத்துடன் திகழ்ந்தது. அதன் மீது நிலவொளி தங்க ரேகைக ளிட்டது. பகல் வெக்கைக்குப் பின் ஒரே புழுக்கமாயிருப்பதைப் பற்றி வார்த்தையாடினார்கள். தாம் மாஸ்கோவாசி என்றும், கல்லூரியில் மொழி இயல் கற்றதாகவும் ஆனால் வங்கியில் வேலை செய்வதாகவும், தனியார் இசை நாடகக் குழுவில் பாடுவதற்கு ஒரு காலத்தில் பயின்றதாகவும் பின்பு அந்த எண்ணத்தை விட்டு விட்டதாகவும், மாஸ்கோவில் தனக்கு இரண்டு சொந்த வீடுகள் இருப்பதாகவும் கூரொவ் அவனிடம் சொன்னார். அவள் பீட்டர்ஸ்பர்கில் வளர்ந்ததாகவும் எஸ்.என்ற நகரில் வாழ்க்கைப் பட்டதாகவும், இரண்டு ஆண்டுகளாக அவ்வூரில் இருந்து வருவதாகவும், யால்தாவில் இன்னும் ஒரு மாதம் தங்கப் போவதாகவும், அவளது கணவரும் ஓய்வெடுத்துக் கொள்ள விரும்புவதாகவும், எனவே அவரும் யால்தாவுக்கு வரக்கூடுமென்றும் கூரொவ் அவளிட மிருந்து தெரிந்து கொண்டார். கணவர் வேலை செய்வது குபேர்னியா நிர்வாகக் கவுன்சிலிலா அல்லது சேம்ஸ்த்வோ போர்டிலா என அவளால் தெளிவாகக் கூற முடியவில்லை. அவளுக்கே இது வேடிக்கையா யிருந்தது. அவளது பெயர் ஆன்னா செர்கேயிவ்னா என்பதையும் கூரொவ் தெரிந்து கொண்டார்.

ஓட்டல் அறைக்குத் திரும்பிய பின்னர் கூரொவ் அவளைப் பற்றி எண்ணமிட்டார். மறுநாள் தாம் அவளைச் சந்திப்பது நிச்சயம், கட்டாயம் சந்தித்தாக வேண்டும் என நினைத்தார். உறங்குவதற்காகப் படுத்தவர், மிகச் சமீபத்தில்தான் அவள் உயர்நிலைப் பள்ளி மாணவியா யிருந்தாள் என்பதையும் இப்போது தமது மகள் படிப்பது போலவே பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தாள் என்பாயும் நினைவு கூர்ந்தார். அவளது சிரிப்பிலும், பழக்கமில்லாதவனுடன் பேசும் விதத்திலும் எவ்வளவு கூச்சமும் தயக்கமும் காணப்பட்டது என்பதையும் ஞாபகப் படுத்திக் கொண்டார். வாழ்க்கையிலேயே இப்போதுதான் முதல் தடவையாக அவள் தனியாயிருக்கிறாள் போலும், ஆண்கள் அவளை ஒரேயொரு மறைமுக நோக்கத்துடன் (இந்த நோக்கத்தை அவள் ஊகிக்காமலிருக்க முடியாது) பின் தொடர்வதற்கும் வாய்ப்பான நிலைமை இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது போலும் என்று எண்ணினார்.

அவளது நேர்த்தியான மெல்லிய கழுத்தையும் அழகிய சாம்பல் நிறக் கண்களையும் நினைத்துப் பார்த்தார்.

"அவனிடம் ஏதோ ஏக்கம் இருக்கிறது" எனச் சிந்தித்தவாறே உறங்கிப் போனார்.

அவர்கள் பரிச்சயமாகி ஒரு வாரம் கடந்து விட்டது. அன்று விழா. அறைக்குள் ஒரே புழுக்கம். வெளியிலோ சூறைக் காற்று படலம் படலமாகப் புழுதியைக் கிளப்பியது. தொப்பிகளைத் தலைகளிலிருந்து பறக்கடித்தது. நாள் முழுதும் தாகம் எடுத்த வண்ணமாயிருந்தது. கூரொவ் அடிக்கடி கபேக்குப் போய் ஷர்பத்தும் ஐஸ்கிரீமும் வாங்கி வருவதும் ஆன்னா செர்கேயிவ்னாவுக்கு உபசாரம் செய்வதுமாயிருந்தார். வெக்கை பொறுக்க முடியவில்லை.

மாலையில் காற்று அடங்கியதும் அவர்கள் கப்பல் வருவதைப் பார்க்கும் பொருட்டுத் துறைமுகம் சென்றார்கள். கப்பல் துறையில் ஏராளமானோர் குறுக்கும் நெடுக்கும் உலாவியவாறு, யாரையோ வரவேற்பதற்காகப் பூச்செண்டுகளுடன் காத்திருந்தார்கள் நாகரிக யால்தாக் கூட்டத்தின் இரண்டு சிறப்பியல்புகள் அங்கே சட்டெனக் கண்ணில் பட்டன. முதலாவது, வயது முதிர்ந்த சீமாட்டிகள் யுவதிகள் போன்று உடையணிந்து கொண்டிருந்தார்கள். இரண்டாவது, ஜெனரல்களின் தொகை மிக அதிகமாயிருந்தது.

கடலில் கொந்தளிப்பு மிகுந்திருந்தபடியால் கப்பல் தாமதித்து, சூரியன் மறைந்த பின்பே வந்து சேர்ந்தது. துறையோரமாக நிறுத்தப் படுவதற்கு முன்னர் நெடுநேரம் இப்புறமும் அப்புறமும் திரும்பிச் சாரி பாய்ந்தது. ஆன்னாசெர்கேயிவ்னா தெரிந்தவர் யாரையோ தேடுபவள் போலக் கப்பலையும் பிரயாணிகளையும் காட்சிக் கண்ணாடி வழியே துருவிப் பார்த்தாள். பின்னர் கூரொவ் பக்கம் திரும்பியபோது அவள் விழிகள் பளிச்சிட்டன. மிக அதிகமாகப் பேசினாள். சரமாரியாகக் கேள்விகளைப் பொழிந்தாள், எதைப் பற்றிக் கேட்டோம் என்பதை அக்கணமே மறந்துவிட்டாள். பிறகு காட்சிக் கண்ணாடியைக் கூட்டத்தில் தவறவிட்டு விட்டாள்.

நாகரிகக் கும்பல் கலைந்து சென்றது. முகங்கள் கண்ணுக்குக் தெரியவில்லை. காற்று அடங்கி விட்டது. ஆயினும் கூரொவும் ஆன்னா செர்கேயிவ்னாவும் கப்பலிலிருந்து இன்னும் யாராவது வருகிறார்களா என்று எதிர்பார்ப்பவர்கள்போல நின்று கொண்டிருந்தார்கள். ஆன்னா செர்கேயிவ்னா பேசுவதை நிறுத்திவிட்டு கூரொவை நோக்காமல் மலர்களை முகர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

“பருவநிலை நல்லதாகி இனிமையான மாலையாக மாறிவிட்டது. இப்போது நாம் எங்கே போகலாம்? எங்காவது வண்டியில் செல்வோமா?” என்றார் கூரொவ்.

அவள் பதில் பேசவில்லை.

அவர் அவளையே நிலையாக நோக்கிக் கொண்டிருந்து விட்டுத் திடீரென அவளைக் கட்டித் தழுவி உதடுகளில் முத்தமிட்டார் மலர்களின் நறு மணமும் ஈரிப்பும் அவரைச் சூழ்ந்தன. மறு கணமே யாரேனும் பார்த்து விட்டார்களோ என்று அச்சத்துடன் பின்பக்கம் திரும்பிப் பார்த்தார்.

“உங்கள் அறைக்குப் போவோம்.” என்று தணிவான குரலில் சொன்னார். இருவரும் விரைந்து நடந்தார்கள்.

அறையில் இறுக்கமாயிருந்தது. ஜப்பானியக் கடையில் அவன் வாங்கியிருந்த ஏதோ ஒருவகை அத்தரின் மணம் வீசியது. இப்போது அவள் மீது கண்ணோட்டிய கூரொவ், “வாழ்க்கையில்தான் எத்தயை விந்தைச் சந்திப்புகள் நிகழ்கின்றன!” என எண்ணமிட்டார். அவருடன் உடலுறவு கொண்ட பலவகையான மாதரையும் பற்றிய நினைவுகள் அவர் மனத்துள் எழுந்தன. அவர்களில் சிலர் கவலையற்ற, இனிய சுபாவமுள்ள பெண்கள்; உடலுறவில் இன்பமுற்றவர்கள்; மிக மிகக் குறுகிய நேரத்திற்கேயாயினும் தங்களுக்கு மகிழ்ச்சி அளித்ததற்காக அவரிடம் நன்றி பாராட்டியவர்கள். அவர் மனைவியைப் போன்ற வேறு சிலரோ, உண்மை ஆர்வம் இன்றி, வெட்டிப் பேச்சும் பசப்பும், நடிப்புமாக, இதெல்லாம் வெறும் களியாட்டமோ வேட்கையோ அல்ல, அதனிலும் ஆழ்ந்த மகத்துவம் வாய்ந்தது என்பது போன்ற பாவனையுடன் காதல் புரிந்தவர்கள், மற்றும் நல்ல அழகிகளான இரண்டு மூன்று பெண்கள் இருந்தனர். விறுவிறுப்பு இழந்து போனவர்கள், வாழ்க்கை வழங்கக் கூடியதைக் காட்டிலும் அதிக இன்பத்தை அதனிடமிருந்து வலிந்து பெற வேண்டுமென்ற வைராக்கியத்தின் மூர்க்க வெறி இவர்களது முகபாவத்தில் பளிச்சிட்டு மறையும். இவர்கள் புத்திளமையைக் கடந்தவர்கள், சபல சித்தமுள்ளவர்கள், கோணப் புத்தியும் கொடுமனமும் கொண்டவர்கள், மதியீனர், இவர்களிடம் கூரொவுக்கு இருந்த மோகம் அடங்கியதும் அவருக்கு இவர்களது அழகு வெறுப்பையே ஊட்டியது. இவர்களுடைய உள்ளாடைகளின் ஓர ஒப்பனைப் பின்னல்கள் மீன் செதிள்களைத்தான் நினைவுப்படுத்தின.

இங்கேயோ, அனுபவமில்லாத இளமையின் பேதமையும் தடுமாற்றமும் கூச்சமும் வெளிப்படையாகப் புலப்பட்டன. இவற்றோடு

யாரோ திடீரெனக் கதவைத் தட்டி விட்டதுபோல, ஒருவகையான பதைபதைப்பும் தென்பட்டது. "நாய்க்காரச் சீமாட்டி" ஆன்னா செர்கேயிவ்னா நடந்த விவகாரத்தை விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாக, ஆழ்ந்த தன்மை கொண்டதாக, தனது வீழ்ச்சியாகக் கருதுவது போன்று தோன்றியது. இது கூரொவுக்கு விந்தையாகவும் பொருத்தமற்றதாகவும் பட்டது. ஏக்கமும் சோர்வும் குடி கொண்ட அவளது முகத்தின் இரு மருங்கிலும் நீண்ட கூந்தல் சோகமாகத் தொங்கியது. பழம்பெரும் ஓவியங்களில் காணக் கூடிய பாவிப் பெண் போன்று வருந்தத்துடன் சிந்தனையிலாழ்ந்திருந்தாள்.

"இது சரியல்ல. இனி நீங்களே என்னை மதிக்கமாட்டீர்கள்" என்றாள்.

மேஜை மேல் முலாம் பழம் இருந்தது. கூரொவ் அதில் ஒரு சிறு துண்டு நறுக்கி, நிதானமாகத் தின்ன ஆரம்பித்தார். யாரும் பேசவில்லை, குறைந்தது அரைமணி நேரம் இப்படிக் கழிந்திருக்கும்.

ஆன்னா செர்கேயிவ்னாவைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. வாழ்க்கையை அதிகம் அறியாத, பேதைமை வாய்ந்த ஒரு நல்ல பெண்ணுக்குரிய தூய்மை அவளிடமிருந்து வெளிப்பட்டது. மேஜை மேல் எரிந்து கொண்டிருந்த ஒற்றை மெழுகுவத்தியின் வெளிச்சத்தில் அவளது முகம் சரிவரத் தெரியவில்லை. ஆயினும். நெஞ்சு பொறுக்க மாட்டாதவளாய் அவன் வேதனைப்பட்டாள் என்பது தெளிவாகவே தெரிந்தது.

"எதற்காக நான் உன்னை மதிக்க மாட்டேன் என்கிறாய்?" அர்த்தமில்லாத பேச்சாய் என்ன. சொல்வது என்று தெரியாமல் இருக்கிறதே' என்றார் கூரொவ்.

"கடவுள் என்னை மன்னிப்பாராக!" என்று கண்களில் கண்ணீர் ததும்பக் கூவினாள் அவள். "பயங்கரம், பயங்கரம்" என்றார்.

"சமாதானம் தேடிக் கொள்ளத் தேவையில்லையே"

"என் செயலுக்குச் சமாதானம் ஏது? நான் கெட்டவள். இழிந்தவள் என்னை இகழ்ந்து கொள்கிறேனே தவிர சமாதானம் கொள்ள நினைக்கவில்லை. கணவரை அல்ல, என்னையே நான் ஏமாற்றிக் கொண்டு விட்டேன். இப்பொழுது மட்டும் அல்ல, எவ்வளவோ காலமாக என்னையே ஏமாற்றிக் கொண்டு வருகிறேன். என் கணவர் நேர்மையானவராக, தகுதி வாய்ந்தவராக இருக்கலாம். ஆனால், நிச்சயமாக அவர் சரியான அடிவருடி! அலுவலகத்தில் அவர் என்ன செய்கிறாரோ, என்ன வேலை பார்க்கிறாரோ அறியேன், ஆனால்

அண்டிப் பிழைக்கும் அடிவருடி என்பது மட்டும் எனக்குத் தெரியும். அவருக்கு வாழ்க்கைப் பட்டபோது எனக்கு இருபது வயது. அடங்கா ஆவல் என்னை அலைக்கழித்தது நான் நாடியது மேன்மை வாய்ந்தது வேறுவிதமான வாழ்க்கை இருக்கத்தான் வேண்டும் என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். வாழ விரும்பினேன். நன்கு வாழ, முழுமையாக வாழஞ் அடங்கா ஆவல் என்னை அரித்துத் தின்றது. உங்களுக்கு அது புரியாது, ஆனால் ஆண்டவன் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன், என்னால் என்னை அடக்கியாள் முடியவில்லை, எனக்கு ஏதோ நேர்ந்துவிட்டது, கட்டுப்படுத்திக் கொள்ளவே இயலாது போயிற்று. உடம்பு சரியாயில்லை என்று கணவரிடம் சொல்லிவிட்டு இங்கே வந்தேன்ஞ் மதிமயங்கிய நிலையில், பைத்தியக்காரி போல இங்கே நான் சுற்றித் திரிந்து கொண்டிருந்தேன்... ஆனால் இதோ நான் கேவலமான பிறவியாய், உருப்படாதவளாய் எல்லாருடைய இகழ்ச்சிக்கும் உரியவளாய் விட்டேன்.''

கூரொவுக்கு இந்தப் பேச்சைக் கேட்கச் சலிப்பாயிருந்தது. அவளது வெகுளித்தனமும் சிறிதும் எதிர்பாராத, கொஞ்சமும் பொருத்தமில்லாத அவளது அங்கலாய்ப்பும் அவருக்கு எரிச்சலையே உண்டாக்கியது. விழிகளில் கண்ணீர் இல்லாதிருந்தால் அவள் வேடிக்கை செய்கிறாள், அல்லது நடிக்கிறாள் என்று எண்ணியிருப்பார்.

''எனக்குப் புரியவில்லை. உனக்கு என்ன வேண்டும் என்கிறாய்?'' என்று சாந்தமான குரலில் கேட்டார் அவர்.

அவரது மார்பிலே முகத்தைப் புதைத்து அவரோடு ஒண்டிக் கொண்டாள் அவள்.

''நம்புங்கள் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், என்னை நம்புங்கள். நேர்மையான தூய்மை வாய்ந்த வாழ்க்கையே எனக்கு வேண்டும். கெட்டதை என்னால் சகிக்க முடியாது. என் செயல் எனக்கே விளங்குவதாய் இல்லை சாதாரண மக்கள் சொல்வார்கள். 'பிசாசு பிடித்து விட்டது' என்று. எனக்குப் பிசாசு பிடித்திருப்பதாகத்தான் இப்போது நானும் சொல்லிக் கொள்ள வேண்டும்'' என்றாள்.

''வேண்டாம், வேண்டாம்...'' என முணுமுணுத்தார் கூரொவ்.

அவளது நிலைகுத்திட்ட, கிலி கொண்ட விழிகளுள் உற்றுநோக்கி, அவளை முத்தமிட்டு, தணிந்த குரலில் கொஞ்சலாகத் தேறுதல் கூறினார். சிறிது சிறிதாக அவள் நிம்மதியடைந்தாள். அவளுக்கு உற்சாகம் பிறந்தது. இருவரும் சிரிக்கலானார்கள்.

சற்று நேரத்துக்குப் பின் அவர்கள் வெளியே சென்றபோது கரையோர நடைபாதையில் எந்த ஆத்மாவும் இல்லை. சைப்ரஸ் மரங்களுடன்

நகரம் உயிரற்றதாகத் தோன்றியது. கடல் மட்டும் பேரிரைச்சலுடன் கரையில் மோதிக் கொண்டிருந்தது. தன்னந்தனியான மீன்படகு ஒன்று அலைகள் மேல் அசைந்தாடியது. அதிலிருந்த விளக்கு தூங்கி வழிவதுபோல மினுமினுத்தது. குதிரை வண்டி ஒன்றைத் தேடிப் பிடித்து ஏறிக் கொண்டு இருவரும் ஓரியாந்தாவுக்குச் சென்றார்கள்.

"நடையில் மாட்டியிருந்த முகவரிப் பலகையைப் பார்த்து உனது குடும்பப் பெயரை இப்போதுதான் தெரிந்து கொண்டேன். தீதெரித்ஸ் என்று எழுதியிருந்தது. உன்னுடைய கணவர் ஜெர்மானியரா?" என்று கேட்டார் கூரொவ்.

"இல்லை. அவருடைய பாட்டனார் ஜெர்மானியர் போலிருக்கிறது. அவர் ருஷ்யச் சத்திய சமயத்தவர்தான்."

ஓரியாந்தா சேர்ந்ததும், மாதாகோயிலின் அருகே பெஞ்சியில் அமர்ந்து, கீழே கடலை நோக்கியவாறு மௌனமாயிருந்தார்கள் காலை மூடுபனிக்கிடையே யால்தா நகர் தெளிவின்றி மங்கலாகத் தெரிந்தது. மலைச்சிகரங்களுக்கு மேல் அசையாது நின்றன வெண் முகில்கள் மரங்களில் இலைகள் சிலுசிலுக்கவில்லை. வெட்டுக் கிளிகள் சிலம்பின. கடலின் ஒரே மாதிரியான, ஆழ்ந்த முழக்கம் கீழிருந்து வந்து, அமைதி பற்றி, நம் எல்லோருக்கும் நேரவிருக்கும் மீளா உறக்கம் பற்றி உரையாடியது. யால்தாவோ ஓரியாந்தாவோ இல்லாத காலத்திலும் கடல் இவ்வாறே முழங்கியது. இப்போதும் முழுங்குகிறது. நாம் மறைந்த பிறகும் இதேபோல் எதையும் பொருட்படுத்தாமல் ஆழ்ந்து முழங்கிக் கொண்டிருக்கப் போகிறது. இந்த இடையறாத தன்மையில் வாழ்வையும் சாவையும் பற்றிய இந்த முழுமையான அலட்சிய பாவத்தில்தான் நமது நிலையான கடைத்தேற்றம், உலகில் உயிர்க் குலத்தின் நிரந்தர இயக்கம், ஓயாத மேம்பாடு ஆகியவற்றின் மர்மம் அடங்கியிருக்கிறது போலும். இள நங்கையின் அருகே கடல், மலைகள், மேகங்கள். விரிந்த வானவெளி ஆகியவற்றின் மோகனச் சூழ்நிலையின் சௌந்தரியத்தில் சொக்கிப் போய், அமைதியடைந்து வைகறையின் மெல்லொளியில் எழிலின் உருவாகத் திகழ்ந்த யுவதியின் அருகே அமர்ந்தவாறு. கூரொவ் சிந்தித்தார். பார்க்கப் போனால் இவ்வுலகத்தில் எல்லாமே, உண்மையில் வனப்பு வாய்ந்தவையே. எல்லாமே அதாவது, வாழ்வின் மேலான இலட்சியங்களையும் மனித மாண்பினையும் மறந்துவிடும்போது நாம் எண்ணும் எண்ணங்களையும் செய்யும் செயல்களையும் தவிர, எல்லாமே வனப்பு வாய்ந்தவையே என்று தம்முள் கூறிக் கொண்டார்.

யாரோ ஒருவன், காவலாளியாயிருக்கும், பக்கத்தில் வந்து அவர்களை உற்றுப் பார்த்துவிட்டு அப்பால் சென்றான். இதிலுங்கூட ஏதோ

மர்மமும் அழகும் மிளிர்வதாகத் தோன்றியது பியதோஸியாவிலிருந்து வரும் கப்பல், விளக்குகள் இன்றி துறையை நெருங்குவது காலைப் புலரொளியில் பளிச்செனத் தெரிந்தது.

“புல்லில் பனி படிந்திருக்கிறது. என நீண்ட மௌனத்துக்குப் பிறகு கூறினாள் ஆன்னா செர்கேயிவ்னா.”

“ஆமாம் திரும்பிச் செல்வோம், நேரமாகி விட்டது.”

நகருக்குத் திரும்பினார்கள். இதன் பின்னர் தினந்தோறும் நடுப் பகலில் அவர்கள் கரையோர நடைபாதையில் சந்தித்தார்கள், பகலுணவும் மாலையுணவும் சேர்ந்து அருந்தினார்கள், உலாவினார்கள், கடலைக் கண்டு வியந்தார்கள். அவள் தனக்குத் தூக்கம் வருவதில்லையென்றும், நெஞ்சு படபடக்கிறதென்றும் குறைப் பட்டுக் கொண்டாள். ஒரே மாதிரியான கேள்விகளை திரும்பத் திரும்பக் கேட்டாள். ஒரு சமயம் பொறாமையாலும், இன்னொரு சமயம் அவர் தன்னைப் போதிய அளவு மதிக்கவில்லையோ என்ற அச்சத்தாலும் துன்புற்றாள். அடிக்கடி அவர், சதுக்கத்திலோ பூங்காவிலோ சுற்றுமுற்றும் யாரும் இல்லாத நேரம் பார்த்து, அவளை அருகே இழுத்துத் தழுவி ஆவேசமாக முத்தமிடுவார். ஒருவித வேலையுமற்ற சுகவாழ்வு கடல் வாடை: யாரேனும் பார்த்துவிடப் போகிறார்களே என்ற அச்சத்துடன் சுற்றுமுற்றும் கண்ணோட்டியவாறு பட்டப்பகலில் முத்தமிட்டுக் கொஞ்சுதல், வெக்கை, கடல் வாடை நன்கு உண்டு நன்கு உடுத்தி வேலை ஏதுமின்றி மிடுக்காய் நடைபோடுவோர் ஓயாமல் கண்ணெதிரே தோன்றி மறைந்த காட்சி இவை எல்லாம் கூரொவுக்குப் புத்துயிரும் ஊக்கமும் அளிப்பனவாய் இருந்தன. அவர் ஆன்னா செர்கேயிவ்னாவை அழகி என்றும், மோகினி என்றும், மெச்சினார். அடங்காத துடிப்புடன் அவளோடு காதல் புரிந்தார் ஓரடி விலகாமல் அவளையே சுற்றிவந்தார். அவளோ அடிக்கடி சிந்தனையில் ஆழ்ந்தாள். தன்னை அவர் மதிக்க வில்லையென்றும், துளிக்கூடக் காதலிக்கவில்லையென்றும் உதவாக்கரைப் பெண்ணாகவே கருதுவதாகவும் ஒப்புக் கொள்ளுமாறு செய்ய எப்போதும் முயன்று வந்தாள். அநேகமாக ஒவ்வோர் இரவும் அவர்கள் வண்டியிலேறி நகருக்கு வெளியே ஓரியாந்தாவுக்கோ அருவிக்கரைக்கோ போவார்கள். இந்த உல்லாசப் பயணங்கள் இன்பமாகவே இருந்தன. இவை ஒவ்வொன்றும் எழிலும் சிறப்பும் மிக்க புதுப் புது மனப்பதிவுகளை அளித்தன. அவளுடைய கணவர் வந்து விடுவாரென எதிர்பார்த்தார்கள். ஆனால் அவரிடமிருந்து கடிதம் மட்டுமே வந்தது. கண்நோய் காரணமாகத் தாம் வெளிச்செல்ல முடியாதபடி ஆகி விட்டதால் அவளை உடனே ஊர் திரும்புமாறு

அதில் அவர் வேண்டிக் கொண்டிருந்தார். ஆன்னா செர்கேயிவ்னா அவசரமாகப் புறப்பட ஆயத்தம் செய்தாள்.

"நான் போவது நல்லதுதான் இதுவே விதி" என்று கூரொவிடம் கூறினாள்.

யால்தாவிலிருந்து அவள் குதிரை வண்டியில் புறப்பட்டாள். அவரும் ரயில் நிலையம் வரை உடன் சென்றார். பகல் முழுவதும் பயணம் செய்தபின்பே ரயில் நிலையம் சேர்ந்தார்கள். ஆன்னா செர்கேயிவ்னா விரைவு வண்டியில் ஏறி, இடத்தில் அமர்ந்தபின், இரண்டாவது மணி அடித்ததும் அவன் கூரொவிடம் "எங்கே இப்படித் திரும்புங்கள். இன்னொரு தடவை உங்களைப் பார்க்கிறேன். இன்னும் ஒரே தடவை. அப்படித்தான்" எனக் கூறினாள். அழவில்லையாயினும் அவள் ஏக்கமே வடிவமாய், நோயுற்றவள் போல இருந்தாள். அவளது உதடுகள் துடித்தன.

"உங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பேன். உங்கள் நினைவாகவே இருப்பேன். ஆண்டவன் உங்களுக்கு அருள்வாராக. என்னைப் பற்றிக் கெடுதலாக நினைக்காதீர்கள். நாம் ஒரேயடியாகப் பிரிகிறோம். மீண்டும் சந்திக்கவே மாட்டோம். அதுதான் சரி. ஏனெனில் நாம் சந்தித்திருக்கவே கூடாது. நல்லது. விடை கொடுங்கள். கடவுள் உங்களுக்கு அருள் பாலிப்பாராக" என்றாள்.

ரயில் விரைவாகச் சென்றுவிட்டது. அதன் விளக்குகள் சீக்கிரமே மறைந்துவிட்டன. ஒரு நிமிடத்திற்கெல்லாம் அதன் தடதடப்புக் கூடக் காதில் விழவில்லை. இந்த இன்ப மயக்கத்துக்கு இந்தப் பித்துக்குச் சட்டென முடிவு கட்டிவிட வேண்டுமென்று எல்லாம் சேர்த்து திட்டமிட்டுச் சதி புரிந்தாற்போல் யாவும் அமைந்தன.

கூரொவ் பிளாட்பாரத்தில் தனியே நின்று இருண்ட தொலைவில் பார்வையைச் செலுத்தியவாறு வெட்டுக் கிளிகளின் கிறீச்சொலி யையும், தந்திக் கம்பிகளின் ரிங்காரத்தையும் அப்போதுதான் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவர் போன்ற உணர்ச்சியுடன் கேட்டார். தமது வாழ்க்கையில் இது இன்னுமொரு எதிர்பாராத சம்பவம் அல்லது தற்செயல் நிகழ்ச்சி என்றும், இதுவும் முடித்து விட்டதென்று எஞ்சியிருப்பதெல்லாம் நினைவு மட்டுமே என்றும் எண்ணினார்ஞ் அவர் உள்ளம் கரைந்து உருகியது. துயருற்றது. அவருக்கு ஓரளவு பரிதாபமாகவுங்கூட இருந்தது. இனி எந்நாளும் அவளை அவர் பார்க்கப் போவதில்லை. அவருடன் இருக்கையில் இந்த யுவதி உண்மையில் இன்பமடையவில்லை. அவர் அவளிடம் நட்பும் பாசமுமாக இருந்தது மெய்தான். ஆயினும் அவளுடன் அவர்

நடந்து கொண்ட முறையில், அவருடைய குரலில், கொஞ்சல்களில் கூட, ஏளனத்தின் சாயல் அல்லவா, பாக்கியசாலியான ஆணின் அதிலும் அவளைப்போல் இரு மடங்கு வயதான ஆணின் மெத்தனமான அகம்பாவச் சாயல் அல்லவா படிந்திருந்தது? அவள் ஓயாமல் அவரை நல்லவரென்றும் அசாதாரண மனிதரென்றும் பெருந்தன்மை வாய்ந்தவரென்றும் கூறி வந்தாள். அவர் உண்மையில் இருப்பது போலன்றி வேறுவிதமாய் அவள் கண்ணுக்குத் தோன்றியிருக்க வேண்டும் அப்படியானால் அவர் தம்மையும் அறியாமலே அவளை ஏமாற்றி விட்டார் என்றுதானே அர்த்தம்...

ரயில் நிலையத்தில் அதற்குள் இலையுதிர்கால வாடை வீசியது. மாலை குளிராயிருந்தது. பிளாட்பாரத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த கூரொவ் "நானும் வடக்கே போக வேண்டிய வேளை வந்துவிட்டது. ஆமாம் புறப்பட்டாக வேண்டும்!" என்று தம்முள் கூறிக் கொண்டார்.

3

அவர் மாஸ்கோவுக்குத் திரும்பி வந்ததும் குளிர்கால நடைமுறைகள் தொடங்கிவிட்டன. வீட்டில் கணப்புகள் மூட்டப்பட்டன. காலையில் குழந்தைகள் பள்ளி செல்ல ஆயத்தம் செய்துகொண்டு தேநீர் அருந்துகையில் இருட்டாகவே இருந்ததால் ஆயா கொஞ்ச நேரத்துக்கு விளக்கேற்ற வேண்டியிருந்தது. கடுங் குளிர் ஆரம்பித்தது. முதன் முதல் வெண்பனி பெய்து, சறுக்கு வண்டியில் முதல் தரம் சவாரி செய்யும் போது வெண்ணிறத் தரையையும் வெண்ணிறக் கூரைகளையும் காண இனிமையாயிருக்கிறது தாராளமாக, சிரமமின்றி மூச்சுவிட முடிகிறது. புத்திளமைப் பருவம் நினைவுக்கு வருகிறது. உறை பனி படிந்து வெண்மையாக ஒளிரும் முதுபெரும் லிண்டன் மரங்களும் பிர்ச் மரங்களும் பெருந்தன்மை வாய்ந்த தோற்றம் பெறுகின்றன. சைப்ரஸ், கூந்தற்பனை மரங்களைச் காட்டிலும் இவை நமக்கு நெருங்கியவை, இவற்றின் அருகிலிருக்கும் போது மலைகளையும் கடலையும் பற்றிய நினைவுகள் தலை காட்டுவதில்லை.

கூரொவ் மாஸ்கோவிலேயே பிறந்து வளர்ந்தவர். அவர் மாஸ்கோ திரும்பிய அன்று வானம் தெளிவாயிருந்தது. கடுங்குளிராய் இருந்தது. மென்முடி உள்வரியிட்ட மேல் கோட்டும் கதகதப்பான கையுறைகளும் அணிந்து பெட்ரோவ்கா வீதிக்கு உலாவச் சென்றார். சனிக்கிழமை மாலை மாதாகோயில் மணியோசையைக் கேட்டதும் அண்மையில் முடிவுற்ற அவரது பயணமும் அவர் சென்றிருந்த இடங்களும் அவற்றின் கவர்ச்சியை அறவே இழந்துவிட்டன. கொஞ்சங் கொஞ்சமாக அவர் மாஸ்கோ வாழ்க்கையில் மூழ்கலானார். தினந்தோதோறும் மூன்று

செய்தியேடுகள் படித்தார். ஆனால் மாஸ்கோச் செய்தியேடுகளைப் படிப்பதில்லை என்பது தமது கோட்பாடென்று சொல்லிக் கொண்டார். கொண்டாட்டங்கள் ஆகிய இந்த சுழல் திரும்பவும் அவரைத் தன்னுள் இழுத்துச் சென்றது. பெயர் பெற்ற வழக்கறிஞர்களும் நடிகர்களும் தமது வீட்டுக்கு வந்து செல்வது பற்றியும் மருத்துவர் கிளப்பில் தாம் ஒரு பேராசிரியருடன் சீட்டாடுவது பற்றியும் முன்பு போலவே பெருமைப்பட்டுக் கொண்டார்... இப்போது அவர் பாடு ஒரே வேட்டை தான்...

ஒரு மாதம் கழிந்ததும் ஆன்னா செர்கேயிவ்னாவின் நினைவு மங்கிவிடும், பரிதாபத்துக்குரிய அவளது புன்னகையுடன், ஏனைய பல பெண்களைப் போல் கனவிலே மட்டும் எப்போதாவது காட்சி தருவாள் என்றுதான் கூரொவ் நினைத்தார். ஆனால் ஒரு மாதத்துக்கு மேல் கழிந்து, குளிர் காலம் அதன் ஒரு மாதத்துக்கு மேல் கழிந்து; குளிர்காலம் அதன் உச்சத்தை அடைந்து விட்டது, அப்போதும் ஏதோ முந்திய நாள்தான் ஆன்னா செர்கேயிவ்னாவை விட்டுப் பிரிந்ததுபோல அவர் நினைவில் யாவும் பசுமையாயிருந்தன. அது மட்டுமல்ல, நாளாக ஆக இந்த நினைவுகள் அதிக வலிவடைந்து வந்தன. சந்தடியற்ற மாலை நேரத்தில், பாடங் கற்கும் குழந்தைகளின் குரல்கள் அவரது படிப்பு அறைக்கு எட்டும் பொழுதும்; ரெஸ்டாரெண்டில் அவர் பாட்டோ, ஆர்கன் வாத்திய இசையோ கேட்கும் பொழுதும், கணப்புப் புகைபோக்கியில் பனிப்புயல் இரையும் பொழுதும், அடர்ந்த அதிகாலை, பியதோஸியாவிலிருந்து வரும் கப்பல், ஆசை முத்தங்கள் எல்லாம் சட்டென அவர் நினைவுக்கு வந்துவிடும். நிகழ்ந்தவற்றை எண்ணிப் பார்த்தவாறே அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடப்பார்; சிரிப்பார். அப்புறம் நினைவுகள் கனவுகளாக மாறும், நடந்தவை நடக்கப் போகிறவற்றுடன் கற்பனையில் கலந்துவிடும். ஆன்னா செர்கேயிவ்னா அவர் களவில் தோன்றவில்லை, நிழல்போல எங்கும் அவர் பின் சென்றாள், எப்போதும் அவரைத் தொடர்ந்தாள். கண்களை அவர் மூட வேண்டியதுதான். உடனே உயிரோவியமாக எதிரே அவள் காட்சியளித்தாள். உண்மையிலிருந்ததைவிட அதிக வனப்புடனும், அதிக இளமையுடனும், அதிக ஒயிலுடனும் தோன்றினாள். தம்மையும் அவர் யால்தாவில் இருந்ததைவிட நல்லவராக இருக்கக் கண்டார் மாலை வேளைகளில் புத்தக அலமாரிகளிலிருந்தும், கணப்பி லிருந்தும், மூலையிலிருந்தும் அவள் எட்டிப்பார்த்தாள். அவள் மூச்சு விடுவதும், அவளது ஆடை இனிமையாகச் சாசரப்பதும் அவர் காதில் விழுந்தன. வீதியில் செல்லுங்கால் எல்லாப் பெண்களையும் விழிகளால் தொடர்ந்து அவளைப் போன்றவள் யாராவது இருக்கிறாளா என்று தேடினார்...

தமது அனுபவங்களை யாரிடமாவது சொல்ல வேண்டுமென்ற அடங்கா ஆசை அவரை ஆட்கொண்டது. ஆனால் வீட்டில் காதலைப் பற்றிப் பேச முடியாது. வெளியே மனம் விட்டுப் பேச யாருமில்லை. குடியிருப்பவர்களிடமோ, வங்கியில் சக ஊழியர்களிடமோ சொல்வதற் கில்லை. தவிர என்னத்தைச் சொல்வது? அப்போது அவர் காதலித்தாரா என்ன? ஆன்னா செர்கேயிவ்னாவுடன் அவருக்கு இருந்த உறவினில் எழிலார்ந்ததோ, கவிதை நயமுடையதோ, அறிவுறுத்துவதோ, அல்லது சுவையானதோ கூட ஏதேனும் இருந்ததா? ஆகவே காதலைப் பற்றியும் பெண்களைப் பற்றியும் பொதுப்பட பேசுவதுடன் திருப்தியடைய வேண்டியிருந்தது. அவர் என்ன சொல்ல விரும்பினார் என்று யாருக்கும் விளங்கவில்லை. அவருடைய மனைவி மட்டும் கரும் புருவங்கள் துடிக்க "இந்தா திமீத்திரி, கோமாளி வேஷம் உனக்குக் கொஞ்சங்கூடப் பொருந்தமாய் இல்லை" என்று சீறினாள்.

ஒரு நாள் இரவு மருத்துவர் கிளப்பில் சீட்டாடி வீட்டு சக ஆட்டக்காரர்களில் ஒருவரான அரசாங்க அலுவலருடன் சேர்ந்து புறப்படுகையில் அடக்க மாட்டாமல் கூரொவ் அவரிடம் கூறினார்.

"யால்தாவிலே எவ்வளவு அற்புதமான பெண்ணுடன் எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது தெரியுமா உங்களுக்கு?"

அந்த அலுவலர் பேசாமல் சறுக்கு வண்டியில் ஏறி உட்கார்ந்த பின் சட்டெனத் திரும்பிக் கூப்பிட்டார்.

"தீமீத்ரி திமீத்ரிச்!"

"என்ன?"

"நீங்கள் சொன்னது சரிதான்: மீன் கறியில் கவிச்சுதான் அடித்தது."

சர்வசாதாரணமான விவரம்தான், ஏனோ கூரோவை இது கொதிப்புறச் செய்தது. அவமானப்படுத்துவதாய் அசிங்கமானதாய் அவருக்குப் பட்டது. எல்லாம் காட்டு மிராண்டி முறைகள், மோசமான மனிதர்கள், ஒன்றுக்கும் உதவாத மாலைப் பொழுதுகள்! உப்பு சப்பற்ற, வெறுமையான பகல்கள், வெறித்தனமான சீட்டாட்டம், வயிறு புடைக்க சாப்பாடு, மிதமிஞ்சிய குடி, ஒரே விஷயத்தைப் பற்றிய ஓயாத பேச்சு. பெரும் பகுதி நேரமும் சக்தியும் யாருக்கும் பயனில்லாத வீண் வேலைகளிலும் திரும்பத் திரும்ப ஒன்றையே விவாதிப்பதிலும் விரையமாகின்றன. இறுதி விளைவு என்னவெனில் குறுகிச் சிறுத்து மண்ணிலே உளைய்ம்படியான, கேவலமான வாழ்வுதான், புன்மை காய்ந்த அற்பங்களில் உழலுவதுதான், இதிலிருந்து தப்பியோடவும் வழியில்லை. பைத்தியக்கார மருத்துவமனையிலோ, கைதிகளது குடியிருப்பிலோ அடைப்பட்டிருப்பது போன்ற நிலைமை.

கூரொவ் இராத் தூக்கமின்றி ஆத்திரத்தால் கொதித்துக் கொண்டிருந்தார். மறு நாள் முழுதும் தலைவலி அவரை வருத்திற்று. அடுத்த இரவுகளிலும் சரிவரத் தூங்க முடியாமல் படுக்கையில் உட்கார்ந்து சிந்தித்தார், இல்லையேல் அறையில் மேலுங் கீழுமாக நடைபோட்டார். குழந்தைகளைக் கண்டாலே கரித்தது, வங்கியை நினைத்ததுமே சுசந்தது. எங்குமே போகப் பிடிக்கவில்லை, எதைப் பற்றியும் பேச விருப்பமில்லை.

டிசம்பர் மாதம் கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது அவர் பயணத்துக்கு ஆயத்தம் செய்தார். ஓர் இளைஞனின் காரியமாகப் பீட்டர்ஸ்பர்க் போவதாக மனைவியிடம் சொல்லிவிட்டு, எஸ். நகருக்குச் சென்றார். எதற்காக? அவருக்கே தெளிவாகத் தெரியவில்லை. ஆன்னா செர்கேயிவ்னாவைப் பார்த்துப் பேச வேண்டும், முடிந்தால் சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது மட்டும் தான் தெரிந்தது.

எஸ்.நகருக்குக் காலையில் போய்ச் சேர்ந்து, ஹோட்டலில் யாவற்றிலும் சிறந்த அறையாகப் பார்த்து அமர்த்திக் கொண்டார் அறையில் தரை முழுவதும் இராணுவக் கம்பள விரிப்பிடப் பட்டிருந்தது. மேஜை மேல் தூசிபடிந்த மசிக்கூடு இருந்தது. உயர்த்திய கரத்தில் தொப்பியைப் பிடித்தவாறு குதிரைச் சவாரி செய்யும் தலையில்லா வீரனின் உருவம் இந்த மசிக்கூட்டை அலங்கரித்தது. ஹோட்டல் காவலாள் அவருக்கு வேண்டிய தகவல்களைத் தெரிவித்தான். அதாவது வான் திதெரித்ஸ் ஸ்தாரோ கன்சார்நயா வீதியில் சொந்த வீட்டில் வசிப்பதாகவும், ஹோட்டலிலிருந்து வீடு தூரமில்லை என்றும் அவர் செல்வச் செழிப்புடன் வாழ்வதாகவும், சொந்தக் குதிரைகளும் வண்டியும் வைத்திருப்பதாகவும், ஊர் முழுவதும் அவரை அறியுமென்றும் சொன்னான். அவரது பெயரை த்ரீதீரித்ஸ் என உச்சரித்தான் காவலாள்.

கூரொவ் அவசரமின்றி நடந்து, ஸ்தாரோ கன்சார் நயா வீதிக்குச் சென்று வீட்டைத் தேடிப் பிடித்தார். அந்த வீட்டின் முன்பக்கத்தில் உச்சியில் கூராணிகளுடன் கூடிய நீளமான பழுப்பு திற வேலியடைப்பு எழுப்பப்பட்டிருந்தது. சன்னலையும் வேலியடைப்பையும் மாறி மாறிப் பார்த்த கூரொவ் "இந்த மாதிரி வேலியடைப்பு எழுப்பினால் எவரும் தப்பி ஓடத்தான் விரும்புவார்" என்று நினைத்துக் கொண்டார்.

இன்று விடுமுறையாதலால் கணவர் அனேகமாய் வீட்டில்தான் இருப்பாரென கூரொவ் சிந்திக்கலானார். இல்லாவிட்டாலும் இப்படித் திடுமென அவள் வீட்டிலேபோய் நின்று அவளைச் சங்கடத்துக்கு உள்ளாக்குவது மதிகெட்ட செயல் குறிப்பு எழுதி அனுப்பலாம். ஆனால் அது கணவர் கைக்குப் போய்ச் சேருமாயின் பெருங்கேடுதான் விளையும்.

தக்க தருணம் வாய்க்கலாம், அவளைப் பார்க்கும்படி நேரலாம் என்று காத்திருப்பதுதான் நல்லதென நினைத்தார். ஆகவே தெருவில் மேலும் கீழுமாய் நடந்து வேலியடைப்பை நெருங்கியதும் நடையைத் தளர்த்திக் கொண்டு வாய்ப்பு கிட்டுமா என்று பார்த்தபடிக் காத்திருந்தார். பிச்சைக்காரன் ஒருவன் வாயிலுக்குள் புகுந்ததையும் நாய்கள் அவனை விரட்டியடித்ததையும் கண்டார். பிறகு ஒரு மணி நேரம் கழித்து, பியானோ இசையின் தெளிவற்ற மெல்லிய நாதங்கள் காதுக்கு எட்டின. வாசிப்பது ஆன்னா செர்கேயிவ்னாவாகத்தான் இருக்குமென நினைத்தார். முன்வாயிற் கதவு திடீரெனத் திறந்தது. யாரோ கிழவி வெளியே வந்தாள். அவள் பின்னால் ஓடி வந்தது அவர் நன்கு அறிந்திருந்த அந்த வெள்ளை நாய். கூரொவ் அதைக் கூப்பிடப் போனார். ஆனால் அவருக்கு நெஞ்சு படபடத்தது, மனக் கிளர்ச்சி அடைந்துவிட்ட அந்த நிலையில் நாயின் பெயர் அவர் நினைவுக்கு வரவில்லை.

அவர் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தார், அந்தப் பழுப்பு நிற வேலியடைப்பின் மீது அவருக்கு வெறுப்பு மேலும் மேலும் கடுமையாகியது. தம்மைப் பற்றி ஆன்னா செர்கேயிவ்னா மறந்து விட்டாள், பொழுது போக்குக்காக இதற்குள் வேறு ஆள் யாரையேனும் பிடித்துக் கொண்டிருப்பாள் என்று இப்பொழுது எரிச்சலாய் நினைத்துக் கொண்டார். பொழுது விடிந்து பொழுது போனால் இந்தப் பாழாய்ப் போன வேலியடைப்பைப் பார்க்க வேண்டியுள்ள இளம் பெண் வேறு என்ன செய்வாள்? அவர் ஓட்டல் அறைக்குத் திரும்பினார், என்ன செய்வதென்ற தெரியாமல் சிறிது நேரம் சோபாவில் உட்கார்ந்திருந்தார், பிறகு சாப்பாட்டை முடித்துக் கொண்டு நெடுநேரம் உறங்கினார். அவர் கண்விழித்தபோது மாலையாகிவிட்டது இருண்ட சன்னல்களை நோக்கியவாறு,

“அசட்டு வேலை, தொல்லை பிடித்தது!” என்று தம்முள் கூறிக் கொண்டார். “எப்படியோ தூங்கித் தொலைத்து விட்டேன் இனி இராப் பொழுதை எப்படிக் கழிப்பது?”

மருத்துவமனைப் போர்வை போன்ற, மலிவான சாம்பல் நிறக் கம்பளியைப் போர்த்திக் கொண்டு கட்டிலில் எழுந்து உட்கார்ந்து, சிடு சிடுப்புடன் தம்மைத் தாமே கடிந்து கொண்டார்.

“நீயும் உன் நாய்க்காரச் சீமாட்டியும் பிரமாதச் சாதனைதான்... பெரிதாய் ஓடி வந்தாயே, என்ன ஆயிற்று பார்!”

காலையில் .அவர் ரயில் நிலையத்தில் வந்து இறங்கியபோது உள்ளூர் நாடக மன்றத்தில் “கெய்ஷா” நாடகம் அன்று முதல் முறையாக நடிக்கப்படப் போவதாகக் கொட்டை எழுத்துகளில் அறிவித்த

விளம்பரத்தைக் கவனித்திருந்தார். இப்போது அது நினைவுக்கு வரவே, உடை மாற்றிக் கொண்டு நாடக மன்றத்துக்குப் புறப்பட்டார்.

"..." நாடகமன்றம் நிறைந்திருந்தது. எல்லாச் சிற்றூர் நாடக மன்றங்களைப் போலவே இங்கும் சரவிளக்குகளுக்கு மேல் புகை மண்டியிருந்தது, சுற்று மாடியடுக்குகளில் இருந்தோர் அமைதியின்றி இரைந்து கொண்டிருந்தார்கள். முன்வரிசையில், ஆடம்பரமான உள்ளூர்ப் பெரிய மனிதர்கள் திரை எப்போது உயர்த்தப்படுமென்று எதிர்பார்த்தவாறு பின்பக்கம் கையை இணைத்துக் கொண்டு நின்றிருந்தார்கள். ஆளுநரது மாடத்தில் ஆளுநரின் மகள், மென்முடிக் கழுத்துச் சுற்றாடை அணிந்து முன்னிருக்கையில் வீற்றிருந்தாள். ஆளுநர் அடக்கத்துடன் திரைச்சீலையின் மறைவில் அமர்ந்திருந்தார். அவருடைய கைகள் மட்டும்தான் வெளியே தெரிந்தன. மேடைத் திரை அசைந்தது, வாத்தியக் குழு நெடுநேரம் சுருதி சேர்த்துக் கொண்டிருந்தது. வரிசையாக எல்லாரும் உள்ளே வந்து இருக்கைகளில் அமர்ந்தபோது கூரொவின் கண்கள் பரபரப்புடன் அவர்களைத் துழாவிக் கொண்டிருந்தன.

ஆன்னா செர்கேயிவ்னாவும் வந்தாள். மூன்றாவது வரிசையில் அமர்ந்து கொண்டாள். கூரொவின் கண்கள் அவளை வந்தடைந்ததும் அவருக்கு இதயம் வெடுக்கென நின்றுவிட்டது போலிருந்தது. உலகில் தமக்கு இவளைக் காட்டிலும் அன்புக்குரிய நெருங்கிய ஆத்மா யாரும் இல்லை, இவள் இல்லையேல் தமக்கு இனிமை ஏதும் இல்லை என்பது அக்கணமே அவருக்குத் தெளிவாகியது. சிறு உருவாய் நகரத் திரளில் கண்ணுக்குத் தெரியாதபடி மறைத்துவிடும்படியானவள், தனிச் சிறப்பு ஏதும் இல்லாதவளாய் அசட்டுக் காட்சிக் கண்ணாடியைக் கையில் பிடித்திருந்தவள். இப்பொழுது இவள் அவருடைய வாழ்வு அனைத்துக்கும் மையமாகிவிட்டாள். அவரது துன்பமும் இன்பமுமாகி, அவரது வாழ்வில் இனி அவளே எல்லாம் என்றல்லவா ஆகிவிட்டாள். பக்குவமடையாத சுற்றுக்குட்டிப் பிடில்காரர்களையுடைய சோபையற்ற வாத்தியக் குழுவிடமிருந்து எழுந்த ஒலிகளைக் கேட்டு அயர்ந்தவாறு, இவ்வளவு அழகாய் இருக்கிறாளே என்று எண்ணினார்... எண்ணங்களிலும் கனவுகளிலும் மிதந்தார்.

ஆன்னா செர்கேயிவ்னாவுடன் கூட வந்தவர் பின்புறம் கவிந்த தோள்களையுடைய நெட்டையான இளைஞர். சிறிய கிருதா வைத்திருந்தார். அடிக்கொரு தரம் தலையை ஆட்டியவாறு நடந்து வந்து அவளுக்குப் பக்கத்து இருக்கையில் அமர்ந்து கொண்டார். எந்நேரமும் யாருக்கோ சிரம் தாழ்த்தி வணக்கம் தெரிவிக்கிறாரென நினைக்கத் தோன்றியது. அவளது கணவராகவே இருக்கவேண்டும்

முன்பு யால்தாவில் அவள் மனம் கசந்து "அடிவருடி." என்று குறிப்பிட்டாளே அந்த ஆளாகவே இருக்கவேண்டும். மெய்தான், அவரது ஒல்லியான நெட்டை உருவிலும் கிருதாவிலும் உச்சந் தலையிலிருந்த சிறு வழுக்கையிலும் பணியாளுக்குரிய அடிவருடித்தனம் தென்படத்தான் செய்தது. அவர் முகத்தில் இனிப்பான புன்னகை பூத்திருந்தது. பணியாளது முறை உடுப்பிலுள்ள பணிச்சின்னவில்லையைப் போல் அவரது கோட்டின் மார்பில் ஏதோ ஒரு விஞ்ஞானக் கழகத்தில் பதக்கச் சின்னம் பளிச்சிட்டது.

முதலாவது இடைவேளையின்போது கணவர் புகைபிடிப்பதற்காக வெளியே சென்றார். அவள் மட்டும் தனியே இருக்கையில் அமர்ந்திருந்தாள். சற்று பின்னால் உட்கார்ந்திருந்த கூரொவ் அவளிடம் சென்று புன்னகையை வலிய வருவித்துக் கொண்டு நடுங்கும் குரலில் "வணக்கம்" என்றார்.

அவள் நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். உடனே அவளுக்கு முகம் வெளிறிவிட்டது. கலவரத்துடன் மறுபடியும் அவரை உற்றுப் பார்த்தாள். அவளால் தன் கண்களை நம்ப முடியவில்லை. கையிலிருந்த காட்சிக் கண்ணாடியையும் விசிறியையும் இறுகப் பிடித்து நெரித்தாள். மூர்ச்சித்து விடாமல் இருக்கும் பொருட்டு அரும்பாடு பட்டாள் என்பது தெரிந்தது. இருவரும் மௌனமாயிருந்தார்கள். அவள் வீற்றிருந்தாள், அவளது குழப்பத்தைக் கண்டு மிரண்டு போன கூரொவ் அவளுக்குப் பக்கத்தில் உட்காரத் துணியாமல் நின்று கொண்டிருந்தார். சுருதி கூட்டப் பெற்ற பிடில்கள் புல்லாங் குழல்களுடன் சேர்ந்து இசைத்தன. ஒன்றும் புரியாமல் இருவரும் கலங்கினர். நாற்புறமிருந்தும் எல்லோரும் தங்களையே நோக்குவதாய் நினைத்தனர். முடிவில் அவள் எழுந்து வெளிச் செல்லும் வாயில் பக்கம் நடந்தாள், அவர் பின் தொடர்ந்தார். இருவரும் எங்கே போவது என்று தெரியாமல் நடைகளில் நடந்தார்கள். படிக்கட்டுகளில் ஏறி இறங்கினார்கள். நீதித்துறை அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோருக்குரிய உடுப்புகள் அணிந்தவர்கள், பதக்கங்கள் பூண்டவர்கள், அவர்கள் முன்தோன்றி மறைந்தார்கள். சீமாட்டிகள் பளிச்சிட்டுச் சென்றனர். மாட்டல்களில் தொங்கிய மென்முடிக் கோட்டுக்கள் கண் முன்னால் வந்து நின்ற பின் மறைந்துபோயின. காற்று குப்பெனக் குளுமையாய் சிகரெட்டுத் துண்டுகளின் வீச்சம் அதில் மிதந்து வந்தது. கூரொவுக்கு நெஞ்சின் படபடப்பு காதில் இரைந்தது.

"அட கடவுளே! எதற்காக இங்கே இவர்கள் எல்லாரும்... எதற்காக இந்த வாத்தியக் குழு..." என்று வேதனையுடன் நினைத்தார்.

திடீரென அவருக்கு நினைவு வந்தது. அன்று யால்தாவிலிருந்து ஆன்னா செர்கேவ்னாவை வழியனுப்பியதும் எல்லாம் முடிந்து விட்டது. இருவரும் இனி ஒரு போதும் சந்திக்கப் போவதில்லை என்று தமக்குள் சொல்லிக் கொண்டது நினைவு வந்தது. ஆனால் முடிவு இப்போது நெடுந் தொலைவுக்கு அப்பால் அல்லவா சென்றுவிட்டது.

"மேல் வகுப்புக்குப் போகும் வழி" என்று குறிக்கப்பட்டிருந்த இருளடைந்த குறுகலான படிக்கட்டின் பக்கம் வந்ததும் அவள் நடையை நிறுத்தினாள்.

"துணுக்குற்று மிரளச் செய்து விட்டீர்கள்!" என்று அவள் மூச்சு விட முடியாமல் திணறியவாறு சொன்னாள். இன்னமும் கதிகலக்கம் அவளை விட்டு நீங்கவில்லை, முகம் வெளிறிட்டுதான் இருந்தது. "ஐயோ, என்னைத் துணுக்குற்று மிரளச் செய்து விட்டீர்கள்! உயிரே போய் விட்டது. ஏன் இங்கே வந்தீர்கள்? ஐயோ, எதற்காக வந்தீர்கள்?" என்றாள்.

"ஆன்னா, இதைக் கேள்" என்று தணிவான குரலில் பதற்றத்துடன் அவசரமாய் அவர் கூறினார். "ஆன்னா இதைக் கேள். இதை புரிந்து கொள்ள வேண்டும்... மன்றாடிக் கேட்கிறேன். புரிந்துகொள்ள முயற்சி செய்யவேண்டும்."

அவள் அச்சமும் மன்றாடலும் காதலும் கலந்த பார்வையை அவர் மீது பதித்தாள். பிறகு அவரது முகச் சாயலைத் தன் நினைவில் நிலையாகப் பதிய வைக்க முயலுவதுபோல் அப்படி அவரை அசங்காமல் உற்றுப் பார்த்தாள்.

"நான் பட்ட துன்பத்துக்கு அளவே இருக்காது" அவரது பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே அவள் தொடர்ந்து கூறினாள். "வேறு எதைப் பற்றியும் நினைக்க முடியாதவளாய் இத்தனை காலமும் உங்களையே நினைத்திருந்தேன். உங்களைப் பற்றிய நினைவுகளில் தான் உயிர் வாழ்ந்து வந்திருக்கிறேன். யாவற்றையும் மறக்க வேண்டும் என்றுதான் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன். ஐயோ, நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்?"

மேலே நடைவழியில் நின்று புகை பிடித்துக்கொண்டிருந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இருவர் கீழே பார்த்தார்கள். ஆனால் கூரொவ் எதையும் லட்சியம் செய்யாமல் ஆன்னா செர்கேயிவ்னாவை அருகே இழுத்து அணைத்து மாறி மாறி முகத்திலும் கன்னங்களிலும், கரங்களிலும் முத்தமிட்டார்.

“என்ன செய்கிறீர்கள், ஐயோ, என்ன செய்கிறீர்கள்? அவள் மெல்ல அவர் பிடியிலிருந்து விலகிக் கலவரத்துடன் கூறினாள். “இருவரும் சித்தம் கலங்கியவர்கள் ஆகிவிட்டோம். இன்றைக்கே திரும்பிப் போய்விடுங்கள். இந்தக் கணமே போய்விடுங்கள்... எல்லாத் தெய்வங்களின் பெயராலும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.. யாரோ வருகிறார்கள்!” என்றாள்.

கீழிருந்து யாரோ மாடிப்படியேறி வந்து கொண்டிருந்தார்.

“நீங்கள் போய் விடத்தான் வேண்டும்” என்று ஆள்ளா செர்கேயினா இரகசியக் குரலில் தொடர்ந்து கூறினாள். “காதில் விழுகிறதா, திமீத்ரி திமீத்ரிச்? நான் மாஸ்கோ வந்து உங்களைச் சந்திக்கிறேன். எந்நாளும் எனக்கு மகிழ்ச்சி இல்லை. இது காறும் இருந்ததில்லை. இப்போது இல்லவே இல்லை. இனிமேலும் இருக்கம் போவதில்லை. ஆகவே என்னை மேலும் துன்புறுத்த வேண்டாம். நிச்சயம் மாஸ்கோ வருவேன் உங்களைச் சந்திப்பேன். ஆணையிட்டு சொல்கிறேன். இப்போது நாம் பிரிந்தாக வேண்டும்! என் அன்பே, ஆருயிரே நாம் விடை பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!” என மொழிந்தாள்.

அவர் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டுப் படிக் கட்டில் அவள் வேகமாகக் கீழே இறங்கினாள், மீண்டும் மீண்டும் அவனாத் திரும்பிப் பார்த்துக் கொண்டாள். மெய்யாகவே அவள் துன்புற்றாள் என்பதை அவளது விழிகள் காட்டின. கூரொவ் சற்று நேரம் நின்று உற்றுக் கேட்டு விட்டு, சந்தடியெல்லாம் அடங்கிப் போனதும் அங்கிருந்து விலகி, மேல் கோட்டை வாங்கிப் போட்டுக் கொண்டு நாடக மன்றத்தை விட்டு வெளியே சென்றார்.

4

ஆன்னா செர்கேயில்னா மாஸ்கோவுக்கு வந்து அவரைச் சந்திக்கத் தொடங்கினாள். மாதர்நோய் நிபுணர் ஒருவரைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று கணவரிடம் கூறிவிட்டு இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை எஸ்.நகரிலிருந்து புறப்பட்டு வந்தாள். அவள் கணவர் அதை நம்பவும் செய்தார். நம்பாமலும் இருந்தார். மாஸ்கோவில் எப்போதும் அவள் “ஸ்லாவ்யான்ஸ்கிய் பஜார்” ஓட்டலில் தங்கினாள். வந்திறங்கியதும் சிவப்புக் குல்லா அணிந்த ஓர் ஏவலாள் மூலம் கூரொவுக்குச் செய்தி சொல்லி அனுப்பினாள் கூரொவ் அந்த ஓட்டலுக்குச் சென்று அவளைச் சந்திப்பது வழக்கம். மாஸ்கோவில் யாருக்கும் இது தெரியாது.

குளிர்காலத்தில் ஒருநாள் காலை கூரொவ் அவளைக் காணச் சென்றார் (முந்திய நாள் மாலை ஏவலாள் வந்தபோது அவர் வீட்டிலில்லை)

மகளுடைய உயர்நிலைப் பள்ளியும் அந்த வழியில் இருந்ததால் அவளை அங்கே கொண்டு போய் விடலாமென்று தம்முடன் அழைத்துச் சென்றார். ஈரம் தோய்ந்த பெரும் திவலைகளாக வெண்பனி பெய்து கொண்டிருந்தது.

“வெப்பநிலை மூன்று டிகிரியாக இருந்த போதிலும் பனி பெய்கிறது பார்" என்று மகளிடம் சொன்னார் கூரொவ், "இந்த வெப்ப நிலை தரையருகே மட்டுத்தான். வாயு மண்டலத்தின் மேலடுக்குகளில் வெப்பநிலை வேறாயிருக்கும்.”

“அதிருக்கட்டும். அப்பா, குளிர்காலத்தில் இடி இடிப் பதில்லையே. ஏன்?” என்று கேட்டாள் பெண்.

அவர் இதைப் பற்றியும் அவளுக்கு விளக்கினார். இவ்வாறு மகளுடன் பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில் அவர் வேறு விஷயங் களைப் பற்றிச் சிந்தனை செய்தார். தமது காதலுக்கு உரியவளைச் சந்திப்பதற்காகச் செல்வதையும், தமது இந்தக் காதல் வெளியே யாருக்கும் தெரியாததாய் இருப்பதையும். இனியும் அவ்வாறே இருக்கப் போவதையும் அவர் நினைத்துப் பார்த்தார். அவர் இரட்டை வாழ்க்கை வாழ்ந்து வந்தார். ஒன்று, எல்லார் கண்ணுக்கும் தெரியும்படியான பகிரங்க வாழ்க்கை, வழக்க வழியிலான உண்மையும் வழக்க வழியிலான ஏமாற்றும் மிகுந்தது. அவரது நண்பர்களும் அவருக்குத் தெரிந்த ஏனைய எல்லாரும் வாழ்ந்து வந்ததற்கு முற்றிலும் ஒத்தது. இன்னொன்று மறைவில் நடைபெற்ற இரகசிய வாழ்க்கை, நிலைமை களின் விபரீத இணைவின் சந்தர்ப்பவசமான இணைவாகவும் இருக்கலாம் - காரணமாய், எவை எல்லாம் அவருக்கு முக்கியமாகவும் கருத்துக்கு உரியனவாகவும் இன்றியமையாதனவாகவும் இருந்தனவோ, எவற்றில் அவர் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளாமல் உள்ளப் பூர்வமாய் ஈடுபட்டு வந்தாரோ எவை அவரது வாழ்வின் உட்கருவாய் இருந்தளவோ அவை யாவும் வெளியே தெரியாதபடி இரகசியமாய் நடந்தேறின. அதேபோது அவரிடமிருந்த பொய்மையெல்லாம். தம்மையும் தம்மிடமிருந்த உண்மையையும் மூடி மறைத்துக் கொள்ள அவர் பயன்படுத்திக் கொண்ட வெளி வேடங்கள் எல்லாம் உதாரணமாக வங்கியில் அவரது வேலை, கிளப்பில் அவரது விவாதங்கள், அவரது கீழ் இனத்தவர் ஆண்டு விழாக் கொண்டாட்டங்களுக்கு, மனைவியுடன் கூட போய் வந்தது ஆகியவை எல்லாம் மறைவின்றிப் பகிரங்கமாய் நடந்தேறின. தம்மையே அளவுகோலாகக் கொண்டு அவர் ஏனையோரையும் மதிப்பிட்டார். கண்ணுக்கு தெரிந்தவற்றை அவர் நம்பவில்லை, ஒவ்வொருவர் வாழ்விலும் மெய்யானவையும் சுவையானவையும் இருப்பவை, யாவும் வெளியே தெரியாதபடி இரவின் இருட்டில் இரசியமாக நடத்தேறுவதாய் அனுமானித்துக் கொண்டார்.

ஒவ்வோர் ஆளின் வாழ்வும் மர்மத்தையே மையமாகக் கொண்டு உழலுகிறது, அதனால்தான் தனிப்பட்ட சொந்த இரகசியங்களுக்குத் தக்க மதிப்பு அளிக்கப்பட வேண்டும் என்று பண்பட்டவர்கள் எல்லாரும் அப்படி வலுவாய் வற்புறுத்துகிறார்களோ, என்னமோ என்று அவர் நினைத்தார்.

மகளை உயர்நிலைப் பள்ளி வரை கொண்டுபோய்விட்டபின் கூரொவ் "ஸ்லாவ்யான்ஸ்கிய் பஜார்" ஓட்டலுக்குச் சென்றார். முன் கூடத்தில் மேல் கோட்டைக் கழற்றிவைத்துவிட்டு மாடிக்குச் சென்று அறைக் கதவை மெல்லத் தட்டினார். ஆன்னா செர்கேயிவ்னா அவருக்கு மிகவும் பிடித்தமான பழுப்பு நிற உடையணிந்திருந்தாள். பயணத்தாலும் பரபரப்பினாலும் களைத்து ஓய்ந்து போய், முந்திய நாள் மாலையிலிருந்தே அவரது வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள். அவள் முகம் வெளிறியிருந்தது. புன்னகை புரியாமலே அவரை உற்று நோக்கினாள். ஆயினும் அறைக்குள் அவர் சேர்வதற்குக் கூட அவகாசம் அளிக்காமல் பாய்ந்தோடி வந்து அவர் மார்போடு ஒட்டிக் கொண்டாள். பல ஆண்டுகளாகச் சந்திக்காதது போல் அப்படி நெடுநேரம் இதழ் பதித்து முத்தமிட்டுக் கொண்டார்கள்.

"என்ன சேதி? எப்படி இருக்கிறாய்" என்று கேட்டார் அவர் "புதிதாய் ஏதேனும் நடந்ததா?"

"இதோ சொல்கிறேன். ஒரு நிமிடம்... பேச முடியவில்லை..."

அழுகை பீறிட்டுக் கொண்டுவந்ததால் அவளால் பேச முடியவில்லை. எதிர்ப் பக்கம் திரும்பி, கைக் குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"துயரம் தீர அழுது நிம்மதியடையட்டும். காத்திருக்கலாம்." என்று நினைத்து, அவசரமின்றி அவர் சாய்வு நாற்காலியில் அமர்த்தார். மணியடித்து அவர் தேநீர் கொண்டுவரச் சொன்னார். பிறர் அவர் தேநீர் அருந்தியபோதும் சன்னலைப் பார்த்த படிதான் அவள் நின்று கொண்டிருந்தாள். உணர்ச்சி மேலிட்டவளாய்க் கண்ணீர் இருவரது வாழ்க்கையும் சோகம் வாய்ந்ததாய் இருப்பதை நினைத்து உள்ளம் வெதும்பினாள். திருடர்களைப் போல் அல்லவா யார் கண்ணிலும் படாமல் இருவரும் இரகசியமாகச் சந்திக்க வேண்டியிருக்கிறது. இருவரது வாழ்க்கையும் பாழாகி விட்டதே.

"வேண்டாம். அழாதே!" என்றார் அவர். அவருக்குத் தெளிவாகவே தெரிந்தது. தம் இருவரது காதலும் விரைவில் முடிவடைய போவதில்லை. இது எப்போது முடிவுறும் என்று யாராலும் சொல்வதற்கில்லை என்பது

தெளிவாகவே தெரிந்தது. ஆன்னா செர்கேயிவ்னாவுக்கு அவர் மீது இருந்த காதல் நாளுக்கு நாள் மேலும் மேலும் ஆழமாகியே வந்தது. அவரை அவள் தனக்குரிய தெய்வமாகக் கொண்டிருந்தாள். அவளிடம் போய் இதெல்லாம் ஒரு நாள் முடிவடைந்ததாக வேண்டுமென்று சொல்லிப் பயன் இல்லை. ஒரு போதும் அவள் நம்பமாட்டான்"

அருமையாய் அன்பு மொழிகள் சொல்லி அவளைத் தேற்றும் நோக்கத்துடன் கூரொவ் அவளிடம் சென்று அவளது தோள்களை அணைத்துப் பிடித்துக் கொண்டபோது திடுமென நிலைக் கண்ணாடியில் தமது உருவம் தெரியக் கண்டார்.

ஏற்கெனவே அவருக்குத் தலை நரைக்கத் தொடங்கியிருந்தது. கடந்த சில ஆண்டுகளில் இப்படித் தாம் மூப்படைந்து விட்டதைக் கண்டபோது அவருக்கு வியப்பாய் இருந்தது அவரது கைகளால் அணைக்கப்பட்டிருந்த அந்தத் தோள்களோ கதகதப்புடன் துடித்தன. இன்னும் இளமைப் பூரிப்பும் எழிலும் வாய்ந்திருந்த இந்த ஜீவனுக்காக, விரைவில் தம்மைப் போலவே வாடி வதங்கவிருந்த இந்த ஜீவனுக்காக அவர் உள்ளம் கரைந்து உருகியது. அவள் எதற்காக இப்படி அவரைக் காதலிக்கிறாள்? பெண்கள் எப்போதுமே அவரை அவரது உண்மை உருவில் அல்லாமல் வேறொரு உருவில் கண்ணுற்று வந்தார்கள். அவர்கள் காதல் கொண்டது அவர் மீதல்ல. அவர்களது கற்பனையின் படைப்பான வேறொரு ஆளின் மீது வாழ்நாள் முழுதும் அவர்கள் ஆர்வத்துடன் தேடிக் கொண்டிருந்த அந்த ஆளின் மீது அவர்கள் காதல் கொண்டார்கள். அவர்கள் தங்களது தவறைக் கண்டு கொண்ட பின்னரும் அவர்கள் முன்பு போலவே தொடர்ந்து அவரைக் காதலித்தார்கள். அவர்களில் ஒருத்தியாவது அவரால் இன்பமடைந்த தில்லை. காலம் கழிந்து சென்றது, அவர் வெவ்வேறு பெண்களையும் சந்தித்து நெருங்கிய உறவு கொண்டார், பிறகு பிரிந்து சென்றார். ஆனால் யார் மீதும் அவர் காதல் கொண்டதில்லை. அவர்களிடையே என்னென்னமோ இருதது, காதல் மட்டும் இருந்ததில்லை.

இப்போதுதான். தலை நரைத்த பிறகு வாழ்வின் முதன் முதல் மெய்யாகவும் முழுமையாகவும் காதல் கொண்டார்.

ஆன்னா செர்கேயிவ்னாவும் அவரும் ஒருவரை ஒருவர் நெருங்கிய அத்யந்த முறையில், கணவரும் மனைவியும் போலக் காதலித்தனர், உயிருக்கு உயிரான நண்பர்கள் போல ஒருவரை ஒருவர் நேசித்தனர். இருவரும் ஒருவருக்காக ஒருவர் விதியால் திட்டமிடப்பட்டதாக அவர்களுக்குத் தோன்றியது. அவளுக்கு வேறோரு கணவராகவும் அவருக்கு வேறொருத்தி மனைவியாகவும் இருந்தது ஏனென்று

அவர்களுக்கு விளங்கவில்லை. பருவம் மாறியதும் மண்டலம் விட்டு மண்டலம் செல்லும் ஆணும் பெண்ணுமான இரு பறவைகளை யாரோ பிடித்துத் தனித்தனிக் கூண்டுகளில் அடைத்துவிட்டது போன்றிருந்தது அவர்களது நிலைமை. கடந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் இருவரும் புரிந்த வெட்கத்துக்குரிய எல்லாத் தவறுகளையும் ஒருவருக்கு ஒருவர் மன்னித்துக் கொண்டு விட்டார்கள். இந்தக் காதல் இருவரையும் மாற்றி விட்டதை இருவரும் உணர்ந்தனர்.

முன்பெல்லாம் மனச் சோர்வு ஏற்பட்டதும் மனத்துக்குத் தோன்றிய எந்த நியாயத்தையும் கொண்டு அவர் தம்மைத் தேற்றிக் கொள்வது வழக்கம். இப்பொழுது அவருக்கு இந்த நியாயங்கள் பொருளற்ற வையாகி விட்டன. ஆழ்ந்த இரக்கம் அவரை உள்ளம் குழையச் செய்தது. நேர்மை வாய்ந்தவராய், அன்பு மிக்கவராக இருக்க விரும்பினார்.

“அழாதே என் கண்ணே, வேண்டிய மட்டும் அழுதுவிட்டாய், போதும்... வா, பேசுவோம், என்ன செய்வது என்று ஆலோசிப்போம்” என்றார்.

பிறகு அவர்கள் நெடுநேரம் கலந்தாலோசித்தார்கள். யார் கண்ணிலும் படாமல் மறைப்பதும் ஏமாற்றுவதும் வெவ்வேறு நகர்களில் வசிப்பதும் நெடுநாள் சந்திக்காமலிருப்பதும் எல்லாம் தேவைப்படாதபடிச் செய்வது எப்படி, சகிக்க முடியாத இந்த விலங்குகளைத் தகர்ப்பது எப்படி என்று ஆலோசனை செய்தார்கள்.

தலையை இறுகப் பற்றியவாறு “எப்படி?... எப்படி?... எப்படி?” என்று திரும்பத் திரும்பக் கேட்டார் கூரொவ். தீர்வு நெருங்கி வந்துவிட்டது. இன்னும் இரண்டு விரற்கடையே பாக்கி, பிறகு வனப்பு மிக்க புது வாழ்வு ஆரம்பமாகிவிடும் என்பதாகத் தோன்றியது ஆனால் மறுகணமே, முடிவுக்கு இன்னும் நெடுந்தொலைவு இருக்கிறது, யாவற்றிலும் கடினமான, மிகச் சிக்கலான பகுதி இப்போதுதான் ஆரம்பமாகிறது என்பதை இருவரும் உணர்ந்தார்கள்.

கூறு - I - இல, கண‹

1. பொருள் பொதி%து சொற்றொடர் அமைத்த™

தமிழில் உள்ள சொற்களில் குறில், நெடில் வேறுபாடுகள் உள்ளன. சொல்லின் முதலில் குறிலாக வரும் சொற்களுக்கும் சொல்லின் முதலில் நெடிலாக வரும் சொற்களுக்கும் வெவ்வேறான பொருள் உள்ளன.

செய™பாடு - 1

1.	கொள்	-	கோள்
	கொள்	-	தெரிந்து கொள்ளுதல்
	கோள்	-	ஒன்பது கோள்கள்
	தொடர்	-	தெரிந்து கொள் பூமியும் ஒரு கோள்தான்.
2.	சிறு	-	சீறு
	சிறு	-	அளவு
	சீறு	-	கோபம்
	தொடர்	-	திருவிழாக்களில் சிறு சிறு வியாபாரிகளிடம் ஊரார் சீறி விழுந்தனர்.
3.	கொடு	-	கோடு
	கொடு	-	இரவல் கொடுத்தல்
	கோடு	-	நேர்க்கோடு
	தொடர்	-	அகிலன் எழுதுகோல் கொடுத்ததால் நான் குறிப்பேட்டில் கோடு போட்டேன்.
4.	விதி	-	வீதி
	விதி	-	முன்னரே தீர்மானிக்கப்பட்டது
	வீதி	-	தெரு
	தொடர்	-	சிலம்பில் கண்ணகி தன் விதிப்படி மதுரை வீதியில் நின்றாள்.

செய™பாடு - 2

1.	சிலை	-	சீலை
	சிலை	-	இறைவன் திருவுருவம்

	சீலை	-	துணி
	தொடர்	-	இறைவன் சிலையைத் திரைச்சீலையால் மறைத் திருந்தனர்.
2.	தொடு	-	தோடு
	தொடு	-	தொடுதல்
	தோடு	-	அணிகலன்
	தொடர்	-	தோடு அணிந்த சிறுமியர் தொட்டு விளையாடுகின்றனர்.
3.	மடு	-	மாடு
	மடு	-	நீர்நிலை
	மாடு	-	விலங்கு
	தொடர்	-	மாடு மடுவில் தண்ணீர் குடித்தது.
4.	மலை	-	மாலை
	மலை	-	சிகரம்
	மாலை	-	சிறுபொழுது
	தொடர்	-	மலையில் மேய்ந்த மாடுகள் மாலையில் வீடு திரும்பின.

செய™பாடு - 3

5.	வளி	-	வாளி
	வளி	-	காற்று
	வாளி	-	பாத்திரம்
	தொடர்	-	வளியை வாளியால் நிரட்பி அடைக்க முடியாது.
6.	விடு	-	வீடு
	விடு	-	விட்டொழித்தல்
	வீடு	-	மனை
	தொடர்	-	கவலைகளை விட்டு வாழ்வதுதான் வீடு
7.	நடு	-	நாடு
	நடு	-	இடைப்பட்டது
	நாடு	-	தேசம்
	தொடர்	. -	நடுவண் அரசு நாட்டு மக்களுக்குக் கொரோனா குறித்த விழிப்புணர்வை ஊடகத்தில் வழங்கி வருகிறது.

2. ஓரெழுத்து ஒரு மொழி

ஓரெழுத்து ஒரு மொழி என்பது ஒரே ஒரு எழுத்து ஒரு சொல்லாக வந்து பொருள் தருவது ஆகும். ஒரே ஒரு எழுத்து மட்டும் தனித்து வந்து ஒரு பொருளைக் குறிக்குமானால் அதற்கு ஓரெழுத்து ஒரு மொழிச் சொல் என்று பெயர்.

எடுத்துக்காட்டு: "தை" - தை என்ற எழுத்து மாதத்தின் பெயரைக் குறிக்கிறது. இதே எழுத்து தைத்தல், பொருத்துதல் என்ற பொருளிலும் வரும். இதுபோன்ற ஒரே ஒரு எழுத்தானது ஒரு பொருளைத் தரக்கூடியது ஓரெழுத்து ஒரு மொழியாகும்.

ஓரெழுத்து ஒரு மொழி, கு சில எடுத்து, கா+ டு

- அ - அந்த, சுக்கு, திப்பிலி, எட்டு
- ஆ - பசு, ஆச்சாமரம், சிவஞானம், இச்சை
- இ - சுட்டு (அங்கே, அவன்), இந்த, அன்பு, ஆச்சரியம்
- ஈ - அம்பு, குகை, இலட்சுமி, கடவுள், தா, ஈ, தேனீ, வண்டு, பாம்பு
- உ - சிவன், பிரமன், சிவசக்தி, இரண்டு
- ஊ - உணவு, இறைச்சி, சிவன், உண்ணல்
- எ - எந்த, ஏழு என்னும் எண்ணின் குறி
- ஏ - அம்பு, விளி, இடைச்சொல், எதிர்மறைப்பொருள், சிவன், திருமால்
- ஐ - அழகு, அரசன், தலைவன், கடவுள், குரு, சிவன், தும்பை, பருந்து, வியப்பு
- ஒ - நிகர், பொருந்து
- ஓ - வினா, வியப்பு, ஆபத்து, ஒழிவு
- ஔ - பூமி, ஆனந்தம், கடித்தல்
- க - ஒன்று, அரசன், ஆன்மா, உடல், காற்று, பிரமன்
- கா - சோலை, காவடி, காவல், தொலை
- கீ - கிளிக்குரல்
- கு - குற்றம், சிறுமை
- கூ - கூகை, பூமி, கூவு, அழுக்கு, பிசாசு

- கை - இடம், பகை, கரம், ஒழுக்கம், கரம், துதிக்கை, வரிசை, ஒப்பனை, அளவு, கைமரம்
- கோ - அரசன், அம்பு, சூரியன், சந்திரன், நீர், சொர்க்கம், ஆண்மகன், பூமி, ஆகாயம், பசு, மலை
- கௌ- மனத்தாங்கல், தீங்கு, கொள்ளு, பற்றுதல்
- ச - சக
- சா - மரணம், இறப்பு, போ, பேய், கெடுதல்
- சீ - அலட்சியம், அடக்கம், இகழ்ச்சி, புண்சீழ், பார்வதி, இலட்சுமி, கலைமகள், சிதல்
- சு - சுய, சுகம்
- சே - எருது, மரம், தூரம், உயர்வு, சிவப்பு
- சை - இகழ்ச்சி, செல்வம்
- சோ - அரண், நகரம், ஒலி, உமை
- சௌ- சௌபாக்கியவதி (சுமங்கலி) என்பதன் சுருக்கம்
- ஞா - சுட்டு, பொருந்து
- ஞை - இகழ்ச்சி
- த - பிரம்மா, குபேரன்
- தா - வருத்தம், பகை, வலிமை, கெடுதி, கொடு, குற்றம், தாண்டுதல்
- தீ - நெருப்பு, அறிவு, நரகம், கொடுமை, கோபம், இனிமை
- து - கெடு, வருத்து, பிரிவு
- தூ - தூய்மை, பகை, தடை, வலிமை, சிறகு, வெண்மை
- தே - தெய்வம், நாயகன், கருணை, அருள்
- தை - தைத்திங்கள், அலங்கரி, தையல், மகரராசி, தாளம்
- நா - நாக்கு, திறப்பு, அயலார்
- நி - உறுதி, அருகில், விருப்பம், நிச்சயம், இன்மை
- நீ - முன்னிலைப் பெயர், தீங்கு, விடு
- நு - தோணி, தியானம், ஆயுதம்
- நூ - எள், யானை, ஆபரணம்
- நே - அன்பு, நேயம், ஈரம்
- நை - வாடு, இரங்கு, தளர்தல், வருந்து

- நொ - துக்கம், இல்லை, நோய், வலி, பலமின்மை
- நௌ- மரக்கலம்
- ப - காற்று, இரு பதில் ஒன்று, பின்னம், காற்று, சாபம், குடித்தல்
- பா - பாட்டு, நிழல், அழகு, பாடல், நூல், பரப்பு
- பி - அழகு
- பீ - அச்சம், மலம், தொண்டி
- பூ - மலர், இடம், அழகு, பொலிவு, கூர்மை, பூமி, இலை
- பே - நுரை, மேகம், இல்லை
- பை - பசுமை, பாம்பின் படம், சாக்கு, அழகு, குடற்பை, நிறம்
- போ - போதல், செல்
- ம - காலம், சந்திரன், எமன், பிரமன், விஷ்ணு, சிவன், அசோக மரம்
- மா - மாமரம், வலி, விண்டு, வயல், பெரிய, அழகு, அன்னை, கருமை, அழைப்பு, இலட்சுமி, குதிரை, விலங்கு
- மீ - பெருமை, மேல்புறம், உயர்வு மேலே, வானம்
- மூ - மூன்று, மூப்பு
- மே - அன்பு, மேம்பாடு, மேன்மை
- மை - குற்றம், மலடி, மேகம், நீர், கருமை, அஞ்சனம், ஆடு
- யா - ஐயம், இல்லை, யாவை, ஒரு மரம், வினா
- வா - வருக
- வி - உறுதி, அறிவு, பிரிவு
- வீ - பூ, பறவை, நீக்கம் சாவு
- வே - வேவு, உளவு, ஒற்று
- வை - கீழே வைத்தல், வைக்கோல், கூர்மை
- வௌ- திருடுதல், கொள்ளையிடல், பிடித்தல்

3. வேற்றுமை உருபுகள்

ஒரு தொடரில் வரும் பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாகும். பெயர்ச்சொல்லின் இறுதியில் வரும் இடைச்சொல் வேற்றுமை உருபு எனப்படும். இவ்வேற்றுமை பற்றி நன்னூலார்,

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை"

என்கிறார்.

வேற்றுமையின் பெயரு‹ முறையு‹

"பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளி என்றாகும் அவற்றின் பெயர் முறை"

என வேற்றுமை எட்டு ஆகும் என்கிறது நன்னூல்.

முத™ வேற்றுமை

முதல் வேற்றுமை 'பெயர் வேற்றுமை' எனப்படும். பெயர்ச் சொல் தொடரில் முதலாவதாக வருவதால் 'எழுவாய் வேற்றுமை' எனவும் அழைக்கப்படும். இவ்வேற்றுமைக்கு உருபு இல்லை. வினை, பெயர், வினாக்களைக் கொண்டு அவற்றின் வினை முதலாய் நிற்பதே அதன் பொருள்.

எடுத்து, கா† டு

சாத்தன் வந்தான், அவன் பெரியன்- வினைகொண்டு முடிந்தன.

சாத்தன் இவன், ஆ ஒன்று- பெயர்கொண்டு வந்தன.

அவன் யார்? ஆ யாது- வினாக் கொளநின்றன.

இர‡ டா‹ வேற்றுமை

பெயர்ச் சொல்லின் பொருளைப் செயப்படுபொருளாக வேறுபடுத்தக் கூடிய இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' ஆகும்.

"இரண்டாவதன் உருபு ஐயே அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி யாகும்"

என்கிறது நன்னூல்.

எடுத்து, காட்டு

குடத்தை வனைந்தான்	-	ஆக்கல் பொருள்
கோட்டையை இடித்தான்	-	அழித்தல் பொருள்
வீட்டை அடைந்தான்	-	அடைதல் பொருள்
வீட்டைத் துறந்தான்	-	நீத்தல் பொருள்
புலியை ஒத்தான்	-	ஒப்புடை பொருள்
பொன்னை உடையான்	-	உடைமை பொருள்

மூன்றாம் வேற்றுமை

"மூன்றா வதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு
கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்"

என்கிறது நன்னூல்.

எடுத்து, காட்டு

வேலால் எறிந்தான்	-	ஆல் (கருவி)
புத்தகத்தான் அறிவு வளரும்	-	ஆன் (வினைமுதல்)
தலைவியொடு சென்றான்	-	ஒடு (உடனிகழ்ச்சி)
ஆசிரியரோடு சென்றான்	-	ஓடு (உடனிகழ்ச்சி)

கருவியாவது முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும். முதற்கருவியாவது செயப்படு பொருளோடு ஒற்றுமை உடையது. சான்று: மண்ணால் குடத்தை வனைந்தான்- மண் முதற்கருவி. அதைச் செய்வதற்கும் திரிகை துணைக்கருவி. கருத்தா இயற்றுதல் கருத்தா, ஏவுதல் கருத்தா என இருவகைப்படும்.

எடுத்து, காட்டு

தச்சனால் கோவில் கட்டப்பட்டது (இயற்றுதல் கருத்தா)

அரசனால் கோயில் கட்டப்பட்டது (ஏவுதல் கருத்தா)

உடனிகழ்ச்சிப் பொருள் தலைமைப் பொருளும் தலைமையில் பொருளும் என இருவகைப்படும்.

எடுத்து, காட்டு

ஆசிரியனொடு மாணவன் வந்தான் - தலைமைப்பொருள்

மாணாக்கனோடு ஆசிரியன் வந்தான் - மாணாக்கன் தலைமையில் பொருள்

நான்கா‹ வேற்றுமை

"நான்கா வதற்கு உருபு ஆகும் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவு அது வாதல்
பொருட்டு முறை ஆதியின் 'இதற்கு இது' எனல் பொருளே"

என்கிறது நன்னூல். 'கு' என்பது நான்காம் வேற்றுமை உருபாகும். இவ்வுருபிற்கு அடுத்து வல்லினம் வந்தால் ஒற்று மிகும்.

எடுத்து, கா† டு

அவளுக்குக் கொடுத்தான்	-	கொடைப் பொருள்
பரணருக்கு நண்பர் கபிலர்	-	நட்புப் பொருள்
திலீபனுக்கு நெருங்கிய அன்பன் தீபன்	-	நேர்ச்சி
நட்புக்குப் பகை ஐயம்	-	பகை
மனிதனுக்கு அழகு கல்வி	-	தகவு
கட்டடத்துக்குச் செங்கல்	-	அதுவாதல்
கூழுக்குப் பாடினாள் ஔவை	-	பொருட்டு
சிவனுக்கு மகன் கந்தன்	-	முறை

ஐ%தா‹ வேற்றுமை

"ஐந்தா வதன் உருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே"

என்கிறது நன்னூல். இல், இன் என்பன ஐந்தாம் வேற்றுமை உருபு களாகும். இவை நீக்கல், ஒப்புமை எல்லை, ஏது முதலான பல பொருள்களை உணர்த்தி வரும்.

எடுத்து, கா† டு

மலையின் வீழருவி	-	நீக்கல் பொருள்
வீரத்தில் சிறந்தோர் தமிழர்	-	ஒப்புப்பொருள்
பாரதத்தின் தென் எல்லை குமரி	-	எல்லைப்பொருள்
கல்வியில் பெரியர் கம்பர்	-	ஏதுப்பொருள்

ஆறா‹ வேற்றுமை

அது, ஆது, அ என்பன ஆறாம் வேற்றுமை உருபுகளாகும். கிழமைப் பொருளில் வரும். இது தற்கிழமை, பிறிதின் கிழமை என இரு வகைப்படும். அது, ஆது ஒருமையிலும், அ - பன்மையிலும் வரும்.

தற்கிழமை

எடுத்து, கா† டு

சாத்தனது கருமை	-	குணப் பொருள்
சாத்தனது வரவு	-	தொழிற் பொருள்
சாத்தனது கை	-	உறுப்புத்தற்கிழமை
மாந்தரது தொகுதி	-	ஒன்றன் கூட்டத்தற்கிழமை
படைகளது தொகுதி	-	பலவின் ஈட்டத்தற்கிழமை
நெல்லினது பொரி	-	ஒன்று திரிந்து ஒன்றாய்தன் தற்கிழமை

பிறிதின் கிழமை

எடுத்து, கா† டு

முருகனது வேல்	-	பொருள் பிறிதின் கிழமை
சாத்தனது வீடு	-	இடப் பிறிதின் கிழமை
மாரனது வேனில்	-	காலப் பிறிதின் கிழமை
எனாது கை, நினாது தலை	-	ஆது உருபு
என கைகள், தன தாள்கள்	-	அகர உருபு

ஏழா‹ வேற்றுமை

"ஏழன் உருபு கண் ஆதியாகும்
பொருள் முதல் ஆறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன் பொருள் என்பர்"

என்கிறது நன்னூல்

கண் என்னும் ஏழாம் வேற்றுமை உருபு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் பொருளில் வரும்.

எடுத்து, கா† டு

மணியின் கண் இருக்கின்றது ஒளி	-	தற்கிழமை
பனையின் கண் வாழ்கின்றது அன்றில்	-	பிறிதின் கிழமை பொருள் இடமாயிற்று
ஊரின் கண் உள்ளது இல்லம்	-	தற்கிழமை

வானின்கண் பறக்கின்றது பருந்து	-	பிறிதின் கிழமை இடம் இடமாயிற்று
நாளின் கண் உள்ளது நாழிகை	-	தற்கிழமை
வேனிற்கண் பாதிரி பூக்கும்	-	பிறிதின் கிழமை காலம் இடமாயிற்று
கையின்கண் உள்ளது விரல்	-	தற்கிழமை
கையின்கண் உள்ளது கடகம்	-	பிறிதின் கிழமை சினை இடமாயிற்று
கறுப்பின் கண் மிக்குள்ளது அழகு	-	தற்கிழமை
இளமையின் கண் வாய்ந்தது செல்வம்	-	பிறிதின் கிழமை குணம் இடமாயிற்று
ஆடற்கண் உள்ளது சதி	-	தற்கிழமை
ஆடற்கண் பாடப்பட்டது பாட்டு	-	பிறிதின் கிழமை தொழில் இடமாயிற்று

எ† டா‹ வேற்றுமை

> "எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்
> திரிபு குன்றல் மிகுதல் இயல்பாதல்
> திரிபும் ஆம் பொருள் படர்க்கை யோரைத்
> தன்முக மாகத் தானழைப் பதுவே"

என்கிறது நன்னூல்.

பெயர்ச் சொல்லின் பொருளை, விளிப்பொருளாக வேறுபடுத்திக் காட்டும். எனவே, இது விளி வேற்றுமை எனப்படும்.

எடுத்து, கா† டு

அன்னை	-	அன்னாய்	-	ஈறுதிரிதல்
அரசன்	-	அரச	-	ஈறுகுன்றல்
மகன்	-	மகனே	-	ஈறுமிகுதல்
தம்பி, தோழி	-	இயல்பாதல்		
மக்கள்	-	மாக்கள்	-	ஈற்று அயல்திரிதல்
அப்பன்		அப்பா	-	ஈறுகுன்றி, ஈற்றயல்திரிதல்
அண்ணன்	-	அண்ணாவோ	-	ஈறுகுன்றி ஈற்றயல் திரிந்து ஈறுமிகுதல்

4. திணை, பா™, எ‡ , இட‹

திணை

திணை என்பது ஒழுக்கம். உலகத்திலுள்ள பொருள்கள் ஒழுக்கத்தின் அடிப்படையில் உயர்திணை எனவும் அஃறிணை எனவும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. யார் என்னும் வினாவுக்கு விடையாக வரும் பெயர் உயர்திணைப் பெயர்.

எடுத்து, கா† டு

முருகன், வீரர்

அஃறிணை என்பது உயர்வல்லாத திணை, உயர்திணை அல்லாத மற்ற உயிருள்ளவை, உயிர் இல்லாதவை ஆகிய எல்லாப் பொருள்களும் அஃறிணை. என்ன? என்ற வினாவுக்கு விடையாக வரும் பெயர் அஃறிணைப் பெயர்.

எடுத்து, கா† டு

அணில், வீடு

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுஉயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை" (நன்னூல் / 4)

பா™

பால் என்பது தன்மை அல்லது பகுப்பு என்பதாகும். திணையின் உட்பிரிவு - பால் என வழங்கப்படும்.

ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால். அவன் என்ற பெயரால் சுட்டப்பெறும் பெயர்கள் யாவும் ஆண்பாற் பெயர்கள் ஆகும்.

எடுத்து, கா† டு

எழிலன், மாணாக்கன்

ஒரு பெண்ணைக் குறிப்பது பெண்பால். அவள் என்ற சொல்லால் சுட்டப் பெறும் பெயர்கள் யாவும் பெண்பாற் பெயர்கள்.

எடுத்து, கா† டு

மலர்விழி, தமக்கை

பலரைக் குறிப்பது பலர்பால் - அவர்கள் என்ற சொல்லால் சுட்டப் பெறும் பெயர்கள் யாவும் பலர்பாற் பெயர்கள். ஆண்கள் பலராயினும், பெண்கள் பலராயினும் பலர்பால் என்றே குறிக்கப்பெறும்.

எடுத்து, கா† டு

மக்கள், மாணவர், பெண்டிர்.

அவர் என்னும் சொல்லால் சுட்டப் பெறும் பெயர்கள் மரியாதை காரணமாகச் சுட்டப் பெறுவதால், மரியாதைப் பன்மை எனக் குறிக்கப் பெறும்.

எடுத்து, கா† டு

ஆசிரியர், தந்தையார்

ஓர் அஃறிணைப் பொருளைக் குறிப்பது ஒன்றன்பால். அது என்ற சொல்லால் சுட்டப் பெறும் பெயர்கள் யாவும் ஒன்றன்பாற் பெயர்கள்.

எடுத்து, கா† டு

மரம், பசு.

பல அஃறிணைப் பொருள்களைக் குறிப்பது பலவின்பாற் பெயர். அவை என்ற சொல்லால் சுட்டப் பெறும் பெயர்கள் யாவும் பலவின்பாற் பெயர்கள்.

எடுத்து, கா† டு

மரங்கள், குதிரைகள்.

அஃறிணை உயிரினங்களில் ஆண், பெண் பகுப்பு இருப்பினும் அவை ஆண்பால், பெண்பால் எனக் குறிக்கப்பெறுவது இல்லை.

"ஆண் பெண் பலர் என முப்பாற்று உயர்திணை" (நன் - 5)

"ஒன்றே பலஎன்று இருபாற்று அஃறிணை" (நன் - 6)

எ‡

எண் என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்.

இது ஒருமை, பன்மை என இருவகைப்படும்.

ஒன்றைக் குறிப்பது ஒருமை ஆகும்.

எடுத்து, கா† டு

செடி, பூ, ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு முதலிய பல எண்களைக் குறிப்பது பன்மை ஆகும்.

எடுத்து, கா† டு

செடிகள், பூக்கள்.

ஒருமையைப் பன்மையாக மாற்ற 'கள்' விகுதி சேர்க்க வேண்டும்.

இடம்

இடம் என்பது சொற்கள் வழங்குவதற்குரிய இடம். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

பேசுவோன், தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் குறிப்பது தன்மை இடம்.

யான், நான் - தன்மை ஒருமை.

யாம், நாம், நாங்கள் - தன்மைப் பன்மை.

முன் நிற்போரைக் குறிப்பது முன்னிலை இடம்

நீ - முன்னிலை ஒருமை

நீர், நீங்கள் - முன்னிலைப் பன்மை

தன்மை, முன்னிலை நீங்கிய மற்றெல்லாவற்றையும் குறிப்பது படர்க்கை இடம்.

அரசன்	-	ஆண்பால்		
அரசி	-	பெண்பால்	-	உயர்திணை ஒருமை
மக்கள்	-	பலர்பால்	-	உயர்திணைப் பன்மை
மாடு	-	ஒன்றன்பால்	-	அஃறிணைஒருமை
மாடுகள்	-	பலவின்பால்	-	அஃறிணைப்பன்மை

"தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே"

5. கலை,,சொற்கள்

- கலைச்சொற்கள் என்பது ஒவ்வொரு துறைக்கும் பயன்படுத்தப் படும் சொல்லாகும். சுலபமாக சொல்ல வேண்டும் என்றால் மற்ற மொழிகளில் உள்ள சொற்களை அந்தந்த துறையில் உள்ளவர்கள் அவர்களின் துறைக்கு ஏதுவாக பயன்படுத்த உருவாக்கப் பட்டதாகும். அதற்கு கலைச்சொல் என்று பெயர்.
- தமிழில் கலைச்சொல் என்றும் ஆங்கிலத்தில் Glossary என்றும் பயன்படுத்தப்படுகிறது.

கலை„ சொற்கள் - **Kalai Sorkal Meaning in Tamil**

வி... ஞான கலை„ சொற்கள்	
Whats App	புலனம்
You Tube	வலையொளி
Instagram	படவரி
Wechat	அளாவி
Messenger	பற்றியம்
Twitter	கீச்சகம்
Skype	காயலை
Telegram	தொலைவரி
Bluetooth	ஊடலை
Wifi	அருகலை

கலை„ சொற்கள்	
Hotspot	பகிரலை
Broadband	ஆலலை
Online	இயங்கலை
Offline	முடக்கலை
Thumbdrive	விரலி

GPS	தடங்காட்டி
CCTV	மறைகாணி
OCR	எழுத்துணரி
LED	ஒளிர்விமுனை
3D, 2D	முத்திரட்சி, இருதிரட்சி

வி... ஞான கலை„ சொற்கள்	
Projector	ஒளிவீச்சி
Printer	அச்சுப்பொறி
Scanner	வருடி
Smart Phone	திறன்பேசி
SIM Card	செறிவட்டை
Charger	மின்னூக்கி
Digital	எண்மின்
Cyber	மின்வெளி
Selfie	தம் படம் - சுயஉரு - சுயப்பு
Router	திசைவி

தமி› கலை„ சொற்கள்	
Thumbnail	சிறுபடம்
Meme	போன்மி
Print Screen	திரைப்பிடிப்பு
Inkjet	மைவீச்சு
Laser	சீரொளி
Text	பனுவல்

கலை„ சொற்களின் வகைகள்

1. தொழில்நுட்ப கலை சொற்கள்
2. புள்ளிவிபரவியல் சொற்கள்
3. அமைப்பியல் கலைச்சொற்கள்
4. தாவரவியல் கலைச்சொற்கள்
5. வேதிப் பொறியியல்
6. வேளாண்மை
7. மண்ணியல்
8. வேதியியல் அருஞ்சொற்கள்
9. கணிதத்துறைச் சொற்கள்
10. இயற்பியத்துறைச் சொற்கள்
11. விலங்கியத் துறைச் சொற்கள்
12. இயல்களின் தொகுப்பு
13. அலுவலகப் பயன்பாடுகள்
14. கணிப்பொறி தொடர்புடைய சொற்கள்
15. இணையம் தொடர்புடைய சொற்கள்
16. பிணையம் தொடர்புடைய சொற்கள்
17. தரவுத்தளம் தொடர்புடைய சொற்கள்
18. செல்பேசி தொடர்புடைய சொற்கள்
19. உந்துவண்டி தொடர்புடைய சொற்கள்
20. ஒப்புமையியல் சொற்கள்
21. பறப்பியல் தொடர்புடைய சொற்கள்
22. மின்னியல் சொற்கள்
23. நிதியியல் தொடர்புடைய சொற்கள்
24. புவியியல் தொடர்புடைய சொற்கள்
25. சட்டம் தொடர்புடைய சொற்கள்
26. உடலியல் சொற்கள்
27. மின்திறனியல் சொற்கள்
28. உளவியல் சொற்கள்

தொழி™நு† ப கலைசொற்கள்	
Thumbnail	சிறுபடம்
Absolute Coordinates	நர் ஒருங்கிணைப்புகள்
Absolute Disk Sectors	நேர் வட்டுப் பகுதி
Absolute Link	முற்றுத் தொடுப்பு
Abscissa	கிடைத்தூரம்
Abacus	பரற்கடை, மணிச்சட்டம்
Back	முந்தைய
Back Quote	பின்மேற்கோள்குறி
Back Up	காப்பு
Babble	பிதற்று
Back Plane	பின்தளம்

6. மொழிபெயர்ப்பு,, சொற்கள்

மொழிபெயர்ப்பு (translation) என்பது மூல மொழியியல் (Source Language) உள்ள சொல் அல்லது சொற்றொடர்களை (விடயத்தை எந்தவொரு மேலதிகமான உட்சேர்த்தலுமின்றி), பொருள் மாறாமல் மற்றொரு மொழிச் சொற்களை கொண்டு இலக்கு மொழியியல் (Target Language) அறியத் தருதல் ஆகும், மொழி என்பது தொடர்பாடலுக்கு இன்றியமையாததொரு ஊடகமாகும், மேலும் இவ்வுலகில் சுமார் 6500 மொகிள் பேசப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. இவ்வுலகில் உள்ள அனைவராலும் அனைத்து மொழிகளிலும் தங்களது தொடர் பாடல்களை மேற்கொள்ள முடியாது. அதாவது அனைவருக்கும் அனைத்து மொழிகளும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதாகும், இச்சந்தர்ப்பத்தில்தான் மொழிபெயர்ப்பு என்பது அவசியமாகின்றது, மொழிபெயர்ப்பானது தொடர்பாடலை இலகுபடுத்தவும். மற்றவரினது கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளை பரிச்சயமான மொழியியல் புரிந்து கொள்வதற்கும் உதவுகின்றது, பெறுமதிமிக்க ஆவணங்கள், புத்தகங்கள், கட்டுரைகள் போன்ற பல்வேறு விடயங்களில் மொழிபெயர்ப்பின் தேவைப்பாடு வேண்டப்படுகின்றது. எழுத்தாளர்களின் கருத்துகள் மற்றும் சிந்தனைகள் ஆகியன மொழிபெயர்ப்பின் மூலமாகவே விரிவு படுத்தப்படுகின்றது, மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலை; அதை அனைவராலும் மேற்கொள்ள முடியாது; அதாவது போதுமான அனுபவம், மூல மற்றும் இலக்கு மொழிகளின் தேர்ச்சி, கிரகித்தல், ஆக்கபூர்வமான சிந்தனை மற்றும் புரிந்துகொள்ளல் போன்ற இன்றியமையாத விடயங்கள் அவசியமாகின்றன. ஒரு வினைத் திறனான மொழிபெயர்ப்பை மேற்கொள்வதற்கு மேற்கூரியவை உதவி புரிகின்றன. மொழிபெயர்ப்புகள் அனைத்தும் ஒரே விதமாக மேற்கொள்ளப் படுவதில்லை. அதாவது மூல மொழியியல் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயத்தை பொருத்தே அது எவ்வாறான முறையில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பதுதானது தீர்மானிக்கப்படுகின்றது, சொல்லுக்கு சொல் மொழிபெயர்ப்பு, வசனத்திற்கு வசன மொழிபெயர்ப்பு, பந்திக்குப் பந்தி மொழிபெயர்ப்பு போன்ற மொழிபெயர்ப்பு முறைகள்தான் பயன் படுத்தப்படுகின்றன. தகுந்த மூல மொழி உள்ளடக்கத்திற்குக ஏற்றவாறான மொழிபெயர்ப்பு முறை பயன்படுத்தும் போதுதான் வினைத்திறனான மொழிபெயர்ப்பு விளைவாகும், நவீன மொழி பெயர்ப்பானது புராதன மொழிபெயர்ப்பிலிருந்து சற்று தொழில்நுட்ப

ரீதியாக முன்னேற்றமடைந்ததொரு முறையாக காணப்படுகின்றது, இணையப் புரட்சி மற்றும் கணினி மென்பொருள் மேம்பாடு போன்றன நவீன மொழிபெயர்ப்புக்கு ஊக்கியாக அமைந்து விடுகின்றது, நவீன மொழிபெயர்ப்பானது முற்று முழுதாக கணினி மயப்படுத்தப்பட்டதொரு முறையாகவே உருவாக்கப்படுகின்றது. பல்வேறு மொழிபெயர்ப்பு மென்பொருட்கள் மனித மொழி பெயர்ப்பை இலகு படுத்துவதற்காக கையாளப்படுகின்றன. மிகவும் செம்மையான மொழிபெயர்ப்பொன்றை விரைவாகவும், வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு மொழிபெயர்ப்பு மென்பொருட்கள் கைகொடுக்கின்றன. வேட்-பாசிட், எசுடிஎல் ரெடோசு போன்றன மிகவும் பிரபலமான மொழிபெயர்ப்பு மென்பொருட்களாக தரப்படுத்தப்பட்டுள்ளன.

1. Abet - துணைசெய்
2. Acacia - வேலமரம்
3. Access - வழி
4. Afar - தொலைவில்
5. Amass - திரட்டு
6. Annoy - தொந்தரவு
7. Auxiliary - உதவியாளர்
8. Axe - கோடரி
9. Beacon - கலங்கரைவிளக்கம்
10. Beck - மலையருவி
11. Bid - கட்டளையிடு
12. Breeze - இளங்காற்று
13. Bustle - சுறுசுறுப்பாயிரு
14. Broad Cast - ஒலிபரப்புதல்
15. Bully - கொடுமைக்காரன்
16. Burrow - வளை தோண்டு
17. Calm - அமைதி
18. Cess - வரி
19. Chaff - உமி
20. Cheek - கன்னம்
21. Circumvent - ஏமாற்று
28. Diadem - மகுடம்
29. Doom - அழிவு
30. Drawee - பணம் பெறுபவர்
31. Drizzle - தூறல்
32. Disbelief - பண்டகசாலை
33. Dwellen - குடியிருப்பவர்
34. Eddy - சுழற்காற்று
35. Egotism - தற்பெருமை
36. Elegy - இரங்கற்பா
37. Emlinence - உயர்பதவி
38. Etiqutte - மரியாதை
39. Ewe - பெண் ஆடு
40. Eyewash - கண்துடைப்பு
41. Fable - கட்டுக்கதை
42. Ferment - புளிப்பு
43. Fiction - கற்பனைக்கதை
44. Flounce - வெளியேறு
45. Focus - குவிமையம்
46. Fragrance - நறுமணம்
47. Froth - நுரை
48. Fury - சீற்றம்

22. calmour - ரவாரம்
23. Coffee - கருவூலப்பெட்டி
24. conqueror - வெற்றியாளர்
25. cyclone - சுழற்காற்று
26. Dare - துணிவுகொள்
27. Depot - பண்டகசாலை
54. grace - மதிப்பளி
55. guide - வஞ்சம்
56. gym - உடற்பயிற்சி சாலை
57. Harvest - அறுவடை செய்
58. Hemp - சணல் செடி
59. Hinder - தடைசெய்
60. Honour - புகழ்
61. Humility - பணிவு
62. Hurricane - சூறாவளி
63. Hypocrisy - பாசாங்கு
64. Hypertension - அதிக இரத்த அழுத்தம்
65. Idolatry - உருவ வழிபாடு
66. Illusion - தவறான எண்ணம்
67.Impostor - ஏமாற்றுக்காரன்
68. Inability - திறமையின்மை
69. Intent - உள்நோக்கம்
70.Investment - முதலீடு செய்தல்
71. Isolation - தனிமை
72. Ivory - தந்தம்
73. Janub - இன்பப் பயணம்
74. Jeer - கேலி செய்
75. Jealousy - பொறாமை

49. garret - மேல்மாடி அறை
50. gazette - அரசாங்க அறிக்கை வெளியீடு
51. genius- அதிபுத்திசாலி
52. glamour - மயக்கும் அழகு
53. goodness - நற்குணம்
81. Kine - பசுக்கள்
82. kindness - அருட்குணம்
83. Knack - சாமர்த்தியம்
84. Knob - மேடு
85. kin - உறவினர்
86. Knout - சாட்டை
87. Ladle - அகப்பை
88. Lender - கடன் கொடுப்பவர்
89. Leper - தொழு நோயாளி
90. Lexicon - அகராதி
91. Lifespan - ஆயுள்காலம்
92. Limestone - சுண்ணாம்புக்கல்
93. Long sightedness - எட்டப் பார்வை
94. Lunatic - படு முட்டாள்
95. Luxury - உல்லாச வாழ்க்கை
96. Mahout - யானைப் பாகன்
97. Magnate- பெரிய மனிதர்
98. maixe - சோளம்
99. midday - நடுப்பகல்
100. miff - வெறுப்பு
101. mortal - மனிதன்
102. mother hood - தாய்மை

76. jubilation - பெரு மகிழ்ச்சி
77 Jungle - தர்க்காடு
78.Jurisdiction - சட்ட அதிகாரம்
79. Juvenile - இளைஞர்

80. Keeper - காவற்காரன்
103. muse - ஆலோசனை செய்
104. Nap - சிறுதுயில்
105. Navy - கப்பற்படை
106. Nephology - மேகங்களைப் பற்றிய ஆய்வு
107. Newtrality - நடுநிலை
108. Nicety - நேர்மை
109. Nomad - நாடோடி
110. Nutmeg - ஜாதிக்காய்
111. Nylon- செயற்கைப்பட்டு
112. Oath - சூளுரை
113. objective - இலக்கு
114. oddiaty - புதுமை
115. offshoot- பக்கக்கிளை
116. on fall - தாக்குதல்
117. omen- நிமித்தம்
118. opinion- கருத்துரை
119. out cry - கூக்குரல்
120. paradice - சுவர்க்கம்
121. peak - சிகரம்
122. perfume - வாசனைப் பொருள்
123. phial - சிறுபுட்டி
124. piety - கடவுட்பற்று
125. placard - விளம்பர அட்டை
126. preacher - சமயப் போதகர்
127. psyche - உயிர்
128. possibility - சாத்தியம்
129. quag - சதுப்பு நிலம்
130. Quiet - சாந்தம்
131. quisling - தேசத்துரோகி
138. Riot - கலவரம்
139. Rout - படுதோல்வி
140. Ruse - சூழ்ச்சித் திட்டம்
141. Ryot - உழவன்
142. Saltern - உப்பளம்
143. Scamp - அயோக்கியன்
144. Sentinel - படைக்காவல் வீரன்
145. Shack - சிறிய வீடு
146. Skill - திறமை
147. Sloven - சுத்தமற்றவர்
148. Sow - விதை
149. Swirl - சுழலுதல்
150. Syncope - மயக்கம்
151. Tatter - கிழிசல்
152. Tease - வெறுப்பூட்டு
153. Throne - சிம்மாசனம்
154. Tide - துன்பம்
155. Trend - நோக்கம்
156. Typhoon - சூறாவளி
157. Turmoil - குழப்பம்
158. Tyranny - சர்வாதிகாரம்
159. Twilight - வைகறைப்பொழுது
160. Tycoon - மிகப் பெரிய தொழிலதிபர்

132. quiver - அம்புக்கூடு
133. quality - தகுதி பெறு
134. Raft - கட்டுமரம்
135. Rapture - பரவசம்
136. Recide - வசி
137. Rehabilitation - மறுசீரமைப்பு
167. Utility - பயன்பாடு
168. Uproar- ஆரவாரம்
169. Vagabond - நாடோடி
170. Valley - பள்ளத்தாக்கு
171. Venture - துணிந்து செய்
172. Vicinity- சுற்றுப்புறம்
173. Vine- திராட்சைக் கொடி
174. Viper- நச்சுப் பாம்பு
175. Voucher - பற்றுச் சீட்டு
176. Voyage - கடற்பயணம்
177. Wager - பந்தயம்
178. Wallet - பணப்பை
179. Wasp - குளவி
180. Whip - சாட்டையால் அடி
181. Whistle - சீழ்க்கை ஒலி
182. Wisdom - மெய்யறிவு
183. Wizard- மந்திரவாதி
184. Wrinkle - சுருக்கம்
185. Wreck - அழிவு
186. Woe - துன்பம்
187. Yardstick - அளவுகோல்
188. Yell- கூக்குரல்
189. Yield - விளைச்சல்
190. Yen - ஜப்பானிய நாணயம்
191. Yard - முற்றம்
192. Yam - சேனைக்கிழங்கு
193. Xenogamy - அயல் மகரந்தச் சேர்க்கை
194. Xylem - கட்டை
195. Xyst- உடற்பயிற்சி மண்டபம்
161. Ultimate - மிகச் சிறப்பு
162. Undertake- ஏற்றுக் கொள்
163. Unify - ஒன்றுபடுத்து
164. Universe - பிரபஞ்சம்
165. Upbraid - கடிந்துகொள்
166. Up lift - மேம்பாடு
196. Zeal - உற்சாகம்
197. Zenana - அந்தப்புரம்
198. Zest - நற்சுவை
199. Zamindar - பெருநிலக்கிழார்
200. Zephyr - மென் பூங்காற்று

***